# சமாதான நோக்கு

மலர் 14 இதழ் 01 / மே 2017

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் வெளியீடு



## நல்லாட்சியின் ஈராண்டு காலப் பயணமும்

# அரசியல் குப்பைமேடுகள் சரிந்து விழும் சாவாலும்



கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து / சட்டத்தரணி எஸ்.ஜீ. புஞ்சிஹேவா / டப்ளிவ் ஜயசிரி / வண. கலகம புத்தானந்த தேரர்/ டிவ் குணசேகர / அமைச்சர் ராஜித சேனாரத்ன / அருணி சமரகோன் / கலாநிதி தீபிகா உடகம / வைத்தியர் வின்யா ஆரியரத்ன / சந்துன் பிரியங்கர விதானகே / சாந்தி திசாநாயக்க / கே.ஜீ. பிலிப் சாந்த / பேராசிரியர் செனவி எப்பிட்டவத்த / சின்னதுறை தவராஜா / விரிவுரையாளர் சரித ஹேரத் / நிமல் சந்தரத்ன / பாராளுமன்ற உறுப்பினர் எம். திலகராஜா / பஷீர் சேகுதாவூத் / ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன / தரிந்து உடவரகெதர, ரேகா நிலுக்ஷி ஹேரத் / கே.டி. லால்காந்த/ பிரதமர் ரணில் விக்கிரமசிங்க / முத்து சிவலிங்கம் / ஆர். சம்பந்தன்

பதிப்பாசிரியர் : லயனல் குருகே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதான நோக்கு

பதிப்பாசிரியர் **லயனல் குருகே**

ISSN 955-1800-0061

மலர் 14 இதழ் 01 / மே 2017

தொலைபேசி : 94-1-2370801/4 ∴பெக்ஸ் : 94-1-2370802
மின்னஞ்சல் : cpa@cpalanka.org
இணையதளம் : www.cpalanka.org

## அரசியல் சரிவின் கொடூரமான விளைவுகள்

மீதொட்டமுல்லையில் உருவாக்கப்பட்ட குப்பை மேடு சரிந்ததில் 37 உயிர்கள் பறிபோன சம்பவம் நடந்து முடிந்த கதையாகி வருகிறது. அதுபற்றி எழுந்த வாத விவாதங்கள் முடிவுக்கு வந்து விட்டன. குப்பை முகாமைத்துவத்திற்குப் பதிலாக குப்பையோடு கூடிவாழும் மரபு தொடர்கிறது. குப்பை பிரச்சினையைத் தீர்க்க முடியாத எமக்கு சுதந்திரம் கிடைத்த காலந்தொட்டு இன்றுவரை நாம் பலவிதமான அரசியல் குப்பை மேடுகளை உருவாக்கியுள்ளோம். அவை சரிந்து விழுவதால் பல்லாயிரக்கணக்கான மனித உயிர்கள் மடிந்துகொண்டிருக்கின்றன. நாம் தொடர்ந்தும் குப்பை மேடுகளை உருவாக்கி வருகிறோமே தவிர அவற்றை முகாமைத்துவம் செய்வதாகத் தெரியவில்லை.

குப்பை தேசிய அளவிலான பிரச்சினையாக வளர்ந்து நிற்பதானது பிரச்சினைகளைத் தீர்ப்பதிலுள்ள இயலாமையைக் காட்டுகிறது. சுதந்திரத்திற்குப் பிற்பட்ட இதுவரையான காலப்பகுதியில் ஆட்சியாளர்கள் சிங்கள, தமிழ் இளைஞர்களின் இரண்டு கிளர்ச்சிகளை சந்தித்துள்ளார்கள். பெரும் எண்ணிக்கையான உயிர்களை இழந்துள்ளோம். இது தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தும் ஓர் அரசியலமைப்பை உருவாக்கத் தவறியதன் பிரதிபலிப்பு. சுதந்திரம் கண்ட போது ஆசிய நாடுகள் மத்தியில் சிறந்த உறுதிப்பாட்டுடன் இருந்த எமது நாட்டை இன்று பல்வேறு நாடுகள் முந்திவிட்டன. ஆனால், இலங்கை சமகாலத்தில் குப்பை பிரச்சினையைக்கூட தீர்க்க முடியாத ஒரு தேசமாக மாறிவிட்டது. மீதொட்டமுல்லை குப்பை மேட்டை விடவும் பாரதூரமான, பயங்கரமான அரசியல் குப்பை மேடு இருப்பதே அதற்கு காரணம்.

கல்வி, பொருளாதாரம் உட்பட்ட சகல துறைகளுக்குமான தேசியக் கொள்கையை வகுக்க தவறிவிட்டோம். அந்த விடயங்களில் தொலை நோக்கு கொண்ட ஆட்சியாளர்கள் இருக்கவில்லை. மனிதம், கண்ணியம் அத்துடன் நல்லிணக்கத்தை மதிக்கும் சமுதாயத்திற்குப் பதிலாக இன, மத, சாதி வேறுபாடுகள், வன்முறை, சுயநலம் விரக்தி என்பன கோலோச்சும் சமுதாயம் உருவாகியிருப்பதே இதன் இறுதி விளைவு. அழுக்குத் தோய்ந்த நாடு அல்ல ஆரோக்கியமான நாடு இதுவே சனவரி 08 புரட்சிகர மாற்றத்தில் பங்கெடுத்துக் கொண்டவர்களின் அவா. நல்லாட்சி அரசாங்கம் தற்போது இரண்டாவது அகவையில் பயணம் செய்கிறது. புரட்சிகர மாற்றத்தில் பங்கு கொண்டவர்கள் விரக்தி அடைந்துள்ளனர். இந்த ஆட்சியாளர்களிடம் நல்லாட்சியின் எதிர்பார்ப்புகளை ஈடேற்றும் நேர்மையும் பிரக்ஞையும் இல்லை. எனவே, அதற்கான ஓர் ஆழமான சமூக அரசியல் கருத்தாடல் கட்டியெழுப்பப்பட வேண்டும். அது நாட்டு மக்களிடமிருந்தே தொடங்க வேண்டும். ஜனவரி 8 மாற்றத்தின் பின்னணியில் இது போன்ற ஒரு கருத்தாடல் இருக்கவில்லை, என்பதை மீதொட்டமுல்லை குப்பை மேடுசரிவு எமக்கு உணர்த்தி நிற்கின்றது.

மொழிபெயர்ப்பு : **எஸ்.சிவகுருநாதன்**

நானாவித உதவிகள் : **மஹிந்த ரத்நாயக்க, லஹிரு கித்தலகம**

பக்க வடிவமைப்பு: **கமலாதேவி சசிசந்திரன்** அச்சாக்கம் : **க்ளோப் ப்ரின்டிங் வேர்க்ஸ் 0777-315971**

"சமாதான நோக்கு" என்பது மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் சமாதானமும் மோதல் ஆய்வும் பற்றிய பிரிவினதும் சமூகப் பங்களிப்பு நிகழ்ச்சித் திட்டப் பிரிவினதும் பிரசுரமாகும். மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையமென்பது சுயாதீன, அரசியல் கட்சி பேதமற்ற அமைப்பாகும். அது பிரதானமாக ஆட்சி முரண்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் அதனுடன் இணைந்த பிரச்சினைகள் என்பன மீது அவதானம் செலுத்தும். பொது மக்களின் கொள்கை தொடர்பான சம்பாஷனைக்கு சிவில் சமூகத்தின் நேரடி ஒத்துழைப்பு தேவைப்படுவதாலும், அதைப் பலப்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக மிகுந்த நம்பிக்கை காரணமாகவும், 1996 இல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அமைக்கப்பட்டது. பொது மக்கள் மீதான கொள்கைகள் விமர்சன ரீதியாக திறனாய்வு செய்யப்படல் மாற்று வழிகளை இனங்காணல், அதை விரிவாக்கல் தொடர்பான ஆய்வு, அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றிற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தன்னை அர்ப்பணித்துள்ளது.

இலங்கையின் மோதலைத் தீர்ப்பதற்கு ஏதுவான பிரச்சினைகளையிட்டு, எமக்கும் பொதுமக்களுக்கும் இடையே இடையீட்டை ஏற்படுத்துவதற்கான ஒரு மார்க்கமாக "சமாதான நோக்கு" பயன்படுகிறது. இச்சஞ்சிகையில் உள்ளடக்கப்பட்டுள்ள கருத்துக்கள் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினதோ அல்லது அதன் பணிப்பாளர் சபையினதோ கருத்துக்களை பிரதிபலிக்கவில்லை. மேலதிக விபரங்களுக்கு பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்க.

தொடர்புகளுக்கு : **"சமாதான நோக்கு"**
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், 6/5, லையார்ட்ஸ் வீதி, கொழும்பு - 05
தொலைபேசி : 011 2081384/6, தொலைநகல் : 011 4714460
மின் அஞ்சல் : cpa@cpalanka.org இணைய தளம் : www.cpalanka.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


ஆட்சியின் இடையே சவால்களும் வாய்ப்புகளும். — 3
கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து

இராஜதந்திரமாக ஆட்சி செய்யலாம் விசித்திரமான கதைகளின் மூலம் அல்ல. — 7
சட்டத்தரணி எஸ்.ஜீ. புஞ்சிஹேவா

தேசிய அரசாங்கம் மக்களைப் பற்றிச் சிந்திப்பதில்லை — 11
டப்ளியு ஜயசிறி

நல்லாட்சி அரசாங்கத்தில் கூட்டுப் பொறுப்பு இல்லை — 16
வண. கலகம புத்தானந்த தேரர்

அதிகாரப் பகிர்வு தமிழர்களுக்கு மட்டுமல்ல அனைவருக்கும் நன்மை தரும் — 22
டிவ் குணசேகர

ஜனாதிபதி முறையை நீக்காமல் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. — 26
அமைச்சர் ராஜித சேனாரத்ன

நல்லாட்சி அரசாங்கம் யாருக்குச் சொந்தம் மஹிந்தவுக்கா ? மக்களுக்கா ? — 29
அருணி சமரகோன்

சிந்தனா சக்தி அற்ற ஒரு சமூகம் எளிதில் எதேச்சத்காரத்தினுள் சிக்கி விடும் — 32
கலாநிதி தீபிகா உடுகம

அரசாங்கத்தை சரியான பாதையில் இட்டுச் செல்ல மக்கள் அணிதிரள வேண்டும். — 45
வைத்தியர் வின்யா ஆரியரத்ன

மைத்திரி – ரணில் அரசாங்கத்தின் கடந்துபோன ஈராண்டுகள் பற்றிய ஒரு பகுப்பாய்வு — 49
சந்துன் பிரியங்கர விதானகே

நல்லாட்சிப் பட்டினியும் பெண்ணும் — 52
சாந்தி திசாநாயக்க

அரசாங்கத்தின் பயணமும் முழுப் பூசணிக்காயைச் சேற்றில் மறைத்தலும் — 54
கே.ஜீ.பிலிப் சாந்த

மீதொட்டமுல்லை குப்பை மேடு ...... — 61
செனவி எப்பிட்டவத்த

ஏமாற்றப்படும் எதிர்பார்ப்புகளும் ஏமாற்றமடையும் தமிழ் மக்களும் — 65
சின்னத்துரை தவராஜா

பின்னோக்கித் திரும்ப முடியாத அரசியலின் இடியப்பச் சிக்கல் — 68
சரித்த ஹேரத்

பாரிய வெளிநாட்டுக் கடன்சுமை இலங்கையை கடன்பொறியில் சிக்கவைத்துள்ளது. — 73
நிமல் சந்தரத்ன

நல்லாட்சி நாட்கள் : இரண்டு வருட அனுபவங்களின் மீட்டல் — 76
ம. திலகராஜா

நல்லாட்சியில் கழிந்த இரண்டு ஆண்டுகள்– அவலங்களின் வீண் விளையாட்டு — 78
பஷீர் சேகுதாவூத்

ஜனநாயகமும் சுதந்திரமும் சத்திவாய்ந்ததாக அமையும்போது விமர்சனங்கள் அதிகரிக்கும் — 80
கௌரவ ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

ஆரம்பத்திலிருந்து குப்பை மேட்டின் கதை: — 86
தரிந்து உடுவர கெதர, ரேக்கா நிலுக்ஷி ஹேரத்

இந்த அரசாங்கம் உலகத்தைச் சுற்றி பிச்சை கேட்டுத் திரிவதோடு பிரச்சினைகளுக்கு ஒட்டுவேலை செய்கிறது — 93
திரு.கே.டி.லால்காந்த

ஜனநாயகத்திற்கும், பொருளாதாரத்திற்கும் வலுவூட்ட வேண்டும் — 96
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

இந்த அரசு மக்கள் அபிலாஷைகளை நிறைவேற்ற மாட்டாது — 98
முத்து சிவலிங்கம்

நாட்டு மக்கள் அனைவரும் புதிய அரசியலமைப்பையே எதிர்பார்க்கின்றனர் — 99
ஆர் சம்பந்தன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அரசிலமைப்பு சீர்திருத்தங்கள் காலத்திற்கு காலம் – பகுதி பகுதியாக மேற்கொள்ளப்படுவதற்குக் காரணம் தேர்தலில் கிடைக்கக் கூடிய ஆதரவு பற்றிய நம்பிக்கை இன்மை அல்லது அச்சமாக இருக்கலாம். அதாவது இந்த சீர்த்திருத்தங்களில் அர்த்தப்புஷ்டியாக எதுவும் நடைபெறவில்லை என்பதோடு பொதுவாக நாட்டுக்கு அதுபற்றிய தாற்பரியமும் முக்கியத்துவமும் எடுத்துரைக்கப்படவில்லை."



https://www.news.lk

(ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்க, அமைச்சர் சுசில் பிரேமஜயந்த)

# ஆட்சியின் இடையே சவால்களும் வாய்ப்புகளும்.




**கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து**
நிறைவேற்றுப் பணிப்பாளர்
மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம்

தேசிய அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தில் இடம்பெற்றிருந்த அரசியலமைப்புச் சீர்த்திருத்தங்கள் மற்றும் நேரடி வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்தல் பற்றிய விடயங்களில் சிக்கல் நிலை தோன்றியுள்ளதாக உணரப்படுகிறது. இது பொதுவான ஒன்று. இந்த அரசாங்கத்தால் 2015 இல் நிறைவேற்றுவதாக வாக்குறுதி அளித்திருந்த அதேபோல் அரசாங்கம் கூட்டாக இணைந்து மனித உரிமைகள் பேரவையில் 30/1 தீர்மானத்தின் கீழ் தெரிவித்திருந்த விடயங்களையும் நிறைவேற்றுவதற்கு அண்மையில் நடந்து முடிந்த ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இரண்டு வருட கால அவகாசம் வழங்கி தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் நிலைமாறு கால நீதி வழங்கல் தொடர்பான நகர்வுகளும் திருப்தியளிப்பதாக இல்லை. 2019 இறுதியில் நடாத்த வேண்டிய பொதுத் தேர்தலும், அதற்கு முன்னர் நடாத்த வேண்டிய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்களும் இந்த நிலைமையின் பாரதூரத்தை சுட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்தபோது

**"ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை இரண்டு தலைவர்களான முன்னாள் சனாதிபதியும், இன்னாள் சனாதிபதியும் வழிநடத்தி வருவதால் இந்த நிலை மேலும் சிக்கலாக அமைந்துள்ளது. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையானோர் இவ்விருவரில் எவரின் சொல்லுக்கு கட்டுப்பட்டு நிற்கின்றனர் என்பது வெளிப்படாத விடயமாகும்"**


தேசிய நலன் சார்ந்த விடயத்தில் தோய்ந்துள்ள கட்சி அரசியல் எந்தவொரு முன்னேற்றத்திற்கும் தடைக் கல்லாக இருப்பதை அவதானிக்க முடியும். தேசிய அரசாங்கத்தில் தாம் கொண்டிருக்கும் நம்பிக்கையை கேள்விக்கு உட்படுத்தும் சிலர், குறுகிய நலனுக்காக நாட்டின் வளங்கள் அடகு வைக்கப்படுவதாகக் கூறி நாட்டின் பொருளாதாரத்திற்கு அவசர அவசரமாக தேவைப்படும் பணத்தை வழங்கக் கூடிய ஒரு பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான அம்பாந்தோட்டை துறைமுகம் பற்றிய கொடுக்கல் வாங்கலை இடைநிறுத்தியுள்ளனர். "அரசிலமைப்பு சீர்திருத்தங்கள் காலத்திற்கு காலம் – பகுதி பகுதியாக மேற்கொள்ளப்படுவதற்குக் காரணம் தேர்தலில் கிடைக்கக் கூடிய ஆதரவு பற்றிய நம்பிக்கை இன்மை அல்லது அச்சமாக இருக்கலாம். அதாவது இந்த சீர்த்திருத்தங்களில் அர்த்தப்புஷ்டியாக ஏதுவும் நடைபெறவில்லை. என்பதோடு பொதுவாக நாட்டுக்கு அதுபற்றிய தாற்பரியமும் முக்கியத்துவமும் எடுத்துரைக்கப்படவில்லை." இறுதியாக, நிலைமாறு கால நீதி அரசியல் சார்ந்த ஒரு விடயமாக கருதப்பட்டு இராணுவத்தினரை போர்க் குற்றவாளிகளாகச் சித்தரிக்கும் அளவுக்கு நிலைமை திரிபுபடுத்தப்பட்டுள்ளது. பொறுப்பு கூறல் மற்றும் அதில் சர்வதேசத்தின் பங்கு பற்றி பேசும் போதெல்லாம் உதட்டிலிருந்து தேசப்பற்று வெளிப்படுவதோடு நிலைமாறு கால நீதியோடு பின்னிப் பினைந்துள்ள பிரச்சினைகள் முழுவதுமாக புறக்கணிக்கப்படுகின்றன. ஜெனிவாவில் சர்வதேச சமூகத்தைச் சந்திக்க இரண்டு வருடங்கள் இருந்தாலும், நிலைமாறுகால நீதி வழங்கலைத் தாமதித்தல் – கால வரையறை இன்றி தாமதித்தல் பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கி விடும்.

2015 அரசாங்கத்தின் சீர்த்திருத்த நிகழ்ச்சி நிரல் கைவிடப்பட்டுள்ளதா, இல்லாவிட்டால் அதை முன்னெடுப்பது ஆபத்தானதா?

நீண்ட காலமாக பகையாளிகளாக இருந்த இரண்டு கட்சிகளின் கூட்டு அரசாங்கம் அதிகாரம், நிருவாகம் மற்றும் தொடர்பாடல் விடயங்களில் சிக்கல்களை எதிர்கொள்வது எப்போதும் எதிர்பார்க்கப்பட்ட ஒன்று தான். "ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை இரண்டு தலைவர்களான முன்னாள் சனாதிபதியும், இன்னாள் சனாதிபதியும் வழிநடத்தி வருவதால் இந்த நிலை மேலும் சிக்கலாக அமைந்துள்ளது. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையானோர் இவ்விருவரில் எவரின் சொல்லுக்கு கட்டுப்பட்டு நிற்கின்றனர் என்பது வெளிப்படாத விடயமாகும்" மேல் மட்டத்தில் கவனிக்கும் போது புதிய அரசியலமைப்பு ஒன்றுக்கான தேவை ஏற்படுமானால் தற்போதைய சனாதிபதி அவருடைய ஐ.தே.க பங்காளிகளின் ஆதரவுடன் அதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதில் வெற்றி பெறுவாரெனத் தெரிகிறது. எவ்வாறாயினும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் இதற்குப் பொதுவான ஓர் இணக்கப்பாடு இருப்பதாகத் தெரியவில்லை. எனவே, தேசிய அரசாங்கத்திலும் அதற்கான இணக்கப்பாடு இருப்பதாகத் தெரியவில்லை.

"அரசியலமைப்பில் மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்புக்கான ஏற்பாட்டின் தேவை உருவாக்கப்படவுள்ள புதிய அரசியலமைப்பில் உள்ளடக்கப்படமாட்டாது எனவும் காலத்திற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**“அரசியலமைப்பில் மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்புக்கான ஏற்பாட்டின் தேவை உருவாக்கப்படவுள்ள புதிய அரசியலமைப்பில் உள்ளடக்கப்படமாட்டாது எனவும் காலத்திற்கு காலம் செய்யப்படுகின்ற அரசியலமைப்புத் திருத்தங்கள் மட்டுமே செய்யப்படும் எனவும் மக்களுக்கு அவ்வப்போது தெரியப்படுத்தப்படுகிறது. இது அரசியலமைப்புச் சீர்த்திருத்தத்தின் முக்கியமான மற்றும் பிரிக்க முடியாத அடிப்படை அம்சமான இனப்பிரச்சினைக்கு வழங்கப்படும் தீர்வு என்ன? என்ற கேள்வியை எம்முன்னே நிறுத்துகிறது.”**

காலம் செய்யப்படுகின்ற அரசியலமைப்புத் திருத்தங்கள் மட்டுமே செய்யப்படும் எனவும் மக்களுக்கு அவ்வப்போது தெரியப்படுத்தப்படுகிறது. இது அரசியலமைப்புச் சீர்த்திருத்தத்தின் முக்கியமான மற்றும் பிரிக்க முடியாத அடிப்படை அம்சமான இனப்பிரச்சினைக்கு வழங்கப்படும் தீர்வு என்ன? என்ற கேள்வியை எம்முன்னே நிறுத்துகிறது."

"மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு பற்றிய அச்சமே இங்கு முக்கியமான பிரச்சினையாக உள்ளது. தற்போதுள்ள அரசியலமைப்புக்குப் பதிலாக புதிய அரசியலமைப்பொன்றை கொண்டு வரும்போது 2/3 பெரும்பான்மையை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்ற சிக்கல் இதுவரை இருந்து வந்தது. ஆனால், இன்று 2/3 பெரும்பான்மைக்கான மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பில் வெற்றி பெறுவது எப்படி என்ற சிக்கல் தோன்றியுள்ளது. இது முற்றிலும் மாறுபட்ட ஒரு நிலையாகும்.

காணமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தை அமைப்பதற்கான சட்ட மூலம் அவசரமாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு 2016 ஆகஸ்ட்டு மாதம் நிறைவேற்றப்பட்டது. நிலைமாறு கால நீதி வழங்கலுக்கான உண்மையான ஆரம்பத்தை, இராணுவத்தினரை போர்குற்றவாளிகளாக மாற்றும் செயலின் ஆரம்பமாக அரத்தம் கற்பிக்கப்படுவதால் நிலைமாறுகால நீதி பற்றிய அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளது. அதேபோல், பொறுப்புக்கூறுவதற்கான பொறிமுறையில் வெளிநாட்டவர்கள் இடம்பெறமாட்டார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்காகவும், அது நடந்து விடாமல் தடுப்பதிலும் ஜனாதிபதியும் அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களும் தங்களது காத்திரத்தை வெளிப்படுத்த முயல்வதைக் காண முடியும். நீதி மன்றங்களின் கடந்த கால செயற்பாடுகளை நோக்கும் போது, முற்றிலுமான உள்நாட்டுப் பொறிமுறை நம்பிக்கை தராது என்ற நிலையை எதிர்க்கொள்வதை விட வெளிநாட்டவர்கள் இந்த பொறிமுறையில் இடம்பெறுவதே இராணுவத்தினரை மடக்கிப் பிடிப்பதற்குத்தான் என்ற ஊகம் நிலவுகிறது. இதனால் நிலைமாறுகால நீதியின் இதர அம்சங்கள் பாதிக்கப்படுகின்றன. பாதுகாப்பு படையினருக்காக காணிகள் சுவீகரிக்கப்படுவதால் மக்களின் காணிகளை துரிதமாக மீளளித்தல் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளது. பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கி, அதற்குப் பதிலாக கொண்டு வரவுள்ள சட்டமானது முன்னர் இருந்ததை விடவும் பாரதூரமான ஒரு சட்டமென்றே அர்த்தம் சொல்லப்பட்டுள்ளது. இராணுவத்தையும் சிங்கள மக்களையும் திருப்திப்படுத்தல் எல்லாவற்றுக்கும் மேலான விருப்பமாக இருப்பதே அதற்கு காரணம். அரசாங்கம் தனது தொலைநோக்கு, நிலைமாறுகால நீதி மற்றும் அரசியலமைப்புச் சீர்த்திருத்தம் பற்றிய யதார்த்தத்தை எடுத்துக் கூற தவறியுள்ளதால் ராஜபக்ஷ எதிர்க்கட்சிக்கு மக்களுடைய பேசுபொருளின் நிபத்தனைகளைத் தீர்மானிக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. இதனால் அரசாங்கம் தனது பாதுகாப்பு மற்றும் என்ன செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதைவிட தாம் எதைச் செய்யமாட்டோம் என்பதை தெரிவிக்கும் நிலை உருவாகியுள்ளது. அரசாங்கம் இந்த இடைப்பட்ட காலப்பகுதியில் தன்னால் இதுவரை எதைச் செய்ய முடிந்தது என்பது பற்றியும், எஞ்சியிருக்கும் இரண்டு வருட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"அரசியல் தேனிலவுக்கு நீண்ட ஆயுள் இல்லை என்பதை புரிந்துகொள்ள வேண்டும். தம்மை ஆட்சிக் கட்டிலில் அமர்த்திய போது வாக்காளர்கள் எந்த நிலையில் இருந்தார்களோ, குறைந்தபட்சம் அவர்களை அதே நிலையிலாவது வைத்து அழகு பார்க்க வேண்டியதை ஓர் அரசாங்கம் செய்ய வேண்டும். எனவே, வாக்காளர்கள் களமிறங்காது இருப்பதையும், எதிர்காலத்தில் நடைபெறும் தேசிய அளவிலான தேர்தல்களில் வாக்களிப்பதிலிருந்து விலகியிருக்கும் அபாயத்தையும் நாம் சந்திக்க வேண்டும்."**

dawn.com



வாக்களிக்கத் தயார் நிலையில்

காலத்தில் செய்ய எதிர்பார்க்கும் விடயங்கள் பற்றியும் தீர்மானித்தல் முக்கியமானது. இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்ட பின் சனாதிபதியின் தலைமையில் முழு நாட்டுக்குமான தொடர்பாடல் இயக்கமொன்று உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறு உருவாக்கப்படும் இயக்கத்தின் பொதுவான செய்தினை பொதுவான ஒரு மேடையில் இரு கட்சிகளின் பிரதிநிதிகள் அறிவிக்க வேண்டும்.

"அரசியல் தேனிலவுக்கு நீண்ட ஆயுள் இல்லை என்பதை புரிந்துகொள்ள வேண்டும். தம்மை ஆட்சிக் கட்டிலில் அமர்த்திய போது வாக்காளர்கள் எந்த நிலையில் இருந்தார்களோ, குறைந்தபட்சம் அவர்களை அதே நிலையிலாவது வைத்து அழகு பார்க்க வேண்டியதை ஓர் அரசாங்கம் செய்ய வேண்டும். எனவே, வாக்காளர்கள் களமிறங்காது இருப்பதையும், எதிர்காலத்தில் நடைபெறும் தேசிய அளவிலான தேர்தல்களில் வாக்களிப்பதிலிருந்து விலகியிருக்கும் அபாயத்தையும் நாம் சந்திக்க வேண்டும்."

இந்த நிலை வடக்கில் வெளிப்பட ஆரம்பித்துள்ளது. 2015 இல் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த தமக்குரிய பங்கிற்கும் மேலதிகமாக களப்பணியாற்றியுள்ள போதும், மாற்றம் ஏற்பட்டு இரண்டு வருடங்கள் கழிந்த நிலையில் கிடைத்த நன்மைகளை விரல்லிட்டு எண்ணிவிடலாமென்ற கருத்து அம்மக்கள் மத்தியில் நிலவுகிறது. பெரும்பான்மை மக்களின் வாக்குகள் கட்டாயமாக பகிர்ந்து செல்லும் நிலையில் சிறுபான்மை மக்களின் வாக்குகள் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துவதால் அவர்கள் வாக்களிப்பதைத் தவிர்ப்பது அரசியல் பிரச்சினையை தோற்றுவிக்கின்றது. வடக்கிலுள்ள வாக்காளர்களுக்கு அரசியலமைப்புத் திருத்தம் மற்றும் நிலைமாற்று கால நீதி என்பவற்றால் நன்மைகள் கிடைக்காத நிலையில் அவர்கள் வாக்களிப்பார்கள் என்பதற்கான உத்தரவாதத்தை வழங்க முடியுமா?

2015 மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரலுக்கு மீண்டும் உயிர்கொடுக்க வேண்டியுள்ளது. அந்த நிகழ்ச்சி நிரல் வெறும் கற்பனை அல்லது மறக்கப்பட்டுள்ளது என எண்ணாது அதற்கு மீண்டும் உயிர் கொடுக்கப்படும் என்ற செய்தியை. இந்தப் புத்தாண்டில் மக்கள்தம் வீடுகளுக்கு எடுத்துச் செல்வார்கள் என்ற நம்பிக்கையை எற்படுத்திக் கொள்வோம். அதேபோல், நல்லவற்றை மட்டுமே தேடும் இந்த பயணத்தில் ஏற்படுகின்ற சாதக நிலைமைகளை புறந்தள்ளி விடக் கூடாது என்பதிலும் அக்கறையுடன் செயல்பட வேண்டும்.

இவற்றைக் கவனத்தில் கொண்டு விழிப்புணர்வு, அயறாத முயற்சி மற்றும் இறந்த காலத்தை நோக்கிய எதிர்காலப் பயணத்தை தடுப்பதற்கான அர்ப்பணிப்பை கூர்மையாக வைத்திருத்தல் சிவில் சமூகத்தின் ஓயாத பணியாக அமைய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புதிய அரசியலமைப்பு தேவையில்லை. தற்போதைய ஜனாதிபதி மீண்டும் நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக வேண்டும், ஸ்ரீ.ல.சு.கட்சி நாட்டில் மீண்டும் அதிகாரத்திற்கு வர வேண்டும் இவை புதிய அரசியல் கோஷங்கள் அல்ல. மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியின் கருத்தியல்கள். மேலே சொல்லப்பட்ட உந்துசக்திகள் நாட்டில் எவ்விதமான அபிவிருத்திக்கு அவசியமானவை என்பது பற்றி திண்ணமில்லை. அந்த சக்திகள் ஊழல் மலிந்த ஆட்சிக்கே தேவை வேறு ஒன்றுக்குமல்ல.**



www.presidentsoffice.gov.lk

*ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன*

# இராஜதந்திரமான ஆட்சி செய்யலாம் விசித்திரமான கதைகள் மூலம் அல்ல.



சட்டத்தரணி
**எஸ்.ஜீ. புஞ்சிஹேவா**

கடந்த ஊழல் அரசாங்கத்தை துடைத்தெறிய வேண்டிய பாரிய மக்கள் தேவையை பிரதிநிதித்துவம் செய்த தற்போதைய அரசாங்கம் ஆட்சிப் பீடமேறி இரண்டு வருடங்கள் கழிந்துள்ளன. அதனை வர்ணிக்கும் அரசாங்கத்தின் ஊடக கேளிக்கைகள் ஒரு புறத்திலும் இருந்த திருடர்களின் சார்பில் எதிர்ப்பு ஆர்ப்பாட்ட கண்காட்சிகள் நாணமின்றி இன்னுமொரு புறத்திலும் நடந்துகொண்டிருக்கின்றன. அவர்களின் நிழல்கள் அரசியல் களத்திலிருந்து மறைந்து போகவேண்டி இருப்பினும், இந்த அரசாங்கத்தில் அவர்களுக்குக் கதவு திறக்கப்படுவதால் நிழல் தெரிகிறது. இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்குவது போல கிடைத்த ஓரிரு வாய்ப்புகளை பயன்படுத்தி எதிர்கால அரசியல் கருத்தியல் கட்டியெழுப்பப்பட்டு வருகிறது. அலிபாபா மற்றும் நாற்பது திருடர்களின் நோக்கம் கொத்தாக திருடுவதாகும். திருடுவதற்கு வாய்ப்பு கிடைக்கும் விதமாக முன்வைக்கப்பட்ட குற்றங்களிலிருந்து விடுபடுவதாகும். அதில் எளிதாக இல்லாமை நாட்டின் அதிர்ஷ்டம் என்றுதான் கூறவேண்டியுள்ளது. ஆனால் அவர்களின் அரசியல் தொலை நோக்கு அறிவிக்கப்படாதிருப்பதற்கு பின்வரும் உதாரணங்களைக் கூற முடியும்.

"புதிய அரசியலமைப்பு தேவையில்லை. தற்போதைய ஜனாதிபதி மீண்டும் நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக வேண்டும், ஸ்ரீ.ல.சு.கட்சி நாட்டில் மீண்டும் அதிகாரத்திற்கு வர வேண்டும். இவை புதிய அரசியல் கோஷங்கள் அல்ல. மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியின் கருத்தியல்கள். மேலே சொல்லப்பட்ட உந்துசக்திகள் நாட்டில் எவ்விதமான அபிவிருத்திக்கு அவசியமானவை என்பது பற்றி திண்ணமில்லை. அந்த சக்திகள் ஊழல் மலிந்த ஆட்சிக்கே தேவை" வேறு ஒன்றுக்குமல்ல."



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**"கடந்த இரண்டு வருடங்களில் அரசாங்கம் முன்னெடுத்த மற்றும் முன்னெடுக்கத் தவறிய விடயங்களில் நல்லது கெட்டது என பல உண்டு. நிறைவேற்றுத்துறை ஜனாதிபதி முறையை நீக்குவதற்காக 19வது திருத்தம் கொண்டு வரப்பட்டமை முக்கியமான ஒன்றாகும். சுயாதீன ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளமை பாராட்டுக்குரியது. பொலிஸ் மற்றும் நிதித்துறை ஓரளவுக்கு சுயாதீனமாகப் பேணுதல் மனித உரிமைகளையும் சுயாதீனத்தையும் உறுதிசெய்வதாக உள்ளது. பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்து உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கான தயார் நிலை முன்னோக்கிய நகர்வாகும்."**

இந்த அரசியலின் ஏனைய பிரகடனங்கள் ஜனாதிபதியினுடையது என்றபோதும், அது மஹிந்த ராஜபக்ஷ விடமிருந்து பிரதி செய்யப்பட்டுள்ளது. மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருக்க வேண்டும் என்பதற்காகப் போரை உயர்த்திப் பிடித்தார். "இராணுவ வீரர்கள்" என அறியப்பட்ட போர்க் குற்றவாளிகளைக் கூட குற்றத்திலிருந்து விடுவிக்கும் கருத்தினை சர்வதேச மயப்படுத்தினார். அதனைக் கேள்விக்கு உட்படுத்திய சிவில் அமைப்புகளை, என்ஜியோக்களை – அடக்கும் பொறுப்ப கோத்தபாயவிடம் ஒப்படைக்கப்பட்டு. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கருத்து மாறுபட்டுள்ளதா ? அதாவது "இராணுவத்திற்கு எதிராக வழக்கு தொடரப்படமாட்டாது, என்ஜிஓ சொல்படி நடக்க நான் தயாரில்லை" இது மெய்யாகவே மஹிந்த ராஜபக்ஷ போடும் தாளத்துக்கான ஆட்டமாகத் தெரியவில்லையா ? இராணுவத்திற்கு எதிராக வழக்கு என்பது எந்த நிலையிலும் அவசியமற்றது. எனினும், இராணுவத்தில் போர்க் குற்றவாளிகளுக்கு எதிராக வழக்குத் தொடர மறுப்பது மற்றுமொரு குற்றமல்லவா ? தாங்கள் விரும்பாத ஓரிரு என்ஜியோக்களுக்காக, தம்மை ஆட்சிக் கட்டிலில் அமர்த்த கிராம மட்டத்தில் ஒழுங்கமைப்பு பணிகளைச் செய்த சிறிய சிவில் அமைப்புகளைக் குறி வைத்து இவ்வாறு உரைத்தல், கோத்தாபய சிவில் அமைப்புகளில் கொண்டிருந்த பகை உணர்வை ஒரு நாடு என்ற வகையில் வெளிப்படுத்தும் கருத்தாகும்.

இது ராஜபக்ஷாக்களின் சிந்தனையாக இருப்பினும் ஜனாதிபதியின் குரலே அதை வெளிக்கொண்டு வருகிறது. நாட்டின் எந்தவொரு அரசியல்வாதியும் மக்களைக் கண்டு அஞ்ச வேண்டுமே தவிர இராணுவத்தை அல்ல. இராணுவத்தை வளைத்துப் போடுவதற்காக ராஜபக்ஷ அரசியலை கையில் எடுத்திருப்பதை கடந்து போன இரண்டு வருடங்களில் அதிகமாகவே காண முடிகின்றது.

**முன்னெடுக்கப்பட்டவையும் முன்னெடுக்கத் தவறியவையும்.**

"கடந்த இரண்டு வருடங்களில் அரசாங்கம் முன்னெடுத்த மற்றும் முன்னெடுக்கத் தவறிய விடயங்களில் நல்லது கெட்டது என பல உண்டு. நிறைவேற்றத்துறை ஜனாதிபதி முறையை நீக்குவதற்காக 19வது திருத்தம் கொண்டு வரப்பட்டமை முக்கியமான ஒன்றாகும். சுயாதீன ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளமை பாராட்டுக்குரியது. பொலிஸ் மற்றும் நீதித்துறை ஓரளவுக்கு சுயாதீனமாகப் பேணுதல் மனித உரிமைகளையும் சுயாதீனத்தையும் உறுதிசெய்வதாக உள்ளது. பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்து உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கான தயார் நிலை முன்னோக்கிய நகர்வாகும்." ஊர்வலம் செல்வதற்கும், எதிர்ப்புத் தெரிவிப்பதற்கும் சுதந்திரம் அளிக்கப்படடுள்ளது என்பதைத் தெரிவித்து, அந்த எதிர்ப்புகள் கிளம்புவதற்கான வாய்ப்புகளை கிள்ளி எறிய அரசாங்கம் எத்தகைய அர்ப்பணிப்பைச் செய்துள்ளது ? இந்த நிலைமைகளை மாற்றாது, சுதந்திரத்தை அளித்தோம். வெள்ளை வான்கள் இல்லை என்று கூறுவது மஹிந்த ராஜபக்ஷ யுத்தத்தை வென்றார் என்று கூறுவதற்கு ஒப்பானது.

இரண்டு வருடங்களாக ஜனாதிபதி நிகழ்த்தியிருக்கும் அழகான பேச்சுகளுக்காக அவரைப் பாராட்ட வேண்டும். ஆனால், நாட்டுக்குத் தேவையானது மக்கள் சேவை. இதுவரை பல நல்ல விடயங்களைச் செய்துள்ள போதும் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியுள்ளதால் உருவான எதிர்ப்பு வலுத்து வருகிறது. நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறை ஒழிக்கப்படுவதாக அறித்த வாக்குறுதி மீறப்பட்டுள்ளது. இது நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் திருடர்களுக்கு ஆதரவாக இருந்தவர்களுக்கே தேவையானது. நிலைமாறு கால நீதி பற்றிய நடவடிக்கைகள் பூர்த்தி கண்டுள்ளனவா?

**எங்கு தவறு நடக்கிறது. ?**

மக்களின் விருப்பத்திற்கு இடம்கொடாமையாலும் மக்களின் விருப்பத்திற்கு மாறாகச் செயற்பட்டதாலும் தவறு ஆரம்பமானது. ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் மக்களின் விருப்பங்களை நிறைவேற்றத் தேவையான ஆட்களைத் தெரிவு செய்வதற்கு பொதுத் தேர்தல் ஒன்றுக்குச் செல்ல வேண்டுமென்பதை மக்கள் விரும்பினர். பாழ்பட்ட கருத்தியலும் இன வாதமும் முற்றாக தோற்றுப்போகும் அந்த தருணத்தை பயன்படுத்தத் தவறியதால், இன்று அந்த தீய சக்திகள் சவால் விடும் அளவுக்கு மாறியுள்ளன. மக்களால் நிராகரிக்கப்பட்டு பின் கதவால் வழியால் வந்தவர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்கியது இரண்டாவது தவறாகும்.

இது மக்களின் விருப்பத்தைக் கொச்சைப்படுத்தும் செயல். அவ்வாறு வந்தவர்கள் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் கருத்தியல்களைக் கட்டியெழுப்புவதில் முன்னிலை பெறவில்லையா? உள்ளூராட்சித் தேர்தலை பிற்போட்டுள்ளமையே அடுத்தத் தவறு. அது இன்னும் தொடர்ந்த வண்ணமுள்ளது. இதனால் வாக்குரிமை மீதுள்ள நம்பிக்கை தகர்க்கப்பட்டுள்ளது. இத்தவறுகள் காரணமாக ஒழித்துக்கட்ட வேண்டிய அரசியல் மீண்டும் துளிர்விட ஆரம்பித்துள்ளது. தேர்தல் விடயத்தில் முன்னைய அரசாங்கத்தின் வழி முறையை இந்த அரசாங்கமும் கையாளுமானால் மக்களின் நம்பிக்கையை வெல்ல முடியுமா? ஊழல் பேர்வழிகளையும் அவர்களுடைய கருத்தியல்களையும் சுமந்து திரியும் வரை அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது. இராணுவத்தையம் விகாரைகளையும் தொழுது மத வாதத்தையும் இனவாதத்தையும் தக்க வைத்துக்கொள்வது ராஜபக்ஷ அரசியல் இனவாதம் அல்லாத செயற்பாடுகளால் தற்போதைய ஜனாதிபதி அதிலிருந்து வேறுபட்டு நிற்கின்றார். இருப்பினும் இராணுவக் குற்றவாளிகளைக் குற்றமற்றவர்களாகச் சித்தரிக்க எடுக்கின்ற முயற்சிகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.lgpc.gov.lk




*அமைச்சர் பைசர் முஸ்தபா ஊடகவியலாளர் சந்திப்பில்*

**பழைய அரசியல் பயன்பாட்டிலுள்ள முரண்பாடுகளைக் களைவதற்கு புதிய அரசியலமைப்பொன்று தேவை என்பது வாக்காளர்களின் கருத்து. அரசாங்கம் குழு ஒன்றை அமைத்து மக்கள் கருத்தறியும் படலத்தை வேகமாக நிறைவேற்றியது. மக்களும் ஆர்வத்துடன் முன்வந்து தம் கருத்துக்களை பதிவு செய்தனர். அறிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது. உள்ளூராட்சித் தேர்தல் சந்தித்துள்ள நெருக்கடியை இந்த அறிக்கையும் சந்தித்துள்ளது. இது அளித்த வாக்குறுதியை மீறும் செயலாகும். இது எவரின், எந்தக் கட்சியின் அரசியலாக இருப்பினும் அது மக்களுக்கு எதிரான செயலாகும்.**

விகாரைகளை வலம் வருவதற்கு அப்பால் இனவாத சிந்தனைகள் இழையோடுகின்றன. மக்கள் எதிர்ப்பு காரணமாக அவை வெளிச்சத்திற்கு வரலாம்.

**புதிய அரசியலமைப்பு எங்கே ?**

புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்குதல் ஆட்சி மாற்றத்திற்கான மக்கள் விருப்பத்தின் அடிப்படையாக இருந்தது. 19வது அரசியலமைப்புத் திருத்தம் அதற்கான ஆரம்பம் எனவையும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தேவை நிமித்தம் அதிலும் ஒரு சில திருத்தங்கள் நீக்கப்பட்டன. புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருவதில் இதுவரை ஏற்பட்டுள்ள தாமதம் அக்கட்சியின் அரசியல் தேவையால் ஏற்பட்ட ஒன்றாகும். பழைய அரசியலமைப்பையே அவர்கள் அதிகம் விரும்புகின்றனர். இது பின்நோக்கிச் செல்வதாகும். பழைய அரசியல் பயன்பாட்டிலுள்ள முரண்பாடுகளைக் களைவதற்கு புதிய அரசியலமைப்பொன்று தேவை என்பது வாக்காளர்களின் கருத்து. அரசாங்கம் குழு ஒன்றை அமைத்து மக்கள் கருத்தறியும் படலத்தை வேகமாக நிறைவேற்றியது. மக்களும் ஆர்வத்துடன் முன்வந்து தம் கருத்துக்களை பதிவு செய்தனர். அறிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது. உள்ளூ ராட்சித் தேர்தல் சந்தித்துள்ள நெருக்கடியை இந்த அறிக்கையும் சந்தித்துள்ளது. இது அளித்த வாக்குறுதியை மீறும் செயலாகும். இது எவரின், எந்தக் கட்சியின் அரசியலாக இருப்பினும் அது மக்களுக்கு எதிரான செயலாகும்.

புதிய அரசியலமைப்பின் வழி புதிய உரிமைகளை துய்ப்பதற்கு மக்களின் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. அதை தாமதப்படுத்தி தேர்தலில் வெற்றி பெற நினைப்பது ஆரோக்கியமான செயல் அல்ல. உத்தேச அரசியலமைப்பில் காணப்படுகின்ற பொருளாதார உரிமைகளுடன் முரண்படுகின்ற சிலர் அரசாங்கத்திலேயே இருப்பதாகக் கிடைத்துள்ள செய்தி அரசாங்கத்திற்கு ஒரு போதும் நன்மையாக அமையாது. இவை அனைத்தும் வெளிநாட்டு வங்கிகளின் ஆலோசனைப்படி நடக்குமானால், அந்நிய அடிமைத்துவத்திலிருந்து மீள்வதற்கான உத்திகள் இருக்க வேண்டும். அது என்ன என்பதை பொதுமக்களுக்கு அறிவிக்க வேண்டும். தகவல் அறியும் உரிமைச் சட்டம் கொண்டு வரப்பட்டமை அரசாங்கம் செய்துள்ள நல்ல காரியமாக இருந்தபோதிலும் மேலே சொல்லப்பட்ட, நிறைவேற்றத் தவறிய விடயங்கள் அரசாங்கத்திற்கு களங்கத்தை ஏற்படுத்துவதாகவே அமையும். புதிய அரசியலமைப்புக்கான மக்களின் யோசனைகளின்படி மக்கள் வலுவூட்டுவதால் அரசாங்கம் பாதுகாக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



www.passblue.com

வடக்கின் தாய்மார்கள்

**"இராஜதந்திர மட்டத்தில் மேற்கத்திய நாடுகளின் உள்நோக்கங்களுக்கு அடிபணியாது தமது அடையாளத்தைப் பாதுகாத்துக்கொண்டுள்ள பல நாடுகள் உள்ளன. அதை விடுத்து தமது குறுகிய அரசியல் நலன்களுக்காகக் கிடைத்த நன்மதிப்பை மூட்டை கட்டி வைத்திருப்பது சாத்தியமற்றது. அப்படி இருப்போமானால் அவமதிப்பு கிடைப்பதற்கு அதிக காலம் தேவைப்படாது. ஜெனீவா தீர்மானத்தைப் பின்பற்றுமாறு பிரயோகிக்கப்பட்டுள்ள அழுத்தம் அதற்கான ஓர் ஆதாரமாகும்."**

ஆனால் அரசாங்கத்திற்குச் சாதகமான இரண்டு விடயங்கள் இருப்பதை அவதானிக்கலாம். முதலாவது அரசாங்கம் வெளி நாடுகளில் பெற்றுள்ள வரவேற்பு. இரண்டாவது விடயம், மோசமான திருட்டுக் கும்பல் மீண்டும் அதிகாரத்திற்கு வந்துவிடுமென்ற அச்சம். இவ்விரு விடயங்களும் மிகக் குறுகிய காலத்தில் அற்றுப் போக வாய்ப்புண்டு. மக்கள் மத்தியில் ராஜபக்ஷ ஆட்சி பற்றிய வெறுப்பும் அச்சமும் சமநிலையில் வைத்து பார்க்கப்படுவதற்கான போக்குகள் தென்பட ஆரம்பித்துள்ளன. அது வெற்றி பெற்றால் நாடு அராஜ நிலையை அடையும். திருடர்களுக்கு அது சாதகமாகிவிடும். திருட்டுக் கும்பலில் ஒரு பகுதி சிறைவாசம் சென்றாலும் எஞ்சியோர் அல்லது புதியவர்கள் இடத்தைப் பூர்த்தி செய்வார்கள் என்பதை மறுக்க முடியாது.

கடந்துபோன இரண்டு வருடங்களில் அரசாங்கம் சில வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளது. மக்கள் சுதந்திரக் காற்றை சுவாசிக்கின்றனர். அந்த சுதந்திரத்தை ஊழல் பேர்வழிகள் அதிகமாகவே பயன்படுத்துகின்றனர். மக்களை வலுவூட்டுவதே அதற்குச் சரியான பதிலடியாக அமையும்.

உலக அளவு அதிருப்தி மற்றும் களை இழந்து காணப்பட்ட இலங்கையின் ஆட்சி மீண்டும் வரவேற்பைப் பெற்றிருப்பது முன்னேற்றகரமான நகர்வாகும். இருப்பினும், உட்கிடையாக இனவாத, சாய்வும் தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் உண்மையான நம்பிக்கையை ஏற்படுத்த தவறுவதாலும் மீண்டும் இருந்த நிலைக்குச் செல்ல வாய்ப்புண்டு.

அந்த வகையில் துணிச்சலான நடவடிக்கை எடுக்கப்படுவது காணக்கூடியதாக இல்லை. இன்றைய உலகில் ஒரு நாடு தனித்து பயணம் செய்வது சாத்தியமற்றது. ஐக்கிய நாடுகளின் உடன்படிக்கைகளை ஏற்று செயற்படுவதால் எமது நாட்டிலுள்ள அனைவரும் வலிமை பெறுவார்கள். இதை வெளிநாடுகளுக்கு அடிமையாதல் என அர்த்தம் கற்பித்தல் இனவாதிகளின் உலகப் பார்வையாக உள்ளது.


இராஜதந்திர மட்டத்தில் மேற்கத்திய நாடுகளின் உள்நோக்கங்களுக்கு அடிபணியாது தமது அடையாளத்தைப் பாதுகாத்துக்கொண்டுள்ள பல நாடுகள் உள்ளன. அதை விடுத்து தமது குறுகிய அரசியல் நலன்களுக்காக கிடைத்த நன்மதிப்பை மூட்டை கட்டி வைத்திருப்பது சாத்தியமற்றது. அப்படி இருப்போமானால் அவமதிப்பு கிடைப்பதற்கு அதிக காலம் தேவைப்படாது. ஜெனீவா தீர்மானத்தைப் பின்பற்றுமாறு பிரயோகிக்கப்பட்டுள்ள அழுத்தம் அதற்கான ஓர் ஆதாரமாகும்.

இந்த நகர்வுகளை காலம் தாழ்த்த முடிந்தாலும், அளித்துள்ள வாக்குறுதிகள், பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளை நிறைவேற்றாமல் இருக்க முடியும் என்பது அதன் கருத்தல்ல. நேர்மையும் நீதியும் நிலைநாட்டுவதற்கான அர்ப்பணிப்பும், நாடு பெற்றுள்ள வரவேற்பைப் பாதுகாத்துக்கொள்வதற்கான வழியாகும். நல்ல செயல்களும் மக்களின் முன்னேற்றம் மற்றும் மகிழ்ச்சி கருதி பணியாற்றுவோமாயின் நாம் எவருக்கும் அடிபணியாது எமது அடையாளத்தைக் காத்துக்கொள்ள முடியும்.

அரசாங்கத்தைப் பற்றிய இந்த விமர்சனங்கள் எமக்குக் கிடைத்துள்ள சுதந்திரத்தின் வெளிப்பாடு அல்ல. முன்னைய ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்தில் அதையே செய்து வென்ற உரிமைகளின் வெளிப்பாடு. ●




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**தகவலுக்கான உரிமைச்சட்டம், குற்றச் செயல்களுக்கு பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டம், 19 வது அரசியலமைப்புத் திருத்தம் அனைத்தும் புதிய அரசியலமைப்பு ஒன்றைக் கொண்டு வருவதற்கான தயார் நிலை போன்ற முற்போக்கான நடவடிக்கைகள் ஆரம்பமாயின. அவற்றில் சிலவற்றுக்கான பலன் கிடைத்துள்ளது. எவ்வாறாயினும் பொருளாதார ரீதியில் நாடு சந்தித்துள்ள பின்னடைவிலிருந்து எப்படி மீள்வது பற்றி திட்டவட்டமான வேலைத்திட்டமொன்று இல்லை.**

# தேசிய அரசாங்கம் மக்களைப் பற்றிச் சிந்திப்பதில்லை – டப்ளியு ஜயசிறி



2015 ஜனவரி 08 ஆம் திகதிக்கு முன்னர் நாட்டின் நிலைமையும் இன்றைய நிலைமையும் முற்றிலும் வேறுபட்டது. மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் கருத்துச் சுதந்திரத்திற்கும், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கும் எத்தகைய உரிமைகள் இருந்தன என்பது எமக்குத் தெரியும்.


அரசாங்கத்திற்கு எதிராகச் செயற்பட்டால் அதற்குப் பதிலளித்தால் அல்லது கருத்துத் தெரிவித்தால், வெள்ளை வான் கலாசாரம் ஒன்று இருந்தது. எவரும் அறியாத வகையில் காணாமற்போன சம்பவங்களும் இடம்பெற்றன. அதற்கு பல உதாரணங்களைக் குறிப்பிடலாம். 2015 ஜனவரி 08 இன் பின்னர் கருத்து தெரிவிப்பதற்கும் எழுதுவதற்கும் ஒன்று கூடுவதற்கும் வேலை நிறுத்தங்களை முன்னெடுப்பதற்கும் சுதந்திரம் கிடைத்தது. இதனை மிதமிஞ்சிய சுதந்திரம் என்றுகூட கூறலாம். இந்த சுதந்திரம் பல வருடங்களாக கிடைக்காததால் மக்களுக்கு அதுபற்றிய புரிதல் இல்லை. புரிதல் உள்ளவர்களும் சில நேரங்களில் அதைத் தவறாகப் பயன்படுத்துகின்றனர். அரசாங்கத்திற்கு எதிரான அரசியல்வாதிகளுக்கு இந்தச் சுதந்திரம் குரங்கின் கையில் பூமாலை போல் ஆகிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.sithma.com

அவர்கள் தமக்குத் தேவையான கருத்தை தேவையான விதமான தெரிவிக்கின்றனர்.

தகவலுக்கான உரிமைச்சட்டம், குற்றச் செயல்களுக்கு பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டம், 19 வது அரசியலமைப்புத் திருத்தம் அனைத்தும் புதிய அரசியலமைப்பு ஒன்றைக் கொண்டு வருவதற்கான தயார் நிலை போன்ற முற்போக்கான நடவடிக்கைகள் ஆரம்பமாயின. அவற்றில் சிலவற்றுக்கான பலன் கிடைத்துள்ளது. எவ்வாறாயினும் பொருளாதார ரீதியில் நாடு சந்தித்துள்ள பின்னடைவிலிருந்து எப்படி மீள்வது பற்றி திட்டவட்டமான வேலைத்திட்டமொன்று இல்லை.




கடந்த அரசாங்கம் பெற்றுக்கொண்ட கடன்கள் பற்றி தொடர்ந்தும் பேசிக்கொண்டிருக்க முடியாது. புதிய ஆட்சியில் நாட்டின் பொருளாதாரம் இப்படித்தான் இருக்குமென்பதை அவர்கள் அறிந்திருக்க வேண்டும். இன்றுள்ள பொருளாதார நிலைமை பற்றி அறிந்தே மஹிந்த ராஜபக்ஷ இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை அறிவித்தார் என்பது எமக்குத் தெரியும். அவர் இந்தப் பிரச்சினையை வேறு விதமாக அனுக எண்ணியிருந்தார். ஆனால் நல்லாட்சி அரசாங்கமென தம்மை அறிவித்துக்கொள்ளும் இந்த அரசாங்கம் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வர எதாவதொரு திட்டத்தை கொண்டிருக்க வேண்டியது அவசியமாகும்.

இவை ஒருபுறமிருக்க மக்களது கருத்துப் பரிமாற்றத்திற்கு வரி அறவிடுவதையிட்டு வெட்கப்பட வேண்டும். பொருளாதாரத்தை சரி செய்வதில் இவர்களின் செயற்பாடு ஆணிவேர் இல்லாத மரத்தைப் போன்றது. பொருளாதார சிக்கலிலிருந்து மீள முடியுமா? என்ற நிலை ஐயுற வைக்கிறது.

**இலங்கை போன்ற ஒரு நாட்டில் எதிர்பார்க்க முடியாத முற்போக்கான அரசியல் சீர்திருத்தங்கள் (19வது அரசியலமைப்புத் திருத்தம், தகவல் அறியும் சட்டம்) சரியான முறையில் மக்களைச் சென்றடைய அரசாங்கத்தின் ஊடகங்கள் கூட தகுந்த முறையில் பயன்படுத்தப்படவில்லை.**

முற்றிலும் சரியானது. இந்த அரசாங்கத்தில் ஜனாதிபதியின் கீழ் விசேட ஊடகப் பிரிவு ஒன்றுள்ளது. கடந்த அரசாங்கத்தில் மஹிந்த ராஜபக்ஷவின் ஊடகப் பிரிவில் இருந்தவர்களே இன்றும் உள்ளனர். அதன் பணிப்பாளர் தொடக்கம் கீழ்மட்ட பணியாளர்கள் வரை மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆலோசனை வழங்கிய பத்திரிகையாளர்கள்.

இந்த அரசாங்கம் முறி மோசடி, அரசாங்கத்திற்கு ஆதரவு திரட்டுவதற்காக உறுப்பினர்களுக்கு சிறப்புரிமைகளை வழங்கியது மற்றும் அவர்களுக்கான அதி சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்ய பாரிய பணத்தை வாரி இறைத்தல் போன்ற முட்டாள் தனமான காரியங்களையும் செய்துள்ளது. இந்தப் பணத்தைக் பயன்படுத்தி நாட்டின் பொருளாதார பிரச்சினைகளை ஓரளவு

**“ இந்த அரசாங்கம் முறி மோசடி, அரசாங்கத்திற்கு ஆதரவு திரட்டுவதற்காக உறுப்பினர்களுக்கு வரப்பிரசாதங்களை வழங்கியது மற்றும் அவர்களுக்கான அதி சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்ய பாரிய பணத்தை வாரி இறைத்தல் போன்ற முட்டாள் தனமான காரியங்களையும் செய்துள்ளது. இந்தப் பணத்தைக் பயன்படுத்தி நாட்டின் பொருளாதார பிரச்சினைகளை ஓரளவு தீர்வையாவது பெற்றிருக்கலாம். அடுத்ததாக தொலைபேசி கட்டண உயர்வு மக்களுக்கு விழுந்த பலத்த அடியாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




www.youtube.com

**"அரசாங்க ஊடக நிறுவனங்களின் அரசியல் பிரசாரம் புஸ்வாணமாகவே உள்ளது. பயனுள்ள தகவல்கள் வெளிவருவதில்லை. நுனிப்புல் மேய்கின்றன. நகைப்புக்குரிய தகவல்களை மட்டுமே பகிர்ந்துகொள்கின்றன. தகவல் அறியும் சட்டம் என்றால் என்ன ? காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் என்ன செய்கிறது. புதிய அரசியலமைப்பு எவ்வாறு உருவாக்கப்படுகிறது. போன்றவற்றை பொதுமக்களுக்குச் சரியான முறையில் தெரிவிக்கலாம்.**

தீர்வையாவது பெற்றிருக்கலாம். அடுத்ததாக தொலைபேசி கட்டண உயர்வு மக்களுக்கு விழுந்த பலத்த அடியாகும்.

பிரதம மந்திரியின் ஊடகப் பிரிவில் உள்ள சமன் அதாவுத ஹெட்டி, சமன் வகஆரச்சி, தம்மிக கங்காநாத் திசாநாயக போன்றவர்கள் அறிவால் உயர்ந்தவர்கள். ஆனால், அரசாங்கத்தினுடைய சாதகமான நடவடிக்கைகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் மெத்தனமாக உள்ளனர். பதவி, சம்பளம் இதுதான் அவர்களின் எல்லை.

காணாமற்போன ஆட்கள் பற்றிய தகவல்களை ஆராய அலுவலகமொன்று அமைக்கப்பட்டது தெரிந்ததே. அதன்படி கடந்த அரசாங்கத்திற்கு முற்பட்ட காலத்தில் நடந்த சம்பவங்கள் பற்றியும் ஆராய முடியும். 88,89 காலக்கட்டத்தில் நடந்த காணாமற்போதல் சம்பவங்களையும் ஆராய முடியும். அன்று நடந்த சம்பவங்களுக்கு பொறுப்புக்கூற வேண்டியது ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம். இந்தவொரு நிலைமையில் கூட, ஐக்கிய தேசியக் கட்சி காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலம் அமைத்திருப்பதை பதிவுசெய்ய அரசாங்க ஊடகவியலாளர்கள் பேனாவை கையிலெடுத்திருக்க வேண்டும். "நாங்கள் குற்றம் செய்துள்ளோம் எனக் கூறுவீர்களானால் அதை ஆராய்வதற்கும் சந்தர்ப்பம் வழங்கியுள்ளோம்" இவ்வாறு எழுதுவது முன்னுதாரணமாக அமையும்.

"அரசாங்க ஊடக நிறுவனங்களின் அரசியல் பிரசாரம் புஸ்வாணமாகவே உள்ளது. பயனுள்ள தகவல்கள் வெளிவருவதில்லை. நுனிப்புல் மேய்கின்றன. நகைப்புக்குரிய தகவல்களை மட்டுமே பகிர்ந்துகொள்கின்றன. தகவல் அறியும் சட்டம் என்னால் என்ன ? காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் என்ன செய்கிறது. புதிய அரசியலமைப்பு எவ்வாறு உருவாக்கப்படுகிறது. போன்றவற்றை பொதுமக்களுக்குச் சரியான முறையில் தெரிவிக்கலாம்.


புதிய அரசியலமைப்பை உருவாக்கும் போது இந்த சமூகத்தில் பலவிதமாக ஓரங்கட்டப்பட்ட இனக்குழுமங்கள் சிறப்பாக கவனிக்கப்பட வேண்டும். தன்பாலான உறவுக்காரர்கள், மாற்றுத் திறனாளிகள் அதில் முக்கிய இடம் பெறுவர். அவர்களைப் பற்றி எந்தப் பேச்சும் இல்லை. ஜனாதிபதியும் பேசவில்லை. பிரதம மந்திரியும் பேசவில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அரசியலமைப்பு தொடர்பான தெளிவுப்படுத்தல்கள் நடைபெறுவதில்லை. இறைமை மக்களுக்கு உரியது என்று சொல்லும்போது அரசியலமைப்பில் அது பற்றிய முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.

இந்த விடயத்தில் அரசாங்கத்தின் ஆர்வம் மங்கிப் போயிருப்பதால், கூட்டு எதிர்க்கட்சி அந்த வாய்ப்புகளைப் பறித்துக்கொள்கிறது. புதிய அரசியலமைப்பு தொடர்பாக பாராளுமன்றத்தில் ஆறு வழிப்படுத்தல் குழுக்கள் அமைக்கப்பட்டன. கூட்டு எதிர்க்கட்சியில் உள்ளவர்களும் அவற்றில் இடம்பெறுகின்றனர். சமீபத்தில் அவர்கள் வழிப்படுத்தல் குழுக்களிலிருந்து தாங்கள் விலகிவிட்டதாக அறிவித்தார்கள். அது உண்மையல்ல. இந்த நடவடிக்கைகளுக்கு ஆக்கபூர்வமாக பங்களிப்பு வழங்கிக்கொண்டு வெளியில் பொய் பேசுகின்றனர்.




www.sithma.com

**இந்த அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டு வந்த சிவில் அமைப்புகளுக்கு, அரசாங்கம் செவிசாய்ப்பதாகத் தெரியவில்லையே ?**

மிகப்பெரிய தவறு என்றே சொல்ல வேண்டும். மஹிந்த ராஜபக்ஷ போன்ற பலம் வாய்ந்த பெரும் புள்ளியை சாய்ப்பதற்கு சிவில் அமைப்புகளின் அர்ப்பணிப்பும் முயற்சியுமே காரணமானது. அதே போல் ஆலோசனை பெறும் நடவடிக்கையில் ஆர்வம் காட்டவில்லை. ஏன் ஆலோசனை பெற வேண்டும் என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

மைத்திரிபால சிறிசேனவுக்கு உதவிக் கரம் நீட்டியது அறிவார்ந்த சிவில் சமூக அமைப்புகளும் அவற்றுக்கு தலைமைத்துவம் கொடுத்த மக்களுமே. ஆனால் இன்று அவருக்கு நெருக்கமாக இருந்து ஆலோசனை கூறுபவர்கள் அன்று மைத்திரிக்கு எதிராக மஹிந்த ராஜபக்ஷவை சூழ்ந்து நின்றவர்களாவர். அரசியலமைப்பை நிறைவேற்றுவதற்கும், சில சட்டங்களை நிறைவேற்றுவதற்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை. அதனாலேயே இந்தத் தாமதமென்று கூறுகிறார்கள். இவை தப்பிக்க வேண்டுமென்பதற்காக சோடிக்கப்படும் கதைகள். இதைத் தொடர்ந்தும் சொல்வதில் பயனில்லை மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற இந்த நாட்டு மக்களின் செல்வத்தால் அவர்களுக்கும் அதிகப்படியான சிறப்புரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.

**“ மைத்திரிபால சிறிசேனவுக்கு உதவிக் கரம் நீட்டியது அறிவார்ந்த சிவில் சமூக அமைப்புகளும் அவற்றுக்கு தலைமைத்துவம் கொடுத்த மக்களுமே. ஆனால் இன்று அவருக்கு நெருக்கமாக இருந்து ஆலோசனை கூறுபவர்கள் அன்று மைத்திரிக்கு எதிராக மஹிந்த ராஜபக்ஷவை சூழ்ந்து நின்றவர்களாவர். அரசியலமைப்பை நிறைவேற்றுவதற்கும், சில சட்டங்களை நிறைவேற்றுவதற்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை. அதனாலேயே இந்தத் தாமதமென்று கூறுகிறார்கள். இவை தப்பிக்க வேண்டுமென்பதற்காக சோடிக்கப்படும் கதைகள். இதைத் தொடர்ந்தும் சொல்வதில் பயனில்லை மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற இந்த நாட்டு மக்களின் செல்வத்தால் அவர்களுக்கும் அதிகப்படியான சிறப்புரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.**

**பிரதான இரண்டு கட்சிகளும் இணைந்து இணக்க அரசியலை முன்னெடுக்கின்றன. ஆனால் அரசாங்கத்தின் வெளிப்படைத் தன்மை பற்றிய ஒரு பிரச்சினை உண்டு. இதற்குக் காரணம் அவர்களாலேயே முன்வைக்கப்பட்ட புதிய அரசியல் பண்பாட்டுக்கு இசைவு பெற முடியாத நிலையா ?**

மக்களுக்கு அரசியல் பண்பாடு பற்றிய புதிய விளக்கம் ஒன்றை அளிக்குமுன்னர், இணக்க அரசியல் செய்யும் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியிலுள்ளவர்களுக்கு பண்பாடு இருக்க வேண்டும். அவர்களிடம் அது இல்லை. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினர் தமது அதிகாரத்தைத் தொடர்ந்தும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"தன்பால் உறவுக்கான உரிமை பற்றிய பேச்சுக்கள் வந்தபோது மைத்திரிபால சிறிசேன எவ்வாறு நடந்துகொண்டார் என்பதை நாம் அறிவோம். "இப்படி ஒரு யோசனை வந்தது நான் அதை தூக்கி எறிந்துவிட்டேன்" என்றார்கள். இது அறிவார்ந்த ஒரு பேச்சாக இருக்க முடியாது. தன்பால் உறவு இயற்கையான ஒன்று என்பது அவருக்கு தெரியவில்லை இது இயற்கைக்கு மாறான உறவு என்று நினைக்கின்றார்.**

தக்கவைத்துக்கொள்ளும் ஒரே காரணத்திற்காகவே இணக்க அரசியலை விரும்பினார்கள். அது தவிர இந்த அரசாங்கத்தில் அதிகாரமுள்ள எவரும் எதையும் செய்வதில்லை. வெட்டிப் பேச்சில் மக்களை ஏமாற்றியுள்ளார்கள். இந்த அரசாங்கத்தால் எதுவுமே நடப்பதாக இல்லை. தேசிய அரசாங்கத்திலுள்ள பலரும் மக்களைப் பற்றிச் சிந்திப்பதில்லை. தமக்கு செல்வம் சேர்ப்பதே அவர்களின் சிந்தனையாக உள்ளது.

**மக்களது எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவது போலவே கட்சியைப் பாதுகாத்தல், கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் போன்ற சிக்கல்களை ஜனாதிபதி எதிர்நோக்கியிருப்பதாகத் தெரிகின்றதே ?**

மைத்திரிபால சிறிசேனவுக்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியை வழங்கி, மஹிந்த ராஜபக்ஷ வுக்கு அக்கட்சியலுள்ள செல்வாக்கை தாங்கள் பெற முடியுமென ஜனாதிபதியும் அவரைச் சுற்றியுள்ளவர்களும் நினைப்பார்களானால் அது நடக்காது. தேர்தலொன்று நடைபெற்றால் ஐக்கிய தேசியக் கட்சி முதலிடத்தையும் மஹிந்த அணி இரண்டாவது இடத்தையும், மைத்திரி அணி மூன்றாவது இடத்தையும் பிடிக்குமென்பது நிதர்ஷனமான உண்மை. தனிப்பட்ட முறையில் நான் அதை ஆதரிக்கின்றேன். எப்படியோ மைத்திரிபால சிறிசேனவுக்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாதென்பது எமக்குத் தெரியும்.

**மக்களின் சிந்தனையிலும் மனப்பாங்கிலும் மாற்றத்தை ஏற்படுத்தும் வேலைத்திட்டம் இந்த அரசாங்கத்திடம் உள்ளதா?**

எந்தவொரு வேலைத்திட்டமும் இல்லை. தன்னினச் சேர்க்கை மீதான உரிமை பற்றிய பேச்சுக்கள் வந்தபோது மைத்திரிபால சிறிசேன எவ்வாறு நடந்துகொண்டார் என்பதை நாம் அறிவோம். "இப்படி ஒரு யோசனை வந்தது நான் அதை தூக்கி எறிந்துவிட்டேன்" என்றார். இது அறிவார்ந்த ஒரு பேச்சாக இருக்க முடியாது. தன்னினக்கச் சேர்க்கை இயற்கையான ஒன்று என்பது அவருக்குத் தெரியவில்லை இது இயற்கைக்கு மாறான உறவு என்று நினைக்கின்றார். இந்த விடயத்தில் அவர் சிறுபிள்ளைத்தனமாகவே நடந்துகொள்கிறார். பிரதமருக்கு நன்கு தெரிந்தாலும் அவர் அதுபற்றி பேசுவதில்லை. வெளி விவகார அமைச்சர் பேசுவார். முழு நாட்டுக்கும் அது தெரியும். அச்சப்படும் அளவுக்கு ஒன்றுமில்லை. வெளிப்படையாகப் பேச முடியும் அநகாரிக தர்மபால தன்னினச் சேர்க்கை என்பதைக் கூற நான் பயப்பட மாட்டேன். எங்களுடைய விகாரைகளில் தன்னினச் சேர்க்கை உறவு உள்ளது. அதற்கு சூட்டியுள்ள பெயர் "பன்சல் கூதுவ" நிலைமை இதுவாக இருக்கும்போது பகிரங்கமாகவே பிக்குமாரிடம் அதைப்பறி சொல்லிக்கொண்டிருக்கின்றோம்.

அடுத்ததாக, ஜனாதிபதி பேச்சில் புலியாக வலம் வருகிறார். மாதத்தின் எல்லா நாட்களிலும் அவர் எங்காவது எதையாவது பேசுவார். தாதுகோபுரங்களை திறந்து வைப்பார், மலர் தூவி பூஜித்து புத்தரின் சிலை மனைகளை திறந்து வைப்பார். இதுபோன்ற காரியங்களையே அவர் செய்வார். இவற்றைச் செய்து மக்களின் மனப்பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. இன்று நாட்டில் மூடநம்பிக்கை ஆழமாக வேரூன்றிவிட்டது. துறவிகளும் துறவிகள் அல்லாதோரும் பொய்யான கருத்துக்களைப் பரப்புகின்றனர். மக்கள் அரசாங்கத்தில் நம்பிக்கை இழக்கும்போது இவர்களை பின்தொடர வேண்டிய நிலை உருவாகும். இது முற்றிலும் அதிகாரத்தைத் தக்க வைப்பதற்கான ஒரு போராட்டம். அரசாங்கம் அதிகாரத்தைத் தக்க வைக்கப் போராடி வருகிறது. எதிர்தரப்பு மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்ற முயல்கிறது. அதிகாரத்தை எப்படி கைப்பற்றுவது ? இது தான் அரசியலின் அடிப்படை நோக்கம் அதாவது அதிகாரத்தை எப்படி கைப்பற்றுவது, எவ்வாறு தக்க வைப்பது, அதேபோல் யாருக்காக அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும் என்பதை சிந்திக்க வேண்டும். அரசாங்கத்தின் நடத்தையை இது நன்று வெளிப்படுத்துகிறது. ஓர் அமைச்சர் ஒன்றைச் சொல்லும் போது இன்னுமொரு அமைச்சர் முற்றிலும் மாறான வேறு கருத்தை முன்வைக்கின்றார். ஒரே அமைச்சரவையில் இருந்தபடி ஒருவர் சொல்லும் விடயத்தை மற்றவர்கள் எதிர்க்கின்றார்கள். பொதுவான உடன்பாடு இல்லை. சில சமயங்களில் பிரதமரும் அவரைச் சுற்றியுள்ளவர்களும் கிச்சன் கெபிநெட் என்றும் அமைக்கப்படுகின்றனர். இது உண்மை, இது பேரழிவாகவே அமையும். மஹிந்தவின் காலத்தில் அவரின் குரல் மட்டுமே ஓங்கி ஒலித்தது. நன்மையோ தீமையோ அவரே முடிவு செய்வார். இன்று அவ்வாறு முடிவெடுப்பதற்கு எவரும் இல்லை. திரிசங்கு நிலையில் உள்ளனர்.


இந்த அரசாங்கம் இதை எவ்வாறு சமாளிக்கப் போகிறது. தொழில் சந்தை பற்றி பேசுகிறார்கள். அது எங்கே பாரிய முதலீட்டாளர் ஒருவராவது வந்துள்ளாரா? இந்த ஆண்டில் இதே காலகட்டத்தில் அது சாத்தியமாகும் என்ற நம்பிக்கை இருந்தது. எவரும் வரவில்லை. ∴பொக்ஷ்வார்கன்கார் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும் என்ற செய்தி அப்பட்டமான பொய் என்பது நிரூபணமாகியுள்ளது. ஹொரணையில் ரயர் தொழிற்சாலை அமைக்கப்பட்டது. ஆனால் எதுவுமே சரியான முறையில் நடைபெறவில்லை.

**நாட்டின் எதிர்காலம் பற்றி சாதகமான மனப்பாங்கு காணப்படுகிறதா?**

எமக்கு எதிர்காலத்தைப் பற்றி எதிர்மறையாக சிந்திக்க முடியாது. நாளை நாள் சிறப்பாக அமைய வேண்டும் என எண்ணினாலும் அது சாதகமாக நடப்பதில்லை. அடுத்து வரும் நாள் நல்லதாக அமையுமென நினைப்போம் எம்மவர்களின் சிந்தனை இது. •

உரையாடல் : **லஹிரு கிதலகம**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லாட்சி அரசாங்கத்தில் கூட்டுப் பொறுப்பு இல்லை


## – வண கலகம புத்தானந்த தேரர்

**இளமானி வன. கலகம புத்தானந்த தேரர் பெலிஹுல்ஓயா போதிருக்காராம விகாரையை வாசஸ்தலமாக கொண்டுள்ளார். முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளரான இவர் சட்டத்துறையில் பட்டம் பெற்றுள்ளார். சிவில் சமூக செயற்பாட்டாளராகவும் சுயாதீன சிந்தனையாளராகவும் நிகழும். இவர் நல்லாட்சிப் பாதை பற்றித் தெரிவித்த கருத்துக்கள் இங்கு தரப்படுகின்றன.**

**அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இரண்டு வருடங்கள் பூர்த்தியாகும் தருணத்தை எட்டியிருப்பினும் அதை உணரமுடியவில்லை. இந்நிலையில் நடந்துள்ள மாற்றங்கள் எவ்வாறு உணரப்படுகின்றன?**

இரண்டு வருடங்கள் கழியும் நிலையில் இருந்தாலும் எவராலும் அதை உணர முடியவில்லை. ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பட்டியலிடுவோமானால் முக்கியமாக கருத்துச் சுதந்திரம் இருக்கின்றது. பேச்சுச் சுதந்திரமும், எழுத்துச் சுதந்திரமும் இருப்பதை நடைமுறையில் உணரக் கூடியதாக உள்ளது. அதேபோல் நாடு பூராகவும் பேரணிகள் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் எதிர்ப்புகள் வெளிப்படுத்தப்படுவதையும் காணலாம். இது ஒருவருக்கு முழு நாடுமே அராஜகத்தில் இருப்பதாகத் தெரியலாம். நீண்ட காலமாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் அமைதியாகவே நடைபெற்றன. அவ்வாறு அமைதியாக ஓர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடந்திருந்தாலும் அதன் பின்னால் அரசியல் அன்று சுதந்திரமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



srilankabrief.org

பாராளுமன்ற சபாபீடம்

எதிர்ப்பைத் தெரிவிக்கும் வாய்ப்பு மறுக்கப்பட்டிருந்தது. இன்று அதற்கான சுதந்திரம் கிடைத்துள்ளது. இது வரை காலம் கொதிநிலையில் இருந்த பிரச்சினைகள் வெளிப்பட ஆரம்பித்துள்ளன. நீண்ட காலமாக பிரச்சினைகள் இருந்தாலும் அவை பற்றி பேசுவதற்கு களமொன்று இருக்கவில்லை. இன்று அதற்கான வாய்ப்பு பரந்தளவில் காணப்படுவதால் வேண்டிய மற்றும் வேண்டாதவற்றுக்கும், பேச்சுவார்த்தை மூலம் உடன்பாடு காணக் கூடிய விடயங்களுக்கும் எதிர்ப்பு தெரிவிக்கும் நிலை உருவாகியுள்ளது. பதிமூன்று வயதிலிருந்து சமூக அரசியலை உய்த்துணர்ந்து வந்த ஒருவன் என்ற வகையில் மிக நீண்ட காலத்தின் பின்னர் சுதந்திரமான அரசியல் சூழல் ஒன்று ஏற்பட்டிருப்பதை என்னால் உணர முடிகிறது.

அடுத்தபடியாக கிடைத்துள்ள மட்டற்ற ஊடகச் சுதந்திரம் பற்றிக் கூற வேண்டும். ஆனால் ஊடகவியலாளர்கள் அந்தச் சுதந்திரத்தைக் கையாள்வதில் சிக்கல் உள்ளது. பொதுவாக ஊடகப் பயன்பாட்டில் ஊடகவியலாளர்களை காவல் நாய்கள் என்று அழைப்பதுண்டு. அதற்கு நாட்டின் எல்லைகளைப் பாதுகாப்பவன் என்பது பொருள். இருப்பினும் எமது நாட்டு ஊடகவியலாளர்கள் காவல் நாய்களா? என்ற கேள்வி உள்ளது. ஏனென்றால் அவர்கள் தேவையானதற்கும் குரைப்பார்கள் தேவையில்லாத ஒன்றுக்கும் குரைப்பார்கள். தமது நோக்கத்தை அடைந்து கொள்வதற்கும் குரைப்பார்கள். எமது தேசியக் குறிக்கோள் என்ன என்பதை அறிந்து கிடைத்துள்ள சனநாயகத்தினையும் சுதந்திரத்தினையும் அர்த்தமுள்ளதாக மாற்றுவதே ஊடகத்தின் பணியாக இருக்க வேண்டும். இன்றுள்ள கேள்வி அது நடக்கிறதா? ஆகவே ஊடகப் பயன்பாடு பற்றி ஊடகங்களே ஆழமாக ஆராய வேண்டியுள்ளது.

பாராளுமன்றத்திலும் பல விவாதங்கள் இடம்பெறுகின்றன. ஆனால், அவை அர்த்தமுள்ளனவா? நீண்ட காலமாக அரசியல் பண்பாடு தவறாகவே பயன்பட்டுள்ளது. அதை நல்ல சிறந்த முறையொன்றுக்கு நகர்த்துவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே காணப்படுகின்றன. ஆதலால் ஏற்பட்டுள்ள சனநாயகத்தின் புதிய போக்குகளை ஒரு நிலைமாறு காலமாகவே நான் பார்க்கின்றேன். எதிர் மறையாக பார்ப்பவர்கள் எவ்விதமான கருத்துக்களைத் தெரிவித்தாலும் சாதகமான ஒரு பக்கமும் உண்டு. எனினும் அரசாங்கத்திலும் எதிர்க்கட்சியிலும் ஏற்பட்டுள்ள இந்த நிலைமையை இதைவிட சாதுரியமாக கையாள வேண்டும். அதிகாரத்தைப் பற்றுவதே எதிர்க்கட்சியின் நோக்கமாக உள்ளது. ஆகவே இரு தரப்பும் இணைந்து இந்தச் சுதந்திரத்தை பயனுள்ள விதமாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். "

**நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் தீர்க்கமான அரசியல் சீர்த்திருத்தங்கள் ஓரளவாவது நடந்துள்ளன. அது மக்களில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது?**

பல குறைபாடுகள் இருந்தாலும் 19 அரசியலமைப்புத் திருத்தம் மிகவும் பயனுள்ளது. இது நிறைவேற்றப்பட்டதில் அதை விரும்பியவர்கள் மட்டுமல்ல விரும்பாதவர்களின் பங்கும் உள்ளது. அவர்கள் பல திருத்தங்களை கொண்டு வந்தனர். அவற்றில் சில குழப்பும் நோக்கில் கொண்டுவரப்பட்டவை. பல திருத்தங்கள் சகிதம் நிறைவேற்ற முயற்சிகள் இடம்பெற்றன. இதை நிறைவேற்றிக் கொள்வது அவர்களின் நோக்கமாக இருக்கவில்லை. இருப்பினும் ஜனாதிபதி முறையில் சில திருத்தங்களைச் செய்து இரண்டு தடவைக்கும் மேல் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடலாம் என்றிருந்த நிலையை நீக்கி ஆக்கப்பூர்வமான மற்றும் பயனுள்ள பல மாற்றங்கள் செய்யப்பட்டன. சமுதாயத்தின் வளர்ச்சி பின்னோக்கி நகர்த்தப்பட்டிருந்த நிலையில். அதை சரியான பாதையில் இட்டுச் செல்ல முடிந்தமை வெற்றி என்றே கூற வேண்டும். இதன் தாற்பரியம் சாமானிர்களுக்குப் புரிந்திருக்கலாம். கடந்த அரசாங்கம் மூன்றாவது முறையாகவும் ஆட்சியதிகாரத்துக்கு வந்திருக்குமானால் உண்மை நிலை புரிந்திருக்கும். இந்த மாற்றத்தை வரவேற்க வேண்டும். நாங்களும் ஆரம்பத்தில் மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது முறையும் ஆட்சிக்கு வர வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தோம். இந்த மாற்றத்தின் பின்னர் நிகழ்ந்த ஆக்கப்பூர்வமான சீர்த்திருத்தங்கள் நாங்கள் கொண்டிருந்த நிலைப்பாடு தவறென்பதை புரியவைத்தது. அத்தருணத்தில் நாங்கள் வரலாற்றுத் தவறை செய்துவிட்டோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே போல் தகவல் அறியும் சட்டம் முக்கியமானது. மக்கள் இதுபற்றி அறிந்திருப்பதற்குக் காரணம் தகவல்கள் சென்றடைவதில் காணப்படுகின்ற தொய்வு நிலை. சில அரச உத்தியோகத்தர்கள் இச்சட்டம் தமக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தியிருப்பதாகச் சிந்திக்க வாய்ப்புள்ளது. ஒரு சில நிருவாக உத்தியோகத்தர்கள் இதை ஒரு தவறாகக் கருதுகின்றனர். தகவல் வழங்கும் நடவடிக்கை சீராக அமைவதற்கு சில காலம் தேவைப்படலாம். ஆனால், அதுவரை தகவல் பெறுவதில் எத்தடையும் இல்லை. ஆகவே, பொதுமக்களுக்கு முக்கியமான இந்தச் சட்டம் பற்றி ஊடகங்கள் சரியான தகவல்களை வழங்கி பொதுமக்களை விழிப்புணர்வு பெறச் செய்ய வேண்டும்.

**இதுபோன்ற நல்ல விடயங்கள் பற்றி பொதுமக்களுக்கு எடுத்துக் கூற வேண்டிய தேவை அரசாங்கத்திடம் இருப்பதாகத் தென்படவில்லையே?**


முற்றிலும் சரியானது. இந்த அரசாங்கத்திடம் திட்டங்கள் இருக்கின்றன. அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் இல்லை. வரவு செலவுத்திட்டத்தில் சிரேஷ்ட பிரசைகளுக்காக கொண்டுவரப்பட்ட யோசனைகள் சமீபத்தில் தான் நடைமுறைக்கு வந்தன. இதை உதாரணமாகச் சொல்லலாம். இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஓடிவிட்டது. யோசனைகள் கொண்டுவரப்பட்டாலும். அவை நடைமுறைக்கு வருவதில்லை.இது போன்றவற்றை சமூகத்திற்கு கொண்டு சேர்ப்பதில் நலிவான போக்கு உள்ளது. அரசாங்க ஊடகங்கள் பேச வேண்டிய சில விடயங்களை விழுங்கி விடுகின்றன. ஏனையவர்கள் அவற்றைத் தாக்கிப் பேசுகின்றனர். நல்லதைக் கூற அச்சப்பட வேண்டிய அவசியமில்லை. அவற்றை மக்களிடம் சொல்ல வேண்டும். எதிரெதிர்க் கட்சிகள் இரண்டு இணைந்து ஆட்சி புரிந்தாலும் கோட்பாடுகள் உள்ளன. அதில் கோட்பாடு கூட்டுப்பொறுப்பு. என்பன இந்த அரசாங்கத்தில் இல்லை. அரசாங்கத்தில் ஏதாவது பிரச்சினை இருந்தால் அரசாங்கத்தினுள்ளேயே அதுபற்றிப் பேச வேண்டும். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கியதேசியக் கட்சி பற்றிய விடயங்களை வெளியில் பேசலாம். இந்த இரண்டு தரப்பும் இணைந்து ஆட்சி செய்யும் போது அது பற்றிய விடயங்கள் அவர்களுக்கிடையில் பேசப்பட வேண்டும். ஒவ்வொருவரும் அரசாங்கத்திற்கு வெளியே மக்களின் கவனத்தை ஈர்க்க இவ்வாறு பேசுவார்களானால் அது அரசாங்கத்திற்கு தோல்வியாகவே அமையும். இதனால் அரசாங்கத்தினுடைய பலம் தொடர்பாக பொதுமக்களின் சந்தேகம் ஏற்படுகிறது. அந்த சந்தேகத்தினை எதிர்தரப்பினர் சிறந்த முறையில் தமக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்கின்றனர்.

**வழங்கிய வாக்குறுதிகள் (புதிய அரசியலமைப்பு போன்ற) நிறைவேற்றப்படுவதாக இல்லை. அத்துடன் நீங்கள் தெரிவித்த விடயங்களினால் அரசாங்கத்தின் மீதுள்ள நம்பிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டு வருகிறதே?**


இந்த அரசாங்கத்தில் இப்போதுள்ள மாற்றத்தை ஆதரிப்பவர்களும் எதிர்ப்பவர்களும் இருக்கிறார்கள். ஆரம்பத்தில் எதிர்த்த சிலர் பின்னர் ஆதரவு வழங்கியுள்ளார்கள். இதில் சனாதிபதிக்கும் பிரதமருக்கும் ஒரு கடப்பாடு இருக்கின்றது. சுதந்திரக் கட்சியில் தன்னுடன் எத்தனை பேர் உள்ளார்களோ அவர்களை சமகால அரசியல் நிலை தொடர்பாகக் கூடுதலாக விழிப்புணர்வு செய்யும் பொறுப்பு சனாதிபதிக்குரியது. பின்னர் அவர்களின் சமூகத்தை கவனிக்க வேண்டும். ஐக்கிய தேசிய கட்சியிலும் இதைச் செய்ய வேண்டும். ஒழுக்கத்தை கவனித்தலென்பது சட்டம் போட்டு வாயை மூடுவதல்ல. பேச்சுச் சுதந்திரம் உண்டு. ஆனால், எங்கு எதைப் பேச வேண்டுமென்பதை தீர்மானிக்க வேண்டும். இதனாலேயே கட்சியொன்றுக்கு மத்தியத்துவ (உள்ளக) ஜனநாயகம் தேவைப்படுகிறது. எனக்குத் தெரிந்த வரையில் இந்த இரு கட்சிகளிடமும் அது இல்லை. அது ஏன் என்றும் தெரியாது. இருகட்சிகளும் தமக்குள்ள பிரச்சினைகளை தனித்தனியே பேசி அரசாங்கம் கூடும்போது பொதுவான பிரச்சினைகள் பற்றி பேச வேண்டும். இவ்வாறான ஒரு பண்பாடு இன்றி அரசாங்கம் நல்வெண்ணத்துடன் செய்யும் பணிகளை முன்னெடுத்துச் செல்ல முடியாது. மக்கள் இதனை நியாயப்பூர்வமாக எடுத்துக்கூறத் தவறினால் பயணத்தைத் தொடர முடியாது. சாதகமான நகர்வுகள் பற்றிய புரிந்துணர்வும் ஏற்படாது. இந்த அரசாங்கம் தேவையானதை பேசுவதைத் தவிர்த்து வார்த்தையால் ஒருவர் விடும் தவறை பிரதான தலைப்பாக்கி வாதிப்பதையே செய்கிறது.

**நல்லாட்சி அரசாங்கம் என்று கூறும் போது அது சிறந்த அரசியல் பண்பாட்டுக்கான ஓர் அணுகுமுறை. அவ்வாறான ஒரு மாற்றத்திற்கு ஈடுகொடுக்க முடியாத ஒரு சிக்கல் இருப்பதாக தெரிகிறதே?**

ஈடுகொடுக்கக்கூடிய அளவுக்கு மாற்றம் ஏற்படவில்லை. சிறந்த அரசியல் பண்பாடு என்பது முட்டாள்தனமாக மேடைப்பேச்சு பேசுவதல்ல. நல்லாட்சி என்ற



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




nalakagunawardene.com

**"சிறந்த அரசியல் பண்பாடு என்பது முட்டாள்தனமாக மேடைப்பேச்சு பேசுவதல்ல. நல்லாட்சி எனற எண்ணக்கரு புதிய ஒன்று. ஆதலால், முதலாவதாக அரசியல்வாதிகளில் இந்த மாற்றம் ஏற்பட வேண்டும்.**

எண்ணக்கரு புதிய ஒன்று. ஆதலால், முதலாவதாக அரசியல்வாதிகளில் இந்த மாற்றம் ஏற்பட வேண்டும். இன்னும் தமக்கு எதிரானவர்களை துரத்திக்கொண்டிருப்பதையே அவர்கள் செய்து வருகிறார்கள். அது அவர்களுக்கு பழக்கப்பட்டுவிட்டது. மாற்றத்தைக் கொண்டுவரும் விடயத்தில் தாங்கள் நடந்துகொள்ள வேண்டிய விதம் கூட இவர்களுக்குத் தெரியாது.

அதேபோல் இடதுசாரிக் கட்சிகளும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து சமூக மாற்றத்தைக் கொண்டுவர முடியாது என நினைக்கின்றன. மாறாக இடதுசாரிகள் கூட்டுச் சேரும் குழுவால் மட்டுமே இதைச் சாதிக்க முடியுமென அவர்கள் கருதுகின்றனர். ஆனால், அவர்கள் இணைந்துள்ள பக்கம் தவறானது. ஆரம்ப காலங்களில் நிறைவேற்றதிகார சனாதிபதி முறையை எதிர்த்த இடதுசாரிகள் இருந்தார்கள். மைத்திரிபால சிறிபால சிறிசேன நிறைவேற்றதிகார சனாதிபதி முறையை ஒழிக்க முற்படும் நிலையில் இடதுசாரிகள் அவருக்கு ஆதரவாக இல்லை. மக்கள் விடுதலை முன்னனி தவிர்ந்த ஏனைய பிரதான இடதுசாரிக் கட்சிகளின் நிலை இதுதான். கொல்வின் ஆர்.டி. சில்வா இருமொழி என்றால் ஒருநாடு, ஒரு மொழி என்றால் இரு நாடு" என்று சொன்னார்.

அதிகாரப் பகிர்வு வேண்டும் என அன்று பேசியவர்கள் இன்று வேறு எதையோ பேசுகின்றனர். சமகால சமூகத்திற்கு வழங்க வேண்டிய தலைமைத்துவத்தை அவர்கள் வழங்குவதில்லை. இதுவரை காலம் வழங்கிய தலைமைத்துவத்திலும் வழி தவறி நிற்கின்றனர். அதற்குக் காரணம் இனவாதம், தனிநபர் வாதம் அல்லது தமக்குக் கிடைத்த ஏதும் நன்மைகளா என்பது எமக்கு தெரியது.

இந்த அரசியல் மாற்றத்தை ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சியிலுள்ள அனைவரும் உள்வாங்கி அதை மேம்படுத்தும் வகையில் பணியாற்ற வேண்டும். பண்டாரநாயக்கவுக்கு பின்னர், இலஞ்சம் பெற்ற அரசியல்வாதிக்குத் தண்டனை வழங்கி எந்தவொரு தலைவரையும் நான் காணவில்லை. என்பதை இங்கு கூற வேண்டும். என்னுடைய நினைவுக்கு எட்டிய வரையில், பண்டாரநாயக்கா இலஞ்சம் பெற்றதாக தன்னுடைய அமைச்சரவையில் இடம்பெற்ற இரண்டு அல்லது மூன்று பேருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்தார். இந்த வகையில் பண்டாரநாயக்கா முன்னோடியாக இருந்துள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள அநேகமானோர் சரியோ பிழையோ ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகி உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இன்று எமது நாட்டில் நிதித் துறையில் ஏற்பட்டுள்ள சுயாதீனம் வரவேற்கத்தக்கது. நீதிமன்றங்களின் சுயாதீனம் மட்டும் போதாது. நீதி நிலைநாட்டப்பட வேண்டும். அது எந்தளவுக்கு வேகமாக நடக்கிறதோ அந்தளவுக்கு வேகமாக மக்களுக்கு நியாயம் கிடைக்கும். ஆனால் அநேகமான வழக்குகளைத் தீர்ப்பதில் தாமதம் ஏற்பட்டிருப்பதை காண முடிகிறது. நீதித் துறையை சுயாதீனமாக்கும் பொருட்டு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் மகிழ்ச்சி அளிக்கின்றன. இருப்பினும், அது அரத்தபுஷ்டியாக வேண்டுமானால் வழக்குகளில் காணப்படுகின்ற தாமதம் தவிர்க்கப்பட வேண்டும். இருக்கின்ற நீதிமன்றங்களின் எண்ணிக்கை போதாவிட்டால் புதிய நீதிமன்றங்களை உருவாக்க வேண்டும். மாகாண நீதிமன்றங்கள் மேலும் மேம்படுத்தப்பட வேண்டும்.**

பொது மக்களின் பணத்தை தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் சொத்துக்களை சூறையாடுதல் போன்ற குற்றச்சாட்டுக்களுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். பண்டாரநாயக்காவின் கொள்கையிலிருந்து நெறி தவறவில்லை எனக் கூறிக்கொள்பவர்களே இந்த நிலைமையை வளர்த்துவிட்டுள்ளனர். இவர்கள் கட்சியை சுத்தம் செய்து இந்த நிலைமைக்கு எதிரான நிலைப்பாட்டில் இருப்பதாக காண்பிக்க வேண்டும். இல்லாவிட்டால் அமைதியாக இருக்க வேண்டும். இந்த சூழ்நிலைமையில் அரசியல் பண்பாட்டை எவ்வாறு கட்டியெழுப்ப முடியும்? நல்லாட்சி வந்த பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி மீது குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன. முறையான விசாரணைகளை முன்னெடுத்து அவற்றுக்குத் தண்டனை வழங்க வேண்டும்.

இன்று எமது நாட்டில் நிதித் துறையில் ஏற்பட்டுள்ள சுயாதீனம் வரவேற்கத்தக்கது. நீதிமன்றங்களின் சுயாதீனம் மட்டும் போதாது. நிதி நிலைநாட்டப்பட வேண்டும். அது எந்தளவுக்கு வேகமாக நடக்கிறதோ அந்தளவுக்கு வேகமாக மக்களுக்கு நியாயம் கிடைக்கும். ஆனால் அநேகமான வழக்குகளைத் தீர்ப்பதில் தாமதம் ஏற்பட்டிருப்பதை காண முடிகிறது. நீதித் துறையை சுயாதீனமாக்கும் பொருட்டு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் மகிழ்ச்சி அளிக்கின்றன. இருப்பினும், அது அரத்தபுஷ்டியாக வேண்டுமானால் வழக்குகளில் காணப்படுகின்ற தாமதம் தவிர்க்கப்பட வேண்டும். இருக்கின்ற நீதிமன்றங்களின் எண்ணிக்கை போதாவிட்டால் புதிய நீதிமன்றங்களை உருவாக்க வேண்டும். மாகாண நீதிமன்றங்கள் மேலும் மேம்படுத்தப்பட வேண்டும். அதேபோல் வழக்குகளை விசாரிக்க எடுக்கும் நோக்கத்தை அதிகரிக்க வேண்டும். வழக்குகள் தாமதமாவற்கு நீதிபதிகள் காரணமல்ல. சட்டத்தரணிகள் அதற்கான ஒரு சம்பிரதாயத்தை உருவாக்கிக் கொண்டுள்ளார்கள். வழக்கு ஒன்றின்போது கால அவகாசம் கோரும் தடவைகளை மட்டுப்படுத்த வேண்டும். இது போன்ற விடயங்களில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

**இந்த அரசாங்கத்தின் எதிர்காலம் பற்றி உங்களிடம் சாதகமான மனப்பாங்கு உண்டா?**

இந்த அரசாங்கத்திடம் குறைப்பாடு ஒன்று உள்ளது. அரசாங்கமொன்று ஆட்சிக்கு வந்ததும் அதன் அதிகாரம் தாபிக்கப்பட வேண்டும். அந்த அதிகாரத்தை சகல நிறுவனங்களுக்கும் பன்முகப்படுத்துவதில் குறைபாடு உள்ளது. இதனால் அரசாங்க உத்தியோகத்தர்கள் தங்கள் கடமையில் பொறுப்பு அற்றவர்களாக காணப்படுகின்றனர். அரசிலமைப்பின்படி அரச உத்தியோகத்தர்களும் அரசாங்கத்தின் கொள்கையை நடைமுறைப்படுத்தும் பொறுப்புக்கு கட்டுப்பட்டுள்ளார்கள். இது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு உரியதல்ல. அந்த ஆணைக்குழுவுக்கு அரசாங்கக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் கிடையாது. அதை நடைமுறைப்படுத்த அமைச்சரவை ஒன்று உள்ளது. இது போன்ற விடயங்களில் குறைபாடு உள்ளது. இந்த குறைபாடு இருக்கும் வரை அரசாங்கத்தின் எதிர்காலம் பற்றிய சாதகமான மனப்பாங்கினை வைத்திருக்க முடியாது. எதையும் செய்யாத அரச உத்தியோகத்தர்களும் உள்ளனர். அவர்களுக்கு எந்தப் பொறுப்பும் ஒப்படைக்கப்படவில்லை. கமத்தொழில் ஆராய்ச்சி உத்தியோகத்தர்களில் சிலர் கடமை நேரத்தில் முச்சக்கரவண்டி ஓட்டுகின்றனர். அவர்கள் தமக்குரிய வேலையைச் செய்வதில்லை. இவர்களுக்கு பொறுப்பான அலுவலகங்களில் அதற்குரிய ஏற்பாடுகள் இல்லை. இவை சரிசெய்யப்பட வேண்டும்.

முன்னர் அரச பணியில் அனைத்து காரியங்களும் ஒப்பந்த அடிப்படையிலேயே நிறைவேற்றப்பட்டன. அந்த கலாசாரம் இன்றும் மாறாத நிலை காணப்படுகின்றது. ஆனால், தற்போது ஒப்பந்த முறையில் பணியாற்றும் வாய்ப்பு இல்லை என்பதால் கோபம் வெளிப்படுவதும் அதிகமாகிவிட்டது. அரசாங்கத்தின் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படுவதில் இவை மாற்றப்பட வேண்டும். அதற்கு அரசாங்கம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் இடையீடு செய்ய வேண்டும். அரச நிறுவனங்களில் இடம்பெறும் முறைக்கேடுகளைத் தவிர்க்க தலையீடு செய்திருப்பது சனநாயகம் அல்ல. தவறான தலையீடுகளே சனநாயகத்திற்கு விரோதமானதாக அமையும். நல்லாட்சி பொதுமக்களின் நலன் கருதி முன்னெடுக்கப்படுமானால் நல்ல விடயங்களுக்காக தலையீடு நடந்துள்ள சம்பவங்களுக்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த அரசாங்கத்தின் எதிர்காலம் அளிக்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிகளிளேயே தங்கியுள்ளது. அரசாங்கம் கொண்டுவந்த கொள்கைகள் நிமித்தம் பெரும்பாலான மக்கள் அதற்கு ஆதரவு வழங்க முன்வந்தனர். ஊழல் ஒழிப்பு, திருடர்களைப் பிடித்தல், தவறான பயன்பாட்டிலுள்ள பொது சொத்துக்களை மீட்டல் அத்துடன் புதிய அரசியலமைப்பு போன்ற விடயங்கள் முதன்மையாக உள்ளன. அரசாங்கமும் இவற்றையே செய்து வருகிறது. வழக்கு தொடரப்படும் போது உரியமுறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். நடைமுறைப்படுத்தப்படுவதில் சிக்கல் உள்ளது. மறு பக்கத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்களும் அலைக்கழிக்கப்படுகின்றனர். அதேபோல் அவர்கள் வீரர்களைப் போல் ஊடகங்களில் உலா வருகின்றனர். வழக்குகள் சரியான முறையில் விசாரிக்கப்பட்டால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



www.omlanka.net

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆர். சம்பந்தன்


**அரசியலமைப்பில் அடிப்படையான மாற்றங்களைச் செய்ய வேண்டும். அது அரசியலமைப்புத் திருத்தமா அல்லது புதிய அரசியலமைப்பா என்ற கேள்வி உள்ளது. வடக்கிலுள்ள தமிழர்களும் இணைந்துள்ள இத்தருணத்தில் நாம அணைவரும் இணைந்து சிறந் அரசியலமைப்பொன்றை உருவாக்க முடிந்தால் அது மிக முக்கிமான ஒன்றாக அமையும்.**

இவற்றைத் தவிர்க்கலாம். குற்றம் செய்திருந்தால் தண்டனை இல்லாவிட்டால் விடுதலை. அதேபோல் திறைசேரி மோசடி தொடக்கம் அரசியலமைப்பில் அடிப்படையான மாற்றங்களைச் செய்ய வேண்டும். அது அரசியலமைப்புத் திருத்தமா ? அல்லது புதிய அரசியலமைப்பா ? என்ற கேள்வி உள்ளது. வடக்கிலுள்ள தமிழர்களும் இணைந்துள்ள இத்தருணத்தில் நாம் அனைவரும் இணைந்து சிறந்த அரசியலமைப்பொன்றை உருவாக்க முடிந்தால் அது மிக முக்கிமான ஒன்றாக அமையும். அப்படியில்லாவிட்டால் அரசியலமைப்பு திருத்தம் ஒன்றின் மூலம் பிர்சினைகளைத் தீர்க்க வேண்டும். நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும். நாங்கள் என்னதான் சொன்னாலும் வடக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை நிலைநாட்டும் பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டும். தமிழர்களும், சிங்களவர்களும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு இழப்பீட வழங்க வேண்டும். அதற்கு உண்மையை கண்டறிய வேண்டும். யார் எதிர்ப்பு தெரிவித்தாலும் இந்த செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும். இது நீண்ட கால நல்லிணக்கத்திற்கு தேவையான ஒன்று மக்களின் எதிர்ப்பு தற்காலிகமானதாக இருக்கலாம். பெறுபேறுகளைக் கண்ட பின்னர் அனைவரும் வரவேற்பார்கள். அதுதான் நிலைமை.

குறிப்பாக பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு நாட்டிலுள்ள அரசியல் மற்றும் சமூகப் பிரச்சினைகளை ஆட்சிக்கு வந்த மாத்திரத்தில் தீர்க்க முடியாது. அதில் மக்களுக்கும் பொறுப்பு உள்ளது.

உண்மையாகவே சனவரி 08 மாற்றத்திற்கு மக்களும் சிவில் அமைப்புகளுமே முன்வந்தன. அதன் பின் அரசியல்வாதிகள் பொறுப்பேற்றனர். ஆனால், சனவரி 08 மாற்றத்தின் உண்மையான சொந்தக்காரர்கள் மக்களும் சிவில் அமைப்புக்களும்தான். சனவரி 08 மாற்றத்திற்கு முன்னர் காணப்பட்ட ஒழுங்கமைப்பை விடவும் சிறந்த ஒழுங்கமைப்பும் ஒற்றுமையும் இன்று தேவைப்படுகிறது. பல்வேறு தரப்புகள் ஊடாக அது கட்டியெழுப்பப்பட வேண்டும். பின்னர் மக்களை அதுபற்றி விழிப்புணர்வு செய்ய வேண்டும். மாற விரும்பாத அரசியல்வாதிகளே இன்றும் உள்ளனர். இவர்கள் இருப்பது சேற்றில் ஒரு சிலர் மாறியிருந்தாலும் பழைய வழக்கங்களிலிருந்து மாயவில்லை. நல்லவர்கள் இல்லை என்று சொல்ல முடியாது. நல்லவர்களும் இருக்கின்றார்கள். ஒரு சிலர் ஊழலுக்கும் களவுக்கும் எதிராக ஒன்று சேர்ந்த போதும் இனவாத நிலைப்பாட்டிலிருந்து மாறவில்லை. இவ்வாறு பல்வேறு நோக்கங்களைக் கொண்டவர்கள் இணங்கக் கூடிய பல்வேறு விடயங்களின் அடிப்படையில் ஒன்றுபட்டுள்ளனர். ஆனாலும் அவர்களின் பழைய கருத்துக்கள் வெளிப்பட ஆரம்பித்துள்ளன. அதனால், தற்போது சிவில் அதிகாரத்தை பலப்படுத்த வேண்டும். நல்லாட்சி என்று கூறி அரசியல்வாதிகளிடம் பொறுப்புகளை ஒப்படைக்கும்போது பிரச்சினைகள் உருவாகின்றன. கொள்கைகளை வகுப்பது அவர்கள்தான். பாராளுமன்றத்தில் செயல்படுவதும் அவர்கள்தான். ஆகவே அவர்களுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் நாம் நிறுவன ரீதியாகவும் சிவில் அமைப்புகள் என்ற வகையிலும் ஒன்று சேர வேண்டும். அடுத்த தேர்தலை இலக்கு வைத்தே அவர்கள் பணியாற்றுவார்கள். பெரும்பாலான மக்கள் எதிர்ப்பு உள்ள நிலையில் சிறந்த அரசியல் கொள்கை ஒன்றைக் கூட நடைமுறைப்படுத்த அவர்களிடம் பலம் இல்லை. ஆகவே, நாம் ஜனவரி எட்டை விட பலம்பெற வேண்டும். ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அதிகாரப் பகிர்வு தமிழர்களுக்கு மட்டுமல்ல அனைவருக்கும் நன்மை தரும்

## – கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் **டிவ் குணசேகர**


**ஜனவரியில் ஏற்பட்ட மாற்றம் பற்றி ஆராயும் ஏகமனதான முடிவுக்கு எங்கள் கட்சி வந்துள்ளது. வெற்றி பெற்றவர்களும் தோற்றுப்போனவர்களும் இதற்கு வியாக்கியானம் சொல்ல முடியாமல் உள்ளனர். ஆகவே, இரண்டு தரப்பினரும் இருவேறு நிகழ்ச்சி நிரலில் பயணிக்கின்றனர்.**

**புதிய அரசியலமைப்பொன்றை நிறைவேற்றிக்கொள்ளும் விடயத்தில் நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் பல அணிகளாகப் பிரிந்துள்ளன. கம்யூனிஸ்ட் கட்சி எந்த அணியில் உள்ளது ?**

புதிய அரசியலமைப்பு கொண்டுவரப்படுவது எங்களுக்கு ஒரு பிரச்சினை அல்ல. நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை நீக்கி, தேசிய இனப் பிரச்சினையைத் தீர்த்து ஜனநாயகத்தை மீண்டும் உறுதிசெய்ய வேண்டும். அதை நாங்கள் வரவேற்கின்றோம்.

1978 இல் ஜே.ஆர் ஜயவர்தன அரசியலமைப்பு உருவாக்கப்படு முன்னர் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படுமென அவர்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் சொல்லப்பட்டிருந்தது. ஆனால், ஆட்சிக்கு வந்த பின்னர் அதை நிறைவேற்றவில்லை. 13வது அரசியலமைப்புத் திருத்தம் கொண்டு வரப்படுவது வரை அவர்கள் எதையும் செய்யவில்லை. அதுவும் இந்தியாவின் அழுத்தம் காரணமாகவே நடந்தது. அழுத்தம் கொடுத்திராவிட்டால் அதுவும் இல்லை. தேசிய பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க அது ஓர் அரிய சந்தர்ப்பமாக இருந்தது. அதில் ஐந்து பெரும்பான்மைப் பலமும் இருந்தது. அந்த தேர்தல் தமிழ் மக்களில் அதிகமானோர் ஐக்கிய தேசியக் கட்சிக்கே வாக்களித்திருந்தனர். அனைத்து கட்சிகளும் இணைந்து பொதுவான ஒரு நிலைப்பாட்டுக்கு வர வேண்டும். ஆனால் இன்று அதற்கான களம் இல்லை. பல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**"ஜனவரியில் ஏற்பட்ட மாற்றம் பற்றி ஆராயும் ஏகமனதான முடிவுக்கு எங்கள் கட்சி வந்துள்ளது. வெற்றி பெற்றவர்களும் தோற்றுப்போனவர்களும் இதற்கு வியாக்கியானம் சொல்ல முடியாமல் உள்ளனர். ஆகவே, இரண்டு தரப்பினரும் இருவேறு நிகழ்ச்சி நிரலில் பயணிக்கின்றனர். நாங்கள் மஹிந்தவுக்கு களப்பணி ஆற்றியிருப்பது வேறு விடயம். சகல அரசியல் கட்சிகளும் இந்த அரசியலமைப்பை மாற்ற வேண்டுமெனத் தெரிவித்த முதல் சந்தர்ப்பம் இது. அதை யாராலும் மறுக்க முடியாது. இதற்கு முன்னர் அவ்வாறான சந்தர்ப்பம் கைகூடவில்லை.**

பிரச்சினைகளைக் காரணம் காட்டி இதிலிருந்து தப்புவதற்கே பலரும் முயற்சி செய்கின்றனர்.

சந்திரிக்காவின் ஆட்சியில் மற்றுமொரு வாய்ப்பு கிடைத்தது. 2000 இல் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பு வரைவில் தீர்வு யோசனைகள் எல்லைமீறி இருந்தன என்றே கூற வேண்டும். ஆனால் அதுவும் சாத்தியமாகவில்லை. நானும் சொக்சியும் பர்னாட் சொயிசாவும் பற்றி வீரகோனும் ஆறு மாதங்களாக இது பற்றி பேசினோம். உண்மையாகவே இதற்காக அதிகம் உழைத்தவர் சொக்சிதான். சந்திரிக்கா சொக்சியை கட்டியணைத்து பாராட்டி தருணம் என் நினைவில் நிற்கின்றது. அந்த வரைவு பாராளுமன்றத்தில் தீக்கிரையாக்கப்பட்டது. அதுவும் எமது துரதிர்ஷ்டம் தான்.

**எவ்வாறாயினும் கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளேயும் இந்த விடயத்தில் பொதுவான ஒரு கருத்து இல்லையே ?**

நாங்கள் மஹிந்தவுக்கு களப்பணி ஆற்றியிருப்பது வேறு விடயம். சகல அரசியல் கட்சிகளும் இந்த அரசியலமைப்பை மாற்ற வேண்டுமெனத் தெரிவித்த முதல் சந்தர்ப்பம் இது. அதை யாராலும் மறுக்க முடியாது. இதற்கு முன்னர் அவ்வாறான சந்தர்ப்பம் கைகூடவில்லை.

உதாரணமாக, தொண்டமான் போன்றவர்கள் நாட்டின் ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் வாய்ப்பு தமக்கே உள்ளது எனக் கூறியதுண்டு. ஆனால், 30 வருட கால அனுபவம் அந்த நம்பிக்கையை தகர்த்துள்ளது. ஆகவே, இதை மாற்ற வேண்டும் என்பதே எமது கருத்து இதற்காக எமது கட்சி தனித்து நின்றும் தொழிற்சங்கம் என்ற வகையில் ஏனைய அமைப்புக்களோடு இணைந்தும் செயல்படுகிறது. இதுதவிர ஜனாதிபதியையும் சந்தித்தோம். எங்களுடைய அரசியல் குழு முழுவதுமாக அந்த சந்திப்பில் பங்கேற்றது.

**உங்களுடைய கட்சி அரசியலமைப்பை மாற்ற வேண்டுமெனக் கூறினாலும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் அதற்கு இழுபறி நிலை காணப்படுகின்றது. மறுபுறத்தில் பிரதான இரு கட்சிகளின் தலைவர்கள் இடையேயும் பொதுவான ஒரு கருத்து இருப்பதாகத் தெரியவில்லையே ?**

இவ்விரு கட்சிகளிலும் தலைவர்களிடமும் பல குறைபாடுகள் இருப்பதை நாம் அறிவோம். நடந்துகொள்ளும் விதத்திலும் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் தொடர்பாகவும் குறைபாடுகள் உள்ளன. தற்போது மஹிந்தவும் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்க வேண்டும். என்று கூறினாலும் நடவடிக்கைகள் அதற்கு எதிர்மாறானதாகவே உள்ளது. குறுகிய மனப் பான்மையுடன் செயற்படுகிறார். அவர் மட்டுமல்ல அனைத்து கட்சிகளும் அதிகாரத்தை தக்கவைக்க இதைத்தான் செய்கின்றன.

**ஒரு சிலர், புதிய அரசியலமைப்பை கொண்டுவர இது தருணமல்ல என்கின்றனர். குறிப்பாக தீர்க்க வேண்டிய வேறு பிரச்சினைகள் உள்ள நிலையில் அவர்களின் கருத்து புதிய அரசியலமைப்பு அவசியமற்றது என்பதா?**

நாட்டிலுள்ள பொருளாதார பிரச்சினைகள் மிகவும் பாரதூரமானவை. அனைவரும் அதையே கையிலெடுக்கின்றனர். அரசியலமைப்பின் முக்கியத்துவத்தை அறிந்தவர்களும் கல்விமான்களும் மட்டுமே அதைப் பற்றி பேசுகின்றனர். பொது மக்களின் அதிக கவனம் பொருளாதார பிரச்சினைகளில் உள்ளது.

சந்திரிக்காவின் ஆட்சி காலத்தில் அரசியலமைப்பு பற்றி இரண்டு கருத்துக் கணிப்புகள் நடாத்தப்பட்டன. முதலாவது சந்தர்ப்பத்தில் 20 சதவீதமானோர் விருப்பம் தெரிவித்திருந்தனர். எங்களுடைய பிரசார நடவடிக்கையைத் தொடர்ந்து அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுபது சதவீதமாக உயர்ந்தது. சந்திரிக்கா இராணுவத்துடன் இதுபற்றி பேசும் பொறுப்பை எனக்குத் தந்திருந்தார். நான் அப்போது ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக இருந்தேன். இராணுவத்திலுள்ள உயரதிகாரிகள் 800 பேருடன் பேசினேன். ஜீ.எல். பீரிஸ் அரசியலமைப்பு விவகார அமைச்சராக நியமிக்கப்பட்டிருந்தார். ஆனால் இராணுவத்தோடு பேசும் பொறுப்பு எனக்கே தரப்பட்டது. கேள்விகளை முன்வைக்க அவர்களுக்கு இரண்டு மணி நேரத்தைக் கொடுத்தேன். பொலிசாரை இதில் இணைத்துக் கொண்டோம். அரச அலுவலர்களும் பிரசார நடவடிக்கையில் இணைந்து செயற்பட்டனர். இதுவே பிரசாரமொன்றை முன்னெடுப்பதற்கான வழி.



> நாட்டிலுள்ள பொருளாதார பிரச்சினைகள் மிகவும் பாரதூரமானவை. அனைவரும் அதையே கையிலெடுக்கின்றனர். அரசியலமைப்பின் முக்கியத்துவத்தை அறிந்தவர்களும் கல்விமான்களும் மட்டுமே அதைப் பற்றி பேசுகின்றனர். பொது மக்களின் அதிக கவனம் பொருளாதார பிரச்சினைகளில் உள்ளது.

**ஆம் இவ்வாறான முழு அளவிலான வேலைத்திட்டம் ஒன்று தேவை. அரசாங்கத்தை அவ்வாறான ஒரு வேலைத்திட்டத்திற்குக் கொண்டு செல்ல நாம் முயற்சி செய்ய வேண்டுமல்லவா ?**

ஜனாதிபதியிடம் அவ்வாறான ஒரு சிந்தனை இல்லை. அவருக்கு காலையில் யாராவது எதையாவது சொன்னால் அவர் அதையே செய்வார். மக்கள் தான் அவரை தெரிவு செய்துள்ளனர். கட்சிக்குள்ளும் முரண்பாடு உள்ளது. இரண்டு பிரதான கட்சிகளில் புரிந்துணர்வு இல்லை. அனாவசியமான பிரச்சினைகளை கைவிட்டு சேவை செய்ய வேண்டும். “சயிட்டம்” தொடர்பாக அரசாங்கம் பல கருத்துக்களை கொண்டிருக்கின்றது. ஒரே நிலைப்பாட்டில் இருப்பது ராஜித்தவும் எஸ்.பி. திசாநாயக்கவும் மட்டுமே. மற்றவர்களிடம் எந்த நிலைப்பாடும் இல்லை. லக்ஷ்மன் கிரி எல்லவுக்கு ஒரு சபாநாயகர் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பது தெரியாது. இது வரை அப்பதவியை வகித்தவர்களில் இவர் மிகவும் மோசமான சபாநாயகர் என்று கூறலாம். அமைச்சர் பதிலளிக்க வேண்டிய கேள்விக்கு, பிரதமர் ரஞ்சன் ராமநாயக்காவை பதிலளிக்குமாறு கூறுகிறார். அதற்கிடையில் சபாநாயகர் சபையை வழிநடத்த அனுமதி கேட்டு திண்டாடுகிறார். இவ்வாறான நடவடிக்கைகள் தேவையற்ற முரண்பாடுகளை உருவாக்குமென்றே நான் கருதுகிறேன். இது பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளை அப்பட்டமாக மீறும் செயல். நல்லாட்சி என்ற போர்வையில் நடப்பது இது தான்.

**எவ்வாறாயினும் கிடைத்துள்ள வாய்ப்பினை தவறவிடக் கூடாதல்லவா ?**

எங்களுடைய நிலைப்பாடும் அது தான். இதைத் தவற விடுவோமானால் மிக நீண்டகாலம் காத்திருக்க நேரிடலாம். கைநழுவிப் போன சந்தர்ப்பங்கள் பல. எமது அரசியலில் நாம் முட்டிமோதியதெல்லாம் தேசிய பிரச்சினைக்காகவே. இதை சகலரும் அறிவர்.


**அவ்வாறாயின் இந்தத் தலைவர்களுக்கு அழுத்தம் கொடுத்து அவர்களை சரியான இடத்திற்கு நகர்த்த வேண்டும் அல்லவா ?**

ஆம் அதை முடியுமானவரை பரந்த மட்டத்தில் செய்ய வேண்டும். இந்த விடயத்தில் சேறு பூசுவதைத் தவிர்த்து அரவணைத்து நடக்க வேண்டும். சுயாதீனமாக இயங்குபவர்களும் இணைந்துகொள்ள வாய்ப்பு இருக்க வேண்டும்.

நாங்கள் ஏற்கனவே தாமதித்துவிட்டோம். அரசாங்கம் இதற்கு முன்னுரிமை அளித்து செயற்பட வேண்டும். ஜனாதிபதி இதற்கு தலைமைதாங்கினால் பலரும் இணைந்துகொள்வார்கள். நாங்கள் ஜனாதிபதியுடன் இதுபற்றி மூன்று மணிநேரம் பேசினோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடும் ஜனாதிபதி பேசியிருக்கின்றார். தமிழ்க் கட்சியொன்று இந்தளவுக்கு நெகிழ்ச்சிப்போக்கை கடைப்பிடித்திருப்பது இதுவே முதல் சந்தர்ப்பம்.

சித்தார்த்தன் பற்றி கூற வேண்டும். அவருக்கு மக்கள் மத்தியில் வரவேற்பு உள்ளது. நாங்கள் அனைவரும் ஒரே நிலைப்பாட்டில் தான் இருக்கின்றோம். இந்தப் பிரச்சினை. கம்யூனிஸ்ட் கட்சி என்ற வகையில் தோழர் சுபசிங்ஹ தொடக்கத்திலிருந்தே இதற்கு ஆதரவாக இருக்கின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


nation.lk

> **அதிகாரப் பகிர்வு என்பது ஜனநாயகத்தை விஸ்தரித்தல் என்பதை நாம் மக்களுக்கு எடுத்துக்கூற வேண்டும். இதன் நன்மைகள் தமிழர்களுக்கு மட்டும் உரியனவல்ல என்பதை மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். அரசியல்வாதிகள் இதற்கான ஆரம்பத்தைக் கொடுப்பதை விட சுயாதீனமானவர்களிடமிருந்து தொடங்க வேண்டும்.**

அப்படியான ஒரு பிரசாரத்தை முன்னெடுக்க வேண்டுமானால் ஒவ்வொரு பிரதேசத்திலும் அரசியல் அறிவு உள்ளவர்களை இணைத்துக்கொள்ள வேண்டும். இதற்கு எதிராக இனவாத பிரசாரம் ஒன்றும் முன்னெடுக்கப்படுவது தெரிந்ததே. இதற்கு எதிரானவர்கள் மக்களை பீதியடையச் செய்து வேறு நிலைமைகளை உருவாக்கிவிடுகின்றனர்.

ஆகவே, ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டியது அவசியமாகும். மக்கள் பிரதிநிதிகளுக்கும் கூட இது பற்றிய விழிப்புணர்வு இல்லை. அவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

அதிகாரப் பகிர்வு என்பது ஜனநாயகத்தை விஸ்தரித்தல் என்பதை நாம் மக்களுக்கு எடுத்துக்கூற வேண்டும். இதன் நன்மைகள் தமிழர்களுக்கு மட்டும் உரியனவல்ல என்பதை மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். அரசியல்வாதிகள் இதற்கா ஆரம்பத்தைக் கொடுப்பதை விட சுயாதீனமானவர்களிடமிருந்து தொடங்க வேண்டும்.

**இதற்கு அரசியல் தலைமைத்துவம் அவசியமான ஒன்றல்லவா?**

நாங்கள் மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தான் பணியாற்றிய எதிர்கட்சியில் அமர வேண்டுமென்பது எங்களுடைய நிலைப்பாடு. சில பொருளாதார பிரச்சினைகள் தொடர்பான மக்கள் விடுதலை முன்னணியின் விமர்சனங்களோடு நாங்கள் உடன்படுகின்றோம். தேசியப் பிரச்சினை விடயத்தில் அதிகாரப் பகிர்வு வேண்டுமென்ற நிலைப்பாட்டிலிருந்து நாங்க விலகவில்லை. அதேபோல் ஒரு சில விடயங்களில் நாம் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக உள்ளோம். நுகேகொடையில் நடந்த கூட்டத்திற்கு அழைப்பு வந்திருந்தது நான் செல்லவில்லை. காரணம் இனவாதம் பேசியதுதான். நாங்கள் வாழப்போவது கொஞ்சக்காலம்தான். நாங்கள் செய்த நல்ல காரியங்கள் மட்டுமே எஞ்சியிருக்கும். அரசியல்வாதிகள் உண்மையாகவே சந்தர்ப்பவாதிகள். அரசியலமைப்பை மாற்ற வேண்டும் என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் இதை மாற்ற வேண்டும் எனக் கூறும் ஒரு சாரார் உள்ளனர். ஆனால் அரசாங்கத்திடம் அதற்கான உபாயங்கள் இல்லை.

பிக்குமார்கள் இதனை தீவிரமாக எதிர்க்கின்றனர். அவர்களுடைய நிலைப்பாட்டுக்கு என்னால் ஒரு போதும் இணங்க முடியாது. பௌத்தயா அலைவரிசையை எடுத்துக் கொண்டால் போயா தினத்தில் அறப் போதனைகளை கேட்பவர்களுக்கு "தெவிந்து குமாரதுங்கவும்" மனோஹார டி சில்வாவும் இன்னும் சிலரும் நாட்டை பிரிக்கப் போவதாக கூறுகின்றனர்.

சிறந்த முறையில் அறப் போதனைகள் செய்யும் முற்போக்கு சிந்தனையுள்ள பிக்குமார்களும் இருக்கின்றனர். இவர்கள் போதனை செய்வது சீலம் அனுஷ்டித்த உபாசகர்களுக்கு, உபாசிகைகளுக்கு. ஜனாதிபதி இதை அறிவாரா என்பது எனக்குத் தெரியாது. இதுபோன்ற அலைவரிசைகளில் அறப் போதனைகளுக்குப் பதிலாக வேறு விடயங்கள் ஒளிபரப்பப்படுகின்றன.

ஊடக நிறுவனங்களுக்குச் சொத்தக்காரர்களை அழைத்து ஊடகப் பயன்பாட்டிலுள்ள தவறுகள் பற்றிக் கூற வேண்டும். ஊடகவியலாளர்களுக்குச் சொல்வதால பயனில்லை. அரசியல் வானொலி அலை வரிசையை வாங்கும், அரசியல் கட்சிகள் அவற்றை அதிக பணத்திற்கு விற்று விடுகின்றன. எங்களுடைய கட்சி அவ்வாறா எதையும் செய்யவில்லை.

இந்தப் பிரசாரத்தில் நீங்களும் பங்குபற்ற முடியுமல்லவா ? எல்லாவற்றுக்கும் என்னால் பங்குபற்ற முடியாது. தொழிற்சங்க ரீதியான பணிகளில் தொழிற்சங்க மட்டத்தில் பங்குபற்ற முடியும். ஜனாதிபதி அவர்கள்தான் இதற்கு முன்வர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



www.asianmirror.lk

### மாற்றத்தைக் கொண்டு வரவே மைத்திரிபால சிறிசேனவை தெரிவுசெய்தோம்.

# ஜனாதிபதி முறையை நீக்காமல் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. – அமைச்சர் ராஜித சேனாரத்ன

நாங்கள் கிராமங்களுக்குச் செல்லும்போது அங்குள்ள மக்கள் அரசியலமைப்பு பற்றி பேசுவதில்லை. அவர்கள் ஒவ்வொரு நாளும் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பது பற்றியே பேசுவார்கள். அவர்களின் பிரச்சினை பிள்ளைக்கு தொழில் ஒன்றை பெற்றுக்கொள்வதும், இடமாற்றம் பெற்றுக்கொள்வதும், கிராமத்திற்கு பாதை ஒன்றை அமைத்துக்கொள்வதும், உள்ள பாதைக்கு கொங்கிறீட் இட்டுக்கொள்வதும் தான். அடுத்தபடியாக தங்களுடைய பொருளாதாரப் பிரச்சினைகள் மற்றும் பொருட்களின் விலைகள் பற்றியும் பேசுவார்கள். இதனாலேயே ஒரு சிலர் புதிய அரசியலமைப்பு ஓர் உணவுப் பண்டமா என கேட்கத் தொடங்கியுள்ளார்கள். மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்க பாடுபடாதவர்களே இந்தக் கேள்வியை அதிகமாகக் கேட்கின்றனர்.

ஏனைய தலைவர்களைப்போல மைத்திரிபால சிறிசேன நாட்டின் தலைவராவதற்கு நீண்டகாலம் களப்பணியாற்றவில்லை. மஹிந்த ராஜபக்ஷ நாட்டின் தலைவராவதற்கு பல வருட காலம் பணியாற்றி இருக்கின்றார். மைத்திரிபால சிறிசேன திடீரென நாட்டின் தலைவரானார். சில மாதங்களில் ஜனாதிபதியானார். அவர் எப்படி ஜனாதிபதியானார் என்பதை சிந்திக்க வேண்டும் மக்களின் நாளாந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பது மட்டுமே முக்கியமானதல்ல என்று கூறப்பட்டாலும் நாட்டு மக்கள் அவரை அதிகாரத்திற்கு கொண்டு வந்தது பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கோ, தொழில் பெற்றுக்கொள்வதற்கோ, இடமாற்றம் பெற்றுக்கொள்வதற்கோ அல்ல. நாட்டில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற அடிப்படைக் காரணமே அவர் அதிகாரத்திற்கு வரக் காரணமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.dailymirror.lk



**"ஏனைய தலைவர்களைப் போல மைத்திரிபால சிறிசேன நாட்டின் தலைவராவதற்கு நீண்டகாலம் களப்பணியாற்றவில்லை. மஹிந்த ராஜபக்ஷ நாட்டின் தலைவராவதற்கு பல வருட காலம் பணியாற்றி இருக்கின்றார். மைத்திரிபால சிறிசேன திடீரென நாட்டின் தலைவரானார். சில மாதங்களில் ஜனாதிபதியானார். அவர் எப்படி ஜனாதிபதியானார் என்பதை சிந்திக்க வேண்டும் மக்களின் நாளாந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பது மட்டுமே முக்கியமானதல்ல என்று கூறப்பட்டாலும் நாட்டு மக்கள் அவரை அதிகாரத்திற்குக் கொண்டு வந்தது பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கோ, தொழில் பெற்றுக்கொள்வதற்கே, இடமாற்றம் பெற்றுக்கொள்வதற்கோ அல்ல. நாட்டில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற அடிப்படைக் காரணமே அவர் அதிகாரத்திற்கு வரக் காரணமானது."**

மக்களுக்கு ஏன் ஒரு மாற்றம் தேவைப்பட்டது ? முன்னைய ஆட்சியை மக்கள் வெறுத்தார்கள். அதுவே மாற்றம் ஏற்படச் காரணமானது. நாட்டில் சட்டம் இல்லாத ஆட்சி நிலவியது. மோசடியும் ஊழலும் திருட்டும் கோலோச்சியது. ஆகவே நாட்டிலுள்ள சிவில் அமைப்புகளுக்கும் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் மாற்றம் தேவைப்பட்டது. இளைஞர் யுவதிகள் தொலைக்காட்சியைப் பார்ப்பது ஒரு பாடலை அல்லது நடனத்தை ரசிப்பதற்கு மட்டுமே. அவர்கள் சமூக ஊடகங்களோடு வாழ்கின்றனர். முன்னைய அரசாங்கத்தை தோற்கடிப்பதில் இவர்களின் சமூக ஊடகப்பங்கு பெரியது. எமது பெற்றோர், முதியவர்களின் மனங்களில் மாற்றத்தைக் கொண்டு வந்தனர். நாட்டில் விமானங்கள் தரையிறங்காத விமான நிலையங்களும் கப்பல் செல்லாத துறைமுகங்களும் அமைக்கப்பட்டது உண்மைதான். இதை விடவும் இளைஞர் யுவதிகள் மாற்றத்தையே விரும்பினர். அதனாலேயே மைத்திரிபால சிறிசேன போன்ற ஒருவருக்கு ஜனாதிபதியாக முடிந்தது.

இந்த நாட்டில் மக்கள் எதிர்பார்த்த மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமானால் ஜனாதிபதி முறையையும் தேர்தல் முறையையும் மாற்ற வேண்டும். இந்த இரண்டிலும் மாற்றத்தை ஏற்படுத்தாமல் மக்கள் எதிர்பார்த்த மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. இதனால்தான் புதிய அரசியலமைப்பிற்கான தேவை ஏற்பட்டுள்ளது.

19 அரசியலமைப்புத் திருத்தத்தால் சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் முன்னைய ஆட்சியில் பிரதம நீதியரசரையும், உயர் நீதிமன்ற நீதிபதிகளையும், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளையும் மேல் நீதி மன்ற நீதிபதிகளையும் ஜனாதிபதியே நியமித்தார். அவ்வாறு நியமனம் பெற்றவர்கள் ஜனாதிபதிக்குத் தேவையான முறையில் தீர்ப்பு வழங்கினார்கள். அந்தத் தீர்ப்புகள் ஜனாதிபதி மாளிகையிலிருந்த வந்தன. இந்த நிலையில் சுயாதீன நீதிமன்றத்தை எதிர்பார்க்க முடியுமா? 19 வது அரசியலமைப்புத் திருத்தம் கொண்டு வரப்பட்ட பின்னர் அரசியலமைப்புப் பேரவை ஊடாகவே நீதிபதிகள் நியமிக்கப்படுகிறார்கள். அரசியலமைப்புப் பேரவை சிபாரிசு செய்யும் நபரை ஜனாதிபதி நியமிப்பார். ஆகவே முன்னர் இருந்ததைப்போல தம்மை நியமித்தவரின் விருப்பத்திற்கு தீர்ப்பு வழங்க வேண்டிய அவசியமில்லை.

சிவில் சேவையிலும் இவ்வாறான ஒரு நிலைமையே காணப்பட்டது. அங்கும் ஜனாதிபதியின் தேவைக்கு அமையவே அனைத்தும் நடந்தன. சுயாதீனம் இருக்கவில்லை. அரச அதிபர்கள், பிரதேச செயலாளர்கள் மட்டுமல்ல கிராம அலுவலர்களும் இதை நன்கு அறிவார்கள்.

அடுத்த விடயம் நாட்டில் இதுவரை தீர்வு காணப்படாத தேசிய இனப் பிரச்சினை. அதிகாரப் பகிர்வு இன்றி அதற்குத் தீர்வு காண முடியாது. இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்வதற்காகவே தமிழ் மக்கள் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்தார்கள். வழமைபோல சமஷ்டி ஊடாக நாட்டைப் பிரிக்கப் போவதாகக் கூறி ஒரு சில எதிராளர்கள் இதைக் குழப்ப முயற்சி செய்கின்றனர். சமஷ்டியால் நாடு பிரியாது. பிரியும் நிலையில் உள்ள நாட்டை ஐக்கியப்படுத்துவதே சமஷ்டி.

அவ்வாறான ஒரு பிரச்சினை இருப்பதாகத் தெரியவில்லை. நீண்ட காலமாக சமஷ்டியை வலியுறுத்திய வடக்கின் தலைவர்கள் இன்று ஒற்றை ஆட்சிக்கான நாட்டில் அதிகாரப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**“அரச ஊழியர்களுக்கான 10,000 சம்பள அதிகரிப்பால், தொழில் வழங்கப்பட்டதால் அல்லது பொருட்களின் விலைக் குறைப்பால் வரலாற்றில் இடம்பெற முடியாது. இவற்றைச் செய்யக் கூடாதென்பது எனது கருத்தல்ல. ஒரு நாடு புதிய பாதையில் பயணிக்க அரசியலமைப்பே அடிப்படையாக அமைகிறது. அதில் மாற்றம் கொண்டு வரமுடியுமானால் வரலாற்றில் இடம்பெற முடியும், ஆகவே, இந்த அரசியலமைப்பை மாற்றி சகலரும் ஏற்றுக்கொள்ளும் ஓர் அரசியலமைப்பை நாம் உருவாக்க வேண்டும்.**

பங்குரிமையைக் கேட்கின்றனர். பௌத்த மதத்திற்கு அளிக்கப்பட்டுள்ள முன்னுரிமை சிறுபான்மையினருக்கு பிரச்சினையான ஒரு விடயமல்ல. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், சுமந்திரன் போன்ற நடுநிலைத் தலைவர்கள் வாழும் தருணத்தில் இந்தப் பிரச்சினையை தீர்க்காவிட்டால் சிவாஜிலிங்கம் போன்ற தீவிரவாத சிந்தனை உள்ளவர்கள் பலமடையக்கூடும். அதைப் பற்றியும் நாங்கள் சிந்திக்க வேண்டும். அந்த வகையில் தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் இது ஓர் அரிய வாய்ப்பு.

“அரச ஊழியர்களுக்கான 10,000 சம்பள அதிகரிப்பால், தொழில் வழங்கப்பட்டதால் அல்லது பொருட்களின் விலைக் குறைப்பால் வரலாற்றில் இடம்பெற முடியாது. இவற்றைச் செய்யக் கூடாதென்பது எனது கருத்தல்ல. ஒரு நாடு புதிய பாதையில் பயணிக்க அரசியலமைப்பே அடிப்படையாக அமைகிறது. அதில் மாற்றம் கொண்டு வரமுடியுமானால் வரலாற்றில் இடம்பெற முடியும், ஆகவே, இந்த அரசியலமைப்பை மாற்றி சகலரும் ஏற்றுக்கொள்ளும் ஓர் அரசியலமைப்பை நாம் உருவாக்க வேண்டும்.


அதிகாரத்தை தம் வசம் வைத்திருப்பதற்காக வெள்ளைக்காரர்களுக்கு தேவையான விதத்தில் சோல்பரி யாப்பு தயாரிக்கப்பட்டிருந்தது. அதில் இறைமை இந்நாட்டவர்களுக்கு சொந்தமானதாக இருக்கவில்லை. இங்கிலாந்தின் மகா ராணியாருக்குச் சொந்தமாக இருந்தது. கொல்வின் ஆர்.டி.சில்வா தயாரித்த 1972 ஆண்டு அரசியலமைப்பில் பண்டாரநாயக்க அம்மையாருக்கே அதிகாரமிருந்தது. அதனால் அரச சேவையில் காணப்பட்ட சுயாதீனம் அறவே இல்லாமல் போனது. ஜே.ஆர். ஜயவர்தனவுக்கு அவசியமான விதத்தில் 1978 அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. நான் அப்போது ஓர் இளம் மருத்துவராக இருந்தேன். அதுமட்டுமல்ல என்.எம். பெரேரா, கொல்வின் ஆர்.டி.சில்வா போன்றவர்களுடன் இணைந்து ஹைட்பாக் அந்த அரசியலமைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்தேன். அதிகாரத்திற்கு வந்த அனைவரும் இந்த அரசியலமைப்பை மாற்றுவதாக வாக்குறுதி அளித்துள்ளனர். அதனால் எவரும் இதை மாற்றக் கூடாது என கூற முடியாது. அடுத்ததாக தேர்தல் முறை பற்றியும் பேச வேண்டியுள்ளது. இந்த தேர்தல் முறையால் சாதாரணமானவர்கள் பாராளுமன்றம் செல்ல முடியாது. அன்றிலிருந்த தொகுதிவாரி முறையில், தொகுதி மக்கள் தங்களுடைய வேட்பாளருக்கு பண உதவி செய்து தேர்தலில் களமிறங்குவது மட்டுமல்ல பாராளுமன்றத்திற்கு தெரிவாகும் வாய்ப்பும் காணப்பட்டது. அப்போதைய நிலையில் 5000 சுவரொட்டிகள் போதுமானதா இருந்தன. ஆனால் இன்று மாவட்டம் பூராகவும் அரசியல் செய்ய வேண்டும். நான் பிரதிநிதித்துவம் செய்கின்ற களுத்துறை மாவட்டத்தில் ஹினிதுமவில் ஆரம்பித்து அவிசாவளை வரை செல்ல வேண்டும். இதற்கு குறைந்தது 5 இலட்சம் சுவரொட்டிகள் தேவை. ஒரு சுவரொட்டியை மறைத்து ஒட்டப்படும் வேறொரு சுவரொட்டியை மறைக்க மேலும் 5 இலட்சம் சுரொட்டிகள் தேவைப்படும்.

ஓரளவு பிரபலமும் பணமும் உள்ள என்னைப் போன்றவர்களுக்கு இந்தத் தேர்தல் முறை சிறந்தது. எக்கட்சியில் போட்டியிட்டாலும் என்னால் வெல்ல முடியும். ஆனாலும் நான் இந்த தேர்தல் முறையை விரும்பவில்லை. எனக்கு வெல்ல முடிந்தாலும், இந்தத் தேர்தல் முறை நாட்டுக்கு பாதகமானது. தேர்தலில் குதிக்க வேண்டுமானால் அதிக பணம் தேவை. பண உதவி செய்ய முன்வரும் வர்த்தகர்களை கவனிக்க வேண்டும். அடுத்ததாக அதிகாரத்திற்கு வந்த பின்னர் கொட்டி இறைத்த பணத்தைத் தேட எதை வேண்டுமானாலும் செய்யத் துணிதல் வேண்டும். இதனால் தான் அரசியல்வாதிகள் ஊழல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். இது தான் நடந்துகொண்டிருக்கிறது.

அரசியல் செய்வது மட்டுமல்ல மாவட்டத்திலுள்ள ஆதரவாளர்கள் அல்லது அவர்களது உறவினர்களின் திருமணங்களில் சாட்சிக்காரராக கையெழுத்திடச் செல்ல வேண்டும். செல்லாவிட்டால் திருமணம் நடக்காது. மரண வீடுகளுக்கும் செல்ல வேண்டும். பூப்புனித நீராட்டு விழாக்களுக்கும் செல்ல வேண்டும் இப்படி மாவட்டம் முழுவதும் செல்ல வேண்டும். உறுப்பினர்களுக்குக் கிடைக்கும் கொடுப்பனவையும் ஏனைய வசதிகளையும் வைத்துக்கொண்டு எல்லாவற்றையும் செய்ய முடியாதென்பது எனக்குத் தெரியும். இறுதியாக தவறான வழியில் பணம் சம்பாதிக்க முயற்சிப்பார்கள். இது நாட்டுக்கு பேரழிவு. அதனால் தேர்தல் முறை உடனடியாக திருத்தப்பட வேண்டும். வரலாற்றில் இடம்பெறும் இந்த மாற்றத்தைக் கொண்டு வருவதையே மைத்திரிபால சிறிசேன செய்துள்ளார். ஆகவே அந்த மாற்றத்திற்கு அடிப்படையாக உள்ள புதிய அரசியலமைப்பை உருவாக்குதல் மற்றும் தேர்தல் முறையில் மாற்றம் கொண்டு வருதல் என்பவற்றிலிருந்து எவரும் நழுவிச் செல்ல முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ශ්‍රී ලංකා
ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ
පාර්ලිමේන්තුව

ජාතික ඖෂධ නියාමන අධිකාරිය

ජාතික ඖෂධ ප්‍රතිපත්තියට අනුකූලවන ආකාරයට ඖෂධ, වෛද්‍ය උපකරණ සහ සීමාස්ථ නිෂ්පාදන ලියාපදිංචි කිරීම, බලපත්‍ර ලබාදීම, නිෂ්පාදනය කිරීම, ආනයනය කිරීම සහ එකී ඖෂධ, වෛද්‍ය උපකරණ හා සීමාස්ථ නිෂ්පාදනවලට අදාළ වෙනත් සියලු කරුණු සහ සායනික පරීක්ෂණ පවත්වන ආකාරය නියාමනය කිරීම සහ පාලනය කිරීම සම්බන්ධයෙන් වගකිව යුතු ජාතික ඖෂධ නියාමන අධිකාරිය යනුවෙන් හඳුන්වනු ලබන නියාමන අධිකාරියක් පිහිටුවීම සඳහා ද; ඖෂධ නියාමන අංශය, වෛද්‍ය උපකරණ නියාමන අංශය, සීමාස්ථ නිෂ්පාදන නියාමන අංශය සහ සායනික පරීක්ෂණ නියාමන අංශය ඇතුළු ජාතික ඖෂධ නියාමන අධිකාරියේ අංශ පිහිටුවීම සඳහා විධිවිධාන සැලැස්වීම සඳහා ද; ජාතික උපදේශක කමිටුවක් පිහිටුවීම සඳහා ද; 1980 අංක 27 දරන විලවුන්, උපකරණ සහ ඖෂධ පනත ඉවත් කිරීම සඳහා ද; ඊට සම්බන්ධ හෝ ආනුෂංගික කරුණු සඳහා ද, විධිවිධාන සැළැස්වීම පිණිස වූ පනත් කෙටුම්පතකි.

සෞඛ්‍ය හා දේශීය වෛද්‍ය අමාත්‍යතුමා විසින් 2015 මාර්තු මස 03 වන දින ඉදිරිපත් කරන ලදී.

මුද්‍රණය කිරීමට පාර්ලිමේන්තුව විසින් නියෝග කරන ලදී.

[335 වන පනත් කෙටුම්පත]

ශ්‍රී ලංකා රජයේ මුද්‍රණ දෙපාර්තමේන්තුවේ මුද්‍රණය කරන ලදී.
කොළඹ 5, රජයේ ප්‍රකාශන කාර්යාංශයෙන් මිලදී ලබාගත හැකිය

මිල : රු. 70.00 යි.

තැපැල් ගාස්තුව : රු. 50.00 යි.

# நல்லாட்சி அரசாங்கம் யாருக்குச் சொந்தம் மஹிந்தவுக்கா ? மக்களுக்கா ?

அருணி சமரகோன்

2008 இல் கிழக்கு மாகாணத்தை புலிப் பயங்கரவாதிகளிடமிருந்து மீட்டவுடன் 18 வருடங்களின் பின்னர் கிழக்குவாழ் மக்களுக்கு தமது மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கும், 2013 இல் 23 வருடங்களின் பின்னர் வடமாகாண சபைக்கு உயிர்கொடுப்பதற்கும் ஜனாதிபதி ராஜபக்ஷ எடுத்த முடிவு பாராட்டுக்குரியது. (வியவுல சஹ ஸ்தாவரத்வய, 2016, பக்கம் 09)

மஹிந்த ராஜபக்ஷ முகாம் சமீபத்தில் "வியவுல சஹா ஸ்தாவரத்வய" என்ற பெயரில் மக்களிடம் கொண்டு சேர்த்த சிறு நூலிலிருந்து இந்த மேற்கோள் எடுக்கப்பட்டது. கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் குமார் குணரட்னத்தின் விடுதலை நிமித்தம் 365 நாட்களையும் கடந்த நிலையில் முன்னெடுக்கப்பட்ட சத்தியாக்கிர வாசகமொன்றை மேலுள்ள கூற்று என் நினைவில் கொண்டு வந்து நிறுத்தியது. "அரசியல் செய்வது உன் விருப்பம் அல்ல எங்கள் உரிமை" இதுதான் அந்த வாசகம். போர் நிலவிய காலத்தில் வடக்கு – கிழக்கு மக்கள் விடுதலைப் புலிகளின் அழுத்தத்திற்கு கட்டுப்பட்டு அனைத்துத் தேர்தல்களிலும் அந்த மக்கள் சிங்கள – பௌத்த பெரும் ஜனநாயகத்தை அடியோடு நிராகரித்தனர். அவ்வாறு நிராகரிக்கப்பட்ட பெரும் சனநாயகம் பேரம் பேசும் அரசியல் மூலம் மீண்டும் அவர்களிடம் திணிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"நுணுகி ஆராயும் போது தற்போதைய அரசாங்கம் சமாதானத்தைக் கட்டியெழுப்புதலை மூன்றாந் தர அரசியல் தேவையாகக் கருதுகிறது. உதாரணமாக, சமகால அரசியல் நீரோட்டத்தால் போஷிக்கப்படுகின்ற இனவாத வன்முறையை தோற்கடிப்பதற்கு செயல் வடிவ இடையீடு செய்யப்படுவதில்லை. அரசாங்கம் இதுவரை யுத்தத்தால் இறந்தவர்களுக்கும் காணாமலாக்கப்பட்டோருக்கும் நீதியை நிலைநாட்டவில்லை.**

உதாரணமாக மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் கிழக்கு ஜனநாயக ஆளுகையிலிருந்து அன்னியப்படுத்தப்பட்ட போதிலும் பேரம் பேசும் அரசியலின் பிரதிபலனாக மக்கள் விரும்பாத அதே கட்சி மக்கள் மீது திணிக்கப்பட்டது.

மக்களின் விருப்பம் அல்லது இணக்கப்பாட்டு அரசியலை உறுதிப்படுத்தி ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசாங்கமும் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் காணப்பட்ட பேரம் பேசும் அரசியலின் நீட்டிப்பாக இருப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. மருந்துப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் மார்பு தட்டிக்கொண்டிருப்பதை சமீபத்திய உதாரணமாகக் கொள்ளலாம். மக்களின் அடிப்படைத் தேவையான சுகாதாரச் சேவையை வழங்கத் தவறியதும், அதை பகிரங்கமாக அறிவித்தல்களை ஒட்டி தெரியப்படுத்தியதும் வெட்கத்திற்குரிய செயலாகும். சமகால ஜனநாயகத்தின் போக்காக இலத்திரனியல் சனநாயகம் (Edemocracy) அறியப்படுகிறது. உலகிலுள்ள பெரும்பாலான நாடுகள் இலத்திரனியல் ஜனநாயகத்தை மேம்படுத்தத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை செய்துகொண்டிருக்கின்ற நிலையில், நல்லாட்சி அரசாங்கம் இலத்திரனியல் வரியை அதிகரித்து இலத்திரனியல் ஜனநாயகத்திற்கான கனவுகளை மூடுதல் இழிவான செயலாகும். நிலையான சமாதானத்தைக் கட்டியெழுப்புவதிலும் அரசாங்கம் இந்த நகர்வை கடைப்பிடிக்கின்றது.

நுணுகி ஆராயும் போது தற்போதைய அரசாங்கம் சமாதானத்தைக் கட்டியெழுப்புதலை மூன்றாந் தர அரசியல் தேவையாகக் கருதுகிறது. உதாரணமாக, சமகால அரசியல் நீரோட்டத்தால் போஷிக்கப்படுகின்ற இனவாத வன்முறையை தோற்கடிப்பதற்கு செயல் வடிவ இடையீடு செய்யப்படுவதில்லை. அரசாங்கம் இதுவரை யுத்தத்தால் இறந்தவர்களுக்கும் காணாமல் போனவர்களுக்கும் நீதியை நிலைநாட்டவில்லை.

மரணச் சான்றிதழ்கள் இல்லாத மரணங்கள், யாழ்ப்பாணத்தில் நலன்புரி முகாம்களில் வாழ்கின்ற யுத்தத்தால் இடம்பெயர்ந்த மூன்றாம் பரம்பரையினர் மற்றும் கண்மூடித்தனமாக காணாமலாக்கப்பட்ட போராளிகள் தொடர்பில் அனுகூலமாக முன்னெடுப்புகள் இன்மை இதற்கான சான்றாகும்.

கூர்ந்து கவனிக்கும் போது மைத்திரி – ரணில் நல்லாட்சி அரசாங்கம் தாராளமாக வேடிக்கைகளை நிகழ்த்த முயற்சி செய்வதைக் காண முடியும். புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான யோசனை அந்த வேடிக்கைகளில் ஒன்று புதிய அரசியலமைப்பை அமுலில் உள்ள கொண்டு வருவதற்குத் தேவையான யோசனைகளைப் பெற கருத்தரங்குகளை நடத்தும் அரசாங்கம், அமுலில் உள்ள அரசியலமைப்பின் கீழ் மக்களின் உரிமைகளை உத்தரவாதம் செய்ய முயற்சி செய்யாமை கவலைக்குரியது.


உதாரணமாக மக்களுக்கு நீதி வழங்கும் நிறுவனங்களில் அதி உச்ச நிலையிலிருக்கும் நீதிமன்றத்தின் நிருவாகி தன்னுடைய தொழில் மற்றும் புருஷோத்தம பலத்தைப் பிரயோகித்து ஒரு பெண்ணை வல்லுறவுக்கு உட்படுத்தியதை மேலும் பொறுத்து, அந்தப் பெண்ணுக்கு நீதி வழங்கத் தவறிய அரசாங்கமாக இந்த நல்லாட்சி அரசாங்கம் மாறியுள்ளது. இதற்கு பெண்கள் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுவதைப் பொறுத்துக் கொண்டிருக்கும் அரசாங்கம், வடக்கில் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பெண்களுக்கு நீதி வழங்குமா ? என்பது கேள்விக்குறிதான்.

மஹிந்தவும் அவருடைய இனவாத ஆட்சியும் அனைத்து சிறுபான்மையினருக்கும் பெண்களுக்கும் எதிராகவே காணப்பட்டது. பெண்கள் நிர்வாணமாக்கி தெருவில் ஓட வற்புறுத்தியது தொடக்கம், விடுதலைப் புலி என்ற காரணத்தால் தெருவில் பெண்களை நிர்வாணமாக்கி, கற்பழித்து கொலை செய்த மஹிந்த ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வர நாட்டு மக்கள் (பெண்களும்) 2015 ஜனவரி 08 திகதி வாக்களித்தனர். ஆனால் இன்று மஹிந்தவின் சாயல் கொண்ட நல்லாட்சி உருவாகியுள்ளது. ஆகவே இந்த வேடிக்கை நல்லாட்சியை மக்கள் நேய நல்லாட்சியாக மாற்ற மக்கள் அணிதிரள வேண்டும்.

மக்கள் உண்மையாகவே அணி திரளுவார்களா ? இதன் இடையீட்டாளர்கள் யார் ? இந்தப் பிரச்சினையை நான் பெண்ணியவா பார்வையில் அணுகியுள்ளேன். பெண் எனப்படுபவர் பாலியல் சாதனம் எனக் கருதும் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவருடைய ஆட்களைப் போல, இனவாதத் தீவிரவாதிகள் மற்றும் பெண்கள் ஒன்றுபட்டுள்ள சந்தர்ப்பத்தில் இயங்கி வரும் மாற்று சக்திகளும் பெண்கள் தொடர்பான கருத்தாடல்களைப் பயன்படுத்தி அதிகாரத்திற்கு வந்த போதும் பெண் துஷ்பிரயோகத்திற்கு எதிராக செயற்படாமை அத்துடன் பெண்கள் கருத்துத் தெரிவிப்பதற்கான வாய்ப்பினை மறுப்பதன் மூலம் மக்களின் எழுச்சியை ஊக்குவிப்பதற்கு இருக்கின்ற நிறவனங்களினதும் அரசியல் நீரோட்டங்களினதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


/asianmirror.lk

முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜூன் மகேந்திரன்

**நல்லாட்சி அரசாங்கம் தனது தனிப்பட்ட அரசியல் விருப்பத்தை பொது மக்கள் விருப்பம் எனக் கூறிக்கொள்வதையும் தான் வழங்குவதை மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதையும் அவ்வாறு வழங்கியதை விளம்பரப்படுத்தி மகிழ்வதையும் காண முடிகின்றது.**

பிற்போக்கினை வெளிப்படுத்துகின்றது. உதாரணமாக சமீபத்தில் "ஆதரனிய லங்காவக்" கருத்தாடலை ஆரம்பித்த மாற்றுப் பத்திரிகையான றாவய" பெண்களுக்காக எவ்வித சிறப்பம்சங்களையோ அனுபந்தங்களையோ கொண்டிராமை மாற்றுப் பத்திரிகைகளிலும் மஹிந்த ஆட்சியின் ஆதிக்கம் உள்ளதைக் காட்டுகிறது. அதேபோல் தீவிர அரசியல் விடுதலை மீட்பர்களாக தம்மை அடையாளப்படுத்தும் மக்கள் விடுதலை முன்னணியும் முன்னிலை சோசலிசக் கட்சியும் அரசியல் அமைப்பை மாற்றுவதற்கு வாக்குறுதி அளித்தபோதும், பெண்களின் அரசியல் பற்றிய கட்டமைப்பை மாற்றுவதில் அவர்களின் ஈடுபாடு எவ்வகையிலும் போதுமானதாக இல்லை. பர்தா அணிவதைத் தடுக்க வீரியத்துடன் செயல்படும் ஒரு நாடு வீட்டில், தெருவில் அல்லது வேலைத்தளத்தில் பெண்களுக்கு எதிராக அரங்கேறும் வன்முறைகளை ஒழிக்க ஏன் ஆர்வம் காட்டாமல் இருக்கின்றது ?

சமீபத்தில் நான் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற உரையாடல் ஒன்றில் கலந்துகொண்டேன். அதில் "போருக்குப் பிந்திய இலங்கைக்கு இரு அவைகளைக் கொண்ட ஒரு பாராளுமன்றம்" என்ற தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரை இடம்பெற்றிருந்தது.

இரு அவைகளைக் கொண்ட பாராளுமன்றம் பற்றிய யோசனையில் உள்ளடக்கப்பட்டிருந்த வரலாற்றுத் தகவல்களையும் பிரதிநிதித்துவம் இடம்பெற்றிருந்த விதத்தையும் ஆராய்ந்த நன்கு அறியப்பட்ட புலமையான ஒருவரால் அந்த கட்டுரை நிராகரிக்கப்பட்டதோடு உரிய பிரதிநித்துவம் இல்லாத பெண்கள் உட்பட்ட குழுவினருக்குத் தேவையான ஒரு நிறுவனமென்ற எதிர்நிலைக் கருத்தும் முன்வைக்கப்பட்டது. இதன்போது குறித்த நபர் பெண்களின் பிரதிநிதித்துவம் தேவையில்லை எனக்கூறிய கருத்து என்னை வியப்புற வைத்தது. தனக்கு சரிநிகரான தென்புல பெண்ணொருத்தியை அரசியல் ரீதியாக ஏற்றுக்கொள்ள மறுக்கும் இதுபோன்ற புருஷோத்தம தேசியவாதிகள் பிற இனத்தவர்களின் அரசியல் உரிமைகளை அங்கீகரிக்க ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள் என்பது வெளிப்படையானது.

இவ்வாறான சம்பவங்களால் நல்லாட்சி அரசாங்கம் தனது தனிப்பட்ட அரசியல் விருப்பத்தை பொது மக்கள் விருப்பம் எனக் கூறிக்கொள்வதையும் தான் வழங்குவதை மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதையும் அவ்வாறு வழங்கியதை விளம்பரப்படுத்தி மகிழ்வதையும் காண முடிகின்றது. இயல்பு வாழ்க்கையின் அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத ஓர் அரசாங்கம் மக்களுக்கு விசேடமாகத் தேவைப்படும் புதிய அரசியலமைப்பை எவ்வாறு உருவாக்கப் போகிறது? அரசியலமைப்பு உருவாக்கப்பட்டாலும் அது மக்களின் விருப்பத்தின் பேரில் உருவாக்கப்படும் என்பதை நம்ப முடியுமா? அதேபோல் மாற்று சக்திகளும் பரந்துபட்ட அரசியல் உரையாடல் ஊடாக மக்களின் விருப்பங்களை பிரதிபலிப்பனவாக இருக்குமா? இல்லையேல், இந்த நகர்வுகளும் மற்றுமொரு மஹிந்தவின் தொடர்ச்சியா என்பதை ஆராய வேண்டும். மாற்று இணையத்தளத்திலிருந்து எடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


www.dailynews.lk

# சிந்தனா சக்தி அற்ற ஒரு சமூகம் எளிதில் எதேச்சத்காரத்தினுள் சிக்கி விடும்

**கலாநிதி தீபிக்கா உடுகம**
மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளர்

**19வது அரசியலமைப்பு திருத்தத்துடன் சுயாதீன ஆணைக்குழுக்கள் தாபிக்கப்பெற்றுள்ளமை முற்போக்கான ஒரு விடயம். மனித உரிமைகள் ஆணைக்குழு இந்நாட்டு மக்களின் வாழ்வியலில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு நிறுவனமாகும். அதன் தவிசாளர் கலாநிதி திருமதி தீபிகா உடுகம நல்லாட்சியில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடும், மனித உரிமைகளின் சமகால போக்குகளும் பற்றி "சமாதான நோக்கு" அவருடன் நடத்திய உரையாடல் இங்கு தரப்படுகின்றது.**

**18வது அரசியலமைப்புத் திருத்தத்தை நீக்கி 19வது அரசிலமைப்புத் திருத்தத்தைக் கொண்டு வந்தமை ஒரு வகையில் மனித உரிமைகளை வலுப்படுத்த ஏதுவானது எனலாம். புதிய ஆட்சியில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் எந்த நிலையில் உள்ளன?**

மனித உரிமைகள் ஆணைக்குழு எத்தகைய வரலாற்றுப் பின்னணியைக் கொண்டுள்ளது என்பதை நாம் அறிவோம். இங்கு 5 ஆணையாளர்கள் உள்ளனர். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மையை உறுதிசெய்வது சனநாயகத்திற்கு எந்தளவு முக்கியமென்பதை நாங்கள் எப்போதும் சிந்தித்து செயற்பட வேண்டியுள்ளது. அரசியலமைப்புத் திருத்தம் பாராளுமன்றத்தில் நிறைபேவற்றப்பட்ட பின்னர் நாங்கள் 2015 ஒக்டோபர் 30 திகதி பணிகளை பொறுப்பேற்றுக் கொண்டோம். நான் 16 மாதங்களாக பதவியில் இருக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடந்த காலத்தில் சித்திரவதை, காணாமல் போதல் பற்றி முறைப்பாடுகள் மூடி மறைக்கப்பட்டிருந்தன. அதுபோன்ற கூருணர்வுள்ள, அரசியல் ரீதியாக திடுக்கிட வைக்கும் முறைப்பாடுகள் வெளிப்பட வில்லை. அவை விசாரிக்கப்படவும் இல்லை. உதாரணமாக எக்னெலிகொட தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை. இன்று அவ்வாறான விசாரணைகளுக்கு எந்தத் தடையும் இல்லை. மக்களின் உரிமைகளில் தாக்கம் ஏற்படுமாயின், அதற்கு நடவடிக்கை எடுப்பதே எமது அடிப்படைக் குறிக்கோள்.**

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மையை உறுதிசெய்தல் எமது அடிப்படைக் குறிக்கோள்களில் முதன்மையானது. அதாவது நாங்கள் பணியாற்றும் வழிமுறையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்துவதாகும். எமது ஆணையாளர்கள் ஐவரில் மனித உரிமைகள் பற்றிய துறையில் பல ஆண்டு காலம் மிகவும் துடிப்புடன் இயங்கிய சிலர் இருக்கின்றனர். எமது நிறுவனத்தின் சுயாதீனத் தன்மையால் எதிர்பார்க்கப்படுவது என்ன என்பது எமக்குத் தெரியும். அதாவது அரசியல் அதிகாரத்திற்கு அடிபணியாது சுயாதீனமான முறையில் சட்ட வரம்புக்கு அமைய பணியாற்ற வேண்டும்.


1996 ஆண்டின் 21 இலக்க மனித உரிமைகள் சட்டம் எமக்குரிய தாய்ச் சட்டமாகும். ஆனால் அரசிலமைப்பே எமது அடிப்படைச் சட்டம். ஏனென்றால், அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க நாம் அரசியலமைப்பின்படி செயற்பட வேண்டும். இலங்கைக்கு ஏற்ப சர்வதேச மனித உரிமைச் சட்டங்களைப் பாதுகாத்தல், இலங்கையில் சட்டங்களை இயற்றுதல் அதேபோல் பலவிதமான செயல் நடைமுறைகளைத் தயாரிக்க ஆலோசனை வழங்க முடியுமென எமது தாய்ச்சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எமது தலைமையகம் கொழும்பில் இயங்குகிறது. மேலும் பத்து பிராந்திய அலுவலகங்கள் இருக்கின்றன. மனித உரிமைகள் ஆணைக்குழு பரந்துபட்ட அதேபோல் மக்களின் வாழ்வுக்கு முக்கியமான ஒரு நிறுவனம். மக்களின் தினசரி வாழ்க்கையில் தாக்கம் செலுத்தும் மனித உரிமைகள் பற்றிய பிரச்சினைகள் என்ன என்பது பற்றி நாங்கள் கவனம் செலுத்துகின்றோம். இங்கு பிரதிவாதிகள் யார் என்பது பிரச்சினை அல்ல. சட்டத்தின் படி நாங்கள் நிருவாக ரீதியான அல்லது ஆட்சித் துறையில் காணப்படுகின்ற பிரச்சினைகளை மட்டுமே கவனத்தில் கொள்ள வேண்டும். ஏனென்றால், நாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள ஒரு சட்ட மூலத்தை மீளாய்வு செய்ய முடியாது. மீளாய்வுக்கு உட்படுத்தினால் நியாயாதிக்கம் மட்டுமே அதில் சம்பந்தப்படும். ஆட்சித்துறை அல்லது நிருவாக தத்துவமுடைய அதிகார சபையாயின், எவராயினும் சரி சட்டத்தால் தடையேதும் இல்லாதபட்சத்தில் அது கவனத்தில் கொள்ளப்படும். இதுதான் அடிப்படை வித்தியாசம். நாங்கள் முறைப்பாடுகளைப் பெறும் விதம், விசாரணை செய்யும் விதம் அதேபோல் முடிவுகள் எடுக்கப்படுவதில் தீவிர சுயாதீனத்தன்மை உள்ளது. இது எமது உள்ளார்ந்த செயற்பாடு. அதில் தர்மம் இருக்கும். அந்தத் தொழில் தர்மத்தை நாங்கள் கடைப்பிடித்து வருகிறோம். கடந்த காலத்தில் சித்திரவதை, காணாமல் போதல் பற்றி முறைப்பாடுகள் மூடி மறைக்கப்பட்டிருந்தன. அதுபோன்ற கூருணர்வுள்ள, அரசியல் ரீதியாக திடுக்கிட வைக்கும் முறைப்பாடுகள் வெளிப்பட வில்லை. அவை விசாரிக்கப்படவும் இல்லை. உதாரணமாக எக்னெலிகொட தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை. இன்று அவ்வாறான விசாரணைகளுக்கு எந்தத் தடையும் இல்லை. மக்களின் உரிமைகளில் தாக்கம் ஏற்படுமாயின், அதற்கு நடவடிக்கை எடுப்பதே எமது அடிப்படைக் குறிக்கோள்.

நாங்கள் தனிநபர் பற்றிய முறைப்பாடுகளை விசாரிப்பதிலேயே முக்கிய கவனம் செலுத்தி வந்துள்ளோம். குறிப்பாக, யுத்தத்தின் பின்னர் அரச உத்தியோகத்தர்களின் சம்பளம், பணியிட மாற்றம், நியமனங்கள் போன்ற விடயங்களை ஆராயும் நிலைமை காணப்பட்டது. மனித உரிமைகள் சார்ந்த துறையில் அனுபவம் பெற்றவர்கள் என்ற வகையில் இதுபோன்ற முறைப்பாடுகளைக் கொண்டு மனித உரிமைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியாதென்பது தெளிவாகிறது. மக்களின் உரிமைகள் இதைவிடவும் மீறப்படுகின்ற நிலைமைகளை ஆராய்ந்து அவற்றுக்கு தீர்வு வழங்குவது எமது பொறுப்பு அந்த நிலைமை ஏற்படாவிட்டால் ஒரு முறைப்பாட்டை விசாரிப்பதற்கு இரண்டு அல்லது மூன்று வருடங்கள் தேவைப்படலாம். வருடமொன்றில் இதுபோன்ற பல்லாயிரக் கணக்கான முறைப்பாடுகள் எமது தலைமையகத்திற்கும் பிராந்திய அலுவலகங்களுக்கும் கிடைக்கின்றன. முறைப்பாடுகளை மட்டும் விசாரித்துக் கொண்டிருப்பதால் நாட்டில் மனித உரிமைகள் பற்றிய நிலைமை விருத்தி செய்ய முடியாது. இங்கு மனித உரிமைகள் என்றால் என்ன என்பது பற்றி சிந்திக்க வேண்டும். இது சட்டத்துடன் தொடர்புடைய ஒரு விடயமாக இருந்தாலும் மக்களின் வாழ்க்கையை உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்வதே எமது நோக்கம். மக்களின் சுதந்திரம், கண்ணியம், பன்மைத் துவத்தைப் பாதுகாத்தல், அதேபோல் சனநாயக உரிமைகளைப் பாதுகாத்தலிலும் முக்கிய கவனம் செலுத்தப்படும். இந்த விடயத்தில் கொள்கை ரீதியாக பாரிய பங்களிப்பை இடையீட்டுக்கு எம்மால் வழங்க முடியும். தாய்ச் சட்டத்தில் அதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தாய்ச்சட்டத்தில் 10வது பிரிவில் எமது கடமைகள் பற்றி சொல்லப்பட்டுள்ளது. எமது பணி மிகவும் விரிவானது. முறைப்பாடுகளை விசாரித்தல் அதில் ஒன்று. அதில் நாட்டின் சட்டதிட்டங்களை, நிருவாக நடைமுறைகளை அடிப்படை உரிமைகளுக்கு அமைவாக தயாரிப்பதற்கு அரசாங்கத்திற்கு அலோசனை கூற முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல் இவ்வாறான சட்டங்களையும் நிருவாக நடவடிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



www.colombotelegraph.com



ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ පාර්ලිමේන්තුව

1996 අංක 21 දරන ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව පනත

(සහතිකය සටහන් කළේ 1996 අගෝස්තු මස 21 වන දින)

முறைகளையும் சர்வதேச மனித உரிமை அளவுகோள்களுக்கு அமைவாகத் தயாரிப்பதற்கு அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல் ஒரு பொன்னான வாய்ப்பு. மனித உரிமை பற்றிய பிரச்சினையொன்றை ஆழமாக ஆராய்ந்து, பகுப்பாய்வு செய்து அதற்குத் தீர்வு வழங்குவதற்காக, ஆலோசனை ரீதியாக இடையீடு செய்யமுடியுமாயின் அது பலருக்கும் தீர்வாக அமையும். அதன் பொருள் முறைப்பாடுகள் தனித்தனியாக ஆராயப்படுவதை பலவீனப்படுத்துவதல்ல. அதனை பலப்படுத்த வேண்டும். அது தர்க்க ரீதியானதாக இருக்க வேண்டும். உதாரணமாக ஏனைய நிறுவனங்களுக்குரிய பல முறைப்பாடுகள் எமக்கு வருகின்றன. ஒம்புட்ஸ்மன் (குறைகேள் அதிகாரி) அரசாங்க சேவை ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு அத்துடன் பொது பயன்பாட்டு ஆணைக்குழுவுக்குச் செல்ல வேண்டிய முறைப்பாடுகளும் எமக்குக் கிடைக்கின்றன.

அவை மக்களின் வாழ்வுக்கு முக்கியமானவை. நுகர்வோர் உரிமைகளுடன் தொடர்புபட்டவை. இதுபோன்ற முறைப்பாடுகளை அந்தந்த நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்த நாம் கொள்கை ரீதியான முடிவு ஒன்றை எடுத்துள்ளோம். எமது உத்தியோகத்தர்களுக்கு அது சம்பந்தமான பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளதால் நாம் எம்மை நாடி வருபவர்களை அப்படியே திருப்பி அனுப்புவதில்லை. நிவாரணம் தேடி வரும் பிரச்சினைகள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்லும் வகையில் செயல்படுத்துவதில்லை. அதாவது, ஏற்றுகொள்ள முடியாத முறைப்பாடுகளை உரிய நிறுவனத்திற்கு ஆற்றுப்படுமாறு அவர்களுக்கு அலோசனை கூறுவோம். அவற்றை புறக்கணிக்க மாட்டோம். இந்த செயற்பாட்டில் பயனுள்ள வகையில் செயற்பட்டு ஆலோசனை வழங்கும் நடவடிக்கையிலும் ஈடுபடுதல் நாட்டில் மனித உரிமைகள் சார்ந்த பரந்தளவிலான இடையீடாக அமையுமென்பது எமது நம்பிக்கை. எமது ஐந்து ஆணையாளர்களுடன் மட்டுமல்ல சிவில் சமூக ஆர்வளர்களுடனும் இதுபற்றி கலந்தாலோசித்துள்ளோம். பிராந்திய அலுவலகங்கள் ஒவ்வொன்றுக்கும் சிவில் சமூகக் குழுக்கள் இருக்கின்றன. அதேபோல் இணைப்புக் குழு ஒன்றையும் பேணுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. மனித உரிமைகள் மீறப்படும் இடங்களைக் கண்காணித்து அவற்றுக்குத் தீர்வு வழங்குவதைவிட நிவாரண நடவடிக்கைகள் சிறந்தவை. கலந்தாலோசிப்புகள் மூலம் பல பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

மனித உரிமைகள் செயற்கையான ஒன்றல்ல என்பதை நாங்கள் முழுமையாக ஏற்றுக்கொண்டுள்ளோம். இது மனித சமுதாயத்தின் ஒரு கட்டுமானம். இது எமது தேவைக்கான ஒன்று அதேபோல் எமது வாழ்க்கையுடன் நீக்கமற கலந்துள்ளது.

இந்த உரிமைகள் இல்லாதபட்சத்தில் எமது வாழ்க்கைக்கு என்ன நடக்கும் என்பதைப்பற்றி சிந்திப்பதிலேயே அதன் முக்கியத்துவம் தங்கியுள்ளது. மனித உரிமைகளை தனித்தனியே வேறுபடுத்தி இனம்காண முடியாது. அலை ஒன்றுக்கொண்டு சம்பந்தப்பட்டவை. சமகாலத்தில் நாங்கள் சமூக, பொருளாதார மற்றும் கலாசார உரிமைகள் தொடர்பாக அதிக வனம் செலுத்தி வருகிறோம். சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மிகவும் முக்கியமானவை. இறைமை, தன்னாட்சி அதிகாரம், சுதந்திரம், உடல் உள ஒருமைப்பாடு போன்றவற்றை பாதுகாத்தல் போலவே சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் பொருளாதார உரிமைகள் முக்கியமானவை. ஏனென்றால் ஓர் உரிமை இன்றி இன்னுமொரு உரிமை பற்றிய தீர்மானத்திற்கு வர முடியாது. வாழ்வை பிரிக்க முடியாது. அதேபோல் மனித உரிமைகளையும் பிரிக்க முடியாது. ஆகவே, சகல விடயங்கள் பற்றியும் கவனம் செலுத்தப்படும் எமக்குக் கிடைக்கின்ற முறைப்பாடுகளையும் எமது அன்பர்களிடமிருந்து கிடைக்கின்ற முறைப்பாடுகளையும் அடிப்படையாக வைத்து நாம் நாட்டின் மனித உரிமைகள் பற்றிய நிலையை அறிந்து கொள்கிறோம்.

அதன்படி, உரிமைகளின் தன்மையை ஆராய முடியும். கிடைக்கின்ற முறைப்பாடுகளைக் கொண்டு ஒரு முடிவுக்கு வர முடியாது. அவற்றை விசாரித்த பின்னரே முடிவொன்றுக்கு வரலாம் என சிலர் தெரிவிப்பதுண்டு. சில முறைப்பாடுகளைத் தீர்க்க பல வருடங்கள் ஆகலாம். தொழில்நுட்ப ரீதியான காரணங்களால் உரிமை மீறப்பட்டால் அதை நிரூபிக்க முடியாது. தொழில்நுட்ப அடிப்படையில் பணியாற்றி நாட்டின் மனித உரிமைகளை முன்னேற்ற முடியாது. எம்மை நோக்கி வரும் சகல முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. முறைப்பபாட்டை ஆராயும்போது அதில் முக்கியத்துவம் இல்லாவிட்டால் சம்பந்தப்பட்ட நபர் உரிய முறையில் தகவல்களைச் சமர்ப்பிக்கத் தவறியிருந்தால் அவ்வாறான முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. மனித உரிமை பற்றிய பிரச்சினை இருப்பதாக உய்த்தறியக் கூடிய முறைப்பாடுகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். உரிய தகவல்கள் இன்றி ஒருவர் பொலிசாரினால் தனக்கு தொந்தரவு ஏற்படுகிறது எனத் தெரிவிக்க முடியாது. அவர் அதற்கான சரியான தகவல்களைச் சமர்ப்பிக்க வேண்டும். எங்கு, எத்தேதியில், எந்த நேரத்தில், உரிய நபரின் பெயரைத் தெரிவிக்க முடியுமா, இடம்பெற்ற தொந்தரவின் தன்மை போன்ற விடயங்கள் உள்ளடங்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். கிடைக்கின்ற முறைப்பாடுகளைக் கொண்டு மனித உரிமைகளின் தன்மையைப் புரிந்துகொள்ள முடியும்.

2014 ஈற்றிலிருந்து இதுவரை பலவந்தமாக காணாமற்போதல்கள் இடம்பெறுவதில்லை. சில சமயங்களில வெள்ளை வேன் பற்றிய முறைப்பாடுகள் கிடைத்தாலும், அதில் ஆட்கள் காணாமற்போனதாக முறைப்பாடு பதிவு செய்யப்படுவதில்லை. கடத்தப்படுதல் பற்றிய முறைப்பாடுகள் கிடைத்தாலும் கடத்தப்பட்டவர்கள் எங்காவது கண்டுபிடிக்கப்டுவார்கள். அரசியல் காரணங்களுக்காக அரசாங்கத்தின் அனுசரணையுடன் ஆட்கொலைகள் இடம்பெறுவதாக செய்திகள் இல்லை. சென்ற ஆண்டில், பொலிசாரின் கண்காணிப்பில் இருந்த இருவர் உயிரிழந்தமை பற்றிய முறைப்பாடு கிடைத்தது. அவை விசாரணை செய்யப்படுகின்றன. மக்களின் அரசியல் உரிமைகள் மற்றும் மனித உரிமைகளில் தாக்கம் செலுத்தும் வகையிலான பாரதூரமான முறைப்பாடுகள் கிடைப்பதில்லை. பொலிசாரின் கைதுகள் பற்றிய முறைப்பாடுகள் தொடர்ச்சியாக கிடைத்த வண்ணமுள்ளது. பொலிசாரின் பொறுப்பில் இருக்கும்போது சித்திரவதைக்கு உட்படுதல், தான்தோன்றித்தனமான கைதுகள், தடுத்து வைத்தல் தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கின்றன. அதேபோல், நிருவாகத்தின் தன்னிச்சையான செயல்பாடு காரணமாக உரிமைகள் மீறப்பட்டதாகத் தெரிவிக்கும் முறைப்பாடுகளும் கிடைக்கின்றன. இவ்வாறான முறைப்பாடுகளில் கல்வி உரிமைகள் பற்றிய முறைப்பாடுகள் விசேடமானவை. அரசியலமைப்பில் கல்விக்கான உரிமை அங்கீகரிக்கப்படாவிட்டாலும் உயர் நீதி மன்றம் அதை ஏற்றுக்கொண்டுள்ளது. இவ்வாறான பெரும்பாலான முறைப்பாடுகள் சம உரிமை என்ற விடயத்தின் கீழ் பதிவு செய்யப்படுகின்றன. பாடசாலை அனுமதி, பாடசாலைகளில் இடம்பெறுகின்ற முறைப்பாடுகள், பிள்ளைகளை சித்திரவதைக்கு உட்படுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கின்றன. பல்கலைக்கழகங்கள் தொடர்பான முறைப்பாடுகளும் கிடைக்கின்றன. இம்முறை பகிடிவதை பற்றிய சில முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவை பிரதானமான முறைப்பாடுகளாக இருந்தாலும் இவற்றுக்கு மேலதிகமாக மக்களின் வாழ்வாதாரத்துடன் சம்பந்தப்பட்ட முறைப்பாடுகளும் வருமான மார்க்கங்களை ஏற்படுத்துவது பற்றிய முறைப்பாடுகளும் கிடைக்கின்றன. ஓய்வூதியம் தொடர்பான முறைப்பாடுகள் விசேடமானவை. இலங்கை அதிகமான முதியோரைக் கொண்ட ஒரு நாடு. அவர்களுடைய உரிமைகளையும் இருப்பையும் பாதுகாக்கும் பாரிய பொறுப்பு எமக்கு உண்டு. எனவே இதுபோன்ற முறைப்பாடுகளில் அதிக கவனம் செலுத்தப்படும். இந்நிலையில் எமக்கு மனித உரிமைகளை கண்ணியப்படுத்தும் சமூதாயமொன்றைக் கட்டியெழுப்பும் பாரிய சவாலும் உள்ளது.

**நல்லாட்சியில் சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு சுயாதீனமாக வேலை செய்ய வாய்ப்பு உள்ளதா?**

முழு அளவிலான சுயாதீனத்துடன் வேலை செய்யும் வாய்ப்பு உள்ளது. எமக்கு எவரிடமிருந்தும் அழுத்தம் வரவில்லை. சுயாதீனத்திற்கு அழுத்தம் கொடுத்தால் அதை நாங்கள் வெளிப்படுத்துவோம். மக்களுக்கு அதைச் சொல்ல வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு. இது பொது மக்களின் வரிப்பணத்தாலும் வளங்களினாலும் கொண்டு நடத்தப்படும் ஒரு நிறுவனம். மக்களுக்கு சேவை செய்யவும் நன்மை செய்யவும் இருக்கின்ற ஒரு நிறுவனம் எமது நிறுவனம் பெயருக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. நாட்டின் சனநாயக அரசியல் முறைமையைப் பாதுகாத்தல் மக்களின் வாழ்வுக்கு எந்தளவு முக்கியமென்பதை நாங்கள் எப்போதும் சிந்தித்து செயலாற்றி வருகிறோம். இந்த நிறுவனம் கோட்பாட்டுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்ட ஒன்றென கூறுவார்களாயின் அதை ஏற்றுக்கொள்ள முடியாது.

**இந்த அரசாங்கம் புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்க எதிர்ப்பார்த்துள்ளது. அதில் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளை உள்ளடக்குவது பற்றிய உரையாடலும் நடைபெறுகிறது. இது பற்றிய உங்கள் கருத்து என்ன?**

இது மிகவும் சிக்கலானது. இவ்வாறான கருத்துக்களை ஏற்றுக்கொண்டால் மனித உரிமைகள் பற்றிய கருத்தாடல்களையும் அதன் முன்னேற்றத்தையும் நாம் பல வருடங்களுக்கு முடக்கி வைத்துள்ளதாக அமைந்துவிடும். நாங்கள் இதை கோட்பாட்டு ரீதியாக தெளிவுபடுத்த முயற்சி செய்தாலும் எமது வாழ்க்கையை சிறப்பானதாக அமைத்து கொள்வதற்கு எவ்வாறான ஒரு குழுவமைவு இருக்க வேண்டுமென்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எமது கடமையில் இடையீடு செய்யும் வகையில் யாராவது ஒருவர் இந்த முறைப்பாட்டை ஏற்றுக் கொள்ளுங்கள், இதை ஏற்றுக்கொள்ள வேண்டாம் எனத் தெரிப்பாராயின் அதை பொது மக்கள் அறிந்துகொள்ள வேண்டும். ஏனென்றால் நாங்கள் இந்த நிறுவனத்தின் பொறுப்பாளர்கள் மட்டுமே. இதை நாங்கள் நன்கு புரிந்துகொண்டுள்ளோம். எமக்கு எந்த விதமான உத்தரவும் கிடைக்கவில்லை. அப்படியே உத்தரவு வந்தாலும் அதை நாங்கள் கடைபிடிக்கப்போவதில்லை. சில சந்தர்ப்பங்களில் நாங்கள் சமர்ப்பிக்கும் அறிக்கைகள் அல்லது சிபாரிசுகளுடன் இணங்குவதில்லை. அது அவரவர் உரிமை.**




asianmirror.lk

*சந்தயா எக்னெலிகொட மற்றும் அவருடைய மகன்*

சாதாரண பிரக்ஞையுள்ள ஒரு கேள்வியாக கேட்கலாம்.

எமது கடமையில் இடையீடு செய்யும் வகையில் யாராவது ஒருவர் இந்த முறைப்பாட்டை ஏற்றுக் கொள்ளுங்கள், இதை ஏற்றுக்கொள்ள வேண்டாம் எனத் தெரிவிப்பாராயின் அதை பொது மக்கள் அறிந்துகொள்ள வேண்டும். ஏனென்றால் நாங்கள் இந்த நிறுவனத்தின் பொறுப்பாளர்கள் மட்டுமே. இதை நாங்கள் நன்கு புரிந்துகொண்டுள்ளோம். எமக்கு எந்த விதமான உத்தரவும் கிடைக்கவில்லை. அப்படியே உத்தரவு வந்தாலும் அதை நாங்கள் கடைபிடிக்கப்போவதில்லை. சில சந்தர்ப்பங்களில் நாங்கள் சமர்ப்பிக்கும் அறிக்கைகள் அல்லது சிபாரிசுகளுடன் இணங்குவதில்லை. அது அவரவர் உரிமை. பலரும் பல விதமான கருத்துக்களைக் கூறினாலும் சட்டத்தின் ஆட்சியை பாதுகாக்க வேண்டுமானால் இதுபோன்ற நிறுவனங்களால் வழங்கப்படும் சிபாரிசுகளை பின்பற்ற வேண்டியது அவசியமாகும்.

எனக்கு அரசியல் சுதந்திரம் வேண்டும். கருத்துச் சுதந்திரம் வேண்டும். ஆனாலும் பட்டினியாக இருக்க முடியாது. அதற்கும் தீர்வு தேவை. எல்லாவற்றுக்கும் முதலில் உயிர் வாழ வேண்டும் அதற்கு உகந்த போஷாக்கு வேண்டும். சுத்தமான தண்ணீரும், காற்றும் வேண்டும். மகத்தான வாழ்வு வாழ விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். அதற்குச் சிறந்த கல்வி வேண்டும். சிலர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"மனித உரிமைகள் சட்டத்தில் வீட்டு வசதிகள் பற்றி எதுவுமே சொல்லப்படவில்லை. அதாவது அரசாங்கம் ஒவ்வொருவருக்கும் இலவசமாக வீடுகளை வழங்க வேண்டுமென தெரிவிக்கப்படவில்லை. ஆனாலும் அரசாங்கம் மக்களுக்கு வீடுகள் வழங்கப்படுவதை இலகுபடுத்த வேண்டும். உதாரணமாக குறைந்த வருமானம் பெறுவோர் தற்போதைய விலையில் வீடு ஒன்றைப் பெற்றுக்கொள்வது கடினமானால் அதை இலகுபடுத்தும் வகையில் கடன் வழங்குதல் அல்லது அரசாங்க வீடமைப்புத் திட்டங்கள் இருக்க வேண்டும்.**

முறைசார் கல்வியையும் இன்னும் சிலர் முறைசாரா கல்வியையும் பயில்கின்றனர். அதற்கும் சுதந்திரமும் வளங்களும் அவசியம். ஆரோக்கியம் பாதுகாக்கப்பட வேண்டும். சீரான வாழ்வுக்கு போக்குவரத்து வசதி வேண்டும். மின்சாரம் போன்ற வசதிகளும் வேண்டும். அதேபோல் நவீன தொழில்நுட்பம் மக்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாத காரணத்தால் அதுவும் வேண்டும் என்ற வாதங்களை முன்வைத்து புதிய அரசியலமைப்பில் பழைய மாதிரியான வடிவம் பின்பற்றப்பட வேண்டும். ஆகவே அதில் சிவில் மட்டும் அரசியல் உரிமைகள் மட்டுமே இருக்க வேண்டும் எனத் தெரிவித்தால் அதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இதுபற்றிய எங்களுடைய ஆலோசனைகள் மக்களுக்கு மும்மொழிகளிலும் வழங்கப்பட்டுள்ளன.

அதேபோல் புதிய அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் தொடர்பாக திரு. லால் விஜேநாயக்கவின் மக்கள் கருத்தறியும் குழுவுக்கும் எமது யோசனைகளைத் தெரிவித்துள்ளோம். பாராளுமன்றத்தில் அடிப்படை உரிமைகள் பற்றிய வழிப்படுத்தல் குழுவுக்கு எங்களுடைய யோசனைகளை வழங்கியுள்ளோம். வழிப்படுத்தல் குழுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை அங்கீகரிப்பதில் நாங்கள் தெளிவாக இருக்கின்றோம். விரிவாக ஆராய வேண்டிய விடயங்கள் இருப்பினும் அடிப்படையில் நாங்கள் அதை ஏற்றுக்கொள்கிறோம். அமைதி, சனநாயகம், பன்மைத்துவத்தை மதிக்கின்ற அதேபோல் சுதந்திரத்தை துய்க்கக் கூடிய ஒரு சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கான அரசியலமைப்பொன்று எமக்குத் தேவை. நாங்கள் இதுவரை காலமும் போராடி வந்த அதேபோல் காத்திருந்த உரிமைகளை பெறுவதற்கான பொன்னான தருணம் கிடைத்துள்ளது. புதிய அரசியலமைப்பின் ஊடாக மக்களின் அபிலாஷைகள் நிறைவேறும் என எதிர்பாக்கின்றோம். ஆகவே அடுத்தக்கட்டத்தை நோக்கி நகர்வது பற்றி சிந்திக்க வேண்டும்.

கல்விக்கான உரிமையையும் சுகாதார சேவைகளுக்கான உரிமையையும் அரசியலமைப்பில உள்வாங்காதிருப்பதற்கு சில காரணங்கள் உள்ளன. அரசாங்கத்திற்கு அதிகமான செலவுகளை ஏற்க நேரிடுமென்பது அதில் ஒன்று.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கு செலவுகள் இல்லையென்பது அதன் கருத்தல்ல. அது முற்றிலும் பொய்யானது. நாட்டில் நீதியை நிலை நாட்டும் பொறிமுறை நிர்வகிக்க எவ்வளவு செலவு செய்யப்படுகிறது? வழக்குகளை விசாரிக்க நீதிமன்ற கட்டமைப்பு தேவை. மேல் நீதி மன்றத்திலிருந்து முதன்மை நீதிமன்றங்கள் வரையான நீதிமன்றங்களைப் பேண வேண்டும். நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்க நீதிபதிகளும் உத்தியோகத்தர்களும் அவசியம். அதற்குத் தேவையான சகல வசதிகளையும் வழங்க வேண்டும். நீதிமன்றத்தால் ஆற்றுப்படுத்தல் சேவைகளும் வழங்கப்பட வேண்டும். மக்களுக்கு பொலிஸ் சேவையை வழங்குவதிலும் அதிக பணம் செலவாகிறது. ஒருவர் சித்திரவதையை ஒழிப்பதற்கு பணம் அவசியமாகாது என்றும், அரச உத்தியோகத்தர்கள் அதை செய்யாதிருந்தாலே போதும் என்றும் கூறலாம். அது பொய் சித்திரவதை செய்யாதிருப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்க வேண்டும். அதற்குத் தேவையான தொழில்நுட்பத்தைப் பெற மில்லியன் கணக்கில் பணத்தை செலவு செய்ய வேண்டும் இன்று விசாரணைகளின்போது புதிய தொழில்நுட்பம் கையாளப்படாத காரணத்தால் பெரும்பாலும் சித்திரவதைகள் நடைபெறுகின்றன. பொலிசார் வேண்டுமென்றே அல்லது தெரிந்தோ தெரியாமலோ, பழக்கத்தின் காரணமாகவோ சந்தேக நபரின் முதல் தகவல் அறிக்கை மூலம் சாட்சியங்களைப் பெற முயற்சி செய்கின்றனர். வளர்ச்சியடைந்த வழிமுறைகளில் அவ்வாறு நடைபெறுவதில்லை. அதற்கு பல்வேறு குற்றவியல் ஆராய்ச்சிகள் உள்ளன. உயர் தொழில்நுட்பம் மற்றும் நன்கு பயிற்சிபெற்றவர்கள் இருக்க வேண்டும். தற்போது பொலிஸ் சேவையில் அதுபோன்ற உத்தியோகத்தர்கள் இருந்தாலும் பொதுவாக குறைவு என்றே கூற வேண்டும். சாதாரண பொலிஸ் நிலையங்களில் உயர் தொழில்நுடும்பம் இல்லை. அதேபோல் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் (CID) போன்ற உயர் மட்டப் பயிற்சி பெற்றவர்கள் இல்லை. சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதற்கும், மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கக் கூடிய உயர் மட்டத்திலான பொலிஸ் சேவையை வழங்குவதற்கும் அதிக பணம் தேவை. எனவே சித்திரவதை ஒழிப்பதற்கு பணம் தேவையில்லையென எந்த வகையிலும் கூற முடியாது. வாக்குரிமை மிகவும் விலை உயர்ந்த ஓர் உரிமை. அது அரசியல் உரிமை.

ஆகவே, உரிமைகள் தொடர்பில் காணப்படுகின்ற மூட நம்பிக்கைகளால் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுவதை அனுமதிக்க முடியாது. நீண்ட காலமாக முன்வைக்கப்பட்டு வந்துள்ள கருத்துக்கள் மற்றும் எண்ணக்கருக்களின் அடிப்படையில் தற்போது ஒரு முக்கிய இடத்திற்கு நாம் வந்துள்ளோம். பிரசைகள் என்ற வகையில் அவற்றைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதே எமது கடமை. பின்னோக்கி நகர்த்துவதல்ல. இதுதான் பொருளாதார


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவம், அதன்படி அதுபற்றிய உரிமைகளை அரசியலமைப்பில் சேர்ப்பது பொருத்தமற்றதென எம்மால் கூற முடியாது. உரிமைகளைப் பாதுகாத்தல் பொருளாதார வடிவமொன்றுக்கு மட்டுப்படுத்தப்பட வேண்டும். எந்தவொரு பொருளதார வடிவத்தைக் கொண்டிருந்தாலும் மக்களின் பசிக்குத் தீர்வு வேண்டும். பொருளாதார முறைமைகளின்படி அதன் அளவுகள் கூடிக் குறையலாம். எவ்வாறாயினும் அடிப்படைத் தேவைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டும்.

நியமிக்கப்படாத நீதிபதிகள் வளங்கள் பற்றிய கொள்கை ரீதியான தீர்மானங்கள் எடுப்பது பற்றியும் கூற வேண்டும். நான் அறிந்த வகையில் வழக்கு ஒன்று இல்லாமல் எந்த நீதிபதியும் இவ்வாறான முடிவுகளை எடுப்பதில்லை. மக்கள்தம் உரிமைகள் மீறப்பட்டுள்ளதைத் தெரிவித்து முறைப்பாடுகளைச் செய்யும்போது நீதிமன்றத்தால் கொள்கை ரீதியான முடிவு எடுக்கப்படுவதில்லை.

(ஒ) பணத்தைச் செலவிட வேண்டும் (ல) பணத்தைச் செலவிட வேண்டும். நிறுவனங்களை அமைக்க வேண்டும் போன்ற கொள்கை ரீதியான முடிவுகள் எடுக்கப்படுவதில்லை. நீதிமன்றங்கள் உரிமை மீறப்பட்டுள்ளதா, மீறப்பட வில்லையா என்பதையும் உரிமைகள் மீறப்படாதிருப்பதற்கு அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும் போன்ற விடயங்களை மட்டுமே தெரிவிக்கின்றன. சில சந்தர்ப்பங்களில் ஒருசில பிரமாணங்களையும் சிபாரிசுகளையும் வழங்க வாய்ப்புண்டு. அரசாங்கமொன்றில் இருக்கின்ற முக்கியமான மூன்று நிறுவனங்களும் சனநாயகத்தை முன்னெடுக்க வேண்டுமானால் நீதிமன்றக் கட்டமைப்பில் வாக்கெடுப்பினால் தெரிவு செய்யப்பட்டவர்கள் இருத்தல் கூடாது. அமெரிக்காவின் ஒருசில மாநில நீதிமன்றங்களில் வாக்கெடுப்பின் மூலம் தெரிவு இடம்பெறும். இவ்வாறு தெரிவு செய்யப்படுபவர்கள் அடுத்த தேர்தலில் எப்படி வெற்றி பெறலாம் என்பதை மட்டுமே சிந்திப்பர். கொள்கைகள் பற்றியல்ல. ஆகவே வாக்குகள் மூலம் தெரிவு செய்யப்படாத சுயாதீன நிறுவனமொன்றுக்கு மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க அதிக வாய்ப்பு உள்ளது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

நீதிமன்றங்கள் ஒருபோதும் அரசாங்கத்தின் செலவினம் பற்றியோ பணத்தை ஒதுக்க வேண்டிய விதம் பற்றியோ கருத்துத் தெரிவிப்பதில்லை. இந்தியாவில் அந்நாட்டின் சமூக, பொருளாதார உரிமைகள் அரசியலமைப்பில் இனம் காணப்பட்டுள்ளன. தென்னாபிரிக்க அரசியலமைப்பில் சமூக, பொருளாதார உரிமைகள் என்னென்ன என்பது பற்றி சொல்லப்பட்டுள்ளது. அதில், தொழிலாளர் உரிமைகள், கல்விக்கான உரிமை, சுகாதார சேவைகளை பெறுவதற்கான உரிமை போன்ற பல உரிமைக்ள அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இந்த உரிமைகளைப் பாதுகாத்தல் ஓர் அரசாங்கத்தின் கடமையென்பது அவர்களின் கருத்து.

இவ்வாறான உரையாடல்களில் தனியாரும் இணைந்துள்ளதைக் காணலாம். தனியார் துறையில் வேலை செய்பவர்கள் திறந்த பொருளாதாரம் இதற்கு ஈடுகொடுக்காது என்கின்றனர். சகலரும் தமக்கு வீட்டு வசதியை அல்லது எல்லா வசதிகளையும் கேட்பதற்கு வாய்ப்பு உள்ளது என்கின்றனர். அதை ஏற்றுக்கொள்ள முடியாது. இதை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். ஒரு நபர் தனக்கு வீடு இல்லை வீடு ஒன்றைக் கட்டித்தருமாறு நீதிமன்றில் கேட்பதுண்டா? இதில் உங்கள் உரிமை மீறப்பட்டுள்ளதென ஏன் சிந்திக்க வேண்டும். இவ்வாறு நடப்பதற்கு என்ன காரணம் என்பதை நீதிமன்றம் ஆராய வேண்டும். மனித உரிமைகள் சட்டத்தில் வீட்டு வசதிகள் பற்றி எதுவுமே சொல்லப்படவில்லை. அதாவது அரசாங்கம் ஒவ்வொருவருக்கும் இலவசமாக வீடுகளை வழங்க வேண்டுமென தெரிவிக்கப்படவில்லை. ஆனாலும் அரசாங்கம் மக்களுக்கு வீடுகள் வழங்கப்படுவதை இலகுபடுத்த வேண்டும். உதாரணமாக குறைந்த வருமானம் பெறுவோர் தற்போதைய விலையில் வீடு ஒன்றைப் பெற்றுக்கொள்வது கடினமானால் அதை இலகுபடுத்தும் வகையில் கடன் வழங்குதல் அல்லது அரசாங்க வீடமைப்புத் திட்டங்கள் இருக்க வேண்டும். அவ்வாறான ஒரு வழிமுறையை கொண்டு வர வேண்டும். நலனோம்பல் பணிகள் இடம்பெறும் நாடுகளில் இது நடைமுறையில் உள்ளது. நலனோம்பல் இன்றி உரிமைகளின் கீழ் இவற்றை நிறைவேற்ற வேண்டுமென கூறவில்லை. நாங்கள் இந்த உரிமைகளை ஏன் கேட்டு நிற்கின்றோம் என்பதை இதற்கு எதிரான விமர்சகர்கள் ஏன் புரிந்துகொள்வதில்லை?

நான் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு பெண். நாளாந்த வாழ்க்கை எனக்கு ஒரு பிரச்சினை அல்ல. மூன்று வேளைக்கும் உணவு கிடைக்கிறது. நல்ல கல்வி கிடைத்தது. ஆனால், என்னைப் போன்று சிறப்புரிமைகள் இல்லாத, உரிமைகளை அனுபவிக்க முடியாத மக்கள் எதிர்கொள்ளும் சவால்களை புரிந்துகொள்ள வேண்டும். என்பதே இங்குள்ள பிரச்சினை. அவற்றை புரிந்துகொள்ள தவறுபவர்களுக்கு இந்த பிரச்சினைகளுக்கு சட்ட வடிவம் கொடுத்து பாதுகாப்பு வழங்குவது கடினம். ஏனென்றால், எல்லா சந்தர்ப்பத்திலும் கோட்பாட்டை கையிலெடுப்பார்கள். நீதிமன்றம் இவ்வாறு தீர்ப்பளிக்கலாம், பணத்தை செலவிட நேரிடலாம் ஆகியவற்றை கற்பனை செய்வார்கள். இது கூருணர்வு பற்றிய பிரச்சினை.

அடுத்ததாக பொதுமக்களின் பணம் எதற்காக உள்ளது என்பதை சிந்திக்க வேண்டும். முதலாளித்துவ பொருளாதாரத்திலும் திறந்த பொருளாதாரத்திலும் மூலதனத்தை இட்டு மக்கள் இலாபம் தேடுகிறார்கள். நாங்கள் அதை மறுக்கவில்லை. ஆனால், சில சமுதாய பொறுப்புகளுக்கு கட்டுப்பட்டே அந்த இலாபத்தை ஈட்ட உரிமை வழங்கப்பட்டுள்ளது. உதாரணமாக தமக்குக் கீழ் வேலை செய்பவர்களுக்கு தொழில் உரிமைகள் கிடைத்துள்ளனவா என்பதை குறிப்பிடலாம்.

அதில் சுரண்ட முடியாது. வரி செலுத்த வேண்டும் போன்ற பல பொறுப்புக்களுக்கு கட்டுப்பட வேண்டும். ஒழுங்கமைப்பட்ட ஜனநாயக அரசியல், மக்களின் வாழ்வு இவ்வாறுதான் இருக்க வேண்டும். பிரசைகள் என்ற வகையில் நாம் எதைச் செய்தாலும் உரிமைகளும் பொறுப்புகளும் இருக்கின்றன. அரசாங்கத்தின் செலவு அது மக்கள் பணம். அதை மக்களுக்கு வழங்க வேண்டும். பொருளாதார ரீதியான தொழில் முயற்சிகளை உருவாக்கி அவற்றுக்கு வாய்ப்பளித்தல் இதன் ஒரு பகுதி. இது தனித்த ஒரு செயல்பாடு தனியார் துறையிலும் மக்கள் பணி இருக்க வேண்டும்.

எமக்கு மக்கள் வாழ்வு பற்றிய புரிதல் இருக்க வேண்டும். அது பற்றி துடிப்பு இருக்க வேண்டும். அந்தத் துடிப்பு இல்லாமல் மனித


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எமக்கு மக்கள் வாழ்வு பற்றிய புரிதல் இருக்க வேண்டும். அது பற்றிய துடிப்பு இருக்க வேண்டும். அந்த துடிப்பு இல்லாமல் மனித உரிமைகள் பற்றி பேச முடியாது. நாங்கள் குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்த வண்ணம் கோட்பாட்டு ரீதியாக பேசிக்கொண்டிருக்கலாம். ஆனால், மக்களின் பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளாவிட்டால் அதில் பயனில்லை. ஆகவே, இவற்றை அடிமட்டத்திலிருந்து புரிந்து கொள்ள வேண்டும்.**

உரிமைகள் பற்றிய பேச முடியாது. நாங்கள் குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்த வண்ணம் கோட்பாட்டு ரீதியாக பேசிக்கொண்டிருக்கலாம். ஆனால், மக்களின் பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளாவிட்டால் அதில் பயனில்லை. ஆகவே, இவற்றை அடிமட்டத்திலிருந்து புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு சனநாயக நாட்டில் மக்கள் பணியிலிருந்து அன்னியப்பட்ட செயல்பாடு இருக்க முடியாது. ஏனென்றால், மக்களின் விருப்பமும் மக்களின் இறைமையும் அரச பொறிமுறையின் அடிப்படை. அதை நாங்கள் மறந்து விடக்கூடாது. எமது நாடு முக்கியமான ஒரு திருப்பு முனையை சந்தித்துள்ளது. சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டிருப்பதை வரவேற்க வேண்டும்.

மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் விதத்தில் பணியாற்ற வேண்டியது எமது கடமை. எம்மாதிரியான ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்பப் போகிறோம் என்பது பற்றிய அபிப்பிராயம் இருக்க வேண்டும். மனித உரிமைகள் ஆணைக்குழு, சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு அதேபோல் சுயாதீன நிதி ஆணைக்குழு ஏன் உள்ளது என்பதைச் சிந்திக்க வேண்டும். அவற்றின் அடிப்படையே மக்களின் வாழ்வை உயர்ந்த இடத்திற்குக் கொண்டு செல்வதுதான்.

**புதிய அரசியலமைப்பில் சமூக பொருளாதார உரிமைகள் உள்வாங்கப்படாவிட்டால் 1966 பொருளாதர, சமூக மற்றும் கலாசார உரிமைகள் பற்றிய சர்வதே சமவாயத்தை மீறுகின்றோமே?**

நிச்சயமாக, இது ஒரு முக்கியமான விடயம் பொருளாதார மற்றும் சமூக உரிமைகளாயினும் சரி, சிவில் உரிமைகளாயினும்சரி இவை அனைத்தும் மனித உரிமைகள் என்னும் பொதுத்தலைப்பின் கீழ் இருப்பவை. மனித உரிமைகள் மக்களுக்குச் சொந்தமானது. சிறந்த வாழ்வுக்கு அது அவசியம். நாம் 1966 ஐ.நா சமவாயத்தை ஏற்றுக்கொண்டதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. இந்த இரண்டு சமவாயங்களுக்கிடையில் எந்த வித்தியாசமும் இல்லை என்பதையும் இவை ஒன்றுடனொன்று இணைந்திருப்பதாகவே நம்புகிறோம். இவை மாறுபட்ட உரிமைகள் என்பதை ஐக்கிய நாடுகள் சபை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை.

இலங்கை சர்வதேச சமவாயங்கள் ஒவ்வொன்றையும் ஏற்றுக்கொண்டுள்ளது. நாங்கள் அதற்கு கட்டுப்படுகின்றோம். ஜெனிவா தீர்மானங்க(Resolution)ளை விட சர்வதே சமவாயங்களுக்கு கட்டுப்பட்டுள்ளோம். இவ்வாறான சமவாயங்களை ஏற்று அங்கீகரிப்பதன் மூலம் அவற்றுடன் சட்ட ரீதியான கடப்பாடு ஏற்படுகிறது. நாங்கள் சட்ட ரீதியாகவும் பண்பாட்டு ரீதியாகவும் கடப்பாட்டைக் கொண்டுள்ளோம். ஆகையால், அவர்கள் கேள்வி கேட்கும்போது நாங்கள் பதில்கூற வேண்டும். நீங்கள் சமூக, பொருளாதார உரிமைகளை ஏற்று அங்கீகரித்துள்ளீர்கள். அவற்றில் பல கடமைகள் இருக்கின்றன. ஏன் அவற்றை மதிப்பதில்லை? நடைமுறைப்படுத்துவதில்லை என கேள்வி கேட்பார்கள். உரிமைகளில் ஒரு பகுதியை அரசியலமைப்பில் உள்வாங்கி இன்னொரு பகுதியை ஏன் உள்ளடக்கவில்லை எனக் கேட்பார்கள். எமது ஆணைக்குழு பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துவதால் அதற்கான ஒரு உப குழுவை நியமித்துள்ளது. அதில் பேராசிரியை சவிஸ்திரி குணசேகர போன்றவர்கள் உள்ளனர். இந்த ஆண்டில் பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழுவுக்கு நிறைவேற்றப்பட்டுள்ள கடமைகள் பற்றி அறிக்கையிட வேண்டும். இக்குழு எமது நாட்டுக்கு (இந்த ஆண்டில் சமர்ப்பிக்கப்படவுள்ள ஐந்தாவது அறிக்கையில் உள்ளடக்குவதற்காக) பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் எவ்வாறு சட்டத்தால் உருவாக்கப்பட்டுள்ளன என்பதை தெரியப்படுத்துமாறு கேட்டுள்ளது. இது அரசியலமைப்பில் சேர்க்கப்படுமா? சேர்க்கப்படுவதில்லையா? சமூக மற்றும் பொருளாதார உரிமைகள் மீறப்படுவதை எதிர்த்து நீமன்றம் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமா? இல்லையா? என கேட்கப்படும் கேள்விகளுக்கு அரசாங்கம் பதில்கூற வேண்டும்.

சுயாதீன ஆணைக்குழு என்ற வகையில் நாம் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். மக்கள் சனநாயக செயற்பாட்டில் பாரிய நம்பிக்கை வைத்துள்ளனர். என்னதான் பிரச்சினைகள் இருந்தாலும் இலங்கை இந்த சமவாயத்தை வழிமொழிந்துள்ளது. இதய சுத்தியுடன், தயங்காது அவற்றுக்கு மதிப்பளித்து எமது எதிர்கால பயணத்தை அமைத்துக்கொள்ள வேண்டும். உண்மையிலேயே எமக்கு ஒழுக்கமுள்ள ஒரு சமுதாயம் அவசியம். என்னதான் முத்திரைகள் குத்தப்பட்டாலும் சிறந்த வாழ்க்கைக்கான உயர்ந்த சமூகமொன்று அவசியமாக உள்ளது. ஆகவே, மனித உரிமைகளைப் பாதுகாத்தல் என்பது தீமையாகாது.

மனித உரிமைகள் மேலைத்தேசத்திலிருந்து வந்த ஒன்று என்றும், அது நாட்டுக்கு தீங்கு செய்வதற்கு அங்கிருந்து கொடுக்கப்படும் அழுத்தம் என்றும் சிலர் கூறுகின்றனர். மனித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமைகளை சரிவர நிறைவேற்றத் தவறும் போதே அழுத்தங்கள் வந்து சேரும். பிரஜைகள் என்ற வகையில் எமது உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு எமக்கு உள்ளது.

**அடிப்படை மனித உரிமைகள் பற்றிய பொது மக்களின் அறிவு திருப்தி அளிப்பதாக இல்லை. ஒரு கிராமத்திற்குச் சென்றால் இதை உணர முடியும். கிராமிய மட்டத்திலும் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச நிருவாகத்தாலும் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. என்ன செய்ய வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியாது. அதேபோல் மனித உரிமைகள் தொடர்பான கலந்துரையாடல்கள் கொழும்பை மையப்படுத்தி சில நிறுவனங்களில் மட்டுமே நடைபெறுகிறது. ஆகவே, இது பற்றி பிரஜைகளின் மனப்பாங்கு வளர்ச்சி அடையாத ஒரு பிரச்சினையும் உள்ளதே ?**

பாரிய பிரச்சினை உள்ளது. உண்மையிலேயே ஒட்டுமொத்த ஜனநாயக செயற்பாட்டையும் இந்த இடைவெளி பாதிக்கின்றது. எதிர்பார்ப்புகள் உள்ளன. ஆனால், அவற்றை எவ்வாறு அடைய வேண்டும். என்பதில் விழிப்புணர்வு இல்லை. மனித உரிமைகள் தொடர்பில் விழிப்புணர்வு செய்ய வேண்டியது பிரதான பணி. மனித உரிமைகள் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதை நாங்கள் நிறைவேற்றி வருகிறோம். உள்ள சவால்களுக்கு மத்தியில் எம்மால் நிறைவேற்ற முடியுமான பணி மிகவும் வரையறுக்கப்பட்டுள்ளது. என்பது உண்மை. இலத்திரனியல் ஊடகங்களைப் பயன்படுத்தி நாங்கள் மக்களை விழிப்புணர்வு செய்தாலும், செய்தி வடிவில் மட்டும் செய்யப்படுகின்ற விழிப்புணர்வுகள் போதுமானதல்ல. பிரத்தியேகமான கருத்தாடல் களம் இருக்க வேண்டும். இதுபற்றி சிந்திப்பதற்கு வாய்ப்பு இருக்க வேண்டும். இவைதான் உரிமைகள். எனவே, அதுபற்றி விழிப்புணர்வு பெறுங்கள் என்று கூற முடியாது. உரிமையொன்றின் கட்டமைப்பு என்ன ? பரம்பல் என்ன ? எமக்கு அவை ஏன் முக்கியத்துவம் பெறுகின்றன ? ஒவ்வோர் உரிமையும் எல்லையற்றதாக இல்லை என்பதையும் அநேகமானவற்றுக்கு வரம்புகள் உள்ளன என்பதையும், அவற்றை எவ்வாறு புரிந்துகொள்ள வேண்டும், நாம் எமது உரிமைகளை எவ்வாறு துய்க்க வேண்டும், மற்றவரின் உரிமைக்கு எவ்வாறு மதிப்பளிக்க வேண்டும் என்பது பற்றிய ஓர் ஆழமான உரையாடல் அவசியமாகும். இவை சனநாயகவழி சமூகமொன்றில் எளிதாக வளர்ச்சிபெறவில்லை என்பதை நான் அறிவேன். பல நூற்றாண்டு கால உரையாடல்களின் வாயிலாக வளர்ச்சி கண்டுள்ளன. மக்களின் வாழ்க்கை முறையுடன் கோட்பாடுகள் உள்ளடக்கப்பட வேண்டும்.

**"பாடத்திட்டத்தில் மனித உரிமைகள் பற்றி தலைப்பை உள்ளடக்குவதால் மனித உரிமைகள் கலாசாரம் ஏற்பட்டுவிடாதென்பது மிகத் தெளிவானது. இன்று மிகவும் பிரபலமான மனித உரிமை டிப்ளோமா கற்கை நெறிகள் மேல் பட்டப்படிப்பு கற்கை நெறிகள் நடாத்தப்படுகின்றன. அவை மிகச் சிறந்தவை"**

மனித உரிமைகள் ஆணைக்குழு எமது கல்வி முறையை முக்கியமான ஒன்றாக உணர்கிறது. எமது நாட்டின் எழுத்தறிவு வீதம் தொண்ணூற்றைந்தைத் தாண்டியுள்ளது. எமது வருமானத்திற்கு நிகரான வருமானத்தைக் கொண்டுள்ள பிற நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்நாட்டுப் பெண்களின் எழுத்தறிவு வீதம் உயர்ந்த மட்டத்தில் உள்ளது. பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லாதிருப்பது அரிது. அரசாங்கத்தின் விரிவாக்கப்பட்ட கல்வி வலையாக்கத்தை நல்ல பிரஜைகளை உருவாக்கும் பொருட்டு பயன்படுத்த வேண்டும்.

பேராசிரியர்கள் கல்வித் துறையுடன் சம்பந்தப்பட்ட வல்லுநர்களைக் கொண்ட குழு ஒன்றை நாங்கள் அமைத்துள்ளோம். இது மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கீழ் இயங்கும் ஒரு குழு. ஒவ்வொரு கருப்பொருளிலும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. சமூகத்தில் ஓரங்கட்டப்பட்டவர்கள் தொடர்பாக ஆராய்வதும் அதனுடன் தொடர்புடைய கொள்கை சார்ந்த விடயங்களை ஆராய்வதும், அவற்றின் பணியாகும். கல்விக்காக அமைக்கப்பட்ட குழு ஒட்டுமொத்த கல்வி மற்றும் மனித உரிமைகள் தொடர்பில் ஆராயும் பணியை செய்து வருகிறது. அதாவது, பிரத்தியேகமான பாடநெறியொன்றை அறிமுகம் செய்து, மனித உரிமைகளை பாடசாலை பாட விடயத்தல் உள்வாங்குதல் மனித உரிமைகள் பற்றிய அறிவை மேம்படுத்துவதாக அமையப்போவதில்லை. நான் நீண்ட காலமாக மனித உரிமைகள் தொடர்பான கற்றலில் ஈடுபட்டு வந்த காரணத்தால் இது சாத்தியமாகாத ஒன்றென்பதை நான் அறிவேன்.

பாடத்திட்டத்தில் மனித உரிமைகள் பற்றிய தலைப்பை உள்ளடக்குவதால் மனித உரிமைகள் கலாசாரம் ஏற்பட்டுவிடாதென்பது மிகத் தெளிவானது. இன்று மிகவும் பிரபலமான மனித உரிமை டிப்ளோமா கற்கை நெறிகள் மேல் பட்டப்படிப்பு கற்கை நெறிகள் நடாத்தப்படுகின்றன. அவை மிகச் சிறந்தவை. ஆனால் இவற்றால் மனித உரிமைகள் கலாசாரம் உருவாகவில்லை. இலங்கையிலுள்ள "சான்றிதழ் கலாசாரத்தில்" சிக்குண்டே இது நடந்து வருகிறது. உண்மையாகவே, மனித உரிமைகள் பற்றிய உயிரோட்டமுள்ள கலாசாரத்தை, மக்களின் வாழ்க்கையோடு இணைக்கப்பட்ட மனித உரிமை கலாசாரத்தை எவ்வாறு உருவாக்கலாம் என்பதை ஆராய்ந்து வருகிறோம். பாடத்தில் உள்ளடக்குவதால் மாத்திரம் இதை சாதிக்க முடியாது. இலங்கை கல்வி முறை மாற வேண்டும். பல்வேறு கல்வி முறைகளை ஆராயும் போது இதைப் புரிந்துகொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை கல்வி முறை முழு அளவில் தொழில் சந்தையை மையப்படுத்தி இளைஞர் யுவதிகளை அதற்காக நெறிப்படுத்துகிறது. கல்வியையும் பொருளாதாரத்தையும் கட்டாயமாக பலப்படுத்த வேண்டும். அது முக்கியமானதாக இருந்தாலும் கல்வியின் நோக்கங்கள் அதை விட மகத்தானது. மனித உரிமை கண்ணோட்டத்தில் கல்வியை நோக்குவோமானால் கல்விக்கான உரிமை மனித உரிமைகள் பற்றிய உலகப் பிரகடனத்தில் மீண்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதில், சகலருக்கும் கல்வியைப் பெறும் உரிமை உள்ளதெனவும், கல்வியின் நோக்கம் பரிபூரண ஆளுமையுடைய சமூகத்திலும் உரிமைகளிலும் பற்றுள்ள பிரஜைகளை உருவாக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாங்கள் மனித உரிமைச் சட்டகத்தினுள் நின்று பணியாற்றுவதால் அதற்கு உடன்பட வேண்டும். ஒரு நாட்டுக்கு அங்குள்ள மக்களே சுற்றாடலுக்குத் தீங்கு செய்யும் நாமே அதை பாதுகாக்கவும் வேண்டும். சமூகத்தில் நல்ல பிரஜையாக எப்படி இருக்க வேண்டும் என்ற நாட்டம் சமூகத்திலிருந்தே ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

தன்னுடைய உரிமைகளை தான் எப்படி பாதுகாக்க வேண்டும், மற்றவரின் உரிமைகளை தான் எப்படி பாதுகாக்க வேண்டும். ஆகிய அனைத்தும் கல்விச் செயற்பாட்டின் மூலம் கிடைக்க வேண்டும். வலுவான ஜனநாயகத்தைக் கொண்ட நாடுகளில் கல்வி முறையானது ஜனநாயகத்தை பலப்படுத்துவதாகவே உள்ளது. கல்வியால் எங்களுடைய வாழ்க்கை முறை உருவாக்கப்படுகிறது. வகுப்பறையின் சூழமைவு எவ்வாறானது, விஸ்தீரணம் எவ்வளவு? கலந்துரையாடல் வழிமுறை உள்ளதா? இல்லாவிட்டால் ஆசிரியரின் ஆதிக்கம் மேலோங்கி உள்ளதா போன்ற விடயங்கள் அரசியல் கட்டமைப்பால் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அரசியல் கட்டமைப்பு அரசியலமைப்பினால் வடிவம் பெறுகிறது எனக் கூறுவோமானால் அது உண்மையல்ல. அரசியல் கட்டமைப்பு எமது மனதிலிருந்து வடிவமெடுக்கின்றது. நாம் சரியான மனநிலையை புத்தகங்களை வாசிப்பதன் மூலமும், முதியவர்களின் ஆலோசனை மூலம் கல்வி முறையினூடாகவும் ஏற்படுத்திக்கொள்கிறோம். எமது கல்வி முறை ஜனநாயக சார்பற்ற ஒன்றாக இருப்பதை எமது கலந்தாலோசிப்புகள் ஊடாக அறிய முடிந்துள்ளது. ஆனால், சிறந்த ஜனநாயக குடிமக்கள் உருவாக்கப்படுவார்கள் என நாங்கள் நம்புகிறோம். அது ஒரு போதும் நடக்காது. பாடசாலைக் கட்டமைப்பு

மனித உரிமைகளை கோலோச்சும் சமூகத்தில் வாய்ப்புகள் இருக்க வேண்டும். உரிமைகளை துய்க்கும் அதே சமயம் கடமைகளை நிறைவேற்ற வேண்டும். சமூகத்திற்குப் பயனுள்ளவர்களை உருவாக்குவதே எமக்குள்ள சவால். வாசிப்பு, மனிதம், ஆக்கத்திறன் கொண்ட சமூகத்தில் பற்றுள்ளவர்களை உருவாக்குதல் கல்வி முறையின் நோக்கமாக இருத்தல் வேண்டும். கல்வியின் ஊடாக சிறந்த மனிதர்கள் உருவாக்கப்படுவார்களானால் மனித உரிமைகள் இயல்பாகவே பாதுகாக்கப்படும். மனித உரிமைக் கலாசாரம் வளர்ச்சியடையும்.

கல்வி முறையில் எந்தளவு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்பதைப் பிற நாடுகளுக்கான விஜயங்களின்போது அவதானிக்க முடிந்துள்ளது.

ஆகவே, ஆக்கத்திறன் மிக்கதாக மாறுபட்ட கோணத்தில் சிந்தித்து நாட்டின் வளர்ச்சிக்கு பாரிய செல்வாக்கை செலுத்தக் கூடிய விதத்தில் எமது கல்வி முறையை தயாரிக்க எமக்கு வாய்ப்பு உள்ளது. இந்தளவு உளைச்சல் இல்லாத, சான்றிதழ்கள் மற்றும் பரீட்சைகளுக்கு வரையறுக்கப்படாத ஆக்கத்திறனான வழிமுறையொன்றை உருவாக்க வேண்டும். ரசனை இல்லாத நாம் எப்படிப்பட்ட ஒரு சமூகத்தை உருவாக்க முடியும். மனித உரிமைகளைப் போற்றும் ஒரு சமூகத்தை உருவாக்க இவையனைத்துமே அவசியம். ஆன்மீகம் உட்பட எவ்வகையில் நம்பிக்கை தரும் முறையாக இருப்பினும் அது மனித நேயமிக்கதாக இருக்க வேண்டும். ரசனை, இன்றியமையாதது ஏனென்றால், ரசனையற்ற ஒரு சமூகத்தில் மனித உரிமைகள் எவ்வகையிலும் கோலோச்ச முடியாது. வாழ்க்கையின் அழகை சுவைக்க முடியாத ஒருவருக்கு மற்றவர்களின் கவலையை உணர முடியாது. நாம் இவை பற்றியே பேச வேண்டும்.


நான் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் ஒருவர் என்ற காரணத்தினால் பல்லைக்கழக மாணவர்கள் நெருக்கடியான நிலையிலேயே உள்ளனர் என்பது எனக்குத் தெரியும். க.பொ.த உயர் தரம் என்பது இளைஞர் யுவதிகள் கடக்க வேண்டிய மிகவும் நெருக்கடியான ஒரு தடை என்றே கூற வேண்டும். இது மாற வேண்டும். தத்தமது பிறப்பாற்றலுக்கும் திறமைக்கும் அமைய சகலருக்கும் வாய்ப்பு இருக்க வேண்டும். அதற்கான சூழமைவு உருவாக்கப்பட வேண்டும். தான் என்ன விதமான தொழிலைத் தெரிவு செய்தாலும் அதை மதிக்க வேண்டும். தத்துவவாதிகள் இருக்க வேண்டும். சிறந்த பத்திரிகையாளர்கள் இருக்க வேண்டும். நல்ல கலைஞர்கள் இருக்க வேண்டும். இவ்வாறு பரந்துபட்ட நிலையைச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்.

**நாட்டின் பல பாகங்களுக்கு விஜயம் செய்யும் போது பிரஜைகள் உரிமைகள் பற்றி விழிப்புணர்வு இல்லாத நிலைமையை அறிய முடிகிறதே ?**

இதற்கான மனப்பாங்கு சிறு பராயத்திலிருந்தே உருவாக்கப்பட வேண்டும். இந்தியாவில் பிரஜைகளின் உரிமைகள் தொடர்பில் அதீத பற்று இருப்பதைக் காணலாம். அதற்கான அரசியல் மற்றும் கலாசார பின்புலம் உள்ளது எனக் கருதுகிறேன். அந்த நாட்டில் சுதந்திரம் தொடர்பாக செயலாற்றும்போது அதீத பற்றும் சார்பும் இருப்பதைக் காணலாம். இந்தியாவில் அரசியலமைப்பை புனிதமான ஒன்றெனக் கருதுகின்றனர். அது அந்த நாட்டின் மிகப் பெரிய ஆளுமையின் வாயிலாக உருவான ஓர் ஆவணமாக இருந்தாலும், அதற்கு அதீத அங்கீகாரம் உள்ளது. எமது கல்வி முறையில் உள்ளது போன்ற குறைபாடுகள் இந்திய கல்வி முறையில் காணப்பட்டாலும் அதுபற்றிய அடிப்படைக் கலந்துரையாடல்கள் நடைபெறுவதுண்டு. முறைசார் மற்றும் முறைசாராக் கல்வி என இரு முனைகளிலும் உரையாடல்கள் நடைபெறுகின்றன.

நான் புதுடில்லியில் இருந்தபோது இந்திய அரசியலமைப்பின் தாபகர் கலாநிதி அம்பேத்கரின் பிறந்த தின அனுஷ்டிப்பொன்று இடம்பெற்றது. எண்ணற்ற மக்கள் கூட்டம். அவர் மறைந்த பல ஆண்டுகள் உருண்டோடியிருந்தாலும் அவர் மீது மக்கள் அளவு கடந்த பக்தியுடன் உள்ளனர். மக்களின் வாழ்க்கையை நல்ல நிலைக்குக் கொண்டு வர அந்த யுக புருஷர் பாடுபட்டுள்ளார் என்ற உணர்விலிருந்து அந்த மக்கள் மாறவில்லை. அவர் ஆற்றிய பணியைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வு இருக்கின்றது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



groundviews.org

ஆனால் அது ஒழுங்கு முறைப்படுத்தப்பட்டதாக தெரியவில்லை. ஏனென்றால் இங்குள்ளதைப் போன்ற ஒரு வலுவான கல்வி முறை அங்கு இல்லை. உயர் வர்க்கத்தினருக்கு சிறந்த கல்வி உண்டு. அங்கு ஊடகங்களின் பணி பாராட்டத்தக்கது. அவை மக்களின் வாழ்க்கையுடன் பிணைக்கப்பட்டுள்ளன. பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு இது பற்றி கற்பிக்கின்றனர். ஜனநாயகத்தை பலப்படுத்த சிந்தனா சக்தி இல்லாத ஒரு சமுதாயம் எளிதில் எதேச்சதிகாரத்திற்குள் வசப்பட்டு விட வாய்ப்புள்ளது.

**அடிப்படை மனித உரிமை மீறப்பட்ட ஒரு தருணத்தில் அதற்கான நிவாரணம் பெற ஒரு மாத காலத்தினுள் விண்ணப்பிக்க வேண்டும். உயர் நீதிமன்றத்திலிருந்ததே நிவாரணம் பெற வேண்டும். (உறுப்புரை 126) அதற்காக கொழும்புக்கு வர வேண்டும். இந்த நிலைமை மாற்றப்பட வேண்டாமா? ஆணைக்குழு என்ற வகையில் உங்கள் யோசனை என்ன ?**

இலங்கையில் மனித உரிமை தொடர்பான மனுக்களை உயர் நீதிமன்றத்தில் மட்டுமே சமர்ப்பிக்க முடியும். மனித உரிமைகள் ஆணைக்குழு, ஒம்புட்ஸ்மன் போன்ற சுயாதீன நிறுவனங்கள் நீதிமன்ற செயற்பாட்டுக்கு மாற்றீடாக அமைக்கப்பட்டுள்ளன. இந்த நிலைமைக்கு உலகளவில் பல சம்பாஷணைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. நீதிமன்றச் செயற்பாடுகள் மிகவும் முக்கியமானவையாக அமைந்துள்ளபோதும், அதிலுள்ள பாரிய வரையறைகள் காரணமாக இந்த நிலை உருவாக்கப்பட்டுள்ளது. அதில் ஒன்று தான் நுட்பம். உண்மையாகவே மக்களுக்கு அதிலுள்ள நுட்பவியலும் நுட்பமான மொழியும் புரிவதில்லை. அதை மாற்றுவதற்கு சட்டத்தைப் போதிப்பவர்கள் என்ற வகையில் நாங்கள் இடையீடு செய்ய வேண்டும். ஆனால் அதற்கு நீண்ட காலம் அவசியம். அதேபோல் அதிக செலவு மற்றும் காலம் பற்றியும் கூற வேண்டும். நாட்டிலுள்ள அதி உயர் நீதிமன்றத்திற்கு வருகின்ற சாதாரண மக்கள் இதற்கு ஈடுகொடுக்க முடியாத நிலை உள்ளது. ஏனென்றால், நாட்டிலுள்ள முதல்தர சட்டத்தரணிகளுடன் தொடர்பு கொள்ள வேண்டும். அதற்கு அதிக பணம் தேவை. இவ்வாறான பிரச்சினைகள் காணப்படுகின்றன.

அதேபோல் அதிலுள்ள நடைமுறைகளை விளங்கிக்கொள்வதும் கடினமானது. இவை கல்வி முறையையொட்டி வந்தாலும் நடைமுறையில் சிரமங்கள் உள்ளன. இந்த செயல்முறையை இலகுபடுத்துவதற்காகவே நாங்கள் அரசியலமைப்பு மறுசீரமைப்புக்கு ஏற்பான எங்கள் யோசனைகளைத் தெரிவித்துள்ளோம். நாங்கள் எமது யோசனைகளை சமர்ப்பித்தபோது அடிப்படை மனித உரிமைகள் பற்றிய அத்தியாயமொன்று வரைவு நிலையில் இருந்தது. மஹிந்த சமரசிங்க மனித உரிமை சார்ந்த விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சராக இருந்தபோது இக்குழு அமைக்கப்பட்டது.

பரீட்சை முறை என்பவற்றில் அடிப்படை மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும். எமது பரீட்சை முறை சுதந்திர மனிதர்களை தொலைந்துவிட்டது. அது தன்னலம் மிக்கவர்களையும் செயற்கை மனப்பாங்கு உள்ளவர்களையுமே உருவாக்குகிறது. தொழில் சந்தையில் சிறப்பாக செயல்பட நல்ல பிரஜைகள் உருவாக்கப்பட வேண்டும். எமது அரச துறையின் உற்பத்தித் திறன் குறைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரீட்சை முறை என்பவற்றில் அடிப்படை மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும். எமது பரீட்சை முறை சுதந்திர மனிதர்களை தொலைத்துவிட்டது. அது தன்னலம் மிக்கவர்களையும் செயற்கை மனப்பாங்கு உள்ளவர்களையுமே உருவாக்குகிறது. தொழில் சந்தையில் சிறப்பாக செயல்பட நல்ல பிரஜைகள் உருவாக்கப்பட வேண்டும். எமது அரச துறையின் உற்பத்தித் திறன் குறைவு என்பது பற்றி நாம் பேசி வருகிறோம். அதற்குக் காரணம் என்ன ? மனப்பாங்கு பற்றிய பிரச்சினையே இங்கு உள்ளது. இது தங்கி வாழும் மனநிலையை உருவாக்கியுள்ளது. இங்கு இலவசக் கல்வி, தொழில்வாய்ப்பு போன்ற விடயங்களே முதன்மை பெறுகின்றன.**

என்பது பற்றி நாம் பேசி வருகிறோம். அதற்குக் காரணம் என்ன ? மனப்பாங்கு பற்றிய பிரச்சினையே இங்கு உள்ளது. இது தங்கி வாழும் மனநிலையை உருவாக்கியுள்ளது. இங்கு இலவசக் கல்வி, தொழில்வாய்ப்பு போன்ற விடயங்களே முதன்மை பெறுகின்றன.

அதில் நாங்கள் பல ஆண்டுகளாக பணியாற்றினோம். பல உப குழுக்களாகப் பிரிந்து பணியாற்றினோம். நான் பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் பற்றிய குழுவில் தவிசாளராக இருந்தேன். ஒட்டுமொத்த வரைவுக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு என்ற வகையில் ஆதரவு தெரிவித்து எங்களுடைய யோசனைகளைத் தெரிவித்தோம். அதில் மனித உரிமைகள் தொடர்பான நீதிமன்றச் செயற்பாடு தளர்த்தப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது ஆட்சித்துறைக்கும் நிருவாகத்திற்கும் எதிராக மட்டுமே நடவடிக்கை எடுக்க முடியும். அந்த நிலைமை மாற்றப்பட்டது. எங்களுக்கு ஒரு மாத காலம் தரப்பட்டது. அந்த ஒரு மாத காலத்தில் நாட்டில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்த புதிய பாராளுமன்றம் சட்டங்களையும் அரசியலமைப்பையும் நிறைவேற்றினாலும் கூட பிற்காலத்தில் முன்னெடுக்க வாய்ப்பு இருக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டினோம். நீதிபதிகளின் செயற்பாடுகளுக்கு எதிராக வழக்கு தொடர முடியுமென்ற புரட்சிகர கருத்துகளும் முன் வைக்கப்பட்டன. உதாரணமாக பிணை வழங்கும் போது அதிக தொகையை பிணையாகச் செலுத்த வேண்டுமெனத் தெரிவித்தால் அதை எதிர்த்து சாதாரணமான ஒரு தொகையை பிணையாகக் கோரி வழக்குத் தொடர முடியும். அதேபோல் உயர் நீதிமன்றத்திற்கு மட்டுமல்ல மாகாண நீதிமன்றங்களுக்கு மனித உரிமைகள் பற்றிய வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரம் வழங்க வேண்டுமென்ற புதிய கருத்தும் முன்வைக்கப்பட்டது. அதற்கு நாங்களும் இணக்கம் தெரிவித்தோம். மக்களின் வாழ்வு எளிமைப்படுத்தப்பட வேண்டும் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். மாகாண நீதிமன்றங்களில் அரசியலமைப்புச் சட்டம் தொடர்பான அறிவும், அனுபவமும் உடைய நீதிபதிகள் இல்லை என எண்ணக்கூடும். காலப்போக்கில் அந்த நிலைமைகளை மாற்றி விடலாம். மக்கள் வாழ்வுக்கு அது முக்கியமானது. நீதிமன்ற செயற்பாட்டின் ஊடாக நிவாரணம் பெறுவது போலவே மனித உரிமை ஆணைக்குழு ஊடாக நடைபெறும் செயற்பாடுகள் மிகவும் அவசியமானவை என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆணைக்குழுவின் தவிசாளர் என்ற வகையில் ஒரு விடயத்திற்காக மன்னிப்பு கேட்க வேண்டும். அதாவது இந்த நிறுவனத்தில் தொடக்கத்திலிருந்தே ஒரு பிச்சினை உள்ளது. எமக்குக் கிடைக்கின்ற முறைப்பாடுகளின் அளவு அதிகம் என்பதாலும், எம்மிடமுள்ள ஆளணி போதாது என்பதாலும் அவற்றை விசாரிப்பதற்கு நீண்ட காலம் தேவைப்படுகிறது. அதற்காக நான் மிகவும் வருந்துகிறேன். இது நடக்கக் கூடாத ஒன்று. எனவே, இதைப் பற்றி ஆக்கபூர்வமாக சிந்தித்து மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கை ஒன்றை அறிமுகம் செய்துள்ளோம். எமது தாய்ச் சட்டத்தில் விசாரணை ஒன்றுக்குச் செல்லுமுன் மத்தியஸ்தத்திற்குச் செல்லுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்தியஸ்தச் செயற்பாடு மிகவும் இலகுவானது. வெற்றிகரமானது. சமீபத்தில் எமது பணியாட்களுக்கு மத்தியஸ்தம் பற்றிய ஒரு பயிற்சியும் அளிக்கப்பட்டது. சில சந்தர்ப்பங்களில் ஒரு பிரச்சினைக்குத் தீர்வு வழங்க ஒரு தொலைபேசி அழைப்பை மட்டுமே ஏற்படுத்த வேண்டியிருக்கும். இவ்வாறு ஒவ்வொரு வழிமுறை தொடர்பாகவும் பயிற்சி அளிக்கப்படுகிறது. சென்ற ஆண்டிலும் இந்த ஆண்டிலும் எமது பணியாட்களுக்கு அதிகமான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. எமது மனித வளத்தை உயர்ந்த மட்டத்தில் வைத்திருக்கும் போது மக்களுக்கு நீதி வழங்கும் செயற்பாட்டை இலகுபடுத்தலாம்.

ஒவ்வொரு நிறுவனத்திலும் மேன்முறையீட்டு பொறிமுறையொன்று இருக்க வேண்டுமென நினைக்கின்றேன். குறிப்பாக, பல்கலைக்கழகத்தில் இவ்வாறான முறைகேடுகள் இடம்பெற்றால் அதை விசாரிப்பதற்கான சுயாதீன அலகு ஒன்று இருக்க வேண்டும். அதன்போது அந்த பிரச்சினைக்கு தீர்வு காணலாம். இதேபோல் அமைச்சுகளிலும், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிலும், மாகாண சபைகள் போன்ற ஒவ்வொரு நிறுவனத்திலும் அதை உருவாக் வேண்டும். இவ்வாறு குறைகளைத் தீர்ப்பதற்கான வழி இருக்குமானால் எமக்குள்ள சுமை குறைந்து அது மக்களுக்கு எளிமையாகவும் இருக்கும். அவற்றில் நிவாரணம் கிடைக்காத பட்சத்தில் இது போன்ற நிறுவனங்களின் கவனத்திற்கு கொண்டு வரலாம். நாங்கள் இதை ஒரு யோசனையாக முன்வைக்க எதிர்பார்க்கின்றோம். அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கும் போது எம்மால் ஈடுகொடுக்க முடியாத நிலை ஏற்படுவதுடன் மக்களுக்கு வினைத்திறனாக கருமமாற்றவும் முடியாது.

**ஆணைக்குழுவின் பதவியணியை அதிகரிக்க தாய்ச் சட்டத்தில் மாற்றங்கள் செய்ய வேண்டுமா ?**

நிருவாக ரீதியில் மிகவும் சிக்கலான ஒரு நிறுவனம் எமக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்துள்ளது. முன்னாள் தவிசாளர்களையும் ஆணையாளர் களையும் குற்றம் சாட்டுவது எனது நோக்கமல்ல. குடிமக்கள் என்ற வகையில் நாம் உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும். எமது நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு இந்த ஆண்டுடன் இருபது வருடங்கள் ஆகி இருந்தாலும், இதுவரை ஆட்சேர்ப்பு நடைமுறை ஒன்று இல்லை. இது சுயாதீனமான ஒரு நிறுவனமாக இருந்தாலும் திறைசேரியிலிருந்தே நிதி கிடைக்கின்றது. திறைசேரியிலிருந்து நிதி கிடைக்கும் நிறுவனங்களுக்கு ஆட்சேர்ப்பு போன்ற நடவடிக்கைகளுக்காக உரிய நடைமுறை ஒன்றுள்ளது. காலத்திற்கு காலம் பல்வேறு சிபாரிசுகள் செய்யப்பட்டாலும், ஆட்சேர்ப்பு செய்ய முடியாது. இந்த நிறுவனத்தை பொறுப்பேற்ற போது பல எதிர்பார்ப்புகள் இருந்தன. அதிக தூரம் பயணிக்கலாம். என நினைத்தேன். வேலை செய்ய முற்படும்போது அதிகமாக நிருவாக சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

ஆட்சேர்ப்பு நடைமுறை ஒன்றை அங்கீகரித்துக்கொள்வதற்கு ஒரு வருடத்திற்கும் மேலாகப் போராடி வருகிறோம். அந்த பணி மெதுவாக நடைபெறுகிறது. எதிர்கால ஆணைக்குழுவுக்கு இந்தப் பிரச்சினைகளை விட்டுச்செல்ல நாம் தயாரில்லை. முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிறுவனம் குத்தகைக்கு பெறப்பட்ட கட்டடத்தில் தான் இயங்குகிறது. நாங்கள் 2015 ஒக்டோபர் 30 கடமைகளை ஆரம்பித்தோம். அன்று நடைபெற்ற பதவி நிலை கூட்டத்தின் போது அடுத்த நாள் அதாவது 2015 ஒக்டோபர் 31 ஆம் திகதி குத்தகை காலம் முடிவுக்கு வருவதை அறிந்துகொண்டோம். இவ்வாறான சிக்கல்களும் உள்ளன. இதுவரை அதற்குத் தீர்வு இல்லை. மனித உரிமைகள் தொடர்பாக செயலாற்றுவதே எமது கடமை. ஆனால் நிருவாக ரீதியாக பணிகள் நடைமுறையில் சீராக இடம்பெறாததால் பிரச்சினைகளை சந்திக்க நேர்ந்துள்ளது. எமக்குக் கிடைக்கும் நிதி தொடர்பில் நாம் பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூற வேண்டும்.

அரசியலமைப்புப் பேரவைக்கு எமது நன்றியைத் தெரிவிக்க வேண்டும். எங்களுடைய பணிகளை முன்னெடுப்பதில் அதன் தவிசாளர் எமக்கு பாரிய அளவில் ஒத்துழைப்பு வழங்கி வருகிறார்.

நிறுவான ரீதியாக அல்ல. எமது பணிகள் சுயாதீனமாகவே இடம்பெறுகின்றன. எமக்குத் தேவையான வளங்களைப் பெற்றுக்கொள்வதில் ஒத்துழைப்பு வழங்கி வருகிறார். அனைத்து சுயாதீன ஆணைக்குழுக்களையும் ஒரே கூரையின் கீழ் கொண்டு வர வேண்டுமென்ற கோரிக்கை நாங்கள் அரசியலமைப்புப் பேரவையிடம் தெரிவித்துள்ளோம். அது மக்களுக்கு இலகுவானதாக அமையும். மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு வருபவர்களை பொலிஸ் ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்த வேண்டும. அதில் சிக்கல் ஏற்படாது. நேரத்தை வீணடிக்காது ஒரே இடத்தில் சகல தேவைகளையும் பூர்த்தி செய்துகொள்ள முடியும். இன்னும் சில ஆண்டுகளில் பத்தரமுல்ல பிரதேசத்திலுள்ள கட்டடமொன்றில் சகல ஆணைக்குழுக்களையும் நிறுவும் வாய்ப்பு கிடைக்கவிருக்கிறது. எமது பிராந்திய நிறுவனங்கள் பலவும் குத்தகைக்கு பெறப்பட்டுள்ள கட்டடங்களிலேயே இயக்கி வருகின்றன. இந்த நிறுவனங்களை நோக்கி வருபவர்களுக்கு இது எமது நிறுவனம் என்ற அபிமானத்தை ஏற்படுத்த வேண்டும்.

வேலை செய்யும் பாணியில் மாற்றம் தேவை. எமது நோக்கங்களில் பாரிய நம்பிக்கை வைக்க வேண்டும். தொலை நோக்கு பற்றிய புரிதல் இருக்க வேண்டும். இவற்றையாவது ஈடேற்ற முடிந்தால் அதுவே எமது வெற்றி. ஏனென்றால் மனித உரிமைகள் தொடர்பான சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியாது. ஒவ்வொரு பிரதேசத்திலும் பிரச்சினைகள் இருக்கின்றன. வடக்கு, கிழக்கு போன்ற பிரதேசங்கள் எதிர்கொண்ட பாரிய பிரச்சினைகள் உள்ளன. அதேபோல் வறுமையால் மிகவும் துவண்டு போயுள்ள மலையகத்திலும் மொனராகலை போன்ற பிரதேசத்திலும் பிரச்சினைகள் உள்ளன. இடம்பெயர்ந்துள்ளவர்கள் வசித்து வரும் பிரதேசங்களில் பிரச்சினைகள் உள்ளன. இவ்வாறான சகல பிரச்சினைகளையும் கிடைத்துள்ள மூன்று வருட காலத்தில் தீர்க்க முடியாது. சேவை செய்யவும், நாட்டின் மனித உரிமை பற்றிய நிலைமைகளை இதய சுத்தியுடன் அவதானித்து ஆக்கத்திறன் கொண்டதாக அவற்றுக்கு தீர்வு வழங்கக்கூடிய அத்திவாரத்தை இட முடியுமானால் அதையிட்டு மகிழ்ச்சியடையலாம்.

**மனித உரிமை ஆணைக்குழுவின் 10 பிராந்திய அலுவலகங்கள் மட்டுமே உள்ளன. அது போதுமானதா? ஒவ்வொரு மாவட்டத்திலும் அலுவலகத்தை ஆரம்பிக்க வேலைத்திட்டமேதும் உண்டா ?**

மாவட்டத்திற்கு தலா ஓர் அலுவலகத்தை அமைக்க முடியுமானால் சிறப்பாக அமையும். மேலும் ஐந்து அலுவலகங்களை அமைப்பதற்கு தற்போது யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இல்லாவிட்டாலும்கூட 17 அலுவலகங்கள் இருப்பது நல்லதுதான். ஆனால் அவற்றை நிறுவுவதிலும் நிருவாக ரீதியான சிக்கல்கள் உள்ளன. புதிய அலுவலகங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்ய ஆட்சேர்ப்பு நடைமுறை ஒன்றில்லை. அதை நிறைவேற்ற முடியாது கட்டங்கள் இல்லை. இவ்வாறு பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. என்னதான பிரச்சினைகள் இருந்தாலும் இதை எப்படியாவது முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என ஆக்கபூர்வமாக சிந்தித்து செயல்பட வேண்டும்.

எதிர்கால சந்ததிக்கு சிறந்த பயிற்சி அளிக்க வேண்டும். அதை கவனத்தில் கொண்டு பல்கலைக்கழக மாணவர்களை நேர்முகப் பரீட்சை ஊடாகத் தெரிவு செய்து அவர்களுக்கு காலாண்டு பயிற்சி அளிக்கப்படுகிறது. இது எமது நிறுவனத்திற்கான ஒரு முதலீடு சிவில் சமூகத்தின் ஒத்துழைப்பு இன்றி சுயாதீன ஆணைக்குழுக்களின் பணிகளை வெற்றிகரமாகத் தொடர முடியாது. நாங்கள் இவற்றின் பொறுப்பாளர்கள் மட்டுமே. மக்களின் செயற்பாடு ஊடாகவே இந்த நிறுவனங்களுக்கு உயிர்கொடுக்க முடியும். சிவில் அமைப்புகள் அணிசேர வேண்டும். எமது பிராந்திய அலுவலகங்களில் மக்கள் குழுக்கள் இருப்பதற்கான காரணமும் அது தான். எவருக்கும் அங்கு செயலாற்றும் சூழமைவு இருக்க வேண்டும். மக்கள் பங்கேற்காத ஜனநாயக செயற்பாட்டை முன்னெடுப்பது பற்றி சிந்திக்க முடியாது. அது சுயாதீன ஆணைக்குழுக்களிலும் தாக்கம் செலுத்தும் என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். ●


உரையாடல்: **லஹிரு கிதலகம**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




www.dailymirror.lk

# அரசாங்கத்தை சரியான பாதையில் இட்டுச் செல்ல மக்கள் அணிதிரள வேண்டும்.



**வைத்தியர் வின்யா ஆரியரத்ன**
பொதுச் செயலாளர் –
சர்வோதயம்

**நல்லாட்சியின் கடந்த காலம்**

மக்களின் எதிர்பார்ப்புடன் ஒப்பிடுகையில் நல்லாட்சியின் முன்னேற்றங்கள் மகிழ்ச்சியளிக்கவில்லை. எமது நாட்டை ஒரு சனநாயக நாடாக மாற்றுவதற்கு மேற்கொள்ள வேண்டிய அடிப்படை விடயங்கள் தொடர்பாக எமக்கு ஓர் எதிர்பார்ப்பு இருந்தது. இந்த எதிர்பார்ப்புகளில் ஒரு சில எளிதில் நிறைவேற்ற முடியாத, அதேநேரம் குறிப்பிட்ட காலம் தேவைப்படுவனவாக இருக்கின்றன, ஏனென்றால், தொடர்ச்சியான வீழ்ச்சியை சரி செய்வதற்கு காலம் தேவை. இருப்பினும், சிவில் சமூகத்தால் நிராகரிக்கப்பட்ட விடயங்களை இந்த அரசாங்கம் நிறைவேற்றி வருவதாகத் தெரிகிறது. இன்றும் பொதுச் சொத்துக்கள் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன. அது நாம் எதிர்பார்க்காத ஒன்று. அதேபோல் கடுமையான பொருளாதார நெருக்கடிகள் உள்ள நிலையில் அரசாங்கம் முன்மாதிரியாக செயற்பட வேண்டியிருப்பினும் அதுவும் நடக்கவில்லை. நல்லாட்சியின் ஆரம்பத்தில் ஜனாதிபதி தாமாகவே முன்வந்து தன்னுடைய செலவுகளைக் குறைத்து நடைமுறையில் முன்னுதாரணம் தந்தார். இருப்பினும் அரசாங்கத்திலுள்ள இதர தரப்புகளின் நடவடிக்கைகள் மகிழ்ச்சியளிக்கவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நாட்டின் பொருளாதாரம் நெருக்கடியைச் சந்தித்துள்ள நிலையில் கட்டடங்களை குத்தகைக்குப் பெறுவது முதல் வாகனங்களைக் கொள்வனவு செய்தல் வரையான செலவுகள் விண்ணைத் தொடுகின்றன. அதனால், மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை தகர்ந்துபோயுள்ளது. பலரும் கூறுவதுபோல் தவறு இழைத்தவர்களுக்கான சட்ட நடவடிக்கைகள் மந்த கதியில் உள்ளன. ஒரு சில சக்திகள் அந்த நடவடிக்கைகளின் நகர்வைத் தடுக்கின்றன. இவ்வாறான சவால்களைக் கண்டுபிடிக்க முடிந்தாலும் நாம் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் நிலைப்பாட்டிலேயே இருக்கின்றோம். நீதிமன்றங்கள் சுயாதீனமாக இயங்குவதையும், அரசாங்கம் பொது மக்களின் கருத்துகளுக்கு செவிசாய்ப்பதையும் காண முடிகின்றது. எவ்வாறாயினும், ஒட்டு மொத்தமாக பார்க்கும்போது அரசாங்கம் செய்யக்கூடியவை இதைவிட அதிகம் என்பதே எமது கருத்து. நெருக்கடியான ஒரு நிலைமையில் அரசாங்கம் முன்மாதிரியாக செயற்படாமை பாரதூரமான தார்மீகப் பிரச்சினையாக உள்ளது.

### சிறந்த அரசியல் கலாசாரத்தைப் பின்பற்ற இயலாமை

இந்த ஆட்சி மாற்றம் சாதாரணமான ஒன்றல்ல. அது புதிய அரசியல் கலாசாரத்தையும் புதிய மனப்பாங்குகளையும் சுமந்து வந்துள்ளது. இவ்வாறான ஒரு நிகழ்ச்சி நிரலுக்கமைய தெரிவுசெய்யப்பட்டவர்கள் ஏற்கெனவே அறியப்பட்ட தவறுகளை மீண்டும் செய்தல் அரசாங்கம் எதிர்கொள்ளும் அடுத்த சிக்கலாக உள்ளது. இந்த அரசாங்கத்தை ஆட்சிப்பீடத்தில் அமர்த்துவதில் பெருவாரியான சிவில் அமைப்புகளின் ஒற்றுமை காணப்பட்டதோடு மக்களின் பிரக்ஞையும் தட்டியெழுப்பப்பட்டது. இந்த எழுச்சியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்திய சில விடயங்களை அரசாங்கம் அப்பட்டமாக மீறிச் செயல்படுகிறது.

### ஆக்கபூர்வமான அரசியல் மறுசீரமைப்பு

அரசியலமைப்புக்கான 19வது திருத்தம், தகவலுக்கான உரிமைச் சட்டம், அரசியலமைப்பை உருவாக்கும் பணி, நல்லிணக்கச் செயற்பாடுகள் மற்றும் வடக்கு கிழக்கில் காணிகள் மீளளிப்பு என்பன அரசாங்கத்தின் சாதகமான நடவடிக்கைகளாகும். இவ்வாறான முன்னெடுப்புகள் ஊடாக அரசாங்கம் சீரான பாதையில் கால் வைத்தது. குறிப்பாக வடக்கில் காணிகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு கொடுக்கப்பட்ட தீர்வுகள் சாதகமானவையாகத் தெரிகின்றன. இவை பாதுகாப்பிற்கு குந்தகமாக அமையாவிட்டாலும் சில குழுக்கள் வடக்கில் காணிகள் கையளித்தலை பிரச்சினைக்குரிய ஒன்றாகவே எடுத்துக்காட்ட முயல்கின்றன. அரசாங்கம் இவற்றை கவனத்தில்கொள்ளாமல் வந்த பாதையில் பயணிக்குமானானால் அது நம்பிக்கைக்குப் பாத்திரமாக அமையும். தமிழ் மக்கள் அரசாங்கத்தில் கொண்டுள்ள நம்பிக்கை முற்றிலும் அற்றுப் போய்விட்டது என்று எண்ண முடியாது.

இன்று உள்ளூராட்சித் தேர்தல் முக்கியமான ஒன்றாக பேசப்படுகிறது. புதிய தேர்தல் முறையின் கீழ் உள்ளூராட்சித் தேர்தலை நடாத்த முடியுமாயின், பல வருடங்களின் பின்னர் ஒரே திகதியில் நாடு பூராகவும் உள்ளூராட்சித் தேர்தலை நடாத்த வாய்ப்பு உண்டு. இது சாத்தியமானால் வடக்கு மற்றும் கிழக்கிலும் கூட அரசின் மீதான மக்களின் நம்பிக்கை மேலும் அதிகரிக்கும். அரசில் கொண்டுள்ள நம்பிக்கை தகர்ந்து போனால் மட்டுமே அவர்கள் பிரிவினைவாதம் போன்றவற்றைப் பற்றி சிந்திப்பார்கள்.

### வெளிப்படை இல்லாத அரசாங்கம்

அரசாங்கவாக்கத்தில் ஈடுபட்டுள்ள கட்சிகள் இரண்டின் அடிப்படையான அரசியல் தொலை நோக்கு மாறுபட்டது. இவ்விரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சிகளின் இணைந்துள்ளதன் பிரதான நோக்கம் இரு சாராரின் இணக்கத்துடன் சில விடயங்களை நிறைவேற்றிக்கொள்வதாகவே உள்ளது. மேல் மட்டத்தில் நோக்கும்போது இவர்களுடைய அரசியல் பார்வையில் பாரிய வேறுபாடு இருப்பதாகத் தெரிந்தாலும், பொருளாதார மாதிரியில் மாற்றம் இல்லை. இருப்பினும், அதிகாரப் பகிர்வு, புதிய அரசியலமைப்பு போன்ற விடயங்களில் இவர்களிடையே முரண்நிலை காணப்படுவது இன்றைய நிலையில் முக்கிய பிரச்சினையாக உள்ளது. தலைவர்களால் அல்லது இது பேச்சுவார்த்தை மூலம் இரு சாராரையும் ஓர் இணக்கத்திற்குக் கொண்டு வருவதற்கான திட்டங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. இதனாலேயே அரசாங்கத்தில் வெளிப்படைத் தன்மை அற்றுப்போயுள்ளது.

அவரவர்தம் அமைச்சின் பணிகளையும் அரசியல் பணிகளையும் மட்டுமே செய்கின்றனர். நாட்டின் முன்னேற்றத்திற்கான நகர்வுகளோ அல்லது பொருளாதார வாய்ப்புகள், இளைஞர் யுவதிகளுக்கான தொழில் வாய்ப்புகள் பற்றியோ சிந்திப்பதில்லை.

### பொருளாதாரத்தை முன்னிலைப்படுத்திய கிராமியப் பிரச்சினைகளில் அக்கறை

பல வருடங்களின் பின்னர் சிவில் அமைப்புகளின் வகிபங்கிற்கு அரசாங்கத்தில் ஓர் அங்கீகாரம் கிடைத்துள்ளது. சிவில் சமூகத்தில் எல்லாத் துறைகள் ஊடாகவும் வேலை செய்யும் வாய்ப்பு கிடைத்துள்ளது. அதேபோல் தேசியப் பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்யும் வாய்ப்புக்கும் அங்கீகாரம் கிடைத்துள்ளது. நுண் நீதிச் சேவைகளை இதற்கு முன்னர் அரசு சார்பற்ற அமைப்புகளே வழங்கி வந்தன. 15 வருடங்களாக வரைவு மட்டத்திலேயே காணப்பட்ட நுண் நிதிச் சட்டம் இந்த அரசாங்கம் ஆட்சிக்கட்டிலில் அமர்ந்தவுடன் நிறைவேற்றப்பட்டது. அச்சட்டத்தில் குறைபாடுகள் உள்ளபோதும், அரசு சார்பற்ற நிறுவனங்களுக்கு கிராமியப் பொருளாதாரத்திற்காக உழைக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. இது தவிர, சக்தி வலு, சுகாதாரம், கமத்தொழில், சுற்றாடல் போன்ற சகல துறைகளுக்கும் சிவில் சமூகத்தின் கருத்துக்களை உள்வாங்கி கொள்கை வகுப்பில் அவர்களை இணைத்துக்கொள்ளும் பணிகள் நடைபெற்றுள்ளன. அரசு சார்பற்ற நிறுவனங்கள் அரச நிறுவனங்களுடன் இணைந்து கூட்டாக (அரசு – தனியார் பங்குடைமை) வேலை செய்யும் வாய்ப்பு கிடைத்துள்ளது. இதனால் மக்கள் அதிக நன்மைகளைப் பெறுகின்றனர். இது மிகவும் சாதகமான ஒரு நிலையாகும்.

இருப்பினும், சட்ட ரீதியான பலம் இதுவரை கிடைக்கவில்லை. அரசு சார்பற்ற நிறுவனங்களின் செயலகம் தொடர்பான சட்டங்களில் திருத்தம் செய்தல் அல்லது அந்த நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து புதியனவற்றை முன்னெடுக்கும் வேலைத்திட்டம் மந்தமாக உள்ளபோதும் இரண்டு தரப்பும் இணைந்து வேலை செய்வதற்கு முன்னர் இல்லாத வாய்ப்பு இன்று உள்ளது.

அபிவிருத்தி போன்ற விடயங்களில் நிலைபேறான அபிவிருத்தி வடிவத்தை ஏற்றுக்கொண்டுள்ளபோதும் அது நடைமுறையில் கைக்கொள்ளப்படுவதில்லை. மாறாக ஏற்கெனவே இருந்த ஒப்பந்த முறையிலான பௌதீக அபிவிருத்தி மட்டுமே நடைபெறுகிறது. ஆன்மீகம் பண்பாடு மற்றும் கல்வியில் மேம்பாடு ஏற்படவில்லை.

### சிவில் சமூகத்தை அணைக்கத் தவறுதல்

சிவில் சமூகங்களின் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்ட நல்லிணக்கப் பொறிமுறைக்கான ஆலோசனை வழங்கும் விசேட செயலணி அறிக்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டபோதும் அது அதிக கவனம் பெறவில்லை. அதுபற்றிய அரசாங்கத்தின் புரிதல் மிகமிகக் குறைவாக உள்ளது. ஒரு சிலர் அறிக்கையை சரியாக ஆராய்ந்து பார்க்காது எதிர்வினை ஆற்றியுள்ளனர். இது மிகவும் கவலைக்குரியது. ஜனாதிபதியும் பிரதம மந்திரியும் இந்த அறிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. இவ்வாறான ஒரு பொறிமுறையிலிருந்து வெளிப்படும் சகல கருத்துகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது எமது கருத்தல்ல. அதனை ஆராய்வதற்கு வாய்ப்பு இருந்தது. ஏனென்றால், அந்தக் கருத்துக்கள் ஊடாக வெளிப்படுத்தப்பட்டுள்ள விடயங்கள் பற்றிய புரிதலை ஏற்படுத்திக்கொள்ள முடியும். ஆனால், ஒட்டுமொத்த செயற்பாடும் ஏளனமாக பார்க்கப்பட்டது.

### புதிய அரசியலமைப்பில் நொறுங்கிப்போன எதிர்ப்பார்ப்புகள்.

சிவில் அமைப்புகள் இந்த அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்தவுடன் புதிய அரசியலமைப்பு கொண்டு வரப்படும் என நம்பின. அதற்கான அதிகாரபூர்வ பொறிமுறை ஏற்படுத்தப்பட்டு பொதுமக்களின் கருத்துக்களை அறியும் செயற்பாடும் ஆரம்பிக்கப்பட்டது. நிறைவேற்றதிகார முறை, தேர்தல் முறைமை போன்ற தனித்தனி விடயங்களைக் கவனத்தில் கொண்டு, அவற்றுக்காகவே புதிய அரசியலமைப்பு கொண்டு உருவாக்கப்பட வேண்டும் என்பது சர்வோதயத்தின் நிலைப்பாடு அல்ல. மாறாக சகல மக்களுக்கும் "எமக்கே உரிய" அரசியலமைப்பொன்றை உருவாக்குவதற்கான குறிக்கோளை அமைத்துக்கொள்வதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளதாகவே நாம் கருதினோம். குறிக்கோள் இன்றி பயணிக்க முடியாது. எமக்கு புதிய தேசம் வேண்டும். போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் மனங்களைத் தேற்ற வேண்டும். புதிய அரசியலமைப்பு உருவாக்கம் மகிழ்ச்சி தரும் ஒன்றாகும். அதனூடாக புதிய குறிக்கோளையும் புதிய ஆரம்பத்தையும் வழங்க முடியும்.

புதிய அரசியலமைப்பிற்கான யோசனையை ஆரம்பத்தில் எவரும் எதிர்க்கவில்லை. பாராளுமன்றத்தில் யோசனை நிறைவேறியது. அந்த யோசனையில் "புதிய அரசியலமைப்பிற்கான மக்களின் எதிர்பார்ப்புகள்" எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஒன்றரை வருடங்களின் பின்னர் அவ்வாறான எந்த வாக்குறுதியும் அளிக்கவில்லை எனத் தெரிவிப்பது கவலை தரும் விடயமாகும். மக்களின் கருத்தறிவித்தல் மற்றும் பாராளுமன்றத்தில் வழிப்படுத்தல் குழு அமைத்தல் போன்ற அடிப்படையான விடயங்கள் நிறைவேறியுள்ளபோதிலும் புதிய அரசியலமைப்பு பற்றிய இணக்கப்பாட்டுக்கு வர முடியாமை நாட்டின் துரதிர்ஷ்டம் என்றே கூற வேண்டும். ஆனால், இந்த நடவடிக்கையை கைவிட முடியாது ! சிவில் சமூகம் என்ற வகையில் நாம் வெளிப்படுவோம். குறைந்த பட்சம் வழிப்படுத்தல் குழுக்களின் சிபாரிசுகளையேனும் ஆராய்ந்து எமது நாட்டுக்குத் தேவையான அரசியலமைப்பின் அடிப்படைப் பண்புகள், கொள்கைகள் எவையெனக் கண்டறிதல் நாட்டின் எதிர்காலத்திற்கு இன்றியமையாததாகும்.

அரசாங்கத்திடம் புதிய அரசியலமைப்பு பற்றிய உறுதியான



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ghi.wisc.edu



**“ 15 வருடங்களாக வரைவு மட்டத்திலேயே காணப்பட்ட நுண் நிதிச் சட்டம் இந்த அரசாங்கம் ஆட்சிக்கட்டிலில் அமர்ந்தவுடன் நிறைவேற்றப்பட்டது. அச்சட்டத்தில் குறைபாடுகள் உள்ளபோதும், அரசு சார்பற்ற நிறுவனங்களுக்கு கிராமியப் பொருளாதாரத்திற்காக உழைக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. இது தவிர, சக்தி வலு, சுகாதாரம், கமத்தொழில், சுற்றாடல் போன்ற சகல துறைகளுக்கும் சிவில் சமூகத்தின் கருத்துக்களை உள்வாங்கி கொள்கை வகுப்பில் அவர்களை இணைத்துக்கொள்ளும் பணிகள் நடைபெற்றுள்ளன. அரசு சார்பற்ற நிறுவனங்களுக்கு அரச நிறுவனங்களுடன் இணைந்து கூட்டாக (அரசு – தனியார் பங்குடைமை) வேலை செய்யும் வாய்ப்பு கிடைத்துள்ளது. இதனால் மக்கள் அதிக நன்மைகளைப் பெறுகின்றனர். இது மிகவும் சாதகமான ஒரு நிலையாகும்.**

நிலைப்பாடு இல்லையெனத் தெரிகிறது. இது ஓர் அரசியல் சாணக்கியமாகவும் இருக்கக் கூடும். ஏனென்றால், திட்டமிட்டு ஒரு நிலைப்பாட்டுக்கு வராது பாசாங்கு செய்வது நன்மை தரும். அதேபோல் இவர்களிடம் அரசியல் இலட்சியம் இன்மை மக்களின் துரதிர்ஷ்டம் என்றே கூற வேண்டும்.

**நேர்த்தியான சமூக முறைமையைக் கட்டியெழுப்புதல்**

இந்த சமூக முறைமை உருக்குலைந்துள்ளது. சமூகத்தில் ஆழ ஊடுருவி உள்ளது. இதனால் அரசாங்கம் மாறியவுடன் பாரிய சமூக மாற்றம் ஏற்படும் என எதிர்பார்க்க முடியாது. சிவில் சமூகங்கள் சமூக மாற்றத்தை எவ்வாறு ஏற்படுத்தலாம் என்பதையே சிந்திக்கின்றன. சில விடயங்களின் ஊடாக அதைச் சாதிக்கலாம் முதலாவதாக மக்களின் பிரக்ஞையில் மாற்றம் கொண்டு வர வேண்டும். அதை குறுகிய காலத்தில் எதிர்பார்க்க முடியாது. இரண்டாவது விடயம் பொருளாதாரம்.

பொருளாதாரம் நேரடியாக மக்கள் உணரக்கூடிய ஒன்றாக இருக்க வேண்டியதுடன், உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகளும் மாற்று வழிகளும் இருக்க வேண்டும். பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப உயிரோட்டமான பங்களிப்பு இருக்க வேண்டும். அடுத்தது அதிகாரம். பிரக்ஞையும் பொருளாதாரமும் அதிகாரமும் ஒரு புள்ளியில் குவிய வேண்டும். சாதிப்பதற்கு அதிகாரம் மட்டும் போதாது. சிறந்த சமூகமொன்றைக் கட்டியெழுப்ப நீண்ட காலம் அவசியமாவது போல் சிவில் சமூகங்களிடையே கூட்டுறவு கட்டியெழுப்பப்பட வேண்டும். அரசாங்கம், தனியார் துறை சிவில் சமூக மற்றும் பல்கலைக்கழகங்கள் போன்ற நிறுவனங்களிடையே இந்த கூட்டுறவு கட்டியெழுப்பப்பட வேண்டும். ஏனென்றால் இது ஒரு பாரதூரமான பிரச்சினையாகவும் தனித்து நின்று தீர்வு காண முடியாத பிரச்சினையாகவும் உள்ளது. ஒரு சில தவறான விடயங்கள் தங்கு தடையின்றி சமூகமயப்படுத்தப்பட்டுள்ளன. இலஞ்சம் வழங்குவதை மக்கள் தவறான ஒரு செயலெனச் சிந்திப்பதில்லை. தரகுப் பணம் சம்பாதிப்பதிலும் இதே நிலைதான். இவற்றிலிருந்து சமூகத்தைக் காப்பாற்ற வேண்டும்.

ஆன்மீக ரீதியான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இதற்காக உள்ளூராட்சி நிறுவனங்களை மேற்பார்வை செய்யும் நிழல் பிரதேச சபை உருவாக்கப்பட வேண்டுமென கருதுகின்றோம். தேசோதயம் அதை நிறைவேற்றி வருகிறது. துடிப்புள்ள பிரசைகளை உருவாக்கும் வகையில் சமூக மாற்றத்தை ஏற்படுத்த முடியுமாயின் காத்திரமாக பணியாற்ற முடியும்.

**நல்லாட்சி அரசாங்கத்தின் எதிர்காலம்**

சமகால சமூக நிலைமைகளைப் பார்க்கும் போது எதிர்காலத்தில் பாரிய மாற்றம் ஏற்படுமென்பதில் நம்பிக்கை இல்லை. இந்த நிலைமையை அப்படியே நகர்த்திச் செல்வது அவர்களின் நோக்கமாக உள்ளது. அரசாங்கத்தின் குறிக்கோள் அற்ற பயணம் நாட்டை நெருக்கடிக்குள் தள்ளி விடக்கூடும். அதனால், எஞ்சியுள்ள மூன்று ஆண்டுகளில் அரசாங்கத்தை சரியான பாதையில் இட்டுச் செல்ல மக்கள் கட்டாயமாக அணி சேர வேண்டும். அது இல்லையென்றால் அரசாங்கத்திற்கு அதற்கான தேவை இல்லை என்றே கூற வேண்டும். அரசாங்கத்தின் பயணிக்கும் பாதை மாற வேண்டும். ●

நேர்காணல்
**லஹிரு கிதலகம.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"மக்கள் விரும்பும் ஊடக வெளியில் அறியப்படுவதுபோல் தற்போதைய அரசாங்கத்தை "நல்லாட்சி அரசாங்கம்" என அழைப்பதை நாம் விரும்பவில்லை. காரணம் நல்லாட்சியின் செயற்பாடுகள் அந்தளவுக்கு காத்திரமாக இல்லை. ஆகவே மைத்திரி – ரணில் அரசாங்கம்" என்பதே அதற்கு மிகவும் பொருந்தக்கூடிய பெயர்.**



www.dailymirror.lk

*2015 ஜனவரி 09 ம் திகதி திரு ரணில் விக்கிரமசிங்க பிரதம மந்திரியாக சத்தியப்பிரமாணம் செய்கின்றார்.*

# மைத்திரி – ரணில் அரசாங்கத்தின் கடந்துபோன ஈராண்டுகள் பற்றிய ஒரு பகுப்பாய்வு



சந்துன் பிரியங்கர விதானகே

2015 ஜனவரி 08 திகதி ஏற்பட்ட ஆட்சி மாற்றத்திற்குக் காரணமான விடயங்களை தொடர்ந்தும் கூறுபோட்டு ஆராய்வதற்கு எதிர்காலத்தில் இக்கட்டுரை பயன்படாது. இன்று ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ள ரணில் மைத்திரி அரசாங்கத்தின் கடந்துபோன இரண்டு வருட காலம் பற்றிய சுருக்கமானதோர் ஆய்வைச் செய்வதே இதன் முக்கிய நோக்கம்.


மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் கீழ் இலங்கை இனவாதம், குடும்பவாதம், கோத்திரவாதம் மற்றும் மதவாதத்தால் நசுக்கப்படும் விளிம்பு நிலையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. எதிர்நிலைக் கருத்துக்கள் ஆயுதம் கொண்டு அடக்கப்பட்டன. பாதுகாப்புச் செயலரான ஜனாதிபதியின் சகோதரர் கோத்தாபய ராஜபக்ஷ முறை தவறியும் ஒழுக்கத்திற்கு மாறாகவும் தாபன விதிக்கோவைக்கு எதிரான வகையிலும் நேரடியாகவே அரசியலில் ஈடுபட்டார். ஜனநாயக ரீதியாக விமர்சனங்களைத் தொடுத்த சில ஊடகவியலாளர்கள் இவரது செயல்கள் காரணமாக இன்றும் காணாமல்போன நிலையிலேயே உள்ளனர். இன்றும் சிலர் இமை தெரியாதோரால் செய்யப்பட்ட கொலைப்பட்டியலில் சேர்ந்துவிட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**“தேர்தல் முறைத் திருத்தத்தில் நடப்பது என்ன ? அது முன்நோக்கிய நகர்வாகத் தெரியவில்லை. அரசாங்கம் இந்த விடயத்தில் அளவுக்கதிகமான மெத்தன போக்கை வெளிப்படுத்துவதாகத் தெரிகிறது. அரசியலமைப்புத் திருத்தம் போன்ற சவாலாக அமையும் காரியங்களைச் செய்வதில் அரசாங்கத்தின் விருப்பம் வெளிப்படவில்லை என்ற விடயம் அரசியலமைப்பு உருவாக்கம் பற்றிய விழிப்புணர்வை ஒரு சதவீதமானோரே பெற்றுள்ளர். என்பதிலிருந்து உறுதியாகிவிட்டது”**

**புதிய அரசியலமைப்பு தொடர்பான மக்கள் கருத்தறியும் அறிக்கை**




மக்களின் ஜனநாயக வழிப் போராட்டங்களுக்கு இராணுவம் துப்பாக்கி ரவைகளால் பதிலளித்தது.

இந்தப் பட்டியல் நீண்டுபோவதற்கு வாய்ப்பு உண்டு. நாம் எமது குறிக்கோளை நோக்கிப் பயணிக்க வேண்டும்.

மைத்திரிபால சிறிசேன அவர்கள் பொது வேட்பாளராக முன்வைத்த கொள்கைப் பிரகடனம் “மைத்திரி ஆட்சி – ஸ்திரமான நாடு” என அறியப்பட்டது.

புதிய அரசியலமைப்பு தொடர்பான கருத்தாடல் தவிர்க்க முடியாத ஒன்றாக விளங்கிய போதும், அது முதன்மைப்படுத்தப்பட்ட ஒன்றாக வெளிப்படாமலேயே மக்கள் ஆணை கிடைத்தது. பிரகடனத்தின் முதற் பகுதியில் அரசியலமைப்புத் திருத்தம் பற்றிய விடயங்கள் இடம்பெற்றிருந்தன. இன்றைய ஜனாதிபதியின் அன்றைய வார்த்தைகள்.

**“அரசியலமைப்புத் திருத்தத்தை பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதியே தலைமைத்துவம் வழங்க வேண்டும். அதை செய்து முடிப்பதற்காகவே நான் நாட்டு மக்களின் பொது வேட்பாளராக இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்தேன்.**

**– மைத்திரி ஆட்சி –ஸ்திரமான நாடு**

இந்தப் பிரகடத்தின் 14 மற்றும் 15 பக்கங்களில் நிறைவேற்று ஜனாதிபதி முறையை மாற்றியமைத்தல் மற்றும் தேர்தல் முறைத் திருத்தம் பற்றிச் சொல்லப்பட்டுள்ளது. அத்துடன் அமைச்சர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தல் அடங்கலாக மேலும் பல விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

## இரண்டு ஆண்டுகள் கழிந்துள்ள இத்தருணத்தில் என்ன நடந்துள்ளது ?

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறை நீக்கப்பட்டு பாராளுமன்றத்திற்குப் பொறுப்புக்கூறும் நிறைவேற்றுத் துறை உருவாக்கப்படவில்லை. தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் என்ற செய்தி காதோடு காதாக வந்துகொண்டிருக்கின்றது.

அரசாங்கம் இறுதியாக விழிப்புணர்வு இல்லாத மக்கள் மத்தியில் அபிப்பிராய வாக்கெடுப்பை நடத்தக்கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் கருத்தறிய சட்டத்தரணி திரு. லால் விஜேநாயக்கவின் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவுக்கு அரசாங்கம் மிகவும் குறுகிய காலத்தை அதாவது மூன்று மாதங்களை மட்டுமே வழங்கியிருந்தது. அக்குழுவின் அறிக்கையிலும் அரசாங்கத்தின் கவனம் குவிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

அடுத்ததாக நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது தொடர்பாக அளிக்கப்பட்ட வாக்குறுதிகளைப் பார்போம்.

**கடந்த ஆறு வருடங்களில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தியை பத்து மடங்காக்குவேன். அதைச் செய்வதற்கு நாட்டில் இடம்பெற்றுள்ள பாரிய ஊழல்களை நிறுத்துவது ஒன்றே போதுமானது**
**– மைத்திரி ஆட்சி – ஸ்திரமான நாடு (பக்கம் 16)**

மேற்கண்டவாறு பல்வேறு வாக்குறுதிகள் அளிக்கப்பட்டபோதும், அரசாங்கம் நாட்டின் பொருளாதாரத்தை சரியான பாதையில் இட்டுச் செல்லத் தவறியுள்ளது. வெளிநாட்டில் விருது பெற்ற நிதி அமைச்சருக்கு உள்நாட்டில் கிடைத்த விருது அவமதிப்பு. நிலைமை இவ்வாறிருக்க, மத்திய வங்கியின் முறி கொடுக்கல் வாங்கல் உயரத்தில் நின்று உலுக்கிக்கொண்டிருக்கின்றது. நாட்டு மக்கள் மீது வரிச்சுமையை இறக்க வைக்காத ஒரு பொருளாதார சிந்தனை இருப்பதாகத் தெரியவில்லை. 2015 பெப்புருவரியில் 132 ஆகவிருந்த டொலருக்கான ரூபாய் மதிப்பு தற்போது 154 ரூபாவை நெருங்கியுள்ளது. பொருளாதாரம் சென்மதி நிலுவை பிரச்சினையை சந்தித்துள்ளது. பொருளாதார ரீதியாகவும் நாடு தடுமாற்றத்தைச் சந்தித்துள்ளது.

எனவே மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியின் முறைகேடுகளை அடுக்கிக் கொண்டு போவது போல் “மைத்திரி – ரணில் அரசாங்கத்திலும் தீய எண்ணங்கள் மலிந்துள்ளன.

ராஜபக்ஷ ஆட்சியில் இடம்பெற்ற பாரிய ஊழல் மோசடிகள் தொடர்பாக காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் தலைமைச் சீடன் நிலையிலுள்ள அமைச்சர் துமிந்த திசாநாயக்க கமத்தொழில் அமைச்சுக்காக குத்தகைக்கு கட்டடம் ஒன்றை எடுத்து நடத்திக்கொண்டிருப்பது கூட்டு அரசாங்கத்தின் தார்மீகத்திற்கு விழுந்த பலத்த அடியாகும்.

நீதியை நிலை நாட்டும் விடயத்தில் வடக்கு மற்றும் கிழக்கிற்கு இதுவரை பரிபூரண நியாயம் கிடைக்கவில்லை. வவுனியாவிலிருந்து மயிலிட்டி வரை ஆங்காங்கே அன்னையர்கள் இராணுவத்திடம் ஒப்படைத்த தம் புதல்வர்களை மீண்டும் தந்துவிடுமாறு கேட்டு உண்ணாவிரதம் இருக்கின்றனர். கேப்பாபுலவு மக்கள் இராணுவ முகாம்களுக்காக எடுத்துக்கொண்ட தமது காணிகளைக் கோரி உண்ணாவிரதம் இருக்கின்றனர்.

வடக்கில் மட்டுமல்ல. தெற்கில் வெலிக்கடை சிறைச்சாலையில் பெயர் கூறி அழைத்து கொடூரமாகக் கொல்லப்பட்ட கைதிகளுக்கு நீதி கிடைக்கவில்லை. குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தண்டனை வழங்குவதற்குப் பதிலாக கொல்லப்பட்டவர்களில் சிலருக்கு இழப்பீடு வழங்கி சூட்டைத் தணிக்கும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

கல்வித் துறையின் நகர்வுகளும் அபத்தமானவையாகவே உள்ளன. பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய உறுப்பினர்களும் மாணவர்களும் அதிக காலத்தை சிறையிலேயே கழித்து வருகின்றனர். “மைத்திரி – ரணில்” அரசாங்கம் இதுவரை கல்விக்கான தேசியக் கொள்கையொன்றை வகுக்கத் தவறியுள்ளமை பிரச்சினையாக இருப்பதே தவிர “சயிட்டம்” அல்லது பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் அல்ல.

அரசாங்கத்தின் இதுபோன்ற நடவடிக்கைகளை பட்டியலிட்டுக்கொண்டே போகலாம்.

**சாதகமான ஒன்றுமே கிடையாதா?**

இதுவரை ஆராய்ந்த விடயங்களை நோக்கும் போது மைத்திரி – ரணில் அரசாங்கத்தின் விம்பம் சாதகமானதாக இல்லை.

எவ்வாறாயினும் கடந்த அரசாங்கத்துடன் ஒப்பிடும்போது தற்போதைய அரசாங்கம் நல்லாட்சி பற்றிய பல விடயங்களை நிறைவேற்றியுள்ளது. இதய சுத்தியோடு அவ்வாறான விடயங்களை சிலாகித்துப் பேசுவதால் எந்தவொரு பாதிப்பும் ஏற்படாது.

அரசியலமைப்புக்கான 18வது திருத்தம் நீக்கப்பட்டமை, தகவலுக்கான உரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டமை, சுயாதீன ஆணைக்குழுக்கள் மற்றும் நிதித் துறையில் சுயாதீனத்தை ஏற்படுத்தும் நகர்வுகள் பாராட்டுக்குரியன.

ஊடகத் துறையில் இன்றும் குறிப்பிடத்தக்க சுதந்திரம் துய்க்கப்படுகிறது. ஊடகங்கள் அரசியல் வாதிகளை விமர்சிக்கும் போது பீப் ஒலி கேட்பதில்லை. அரசியல் புள்ளிகளின் கார் பந்தயங்களுக்கு தலைநகரில் கதவுகள் மூடப்பட்டுள்ளமை திருப்தி அளிக்கின்றது.

இறுதியாக, தற்போதைய அரசாங்கத்தை “நல்லாட்சி அரசாங்கம்” என நெஞ்சை நிமிர்த்தி சொல்லும் அளவுக்கு தமது ஆட்சியை நிலை நிறுத்த மைத்திரி – ரணில் கூட்டு அரசாங்கம் தவறியுள்ளது என்பதைத் தெரிவிக்க வேண்டும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



childrenintheflods.blogspot.com

# நல்லாட்சிப் பட்டினியும் பெண்ணும்



சாந்தி திசாநாயக்க

கடந்த ஆட்சி பாதை விலகியதால் மக்கள் மத்தியில் நல்லாட்சி பற்றிய எதிர்பார்ப்புகள் உதயமாக ஆரம்பித்தன என்பது புதிதல்ல. மக்கள் சட்டத்தையும் நிதியையும் மதித்து நடப்பவர்கள், சீரய சமூகம் பற்றிய கனவு காண்பவர்களே தவிர சாதுவான நடத்தை கொண்ட உத்தமர்கள் அல்லர். மிலேச்சத் தனத்திலிருந்து மீண்ட ஒழுக்கமுள்ள மக்கள் நீதியையும் நியாயத்தையும் எதிர்பார்ப்பது ஆச்சரியத்திற்குரியதல்ல.

முப்பது வருட கால யுத்தத்தால் ஒரே நாட்டில் வாழ்ந்த சகோதர இனங்கள் இரண்டைச் சேர்ந்தவர்களே மாண்டு போயினர் என்பதை எளிதில் மறந்துபோன ராஜபக்ஷ ஆட்சி, தீ பற்றிக் கொண்ட தன்னுடைய வாலால் பாரிய அழிவை உண்டாக்கிய அனுமனைப் போல், நாடு தீ பற்றும் போது இனவாதத்தையும் மதவாதத்தையும் எதிர்த்த உண்மையான இலங்கையர்கள் மாற்றத்திற்கு வித்திட்டனர் என்பதை மறந்து விடக் கூடாது. ஒரு தசாப்த காலம் வன்மம் அநீதி மற்றும் அதிகார வெறி காரணமாக துவண்டு போன மக்களும் சிவில் அமைப்புகளும் பொது வேட்பாளரை மையம் கொண்டனர்.

வீழ்த்த முடியாது என்று சொல்லப்பட்ட கொடுங்கோல் ஆட்சியை தனிப்பட்ட நலன்கள் அன்றி சிறந்த எதிர்காலத்தை வேண்டி நின்ற மக்கள் கவிழ்த்தனர். ஆகவே ஆட்சி மாற்றம் நிகழ்ந்த ஆச்சரியத்திற்கு அல்லது வியப்பிற்குரியதல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு வருடங்களின் பின்னர் தோற்றுப் போனவர்கள் "மாற்றம் சுகமானதா" எனக் கேட்கின்றனர். உண்மையிலேயே இரண்டு வருடங்களுக்கு முன் வீழ்த்தப்பட்டவர்களின் இந்த நாட்டு மக்களில் ஒரு பகுதியினர் அல்ல. அநீதி, அதிகார வெறி, இனவாதம் மற்றும் மானுட வளர்ச்சிக்குத் தடையாக இருந்த தீய சக்திகளே வீழ்த்தப்பட்டன. மறுபுறத்தில் தோற்கடித்தோம் என்று நெஞ்சை நிமிர்த்திக்கொண்டவர்கள் வேறு வடிவத்தில் தோன்றியுள்ள அந்த தீய சக்திகள் முன்னிலையில் சொல்வதறியாது, களையிழந்து மகிழ்வின்றி இருப்பதைக் காணலாம். போத்தல் மட்டும் தானா மாறியது ? அதிலுள்ள திரவத்தில் எந்த மாற்றமே இல்லையா ?

ஒரு பிரஜையாக மட்டுமல்ல ஒரு பெண்ணாக நடுநிலை கண் கொண்டு பார்க்கும் போது இந்த ஆட்சி மாற்றத்தில் பல நன்மைகள் நடந்திருப்பதை அவதானிக்க முடியும்.

இற்றைக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நாட்டை சூழ்ந்திருந்த மரண பீதி மறைந்து விட்டது. உயிருக்கு உத்தரவாதமாக கைக்கும் வாய்க்கும் கடிவாளம் போட வேண்டிய நிலை காணப்பட்டது. அதாவது கைகளை முறிக்க வேண்டுமா அல்லது உயிரை காவுகொள்ள வேண்டுதே என்பதை பேச்சுதான் தீர்மானித்தது.

அநீதியையும் அநியாயத்தையும் பதிவு செய்ய பேனையைக் கையிலெடுத்த ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர். காணாமல் ஆக்கப்பட்டனர். உயிர் அச்சுறுத்தலும் சித்திரவதையும் தாண்டவமாடியது. நாட்டை விட்டு தப்பியோடும் அளவுக்கு ஊடக அடக்குமுறை இருந்ததை இன்று அந்த அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டவர்களும் கூட மறந்துள்ளனர். ஐயகோ !

வெளிப்படைத் தன்மையை பறை சாற்றும் விதமாக தகவல் அறியும் சட்டம் நிறைவேற்றப்பட்டிருப்பது மக்களின் வெற்றி இல்லையா ? அதனால் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன.

பல்லின, பல மதங்களைக் கொண்ட ஒரு நாட்டுக்கு இனவாதம் சாபக்கேடு என்பது மறுப்பதற்கில்லை. முன்னேற்றப் பாதைகளை மூடி நாட்டில் இரத்த வெள்ளம் பாய்வதே இனவாதிகளின் நோக்கம் என்பதை நாம் இத்தருணத்திலேனும் புரிந்து கொள்ளத் தவறுவோமானால் எமக்கு மன்னிப்பே கிடையாது.

முன்னோக்கி ஒரு அடி எடுத்து வைக்கும் எல்லா சந்தர்ப்பங்களிலும் பின்னோக்கி பத்து அடி எடுத்து வைப்பதில் நல்லாட்சி அரசாங்கம் காணும் அதீத வெற்றி வைக்கிறது மாறுபக்கத்தில் அது வியப்பிற்குரிய ஒன்றாக இருப்பதற்குக் காரணம் சிறந்த எதிர்காலம் பற்றி கனவு காணும் உன்னத அரசியல்வாதிகளும் தலைவர்களும் எமக்கு இல்லை. பெரும்பாலான எமது அரசியல்வாதிகளின் தாராக மந்திரம் அதிக செல்வமும் அதிகாரமும் தான். அதை பெறுவதற்கான விடாமுயற்சி காரணமாக இனவாதமும் ஊழலும் ஊட்டி வளர்க்கப்படுகிறது.

**“ முன்னோக்கி ஒரு அடி எடுத்து வைக்கும் எல்லா சந்தர்ப்பங்களிலும் பின்னோக்கி பத்து அடி எடுத்து வைப்பதில் நல்லாட்சி அரசாங்கம் காணும் அதீத வெற்றி வைக்கிறது மாறுபக்கத்தில் அது வியப்பிற்குரிய ஒன்றாக இருப்பதற்குக் காரணம் சிறந்த எதிர்காலம் பற்றி கனவு காணும் உன்னத அரசியல்வாதிகளும் தலைவர்களும் எமக்கு இல்லை. பெரும்பாலான எமது அரசியல்வாதிகளின் தாரக மந்திரம் அதிக செல்வமும் அதிகாரமும் தான். அதை பெறுவதற்கான விடாமுயற்சி காரணமாக இனவாதமும் ஊழலும் ஊட்டி வளர்க்கப்படுகிறது.**

மதத்தின் பெயரால் செய்யப்படுகின்ற அட்டகாசங்களும் மூட நம்பிக்கையில் வாழ்பவர்களும் நாட்டை இருளில் தள்ளிவிடுவார்கள் என்பதை மறுக்க முடியாது. எத்தனை எத்தனை குறைபாடுகள் இருந்தாலும் தற்போதைய அரசாங்கத்தில் கொண்டுள்ள எதிர்பார்ப்பைக் கைவிடாத மக்களுக்குத் தக்க பாடம் கற்பித்த ஜனாதிபதி, நீதி நியாயத்தை மட்டுமல்ல சட்டத்தின் ஆட்சியையும் மதிக்கத் தவறவில்லையா ? ஒரு குற்றத்தை செய்தவரையோ அல்லது குற்றவாளியையோ காவியுடை அல்லது சீருடையைப் போர்த்தியவர் என்ற காரணத்திற்காகப் பாதுகாப்பது நியாயமா? இது அநீதியானது. தராதரம் பார்க்காது அனைவருக்கும் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். எனினும், இராணுவ வீரர்களை பாதுகாப்பதாக வாக்குறுதியளித்து இராணுவம் என்ற போர்வையில் எந்த ஒரு குற்றத்தையும் செய்ய முடியுமா ? இதை அரச தலைவர் புரிந்துகொள்ளும் வரை மாற்றத்திற்காகப் போராடிய அறுபத்திரண்டு இரண்டு லட்சம் மக்களின் மானத்தை அடகு வைக்க வேண்டுமா ? இல்லாவிட்டால் விரக்தியில் பாராமுகமாக இருக்க வேண்டுமா ? நல்லாட்சி மற்றும் நீதியான தேசம் பற்றிய கனவு புதைந்து போகவிடாது வீரியத்துடன் எழுச்சி பெற வேண்டுமல்லவா?

அரசாங்கத்தினதும் எதிர்க்கட்சியினதும் அதிகார வெறி நாட்டை ஆபத்தில் தள்ளி விடுமென்பதை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும். முன்னைய கேடுகெட்ட ஆட்சிக்கும் தற்போதைய நல்லாட்சிக்கும் இடையிலான வித்தியாசங்கள் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. ஒரு வேளை உணவுக்காக உலை வைக்க நடத்தும் போராட்டத்தை அரசாங்கம் உடனடியாக புரிந்துகொள்ள வேண்டும் அவ்வாறு புரிந்துகொள்ளத் தவறுமானால் நல்ல பல விடயங்களை ஒதுக்கித் தள்ளி அரசாங்கத்தின் ஆயுளை பெண்கள் தீர்மானிப்பார்கள். காரணம் பசி வந்தால் பத்தும் பறந்து விடும். அரசியலமைப்பு சீர்திருத்தங்களையும் முக்கியமான பல சட்டங்களையும் தூக்கிப்போட தொட்டில் ஆட்டும் கைகள் துணிந்துவிடுமென்பது தெட்டத் தெளிவானது. ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



www.asianmirror.lk

# அரசாங்கத்தின் பயணமும் முழுப் பூசனிக்காயைச் சேற்றில் மறைத்தலும்



**கே.ஜீ.பிலிப் சாந்த**
Shan.info1978@gmail.com

அரசாங்கம் இதுவரை சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டங்களில் முன்வைக்கப்பட்ட பல்வேறு வரிகள் மற்றும் பொருளாதார மறுசீரமைப்புகள் காரணமாக நாட்டில் ஏற்பட்ட குழுப்ப நிலை நல்லாட்சி அரசாங்கத்திலும் ஏற்பட்டுள்ளது. இந்த பொருளாதார மறுசீரமைப்பு பற்றிய யோசனைகள் தீட்டப்பட்டு அறவீடுகளைச் செய்ய நடவடிக்கை எடுக்கும் வரை ஜனாதிபதிக்கு அது பற்றித் தெரியாது என வெளியிலிருந்து பார்க்கும் ஒருவர் விளங்கிக் கொள்ளக் கூடும். பல்வேறு மக்கள் சந்திப்புகளில் ஜனாதிபதி தெரிவித்துள்ள கருத்துப்படி, அவருக்கு அறிவிக்காமல் அல்லது அவரை திசை திருப்பி வேறு வழிமுறையொன்றில் பொருளாதார மறுசீரமைப்பு தொடர்பான யோசனைகள் நடைமுறைக்கு வந்துள்ளன. ஆனால், யோசனையொன்றை நடைமுறைக்குச் கொண்டு வரும் முன் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட யோசனையில் சட்டத் திருத்தம் கொண்டு வர வேண்டுமாயின் பாராளுமன்றத்தின் ஊடாக அதை நிறைவேற்றி அதன் பின்னரே நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும். இதுவே உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"கட்சி அரசியல் இலங்கைச் சமூகத்திற்கு ஏற்படுத்தியுள்ள பாதிப்பு எண்ணற்றது. வரலாற்றில் முதல் முறையாக பாராளுமன்ற சனநாயகத்திற்கு ஓர் புதிய அனுபவமாக தேசிய அரசாங்க எண்ணக்கரு உருவாகி உள்ளது. இது ஓர் எளிதான பயணம் அல்ல என்பதும் மாறுபட்ட ஓர் அரசியல் காலாசாரம் என்பதும் உண்மை. செல்ல வேண்டிய பாதை இதுவே. வேறு அல்ல மக்கள் ஆணைப்படி இந்தப் பாதையிலிருந்து விலகி வேறு பாதையில் செல்லவும் முடியாது.**

இவ்வாறான ஒரு பின்னணியில் ஜனாதிபதிக்குத் தெரியாமல் வரிகள் மற்றும் பொருளாதார மறுசீரமைப்புக்கள் நடைமுறைக்கு வந்துள்ளன என்பதில் உண்மையில்லை.

ஆனால் ஜனாதிபதி பொருளாதார விடயங்கள் சம்பந்தமாக கருத்துத் தெரிவிக்கும் போது தனக்குத் தெரியாது என்பதை காட்டிக்கொள்கிறார். ஆகவே, அமைச்சரவையில் பேசப்படும் விடயங்கள் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வரப்படுவதில்லை. இல்லாவிட்டால் அமைச்சரவையிலுள்ள ஏனையவர்கள் ஜனாதிபதிக்குத் தெரியாமல் முடிவுகளை எடுக்கின்றனர். இதில் எது சரியாக இருப்பினும், ஜனாதிபதி பல்வேறு சந்தர்ப்பங்களில் பொருளாதார விடயங்கள் தொடர்பான தன்னுடைய ஈடுபாட்டை வெளிப்படுத்துவது வரவேற்கத்தக்கது.

**ஜனாதிபதியின் வீரப்பன் பாணியிலான இடையீடு**

பொது மக்களுக்கு மிகவும் கூருணர்வுள்ள பொருளாதாரம் போன்ற விடயங்களில் "வீரப்பன்" பாணியிலான இடையீடு இருப்பதை மக்கள் விரும்புவதில்லை. திட்டமிப்பட்ட நிலையில் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்று அமுல்படுத்தப்படும் விடயங்களில் மக்களுக்குச் சாதகமான திருத்தங்கள் செய்ய வேண்டியிருந்தாலும் தொடர்ச்சியாக திட்டங்கள் ஏதுமின்றி "வீரப்பன்" பாணியிலான இடையீடு இருப்பதன் காரணமாக பொருளாதாரத்திற்கு ஏற்படும் நட்டத்தைப் பொது மக்களே ஈடுசெய்ய வேண்டும். ஜனாதிபதி இதய சுத்தியுடன் செய்யும் இடையீடு அதிக பயன் உள்ளதாக இருக்க வேண்டுமானால் அந்த இடையீடு உரிய வழிமுறையில் செய்யப்பட வேண்டும். அதாவது, ஜனாதிபதி இவ்வாறான விடயங்களில் தலையிடுவதைத் தடுக்க வேண்டும் என்பதல்ல. அந்தத் தலையீடு முறையாக நிகழ வேண்டும் என்பதாகும்.

அரசியல்வாதிகளுக்கு மக்களின் நம்பிக்கையும் ஈர்ப்பும் இன்றியமையாதது. அதனால் மக்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்படும் விதமாக செயற்பட்டு கவனத்தை ஈர்த்தல் யதார்த்தமானது.

"கட்சி அரசியல் இலங்கைச் சமூகத்திற்கு ஏற்படுத்தியுள்ள பாதிப்பு எண்ணற்றது. வரலாற்றில் முதல் முறையாக பாராளுமன்ற சனநாயகத்திற்கு ஓர் புதிய அனுபவமாக தேசிய அரசாங்க எண்ணக்கரு உருவாகி உள்ளது. இது ஓர் எளிதான பயணம் அல்ல என்பதும் மாறுபட்ட ஓர் அரசியல் காலாசாரம் என்பதும் உண்மை. செல்ல வேண்டிய பாதை இதுவே. மக்கள் ஆணைப்படி இந்தப் பாதையிலிருந்து விலகி வேறு பாதையில் செல்லவும் முடியாது.

2015 ஜனவரி 08 இல் ஜனாதிபதிக்கு மக்கள் ஆணை கிடைத்த விதம் தனிச்சிறப்பானது அதில் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் மட்டுமல்ல, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் மட்டுமல்ல, பிற கட்சிகளைச் சேர்ந்த ஆதரவாளர்கள் மட்டுமல்ல சகல மக்களினதும் பிரதிநிதித்துவம் காணப்பட்டது. ஆகவே அந்த மக்கள் ஆணை தேசிய அரசாங்கத்திற்கு கிடைத்த மக்கள் ஆணை என்பது தெளிவாகிறது. அதேபோல் 2015 ஆக்கப்பட்டு மாதத்திலும் அதற்கு நிகரான மக்கள் ஆணை கிடைத்தது. எந்தவொரு கட்சிக்கும் தனியே ஆட்சி அமைக்க முடியாத முடிவுகளை வழங்கிய அந்த பொதுத்தேர்தல் நல்லாட்சிக் கட்டமைப்பை வரவேற்பதாக பறைசாற்றிய விதம் சாதுவானது. இந்த கலாசாரம் புதிய ஒன்றாக இருப்பினும் உள்வாங்கிக்கொள்வது கடினமாக இருப்பினும் மக்கள் எமக்கு வேறு பாதையை அமைத்துக்கொடுக்கவில்லை.

இணக்கப்பாட்டு அரசாங்கக் கட்டமைப்பை மீறி வேறு வழியில் செல்வதற்கு ஜனாதிபதிக்கு அல்லது பிரதமருக்கு தேவை இருப்பினும் கிடைத்திருக்கும் மக்கள் ஆணையும் தற்போதுள்ள அரசியல் சூழ்நிலைமையிலும் அதற்கான வாய்ப்புகள் இல்லை.

பொருளாதார ரீதியாக பாதிக்கப்படும் மக்கள் யாராவது ஒருவரின் தலையீட்டால் கிடைக்கும் உதவியால் நிம்மதி காணுவதோடு அந்த உதவியைச் செய்பவர் அவர்கள் மத்தியில் வீரனாக வலம் வருவார். ஆனால், வீரப்பன் பாணியிலான இடையீடு காரணமாக மொத்த பொருளாதாரமும் அரசாங்கப் பொறிமுறையும் ஓரளவு பாதிப்புக்கு உள்ளாகும் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

ஆனால், இந்த நிலைமையை மீறிச் செல்வதற்கு இரண்டு தலைவர்களுக்கும் அழுத்தம் கொடுக்கும் அரசியல் போக்குகள் உள்ளன என்பது இரகசியமல்ல. எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போல இரண்டு தரப்பிலும் இதற்கு தூபம் போடுபவர்களும் இருக்கின்றனர். அதன் காரணமாக காலத்திற்குக் காலம் இந்தப் பாதையை மாற்ற வேண்டிய தேவை இரு சாராருக்கும் உண்டெனலாம். குறிப்பாக, ஸ்ரீ லங்கா சுதந்திரக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொருளாதாரம் போன்ற விடயங்களில் "வீரப்பன்" பாணியிலான இடையீடு இருப்பதை மக்கள் விரும்புவதில்லை. பொருளாதார ரீதியாக பாதிக்கப்படும் மக்கள் யாராவது ஒருவரின் தலையீட்டால் கிடைக்கும் உதவியால் நிம்மதி காணுவதோடு அந்த உதவியைச் செய்பவர் அவர்கள் மத்தியில் வீரனாக வலம் வருவார். ஆனால், வீரப்பன் பாணியிலான இடையீடு காரணமாக மொத்த பொருளாதாரமும் அரசாங்கப் பொறிமுறையும் ஓரளவு பாதிப்புக்கு உள்ளாகும் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.**

கட்சியில் அதிகாரத்தை தக்க வைக்க முயன்று வரும் ஜனாதிபதி தான் இன்னும் "தீவிரமாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்காரர்" என்பதை சமூகத்தின் ஆழத்திற்கு கொண்டு செல்வதில் எதிர்நோக்கியிருக்கும் சவால் பாரிய பிரச்சினையாக உள்ளது. பாரம்பரிய ஐ.தே.க விரோத அடிப்படையில் அரசியல் செய்யும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு ஐ.தே.க விரோதப் போக்கு எப்பொழுதும் தேவையான ஒன்று. இந்த ஒரு பின்னணியில் ஐ.தே.க உடன் அரசியல் சகவாசத்தைப் பேணுவதால் அதிகாரத்தை தக்க வைப்பதில் ஜனாதிபதிக்கு பாரிய சிக்கல் உள்ளது எனலாம்.

அரசியல் ரீதியாக முக்காலத்தையும் உய்த்தறியும் அறிஞர்கள் ஜனாதிபதியின் பக்கம் இருப்பார்களானால் எழுந்தமானத்தில் தர்க்க ரீதியான பிரச்சினைகளாகத் தென்படும். இவற்றை வெற்றிகொள்ள முடியும். அரசியல் ரீதியான சவால்களை வெல்வதற்கும் மரபு வழியில் சென்று சிக்கித் தவிப்பதை விட மாற்று, ஆக்கத்திறனான பாதையில் கழுத்து தாலி இரண்டையும் காத்துக்கொள்வது இவ்வாறான அறிஞர்களின் ஆலோசனைகளை பெறுவதால் மட்டுமே சாத்தியமாகும். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மக்கள் ஆணைக்கு புறம்பாக அதிகாரத்தை கைப்பற்றுமானால், ஜனாதிபதி பதவியில் இருக்கும் வரை அதைத் தக்கவைத்துக் கொள்ள முடியும். ஏனென்றால், ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டதற்கான அடிப்படையைத் தகர்த்து முன்னோக்கிச் செல்ல எத்தனிப்பது தர்க்க ரீதியானதாகவோ நடைமுறைக்கு உகந்ததாகவோ அமையாது. ஆகவே, கிடைத்த வெற்றிக்கமைய பணியாற்றி கட்சியின் அதிகாரத்தைத் தக்க வைப்பதற்கான ஆக்கத்திறன் கொண்ட நகர்வுகளையும் உபாயங்களையும் கடைப்பிடித்தல் தர்க்க ரீதியானதாகவும் நடைமுறைச் சாத்தியமானதாகவும் அமையம்.

ஜனாதிபதி செய்து வருகின்ற, இடம்பெறக்கூடாத இடையீடுகள் எந்நபரின் ஆலோசனையாக இருப்பினும் அதனால் ஏற்படும் விளைவுகள் கசப்பானவை என்பதை புரிந்துகொள்ள வேண்டும். பொருளாதார ரீதியாக திருத்தங்கள் மக்களுக்கு நன்மையளிப்பதாக இல்லாவிட்டால், அவ்வாறான திருத்தங்கள் திட்டமிடப்படுகின்ற மற்றும் அமைச்சரவையில் அங்கீகரிக்கப்படும் சந்தர்ப்பங்களை சாதகமாக பயன்படுத்தி அவை மக்களின் நலன் கருதி தயாரிக்கப்படுவதற்கு இடையீடு செய்ய வேண்டும். ஜனாதிபதி அல்லது பிரதம மந்திரி விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் குறித்த யோசனைகள் அரசாங்கத்தின் யோசனைகளாக கருதப்படுமேயொழிய அது தனித் தரப்பின் யோசனை அல்ல. ஒருவர் பாதகமான திருத்தமொன்றை அரசாங்கத்தின் ஏனைய தரப்பில் சுமத்தி தப்புவதற்கு எடுக்கும் முயற்சி அரசியல் முதிர்ச்சி அற்ற ஒரு செயலாகும். ஆகவே மக்கள் நலன் கருதிய இடையீடுகள் தக்க தருணத்தில் இடம்பெற வேண்டும் அது சரியான வழிமுறையைப் பின்பற்றி செய்யப்படும் ஒன்றானால் மிகுந்த மதிப்பினைப் பெறும். அப்போது சமுதாயத்தில் ஜனாதிபதி மதிப்பும் வரவேற்பும் கிடைக்கும் இதற்காக ஜனாதிபதியை வழிப்படுத்த வேண்டியது ஆலோசகர்களின் பொறுப்பாகும்.

**ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாதார நடைமுறைகள்.**

ஐக்கிய தேசியக் கட்சி புதிய தாராளவாத கட்டமைப்பை தனது பொருளாதாரத்தின் அடிப்படையாக தெரிவு செய்துள்ளது. எதிரணியில் இருந்தபோது சர்வதேச நாணய நிதியத்தின் யோசனைகளை நிராகரித்து சமூக ஜனநாயகவாத கட்டமைப்பு பற்றி கனவு கண்டபோதும் பிரதமரின் பொருளாதார நோக்கு புதிய தாராளவாதத்தை விஞ்சும் நிலையில் இல்லை. பிரதமர் புதிய தாராளவாத பொருளாதார சீர்திருத்தங்களால் பாரிய விளைவுகளைச் சந்தித்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2002–2004 ஆட்சிக் காலத்தை ஒத்ததாக இல்லாவிட்டாலும், அவரின் மெல்லிய நகர்வுகளும் காத்திரமும் புதிய தாராளவாதத்திற்கு உரியன என்பது தெளிவு.

புதிய தாராளவாதம் 2002 ஆண்டளவில் உலக அளவில் உச்சத்தில் இருந்தது. எனினும், 2008 இல் ஐக்கிய அமெரிக்கா உட்பட்ட ஐரோப்பா பொருளாதார ரீதியில் வீழ்ச்சி கண்டதைத் தொடர்ந்து புதிய தாராளவாதம் பின்னடைவைச் சந்தித்தது. பிரதமர் தன்னுடைய இரண்டாவது ஆட்சிப் பருவத்தில் உலக அளவில் வலுவாக கால் பதிக்கத் தவறிய புதிய தாராளவாத பொருளாதார போக்கினைச் சந்தித்துள்ளார். அதனால் அவசியமான சீர்திருத்தங்களை வலுவான நிலையில் மேற்கொள்ள உலகளாவிய பலம் அவருக்கு கிடைக்காது. இணக்கப்பாட்டு அரசாங்கமொன்றை உருவாக்கும் உலகளாவிய தேவை, தடைகள் எதுமின்றி அவசியமான திருத்தங்களை மேற்கொள்ளும் தேசிய அரசியலை பலப்படுத்துவதாக இருப்பினும், எதிர்பார்த்த அளவில் அந்த உபாயங்கள் வெற்றியளிக்கவில்லை என்பதை நிரல்படுத்தப்பட்டுள்ள தேசிய அரசியல் சார்ந்த விடயங்களின் மூலம் தெளிவாகிறது.

புதிய தாராளவாத பொருளாதார திருத்தங்களில் கை வைக்காவிட்டால் இரண்டு முதலாளித்துவக் கட்சிகளும் ஆட்சி புரிவதில் அசௌகரியங்கள் ஏற்படுமென்பது வெளிப்படையானது. உலகளாவிய மூலதனத்தின் தெரிவும் "இணக்கப்பாட்டு" கட்டமைப்பினாலான அரசாங்கமாக உள்ள நிலையில் அதற்கு அப்பால் சுத்தமான ஐக்கிய தேசியக் கட்சிக்கு அல்லது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு ஆட்சி செய்யும் வாய்ப்பு அரிது என்றே கூற வேண்டும். ஏதோ ஒரு வகையில்

இணக்கப்பாட்டுக் கட்டமைப்பின் இருப்பு பாரதூரமான வகையில் பாதிக்கப்படும் ஒரு சந்தர்ப்பத்தில் உலகளாவிய மூலதனம் தனிக்கட்சி அரசாங்கத்தின் வசமாவதற்கு வாய்ப்பு உள்ளபோதும் புதிய தாராளவாத பொருளாதார சீர்திருத்தங்களிலிருந்து விலகி நிற்பதற்கு எந்தவொரு அரசாங்கத்தாலும் முடியாது.

புதிய தாராளவாத பொருளாதார சீர்திருத்தங்கள் கசப்பான அனுபவங்களைத் தருமென்பது பொய் அல்ல. ஆனாலும் அந்தக் கசப்பான சீர்திருத்தங்களுக்கான தேசிய அரசியலைப் பலப்படுத்திக்கொள்வதற்கு அரசாங்கங்கள் உருவாகின்றன. நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அந்த உலக யதார்த்தத்தை புரிந்துகொள்ளாமல் அரசியல் செய்வது தர்க்க ரீதியானதல்ல. இத்தருணத்தில் எமது பணி அனைத்தையும் உலக மூலதனத்தில் ஒப்படைத்து கைகட்டி நிற்பதோ அல்லது வீரப்பன் பாணியிலான கவரக் கூடிய இடையீடோ அல்ல. ஸ்ரீ லங்கா சதந்திரக் கட்சிக்கு இப்போதுள்ள பொறுப்பு அதைவிட சிக்கலானதாகவும் வீரியம் கொண்டதாகவும் காணப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி புதிய தாராளவாத பொருளாதார சீர்திருத்தங்களின் ஒரு பிரதிநிதி. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும் பிரதிநிதித்துவம் கிடைத்திருந்தாலும் கூட இச்சந்தர்ப்பத்தில் அது அரசியல் ரீதியாக மிகவும் கவனமாக காலடி எடுத்து வைக்க வேண்டும். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு மூலதன உலகமயமாக்கலின் பிரதிநிதித்துவ வகிபங்கிலிருந்து விடுபட முடியாதென்பது உண்மையாக இருந்தாலும், தன்னுடைய பணியை வலுவான முறையில் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த கையில் ஜனாதிபதிக்கு கல்வியிலும் அனுபவத்திலும் உயர்ந்த அறிஞர் பட்டாளமொன்று அவசியம் இந்த பட்டாளத்தில் உள்ளவர்கள் பொருளாதாரத்தில் மக்களின் நம்பிக்கையை வென்றவர்களாகவும் நன்கு அறியப்பட்ட வல்லுநர்களாகவும், அதேபோல் சர்வதேச மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாகவும் இருப்பார்களானால் இப்பணியை எளிதாக முன்னெடுக்கலாம்.

ஐக்கிய தேசியக் கட்சி நடைமுறைப்படுத்த எதிர்பாரக்கும் புதிய தாராளவாத பொருளாதார சீர்திருத்தங்களை தீவிரமாக ஆராய்ந்து ஆய்வுக்கு உட்படுத்தும் வழிமுறையொன்றைத் தயாரித்தல் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தற்போது எதிர்நோக்கியிருக்கும் பாரிய சவாலாக உள்ளது. இந்த சவாலை எதிர்கொள்வதற்காக மேலே சொல்லப்பட்ட அறிஞர் குழுவின் ஆலோசனைகளை பெற வேண்டியதோடு, அவை பொருளாதார ரீதியான ஆராய்ச்சிகளின் ஊடாக ஜனாதிபதிக்கு வழங்கப்படுபவையாக இருக்க வேண்டும். அதன் மூலம் சரியானதும் மக்களின் நலன் கருதியதுமான திருத்தங்களுக்கான போசனைகளைப் பெற முடியும். ஜனாதிபதி வெறுமையாக செய்யும் இடையீடுகளை விட பொருளாதார வல்லுநர்களின் யோசனைக்கு அமைய செய்யும் இடையீடு வலுவானதாகவும் பெறுமதியானதாகவும் காணப்படும். அவ்வாறான யோசனைகள் ஜனாதிபதிக்கு அபிமானத்தை ஏற்படுத்துவதோடு இதுபோன்ற நடவடிக்கையில் ஈடுபடுவதற்கான பலமும் கிடைக்கின்றது. இந்த யோசனைகள் உலகளாவிய அரசியல் சூழ்நிலையை கவனத்தில் கொண்டு தயாரிக்கப்படுவதால் ஐக்கிய தேசிய கட்சிக்கும் அதிலிருந்து விலகிச் செல்ல முடியாது.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை பிரதானமாகக் கொண்ட அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் பொதுமக்களின் தேவைளில் கூருணர்வுடன் நடந்துகொள்ளாமை பொதுவான பண்பாகும். அதிகாரத்திற்கு வந்த பின்னர் மூலதனத்தின் கரங்களைப் பற்றி புதிய தாராளவாத பொருளாதார சீர்திருத்தங்களை பலப்படுத்தும் பணி முன்னெடுக்கப்படும். ஆனால், இந்த அரசாங்கத்தில் ஜனாதிபதி, அரசாங்கத்தின் வழமையான நிலையிலிருந்து விலகி பொது மக்கள் தொடர்பாக கூருணர்வுடன் செயற்படுவதை பாராட்ட வேண்டும். ஜனாதிபதியின் இந்த நகர்வை வரவேற்க வேண்டியதோடு அவருடனான கலந்தாலோசிப்பின் வழியாக அதை ஒழுங்குமுறைப்படுத்த முடியும். அதற்கு சமூக இடையீடும் ஊடக மற்றும் சிவில் அமைப்புகளின் பங்களிப்பும் அவசியமாகும்.

ஜனாதிபதி ஆக்கத்திறன் கொண்ட அவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுவாராயின் அது அவருக்கும் அரசாங்கத்தின் அரசியல் ஆளுமைக்கும் பலம் சேர்க்கும் என்பதில் ஐயப்பாடில்லை.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**பிரதமர் தன்னுடைய இரண்டாவது ஆட்சிப் பருவத்தில் உலக அளவில் வலுவாக கால் பதிக்கத் தவறிய புதிய தாராளவாத பொருளாதார போக்கினைச் சந்தித்துள்ளார். அதனால் அவசியமான சீர்திருத்தங்களை வலுவான நிலையில் மேற்கொள்ள உலகளாவிய பலம் அவருக்கு கிடைக்காது. இணக்கப்பாட்டு அரசாங்கமொன்றை உருவாக்கும் உலகளாவிய தேவை, தடைகள் எதுமின்றி அவசியமான திருத்தங்களை மேற்கொள்ளும் தேசிய அரசியலை பலப்படுத்துவதாக இருப்பினும், எதிர்பார்த்த அளவில் அந்த உபாயங்கள் வெற்றியளிக்கவில்லை என்பதை நிரல்படுத்தப்பட்டுள்ள தேசிய அரசியல் சார்ந்த விடயங்களின் மூலம் தெளிவாகிறது.**

**அரசியலமைப்பு மாற்றமும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும்**

அரசியலமைப்பு மற்றும் பாராளுமன்றத்தின் கட்டமைப்பை மாற்றுவதில் தொடர்பான யோசனைகள் பற்றி கலந்துரையாடுவதற்கான கருத்தரங்கு ஒன்றுக்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்கள் உட்பட அமைச்சர்களுக்கு அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயகவினால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இக்கருத்தரங்கு அப்போதைய அமைச்சர் கிங்ஸ்லி விக்ரமரத்னவுக்குச் சொந்தமான களுத்துறை ரெஞ்ஜரீன் ஹோட்டலில் இரண்டு நாட்களாக நடைபெற்றது. கருத்தரங்கின் முடிவில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு அறிவிக்கப்பட்டது.

புதிய அரசியலமைப்பு தொடர்பில் அன்று நடந்த உரையாடலில் பாராளுமன்றத்தின் கட்டமைப்பை மாற்றியமைத்தல் முக்கிய திருத்தமாக முன்வைக்கப்பட்டது. அதிகாரப் பகிர்வு வழங்கப்படும் அரசியலமைப்பு ஒன்றின் மூலம் உருவாக்கப்படுகின்ற பிராந்திய ஆட்சி அலகுகள் உள்ள ஒரு சட்டகத்தில் பாராளுமன்றத்தில் காணப்படும் ஆசனங்களின் எண்ணிக்கை 225 ஆக இருத்தல் பயனற்றது என்ற கருத்தும் முன் வைக்கப்பட்டது. அதன்படி, பாராளுமன்றத்தின் ஆசன எண்ணிக்கையை 150 அல்லது அதை அண்மித்த ஒரு தொகையாக குறைப்பது பற்றி கலந்தாலோசிக்கப்பட்டது. அதற்கு உடன்படாது ஆசனங்களின் எண்ணிக்கையை 225 ஆக வைத்திருப்பதே ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் நோக்கம் என்ற முடிவு ரெஞ்ஜரீன் கருத்தரங்கில் எடுக்கப்பட்டது. எண்ணிக்கை 150 குறைக்கப்படுமானால் அப்போதிருந்த தொகுதி அமைப்பாளர்கள் பலரின் பதவிகள் பறிபோகுமென்பதால் அந்த யோசனைக்கு இணங்க முடியாதென காரணம் தெரிவிக்கப்பட்டது.

**ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் வெட்கத்திற்குரிய நிலைப்பாடு**

ஒற்றை அரசுக் கட்டமைப்பில் பயங்கரவாதத்தை தோற்கடிக்க வேண்டும் எனவும் அதனால் பேச்சுவார்த்தை ஊடாக சனநாயக ரீதியான ஒரு தீர்வுக்குச் செல்ல முடியும். எனவும் எந்த அறிகுறியும் இல்லாத ஒரு காலத்தில் அரசின் கட்டமைப்பை மாற்றி ஒற்றையாட்சி முறையிலிருந்து சமஷ்டி முறைக்குச் செல்ல வேண்டுமென சந்திரிக்க தெரிவித்தார். ஆனாலும் அதே சந்திரிகா அதிகாரத்திற்கு வந்த பின்னர் ஏகாதிபத்தியத்திற்குக் கட்டுப்பட்டு பாராளுமன்றத்தின் கட்டமைப்பை மாற்றியமைக்க இணங்கவில்லை. தொகுதி அமைப்பாளர்கள் சிலரின் பதவிகள் பறி போவதால் பாராளுமன்றக் கட்டமைப்பை மாற்றியமைக்க ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி இணங்கவில்லை எனத் தெரிவித்தமை மிகவும் நிந்தனைக்குரியது.


1978 இல் ஐக்கிய தேசியக் கட்சி கொண்டு வந்த நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையைக் கொண்ட அரசியலமைப்பினால் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அதிக இன்னலகளை சந்தித்தது என்றால் அது சரியானதே. ஆனால், அக்கட்சி அந்த அதிகாரத்தை சுவைக்கத் தொடங்கிய நாளிலிருந்து அதைப் பாதுகாத்துக்கொள்ளவே அதிகம் பாடுபட்டிருக்கின்றது. ராவய பத்திரிகைப்படி ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை பாதுகாப்பதற்கான யோசனையைத் தெரிவித்துள்ளது. இந்த விடயம் தொடர்பாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழுவுக்கு தெரியப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் சிபாரிசு அவ்வாறாகவே உள்ளதென அக்கட்சியின் பேச்சாளர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

அமைச்சர் டிலான் பெரேரா ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினால் அமைக்கப்பட்ட குழுவின் முடிவுக்கான சிறுபான்மை மக்களுக்கும் காரணம் பற்றி பேசுகையில் வாக்குகளால் நேரடியாக ஜனாதிபதி ஒருவரை தெரிவு செய்வதன் முக்கியத்துவத்தை கவனத்தில் கொண்டு அந்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவித்தார். சிங்களவர்கள் அல்லாதோருக்கு தங்கள் வாக்குகளால் ஜனாதிபதியொருவரை தெரிவு செய்ய பங்களிப்புச் செய்ய முடிதல் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையின் ஒரு பண்பு என்பது உண்மை தான். ஆனால் இந்த கலாசாரத்தை பல தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள் ஏற்கெனவே முன்வைத்துள்ளன. அதேபோல், நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையின் சர்வாதிகார கொடுமை பற்றிய ஒரு சமூக உரையாடல் எழுந்துள்ள நிலையில் கூட சிங்களம் அல்லாத பல கட்சிகள் இந்த வாதத்தை முன்வைத்துள்ளன.

சிங்களம் அல்லாத ஏனைய இனக் கட்சிகள் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையின் சர்வாதிகார வெறியை உணர்ந்தபோதும், அதிகாரப் பகிர்வு கட்டமைப்பில் மாற்றம் இன்றி நிறைவேற்றதிகார ஜனாதிபதி நீக்கப்பட்டால் தமக்குரிய அரசியல் ரீதியான முக்கியத்துவம் அற்றுப்போகுமென்பதால் அந்த முறைமையை பாதுகாக்கும் சிக்கலான முயற்சியில் ஈடுபட்டனர். பாராளுமன்ற ஆட்சி முறையில் பிரதான இரண்டு அரசியல் கட்சிகளுக்கு சிங்களப் பெரும்பான்மை பலத்தைக் கொண்டு ஆட்சி அமைத்து தங்களை புறக்கணித்து ஆட்சியைக் கொண்டு செல்ல முடியும் என்பது சிங்களம் அல்லாத இனங்களுக்குத் தெரிந்த விடயமே. ஜனாதிபதித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



www.itnnews.lk

தேர்தலொன்றில் தங்களுடைய மக்களின் விருப்பம் இன்றி பிரதான கட்சிகள் இரண்டுக்குமே வெற்றி பெற முடியாது என்ற காரணத்தினால், மத்திய அரசாங்கத்தின் அதிகாரப் பரவலாக்கம் செய்யப்படும் வரை தாங்கள் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைக்கு உடன்படுவதாக தெரிவித்துள்ளன. எனினும், மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்தை பரவலாக்கம் செய்து பிராந்திய அதிகாரம் கொண்ட ஆட்சி அமைப்புடன் கூடிய அரசியலமைப்புத் திருத்தமொன்றுக்குச் செல்வோமாயின், நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை பற்றிக் கொண்டுள்ள சிங்களம் அல்லாத இனக் கட்சிகளுக்கு உடன்பாடு கூறுவதற்கு காரணம் இருக்காது. துரதிர்ஷ்டவசமாக இன்று ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சிங்களம் அல்லாத இனக் கட்சிகள் இதுவரை காலம் பயணம் செய்த அதே படகில் பயணம் செய்ய முயற்சி செய்கிறது.

**ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி தப்புவற்கு வழி தேடல்**

1993 இல் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வாக சமஷ்டி ஆட்சி முறை கொண்டு வரப்பட வேண்டுமென சந்திரிகா மீண்டும் தெரிவித்ததைத் தொடர்ந்து கருத்தாடலுக்கு புதிய கருத்தொன்று உள்வாங்கப்பட்டது. அதனால், அரசின் வடிவத்தை மாற்றி நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையில் மாற்றத்தை ஏற்படுத்தி பாராளுமன்றத்திற்கும் பிராந்திய அலகுகளுக்கும் அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும் எனப் பேசப்பட்டது. இந்த சமூக கருத்தாடலின் உச்சக் கட்டமாக சந்திரிகா பண்டாரநாயக்க ஆட்சி 2000 ஆண்டில் புதிய அரசியலமைப்பு வரைவு ஒன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது. அப்போதைய அரசாங்கத்திற்கு அதை வாபஸ் பெற வேண்டிய நிலை ஏற்பட்டாலும், அந்த வரைவில் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை ஒழித்து பாராளுமன்றத்தின் அதிகாரத்தை பலப்படுத்துகின்ற மற்றும் பிராந்திய அலகுகளுக்கு அதிகாரத்தை வழங்கி அரசின் கட்டமைப்பில் மாற்றம் ஏற்படுத்துதல் போன்ற மிகச் சிறந்த திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. அதில் இன்னலுக்கு உள்ளாகும் சகல இனக் குழுமங்களையும் ஆட்சியில் பங்கேற்கச் செய்யும் பங்கேற்பு சனநாயக அரசியலமைப்பொன்று சமர்ப்பிக்கப்பட்டது. அதனால் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையின் சர்வாதிகார முறை பண்புகள் ஒழிக்கப்பட்டு ஓரங்கட்டப்பட்ட மக்களை மீண்டும் ஆட்சியில் இணைக்கும் அரசக் கட்டமைப்பொன்றும் உருவாக்கப்பட இருந்தது. இலங்கைவாழ் மக்கள் அந்த அரசியலமைப்பை நிறைவேற்றிக்கொள்ளும் அளவுக்கு முதிர்ச்சியுடையவர்களாக இருக்கவில்லை.

ஆயினும், பிற்காலத்தில் எழுந்த சமூக கருத்தாடல் ஊடாக 2015 ஜனாதிபதித் தேர்தல் கட்டமைப்பை மாற்றியமைக்கும் அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் நாட்டின் கவனம் திரும்பியது. இது நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை ஒழித்து பிராந்திய அலகுகளுக்கு அதிகாரத்தை வழங்கும் முறையே தவிர ஏற்கெனவே இருப்பதை ஆணித்தரமாக ஏற்றுக்கொள்ளும் தற்காலிக தீர்வு அல்ல. துரதிர்ஷ்ட வசமாக சமூகக் கருத்தாடல் ஊடாக அரசியல் கருத்தாக்கங்களை முடிவு செய்யாத ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மீண்டும் தன்னுடைய அந்த பழைய நிலைப்பாட்டுக்கே சென்றுகொண்டிருக்கிறது. செய்ய வேண்டியது அதிகம். இத்தருணத்தில், ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி வரலாற்றில் மற்றுமொரு நெருக்கடியைச் சந்தித்துள்ளது. ஜனாதிபதி தேர்தலின் பின்னர் கட்சி இரண்டாக பிளவுபட்டுள்ளது. ஜனாதிபதி அரச அதிகாரத்தைப் பயன்படுத்தி தன்னிடம் இல்லாத ஆளுமையை வெளிப்படுத்தி கட்சியை கட்டிக்காக்க முற்படுகிறார். இதனிடையே மஹிந்த ராஜபக்ஷ அர்த்தமில்லாத பேச்சுக்களைப் பேசி இழந்த அதிகாரத்தை மீண்டும் பெறும் முயற்சியில் இறங்கி உள்ளார். மைத்திரிபால சிறிசேனவுக்கு ஜனாதிபதித் தேர்தல் பற்றிய கருத்தாடல் ஊடாக பாரிய அரசியல் ஆளுமை கட்டியெழுப்பப் பட்டதேயொழிய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் அல்ல. அதேபோல் மஹிந்த ராஜபக்ஷ


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

போருக்கு பின்னரான சமூக சீர்திருத்தங்களையொட்டி அரசியல் ஆளுமை கட்டியெழுப்பப்படவில்லை. அது போர்ச்சூழலிலேயே கட்டியெழுப்பப்பட்டிருந்தது. இந்த இரண்டு விடயங்களையும் அவர்கள் இருவருமே புரிநதுகொள்ளவில்லை. ஆகவே, இருவரும் தத்தமது கைவரிசையைக் காட்டி அதிகாரத்தை தக்க வைப்பதற்கும் பாதுகாப்பதற்கும் எடுக்கும் முயற்சி சமூகத்திற்கு பாதிப்பையே கொண்டு வரும்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தனது உள்ளக முரண்பாடுகளை தீர்த்துக்கொண்டால் மட்டுமே எதிர்காலத்தில் நடைபெறும் பிரதான தேர்தல்களில் பலமாகக் களமிறங்க முடியும். மீண்டும் தேர்தலொன்று நடாத்தப்படுமானால் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மைத்திரி அணிக்கு அது சாதகமாக அமையும். அரசியலமைப்பின்படி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மீண்டும் களமிறங்க முடியாததால் மைத்திரிபால சிறிசேனவுக்கு கட்சியில் பெரும்பான்மை பலத்தை உறுதிசெய்துகொள்ள முடியும். இதற்கு மாறாக நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை ஒழித்துவிட்டு பொதுத்தேர்தல் ஒன்றுக்குச் சென்றால் அது மஹிந்த ராஜபக்ஷ வுக்கு சாதகமாக அமைந்துவிடும். மஹிந்த ராஜபக்ஷவுக்கு பொதுத்தேர்தலில் போட்டியிட முடியமாதலால் அவர் அதை சாதகமாக்கிக்கொள்ள தீவிரமாக முயற்சி செய்வார் என்பது திண்ணம்.

**ஜனாதிபதித் தேர்தலா? பொதுத் தேர்தலா ?**

பொதுத் தேர்தலொன்று நடாத்தப்பட்டால் மைத்திரிபால சிறிசேனவும் களத்தில் இருப்பதால் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பாரிய சிக்கல் நிலையை எதிர்கொள்வதைத் தடுக்க முடியாது. இவ்வாறான ஒரு அரசியல் களம் ரணில் விக்கிரமசிங்காவுக்கு மிகவும் சாதகமாக இருக்கும். இதன் தாற்பரியத்தை மஹிந்த ராஜபக்ஷவும் மைத்திரிபால சிறிசேனவும் அறிந்துள்ள நிலையில் இருவருமே சமீபத்தில் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டுமென குரல்கொடுத்தனர். இதனிடையே ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் செயற் குழு மைத்திரிபால சிறிசேனவின் வெற்றியையும் இருப்பையும் உறுதிசெய்து கொள்ளுமுகமாக நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறை தொடர வேண்டுமென தீர்மானமொன்றையும் நிறைவேற்றியுள்ளது. ஜனாதிபதித் தேர்தலொன்று நடத்தப்பட்டால் அது ரணில் விக்கிரமசிங்கவுக்கும் மைத்திரிபால சிறிசேனவுக்கும் கடுமையான போட்டியாக அமையும். கட்சியின் உட்பூசல்களை ஏதோ ஒரு வகையில் தீர்த்து ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி வந்துள்ளதாகத் தெரிகிறது.

அதுவரை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு மட்டுமல்ல இந்த அதிகாரப் போட்டி காரணமாக ஒட்டுமொத்த சமூகமும் எதிர்நோக்க வேண்டிய ஆபத்து இரு தலைக்கொள்ளி எறும்பு என்ற நிலைக்கு ஒப்பானது மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து கட்சியைக் காப்பாற்றி தன்னுடைய பெயரை உயர்த்திப் பிடிக்க மைத்திரிபால சிறிசேன முயற்சி செய்யக் கூடாது. அவரிடம் அதற்கான அரசியல் ஆளுமை இல்லை என்பது மிகத் தெளிவானது. அந்த ஆளுமை அவருக்கு உண்டு என்று கூறுபவர்கள் தங்களது இருப்பைப் பாதுகாத்துக்கொள்ள முயலும் கட்சியிலுள்ள சந்தர்ப்பவாதிகளாகத்தான் இருக்க முடியும். மைத்திரிபால சிறிசேனவுக்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் வலுவான அதிகாரம் இல்லை. அதைக் கட்டியெழுப்பும் சிறப்பு ஆற்றலும் அவரிடம் இல்லை. 2015 ஜனாதிபதித் தேர்தல் பற்றிய சமூகக் கருத்தாடலில் பங்கெடுத்துக் கொண்ட மக்கள் மத்தியிலேயே ஜனாதிபதியின் அரசியல் ஆளுமை உள்ளது. அக்கருத்தாடலில் பங்கெடுத்தவர்களுக்கு அரசியல் தலைமைத்துவம் வழங்கி அதன் நோக்கங்ளை அடைந்து கொள்ள ஆவர் முயற்சி செய்ய வேண்டும்.

**ஜனாதிபதிக்கு மேலும் கால அவகாசம் உண்டு**

கால அவகாசத்தைப் பயன்படுத்தி நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை நீக்கி பலம்வாய்ந்த நல்லாட்சி முறையைத் தாபிக்க வேண்டும். அதேபோல அரச அதிகாரத்தை பரவலாக்கம் செய்து அரசின் கட்டமைப்பை மாற்றியமைக்கும் புதிய அரசியலமைப்பு ஒன்றை கொண்டு வர வேண்டும். ஜனாதிபதி சனநாயக விழுமியங்களுக்காக குரல் எழுப்பு வேண்டியதோடு அதிகார ஆசையைத் தூக்கியெறிந்த முன்னுதாரணத் தலைவர் என்ற பாத்திரத்தை அவர் ஏற்க வேண்டும். இக் கால கட்டத்தின் வரலாற்றுத் தலைவராக எல்லையற்ற ஆளுமையும் விம்பமும் உடையவராக சிறிசேன ஜனாதிபதியின் பணி ஓய்வு பெற முடியும். உருவாக்கப்படும் புதிய அரசக் கட்டமைப்பில் அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டு தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படுவதோடு, பாராளுமன்ற முறைமையில் அடுத்த பொதுத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் மஹிந்த ராஜபக்ஷ வுக்கும் இடையில் போட்டி நடைபெறும். இரண்டு தடவைகள் மக்களால் தோற்கடிக்கப்பட்ட மஹிந்த ராஜபக்ஷவும் குப்பைத் தொட்டியில் போட்ட ராஜபக்ஷ அரசியலும் மக்களுக்கு மீண்டும் தேவையென்றால் அதைக் கொண்டு வரலாம். அது தேவையில்லை எனக் கருதினால் ராஜபக்ஷவை தோற்கடித்து மீண்டும் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக தெரிவுசெய்யலாம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த இடைவெளியை சிறப்பாக பூர்த்தி செய்வாரானால் தலைசிறந்த அரசியல் தலைவர் என்ற பட்டத்தோடு ஓய்வு பெற்று, ஓய்வு காலத்தில் நிம்மதி பெருமூச்சு விட்டு, தன்னால் நாட்டின் தேசியப் பிரச்சினையைத் தீர்க்கப்பட்டு சனநாயகம் வேரூன்றி, ஒரு சர்வாதிகாரியை வீழ்த்திய மகிழ்ச்சியை சுவைத்துக்கொண்டிருக்க முடியும். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



english.sina.com

# மீதொட்டமுல்லை குப்பை மேடு பல தேசியப் பிரச்சினைகளின் முன்னோடிப் பிரச்சினை



ஸ்ரீ ஜயவர்தனபுர
பல்கலைக்கழகத்தின்
முன்னாள் உபவேந்தர்
**செனவி எப்பிட்டவத்த**

மீதொட்டமுல்ல குப்பை மேடு தற்போது நாட்டின் தேசியப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இற்றைக்கு எட்டு அல்லது ஒன்பது மாதங்களுக்கு முன்னர் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின்போதும், மண்சரிவு ஏற்பட்டபோதும், ஆயுதக் கிடங்கு வெடித்துச் சிதறியபோதும் நடந்துகொண்ட விதத்தில் மாற்றம் இல்லை. அதற்கு அப்பால் சற்று சிந்திக்க போனால் சிவில் யுத்தத்தின்போதும் இதே நிலை தான். அநேகமான சந்தர்ப்பங்களில் இவற்றுக்குப் பொறுப்புக் கூற வேண்டிய நபர்களைத் தேடும் ஆணைக்குழுக்கள் அமைக்கப்படுவதைக் காணலாம்.

இது சிரங்கு உள்ள ஒருவனுக்கு அரிப்பு கூடுவதை ஒத்த ஒரு வேலைத்திட்டமாக எனக்குத் தோன்றுகிறது. சொறியும்போது சுகமாக இருக்கும். ஆனால், அந்தச் சுகம் நீடிக்காது. சற்று நேரத்தில் அரிப்பு கூடும். இதற்கு முடிவு இருக்காது. நான் அறிந்த மட்டில், எமது நாட்டில் மூன்று அல்லது நான்கு தசாப்தங்களாக நடப்பது சொறிதலும் நெருப்பை ஊதித்தள்ளுவதும் தான் கொழும்பிலுள்ள குப்பைமேடு ஒன்று சரிந்துள்ளது பற்றி பல்வேறு ஆராய்ச்சிகள் நடத்திக்கொண்டிருக்கின்றனர்.

ஆனால் இன்னும் சில வாரங்களில் நடக்கப்போவது என்ன ? குப்பை மேட்டையும் மூடிக்கொண்டு புதிய தலைப்பொன்று மேலோங்கிவிடும். அதுவும் கொஞ்ச காலம்தான். நாங்கள் தற்போது இலங்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சி கண்டுள்ள செயற்பாடுகள் பற்றி ஊடுருவி ஆராய வேண்டிய காலகட்டத்தை அடைந்துள்ளோம். அதைச் செய்ய தவறுவோமானால் சுவாரசியமான தலைப்பாக எழுகின்ற ஒரு பிரச்சினையை பின்தள்ள இன்னுமொரு பிரச்சினை உருவாகுமே தவிர எத்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு கிடைக்காது. இதற்கு மிகச் சிறந்த உதாரணம் முன்னர் கொதி நிலை பிரச்சினையாக இருந்த சயிட்டம். இன்று பலருக்கும் அது நினைவில் இல்லை. ஆகவே, பிரபல தலைப்புகள் ஒவ்வொன்றுக்கும் பின்னால் பித்துப்பிடித்தவர்களைப் போல ஓடுவதற்குப் பதிலாக நாட்டிலுள்ள உண்மையான பிரச்சினைகளுக்கு கொள்கை ரீதியான நிலையான தீர்வுகளைத் தேடும் வேலைத்திட்டமொன்றுக்குச் செல்ல வேண்டியது அவசியமாகும்.



*பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் சீனாவின் ஜனாதிபதி ஷீ ஜின்பிங்கும்*

உண்மையாகவே எந்த நேரத்தில் வெடிக்கும் என்று கூற முடியாத பல தேசியப் பிரச்சினைகளால் நாடும் நாட்டு மக்களும் துயரம் அனுபவிக்கின்றனர். உணவு உற்பத்தி தொடர்பாக நாம் எதிர்நோக்கியுள்ள பாரிய நெருக்கடி தற்போதுள்ள மிக முக்கியமான பிரச்சினையாகும் எமது நாடு தானியக் களஞ்சியமாக அறியப்பட்ட ஒரு காலகட்டமும் இருந்தது. ஆனால், இன்று அரசியையும் இறக்குமதி செய்ய வேண்டிய நிலை உருவாகியுள்ளது. பல காரணங்களால் நெல் உற்பத்தி குறைந்துவிட்டது. எதிர் காலத்தில் இது ஒரு பாரிய பிச்சினையாக உருவெடுப்பதை தவிர்க்க முடியாது.

**நாடெங்கிலும் டெங்கு**

பொது மக்களின் சுகாதாரம் தொடர்பாகவும் பல சிக்கல்கள் உள்ளன. குறிப்பாக, ஒரு நாளில் ஓரிரு மனித உயிர்களை காவுகொள்ளும் அளவுக்கு டெங்கு நோய் நாடு பூராகவும் பரவியுள்ளது. நுணுகி ஆராய்ந்தால் அது ஒரு பேரழிவை தரக்கூடியது எவரும் அதைப் பற்றி பேசுவதாக இல்லை. குப்பை மேட்டுக்குப் பலியானோரைப் போலவே நாளாந்தம் இறப்பவர்களையும் டெங்கு நோயாளிகளையும் ஒப்பிட்டு நோக்கினால் உங்களுக்கு அதன் அடி அகலத்தைப் புரிந்துகொள்ள முடியும்.

**வேலையில்லாத் திண்டாட்டம்**

வாழ்வதற்கான வாழ்வாதாரம் இல்லாததால், இன்னல்படுவோரின் அளவும் சிறிதல்ல. வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு பாரிய பிரச்சினையாக உள்ளது. இதை மறுப்பதற்கு எத்தரப்பு முயற்சி செய்தாலும் பல இலட்சம் இளைஞர்கள் முச்சக்கர வண்டியை தமது வாழ்வாதாரமாக தெரிவு செய்யும் அளவுக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது. சாதி, குலம், கோத்திரங்களுக்கிடையில் ஆணவக் கலாசாரத்தின் வளர்ச்சி இதையொத்த ஒரு பிரச்சினைதான். இது வெறுமனே அடையாளம் பற்றிய பிரச்சினையல்ல. அழிவுகரமான பயன்பாட்டையே வெளிப்படுத்துகிறது.

**சர்வதேச உறவுகள்**

சர்வதேசத் தொடர்புகள் மற்றும் பிராந்திய அரசுகளுடனான கொடுக்கல் வாங்கல் நடைமுறைகளிலும் பிரச்சினைகள் காணப்படுகின்றன. சீனாவுக்கு வழங்கப்படும் பொருளாதாரப் பங்கு, இந்திய மீனவர்கள் வட கடல் பிராந்தியத்தை ஆக்கிரமித்தல், அந்நிய சந்தை எமது சந்தையை ஆக்கிரமித்தல் மற்றும் எமது உழைப்பு வெளிநாட்டை நோக்கி நகர்த்தப்படுதல் போன்ற பல்வேறு கோணங்களில் இப்பிரச்சினை விரிவடைந்துள்ளது. இதனிடையே சுற்றுச் சூழல் பிரச்சினையும் உள்ளது. எமது நாட்டிலுள்ள நிரேந்து பிரதேசங்களின் பல பகுதிகள் அழிவடைந்துள்ளன. நிலத்தடி நீர் வளமும் பாதிக்கப்பட்டுள்ளது. ஒரு வருடத்தில் மூன்று அல்லது நான்கு தடவைகள் மண்ணரிப்பு பற்றிய பிரச்சினை பேசப்படுகிறது. அதன் அடுத்த கட்டமாக எமது பூமி விவசாயம் செய்வதற்கு பொருத்தமற்றதாக அதாவது பாலைவனமாக மாறிவிடும். இந்த நிலையில் எமது நாடு ஈடுகொடுக்க முடியாத நகரமயமாக்கலுக்கும் நகர கலாசாரத்திற்கும் உள்ளாகி வருகிறது. சொகுசு அங்காடிகள், பரபரப்பாக ஓடிக்கொண்டிருக்கும் வாழ்வுக்கு மத்தியில் மற்றவருடன் பேசுவதற்குக் கூட முடியாத மனிதர்களாக நாம் மாறி வருகின்றோம். இவ்வாறான பல பிரச்சினைகளுக்கு மத்தியில் குடிநீர் பற்றாக்குறை மற்றும் குப்பைக் கூளங்களை அகற்றுதல் பற்றிய பிரச்சினைகளும் மேலிட்ட வண்ணமிருக்கின்றன.

குடிநீர்ப் பிரச்சினையும் குப்பைக் கூளங்களை அகற்றுதல் பற்றிய பிரச்சினையும் கொழும்பு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டவை அல்ல. காலி, மாத்தறை, கண்டி, கேகாலை, மாவனெல்ல, யாழ்ப்பாணம், அநுராதபுரம், மட்டக்களப்பு போன்ற ஒவ்வொரு நகரத்திலும் இப்பிரச்சினை தீவிரமடைந்துள்ளது. இந்நிலையில் எதிர்காலத்தில் நாட்டின் பல பாகங்களிலும் இவ்வாறான சரிவுகள் ஏற்பட்டு உயிர்கள் நூற்றுக்கணக்கில் பலியாகலாம்.

**தீர்வு தேடல்**

இலங்கை ஒரு நாடு என்ற வகையில் இதுபோன்ற நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதால் அதிலிருந்து மீள்வதற்கான வழி பற்றி நாங்கள் சிநதிக்க வேண்டும். நெருக்கடிகளுக்குத் தீர்வு தேடும் போது ஏனைய சந்தர்ப்பங்களைப் போன்று இதிலும் அதனுடன் சம்பந்தப்பட்ட முக்கிய தரப்புகளை இனம் காண வேண்டும். எமது நாடு இன்று எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் போது தவிர்க்க முடியாத நான்கு தரப்புகள் இருப்பதாக உணர்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"சர்வதேசத் தொடர்புகள் மற்றும் பிராந்திய அரசுகளுடனான கொடுக்கல் வாங்கல் நடைமுறைகளிலும் பிரச்சினைகள் காணப்படுகின்றன. சீனாவுக்கு வழங்கப்படும் பொருளாதாரப் பங்கு, இந்திய மீனவர்கள் வட கடல் பிராந்தியத்தை ஆக்கிரமித்தல், அந்நிய சந்தை எமது சந்தையை ஆக்கிரமித்தல்மற்றும் எமது உழைப்பு வெளிநாட்டை நோக்கி நகர்த்தப்படுதல் போன்ற பல்வேறு கோணங்களில் இப்பிரச்சினை விரிவடைந்துள்ளது.**

முதலாவது அரசியல்வாதி எமது பாரம்பரிய மரபின்படி, அனுபவத்திலும் கல்வியிலும் உயர்ந்த, மக்கள் சேவைக்கு முழு அளவிலும் தம்மை அர்ப்பணித்தவர்கள் அரசியல்வாதிகளாக அறியப்பட்டனர். ஆனால், இன்று அரசியல்வாதிகளின் கல்வி அறிவு பாரிய பிரச்சினையாக உள்ளது.

சமகால இலங்கையின் அரசியல்வாதிகள் மக்கள் சேவைக்குப் பதிலாக தமக்காகவே உழைப்பதை முக்கிய வேலையாகக் கொண்ட, ஆணவம் நிறைந்த உண்மைக்குப் பதிலாக பொய் பேசுபவர்களாக உள்ளனர். இரண்டாவது தரப்பு அரச உத்தியோகத்தர்கள். தூர நோக்குடைய அறிவு பணி செய்கின்ற நிறைந்த அனுபவத்துடன் நிறுவனங்களை தொழிற்பட வைப்பவர்கள் அரச உத்தியோகத்தர்களாவர். பிரச்சினைகளைத் தீர்க்கும் போது அரச உத்தியோகத்தர்களுடன் அரசியல்வாதிகள் இணைந்து செயல்படுவது அவசியமாகும். அடுத்து கற்றவர்கள். கற்றவர்களை உருவாக்கும் பணி பொதுவாக பல்கலைக் கழகங்களிலேயே மேற்கொள்ளப்படுகிறது. உலக வரலாற்றைப் பார்க்கும் போது இப்பணி 16 நூற்றாண்டு வரை நீண்டு செல்கிறது. இங்கு ஏலவே சொல்லப்பட்ட குப்பை மேடு தொடக்கம் சகல பிரச்சனைகளையும் ஆராயும் போது அவற்றில் சமூகவியல் பொருளியல் போன்ற பல்வேறு பரிமாணங்கள் காணப்படுகின்றன.

பிரச்சினைகளில் காணப்படுகின்ற பல்வேறு பரிமாணங்கள் பல்லைக்கழக அறிஞர்களால் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் மூலம் வெளிக்கொண்டு வரப்படுகின்றன. ஆராய்ச்சிகளின் முடிவுகள் ஊடாக பிரச்சினைகளின் உண்மையான தோற்றம் பற்றி அரசியல்வாதிகளையும் உத்தியோகத்தர்களையும் விழிப்புணர்வு செய்வது அவர்களின் கடமையும் பொறுப்பும் ஆகும். இலங்கையில் இந்த நகர்வு உள்ளதா என்ற ஒரு கேள்வி உண்டு. இலங்கையில் பத்து அரசப் பல்கலைக் கழகங்கள் இயங்கி வந்தாலும் அவற்றின் நிலை எதிரும் புதிருமாகவே உள்ளது. அங்கு மேற்கொள்ளப்படும் கற்பித்தலும் தொழிற்பாடுகளும் இதுபோன்ற தீர்வுகளுக்கு எந்த வகையிலும் பயன் அல்லது தொடர்புடையதாக இல்லை.

குப்பை மேடு சரிவு பற்றி ஆராயப்பட்டதா? எத்தனை பேரால் இவ்வாறான ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. உத்தியோகத்தர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டனரா ? அந்த பிரதேசத்தில் அக்கறையுள்ள அரசியல்வாதிகளும் சட்டத்தரணிகளும் குரல் எழுப்பினாலும் கூட இதன் யதார்த்தத்தை முன்கூட்டியே பதிவுசெய்த ஆராய்ச்சியாளர் யார்? இன்றும்கூட இந்த பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் பல்கலைக்கழகங்களின் பங்களிப்பு இருப்பதாகத் தெரியவில்லை.

இறுதியாக பொது மக்கள், பிரச்சினை ஒன்றைத் தீர்ப்பதில் இடம்பெறுகின்ற நான்கு சக்திகளில் பொதுமக்கள் முக்கிய பாத்திரம் வகிக்கின்றனர். பொதுமக்கள் நாட்டிலுள்ள பிரச்சினைகள் தொடர்பாக விழிப்புடன் இருக்க வேண்டும். ஆனால் சமூகம் பற்றிய தீவிர அவதானிப்புடன் இருக்கின்ற மக்களைக் காண்பது அரிதாகிவிட்டது. இலங்கையின் கல்வி முறை சில தசாப்தங்களாக பாரிய சரிவினை சந்தித்திருப்பதே அதற்குக் காரணம் சமகால இலங்கையில் சரிந்துபோன கல்வியால் உருவாக்கப்பட்ட மக்களே உள்ளனர். இவர்களிடம் பெரும்பாலும் சான்றிதழ்கள் இருக்குமே தவிர நெஞ்சில் ஈரமோ அறிவோ இருக்காது. ஆனால் நாட்டின் கல்வி சான்றிதழ்களுடன் நல்லுள்ளமும் அறிவும் உடைய மனிதர்களை உருவாக்க வேண்டும்.

நாட்டில் இவ்வாறான ஒரு முறையிலேயே பிரச்சினைகள் உருவாக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். அரசியல்வாதிகளின் சீரழிவு, அரச உத்தியோகத்தர் பொறிமுறை வீழ்ச்சி, பல்லைக்கழகத்தில் இருக்க வேண்டிய ஆராய்ச்சிகள் நடைபெறாமை மற்றும் பொது மக்கள் செயலிழந்து காணப்படும் ஒரு நிலையில் நாடு எதிர்கொண்டு நெருக்கடிகள் சாதாரண விடயங்களாக பார்க்கப்படுமே தவிர அவை விசேடமானவையாக கவனிக்கப்படுவதில்லை. குப்பைமேடு தொடர்பில் அரசியல்வாதிகள் சிலர் பேசிய பேச்சுக்களை ஆராயும்போது இந்த நிலைமை மேலோங்கி நிற்பதை அவதானிக்கலாம். சில அரசியல்வாதிகள் இந்த குப்பை மேட்டை ஒரு மாதத்தில் காலி செய்வதாக ஆசை வார்த்தைகள் கூறினார்கள்.

ஒரு நாளில் இருபத்தைந்து குப்பை லொறிகள் வீதம் முந்நூற்றைம்பது நாட்கள் ஏற்றிச் சென்றாலும் குப்பை மேடு காலியாகாது. அந்த வகையில் அரசியல்வாதிகளின் அழகான பேச்சுக்களில் மோசடி தவிர்ந்த வேறு ஒன்றுமில்லை. இன்னும் சில நாட்களில் இதற்கு ஏதோவொரு தற்காலிக தீர்வு வழங்கப்படலாம். அத்தோடு இந்த பிரச்சினை மூடி மறைக்கப்படும். இதற்கு மிகச் சிறந்த உதாரணம் "அரநாயக்க" மண்சரிவில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் "சாலாவ" வெடி விபத்தில் பாதிக்கப்பட்டவர்களின் நிலை என்ன ? களனி ஆற்றுப் பள்ளத்தாக்கில் வசிக்கும் மக்களின் வாழ்க்கை நிலை மாறியுள்ளதா? பாதிக்கப்பட்டவர்கள் தாங்களாகவே ஏதேனும் தீர்வை நாடுவதைத் தவிர கொள்கை ரீதியான நடவடிக்கை மூலம் அவர்களின் வாழ்க்கையை நெறிப்படுத்துவதற்கும் அரசாங்கம் தவறியுள்ளது. அரசாங்கம் எதிர்நோக்கியிருக்கும் சிறுநீரக நோயாளிகள் பிரச்சினையும் பசளை தொடர்பான பிரச்சினையும் இதே நிலையிலேயே இருக்கின்றன. இதனாலேயே பல பிரச்சினைகள் இன்றும் சொறியும் நிலையிலும் நெருப்பை ஊதித் தள்ளும் நிலையிலும் காணப்படுகின்றன.

அரச உத்தியோகத்தர்களும் பல்கலைக்கழக ஆசிரியர்களும் அரசியல்வாதிகள் தங்களை வேலை செய்ய விடுவதில்லை எனது தூற்றுகின்றனர். ஆனால், அனைத்து தூற்றல்கள் முற்றிலும் உண்மையல்ல. உதாரணமாக போதிய நிதி கிடைக்காததால் ஆராய்ச்சிப் பணிகள் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்களில் சிலர் தெரிவிக்கின்றனர் எனக்குத் தெரிந்தளவில் பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள போதிய நிதியும் வழிகளும் இருக்கின்றன. அவர்களில் தொண்ணூறு சதவீதமானோர் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள விரும்புவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இந்திய பிரதமர் மோடியுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

ஆராய்ச்சிகள் ஒருபுறமிருக்க, தொண்ணூறு சதவீதமானோர் வகுப்புகளுக்குச் சென்று சரியான முறையில் கற்பிப்பதும் இல்லை. பல்கலைக்கழக தொழில் இன்று மகிழ்ச்சிக்குரிய ஒன்றாக மாறியுள்ளது.

இந்தக் குப்பை மேடு பிரச்சினையை எடுத்துக்கொள்வோமானால் எமது பல்கலைக்கழகத்தின் சமூகவியல் மற்றும் பூகோளவியல் கற்கைப் பிரிவுகளிலுள்ள எத்தனைபேர் இது பற்றி ஆராய்ச்சி செய்தனர். பேராதனைப் பல்கலைக் கழகத்தின் சிலர் தற்போது கூறி வருவதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். உத்தியோகத்தர்கள் தங்களின் அதிகாரத்தைப் பயன்படுத்தி தகவல்களை உரிய முறையில் எடுத்துக்கூறுவார்களானால் அரசியல்வாதிகளால் அதற்கு மறுப்பு தெரிவிக்க முடியாது என நினைக்கின்றேன். இது என்னுடைய அனுபவம்.

மிகப் பெரிய குப்பைமேடு ஒன்றை இலங்கையின் தலைநகரத்தின் மத்தியில் வைத்திருந்ததற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையும், மத்திய சுற்றாடல் அதிகார சபையும், திட்டமிடல் அமைச்சும் பொறுப்பு கூற வேண்டுமல்லவா ? கடந்த இரண்டு அல்லது மூன்று தசாப்த காலத்தில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களைச் சேர்ந்த பலர் குப்பை முகாமைத்துவம் பற்றி கற்பதற்கு பல நாடுகளுக்குச் சென்றுள்ளதை நாம் நன்கறிவோம். இவர்கள் போய்வந்த தடவைகளைக் கவனத்தில் கொள்ளும் போது லொறிகளுக்குப் பதிலாக அவர்களை ஈடுபடுத்தி இந்த குப்பை மேடுகளை அகற்ற வேண்டுமென நினைக்கின்றேன். இவர்கள் வெளிநாடுகளில் என்ன செய்தார்கள். நுட்பங்களை ஆராய்ந்து அறிய வேண்டும் எனக்கூறிக்கொண்டு மாகாண சபைகளைச் சேர்ந்தவர்கள் இருபது அல்லது முப்பது பேர் கொண்ட குழுக்களாக வெளிநாடு சென்றுள்ளனர்.

ஆனால் இன்று நாட்டின் நாலாப்பக்கங்களிலும் குப்பை மேடுகள் வளர்ந்து நிற்கின்றன. தீவிரமாக நடைபெற்றுவரும் நகரமயமாக்கலினால் அகற்றப்படும் குப்பைகளில் சரிபாதி அளவு பிலாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் என்பதை இங்கு கூற வேண்டும். இதிலிருந்து மீள வேண்டுமாயின் விரும்பியோ விரும்பாமலோ பொலித்தீன் பாவனையை தடைசெய்ய வேண்டும். கனவான்களும் இல்லத்தரசிகளும் சூழல் நேய உரைகளுக்கு மாற வேண்டும். நாங்கள் நிச்சயமாக பொருளாதார விஞ்ஞான மற்றும் கலாசார ரீதியான மாற்றத்திற்குச் செல்ல வேண்டும். இப்போதுள்ள முறைமை எமது நாட்டுக்குப் பொருத்தமற்றது. சொகுசு அங்காடிகள் எந்தப்பொருளை வாங்கினாலும் அதற்கு பொலித்தீன் கொண்டு உறை செய்யப்பட்டுள்ளது. எம் முன்னே உள்ள ஆபத்தை கவனத்தில் கொண்டு இன்றுள்ள நிலை பற்றி நாம் கவனம் செலுத்த வேண்டும். நான் ஏற்கனவே கூறியதுபோல் தேசிய அளவிலுள்ள பல்வேறு பிரச்சினைகள் வெடிக்கும் தருவாயில் உள்ளன. இந்நிலையில் அரசியல்வாதிகளை மட்டும் தூற்றுவது சரியாகாது. அரச உத்தியோகத்தர்களும் பல்கலைக்கழக ஆசிரியர்களும் இவ்விடயத்தில் உடனடியாக முன்னணி வகிக்க வேண்டும். அரசியல்வாதிகள் நெகிழ்ச்சியைக் கடைப்பிடித்து அவர்களுடைய குரலுக்கு செவி சாய்க்க வேண்டும். இந்த முத்தரப்பையும் பிரச்சினைகளைத் தீர்க்கும் நிலையை நோக்கிச் செல்ல பொதுமக்களும் தொடர் கண்காணிப்பில் இருக்க வேண்டும். உரையாடல்கள், சம்பாஷணைகள் இடம்பெற வேண்டும். இன்று விகாரைகளிலும், கோவில்களிலும் பள்ளிவாசல்களிலும் தேசிய பிரச்சினை குறித்து பேச வேண்டும். ஆம் ! ஆன்மீகமும் இப்பிரச்சினைகளும் முக்கிய தொனிப்பொருளாக மாற வேண்டும். •

குறிப்பு – **பிங்குன் மேனக கமகே**
நன்றி "லங்காதீப்ப"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடக்கின் வாக்களிப்பு நிலையம் www.bbc.co.uk

# ஏமாற்றப்படும் எதிர்பார்ப்புகளும் ஏமாற்றமடையும் தமிழ் மக்களும்



**சின்னத்துரை தவராஜா**
எதிர்க் கட்சித் தலைவர், வட மாகாணசபை

தமிழ் மக்களின் நம்பிக்கைகள் யாவும் நந்திக் கடலுடன் சங்கமமானதுடன், அரை நூற்றாண்டிற்கு மேலான அவர்களின் அரசியல் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கான சகல வழியிலான போராட்டங்களும் எவ்வித அரசியல் ரீதியிலான கோரிக்கைகளையும் வென்றெடுக்கவில்லை என்பது மட்டுமல்லாது நிறைவேற்றப்படாத அரசியல் அபிலாஷைகளிற்கு மேலதிகமாகப் புதிய வடிவிலான பிரச்சினைகளையும் விட்டுச் சென்றுள்ளது.

இராணுவமயப்படுத்தப்பட்ட வடக்கு, கிழக்குப் பிரதேசங்கள், மக்களின் பூர்வீக வதிவிடங்களில் இராணுவக் காவலரண்கள், வலிந்து காணாமற்போனோர் பட்டியல், யுத்தக் குற்றங்களிற்கான பொறுப்புக்கூறல் போன்ற புதிய பரிமாணத்திலான பிரச்சினைகளுடனும் பரிதவித்து நின்ற தமிழ் மக்களிற்கு மைத்திரிபால சிறிசேனவின் "நல்லாட்சிக்" கோசத்துடனான ஜனாதிபதி வேட்பாளரின் வருகையானது ஓர் நம்பிக்கையினையும், உத்வேகத்தையும் அளிப்பதாக இருந்தது. அத்துடன் மகிந்த ராஜபக்ஷவை எப்படியோ அரச தலைவர் பதவியிலிருந்து விலக்க வேண்டுமென்ற தமிழ் மக்களின் ஆதங்கம் மைத்திரிபால சிறிசேன மேல் அளவு கடந்த நம்பிக்கையினை வைக்கத் தூண்டியது. இதன் வெளிப்பாடாகவே தமிழ் மக்கள் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஏகோபித்த ஆதரவினை 08.01.2015 ஜனாதிபதித் தேர்தலில் வழங்கியிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மைத்திரிபால சிறிசேனவினால் தேர்தல் பிரசாரத்தின் போது அறிவிக்கப்பட்ட நல்லாட்சியரசின் 100 நாள் வேலைத்திட்டத்தில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் தொடர்பாக எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்ற போதிலும், நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமை மாற்றப்பட்டு பாராளுமன்ற முறைமை கொண்டுவரப்படும் , நாடு முழுவதும் ஜனநாயக ரீதியிலான சிவில் நிர்வாகம் மீளக் கட்டியெழுப்பப்படும் , யுத்தக் குற்றங்களிற்காக சுயாதீன நீதி வழங்கல் முறைமை மூலம் நீதி நிலைநாட்டப்படும், நல்லாட்சி, மனித உரிமைகள், சமூகப் பொருளாதார அபிவிருத்திகளில் ஈடுபட்டுள்ள சிவில் அமைப்புகளிற்கு இருந்த தடைகள் நீக்கப்படும், இன, மதங்களிற்கிடையேயான காழ்ப்புணர்ச்சியை ஏற்படுத்தக் கூடிய செயற்பாடுகளிற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும், சுயாதீன நீதிச் சேவைகள், பொதுச் சேவைகள், பொலிஸ் சேவைகள், மனித உரிமைகள், தேர்தல்கள் ஆணைக்குழுக்கள் மற்றும் இலஞ்ச ஊழல்களிற்கெதிரான ஆணைக்குழு போன்றவற்றை அமைத்தல் ஆகிய உறுதி மொழிகள் தமிழ் மக்களிற்குத் தென்பூட்டுபவையாக அமைந்திருந்தன.**

### தமிழ் மக்களை நம்பவைத்த உறுதி மொழிகள்

மைத்திரிபால சிறிசேனவினால் தேர்தல் பிரசாரத்தின் போது அறிவிக்கப்பட்ட நல்லாட்சியரசின் 100 நாள் வேலைத்திட்டத்தில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் தொடர்பாக எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்ற போதிலும், நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமை மாற்றப்பட்டு பாராளுமன்ற முறைமை கொண்டுவரப்படும் , நாடு முழுவதும் ஜனநாயக ரீதியிலான சிவில் நிர்வாகம் மீளக் கட்டியெழுப்பப்படும் , யுத்தக் குற்றங்களிற்காக சுயாதீன நீதி வழங்கல் முறைமை மூலம் நீதி நிலைநாட்டப்படும், நல்லாட்சி, மனித உரிமைகள், சமூகப் பொருளாதார அபிவிருத்திகளில் ஈடுபட்டுள்ள சிவில் அமைப்புகளிற்கு இருந்த தடைகள் நீக்கப்படும், இன, மதங்களிற்கிடையேயான காழ்ப்புணர்ச்சியை ஏற்படுத்தக் கூடிய செயற்பாடுகளிற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும், சுயாதீன நீதிச் சேவைகள், பொதுச் சேவைகள், பொலிஸ் சேவைகள், மனித உரிமைகள், தேர்தல்கள் ஆணைக்குழுக்கள் மற்றும் இலஞ்ச ஊழல்களிற்கெதிரான ஆணைக்குழு போன்றவற்றை அமைத்தல் ஆகிய உறுதி மொழிகள் தமிழ் மக்களிற்குத் தென்பூட்டுபவையாக அமைந்திருந்தன. அத்தோடு, ராஜபக்ஷ அரசின் அராஜக செயற்பாடுகளினாலும், இராணுவக் கெடுபிடிகளினாலும் பீதியடைந்திருந்ததோடு தெற்கிலே மிகப் பிரமாண்டமான முறையிற் கொண்டாடப்பட்டு வந்த போர் வெற்றிக் களியாட்ட கொண்டாட்டங்களினால் புண்பட்டிருந்த தமிழ் மக்கள் மைத்திரிபல சிறிசேனவின் வெற்றி தமக்கு ஓர் சுபீட்சமான விடிவைத்தரும் என்ற நம்பிக்கையில் வாக்களித்தது மட்டுமல்ல அவரது வெற்றியினைப் பட்டாசுகள் கொழுத்தியும் கொண்டாடினர்.

மைத்திரியரசின் நூறு நாள் வேலைத்திட்டமாகத் தேர்தல் விஞ்ஞாபனத்திற் கூறியவை யாவும் செயற்படுத்தப்படவில்லையெனினும், அரச படைகளின் தலையீடற்ற சிவில் நிர்வாகமொன்று ஏற்படுத்தப்பட்டமை, 19வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டமை (குறிப்பாக ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டமை, சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு, பொதுச்சேவைகள் ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு, கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, நீதி சேவை ஆணைக்குழு, எல்லை நிர்ணய ஆணைக்குழு, தேசிய பொருட் கொள்வனவு ஆணைக்குழு மற்றும் இலஞ்ச ஊழ்ல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கான ஆணைக்குழு போன்ற ஆணைக்குழுக்களை அமைப்பதற்கான அரசியலமைப்புச் சபையொன்றினை அமைப்பதற்கு வழிவகுத்தமை), இனங்களிற்கிடையேயிருந்த கசப்பு நிலைகள் குறைவதற்கெடுத்த நடவடிக்கைகள் (இது சட்டமூலமாக ஏற்படுத்தப்படவில்லையெனினும், அரசியற் தலைமைகளின் செயற்பாடுகளின் மூலம் நம்பிக்கையூட்டுவனவாக அமைந்திருந்தன) போன்றவை மைத்திரியரசின் நல்லாட்சிச் செயற்பாடுகள் தொடர்பாக நம்பிக்கையளிப்பனவாக அமைந்திருந்தன.

இதனடிப்படையிலேயே நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியின் ஆகஸ்ட் 2015 பொதுத் தேர்தலும் நோக்கப்பட்டது. நல்லாட்சியரசை இரண்டு வருடங்களிற்கு நீடிப்பதற்கான ஐக்கிய தேசியக்கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆகியவற்றிற்கிடையிலான ஒப்பந்தம் மற்றும் இரா சம்பந்தன் அவர்களை நாட்டின் எதிர்க்கட்சித் தலைவராக்கியமை, தமிழ் மக்களிற்கு மேலும் நம்பிக்கையூட்டுவனவாக அமைந்தன.

அதுமட்டுமல்லாது செப்ரெம்பர் 2015 ஆம் ஆண்டு இலங்கையின் அனுசரணையுடன் ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 30/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை, 2015 டிசம்பரில் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் பிரதம மந்திரியினால் அரசியலமைப்பு மாற்றத்திற்கான பொதுமக்கள் கருத்தறி குழு அமைக்கப்பட்டமை, 2016 ஜனவரியில் நல்லிணக்கப் பொறிமுறைகள் பற்றிய கலந்தாலோசனைக்கான செயலணி பிரதமரால் அமைக்கப்பட்டமை (இச் செயலணியானது வலிந்து காணாமற்போனோர் அலுவலகம், ஈடு செய்தலிற்கான அலுவலகம், விஷேட வழக்கறிஞரைக் கொண்ட நீதித்துறை மற்றும் உண்மையைக் கண்டறிதல் தேடுதல், நீதி, நல்லிணக்கம், மீண்டும் நிகழாமை பொறிமுறைகள் தொடர்பாக மக்கள் கருத்தறிவதற்காக அமைக்கப்பட்டது), மார்ச் 2016இல் கொண்டுவரப்பட்ட சாட்சிகளைப் பாதுகாக்கும் சட்டம் மற்றும் அரசியலமைப்பு மாற்றத்தைக் கொண்டுவரும் நோக்கில் அரசியலமைப்புப் பேரவையை உருவாக்குவதற்கான சட்டமூலத்தினைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றியமை, தகவல் அறியும் சட்ட மூலத்தினை யூன் 2016 இல் பாராளுமன்றத்தில் நிறைவேற்றியமை, யுத்த அனர்த்தங்களின் போது இறந்தவர்களை நினைவுகூருவதற்கிருந்த தடைகள் நீக்கப்பட்டமை போன்றவை நல்லாட்சியரசின் செயற்பாடுகளிற்கு வலுவூட்டுபவையாக அமைந்திருந்தன.

### ஏமாற்றத்தின் ஆரம்பம்

நல்லாட்சியரசின் இத்தகைய செயற்பாடுகளிற்கு மத்தியிலும் அவர்கள் மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை, குறிப்பாகத் தமிழ் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை, 2016 ஆம் ஆண்டின் பிற்பகுதிகளிலிருந்து படிப்படியாகக் குறைவடையத் தொடங்கியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் முக்கிய காரணிகளாக அரசபடைகள் வசமிருக்கும் தனியார்களிற்குச் சொந்தமான காணிகளை விடுவிப்பதில் உள்ள ஸ்தம்பித நிலை, ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 30/1 தீர்மானத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு எவ்வித முனைப்புகளும் காட்டாமை, உதாரணமாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்:

1) வலிந்து காணாமற்போனோர் அலுவலக சட்ட மூலத்திற்கமைவாகக் காரியாலயங்களை அமைக்காமை,
2) இழப்பீடுகளை ஈடு செய்தலிற்கான அலுவலகம் தொடர்பான சட்டமூலம் இயற்றாமை,
3) மனித உரிமை மீறல்கள், துஷ்பிரயோகங்கள் மற்றும் சர்வதேச மனிதசட்ட மீறல்கள் தொடர்பானவற்றை விசாரிப்பதற்கான (பொதுநலவாய மற்றும் ஏனைய வெளிநாட்டு நீதிபதிகளைக் கொண்ட) நீதிப் பொறிமுறை ஏற்படுத்தாமை,
4) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தை மீளாய்வு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்காமை,
5) பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்குப் பதிலீடாக சர்வதேச நடைமுறைகளிற்கு அமைவான சட்ட மூலத்தை உருவாக்காமை,
6) வலிந்து காணாமற்போனோர் தொடர்பாகப் பொறுப்புக் கூறுவதற்கான பொறிமுறையை ஏற்படுத்துவதில் காட்டப்படும் நழுவல் போக்கு.

அத்துடன் அரசியலமைப்பின் பத்தொன்பதாவது திருத்தச்சட்டத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு, தேசிய பொருட் கொள்வனவு ஆணைக்குழு என்பனவற்றின் செயற்பாடுகளிற்கு வேண்டிய சட்டமூலங்களை ஏற்படுத்துவதிலுள்ள தாமதம் (தேசிய கணக்காய்வு சட்டமூலம் மூன்று வாரத்திற்குள் ஆக்கப்படுமென நூறு நாள் வேலைத்திட்டத்திற் குறிப்பிடப்பட்டுள்ளது) மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்களின் உறுப்பினர்களை சிபார்சு செய்வதற்காக அமைக்கப்பட்ட அரசியலமைப்புச் சபையின் பத்து உறுப்பினர்களில் மூன்று உறுப்பினர்களைத் தவிர ஏனையோர் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருப்பதனால் சுயாதீன ஆணைக்குழுக்களின் நியமனங்கள் அரசியல் சார்புடையதாக அமைந்துள்ளமை, மத்திய வங்கி பிணை முறி விவகாரத்தில் அரசு காட்டிவரும் மென்போக்குத் தன்மை, 19வது திருத்தச் சட்டம் தேர்தல் விஞ்ஞாபனங்களிற் கூறியவாறு நிறைவேற்று அதிகார முறைமையை முற்றாக நீக்கி முழுமையான பாராளுமன்ற முறைமைக்கு வழிசமைக்கத் தவறியமை ஆகியவை அமைகின்றன.

தேர்தல் முறைமை மாற்றியமைக்கப்படுமென்று ஜனாதிபதித் தேர்தலின் நூறுநாள் வேலைத்திட்டத்திலும், நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் குறிப்பிடப்பட்டிருந்தும் இது வரை அது தொடர்பாக எவ்வித முடிவுகளும் எட்டப்படாமை மற்றும் பட்டதாரிகளிற்கு கிரமமான முறையிலான ஒழுங்குபடுத்தப்பட்ட நியமனங்கள் வழங்கப்படும் (Regular appointments in a systematic fashion) என நூறு நாள் வேலைத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தும் இது வரை அது தொடர்பான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாமை (இதுவே பட்டதாரிகளை, குறிப்பாக வடக்கு, கிழக்கிலுள்ள பட்டதாரிகளைத் தொடர் போராட்டத்தில் ஈடுபட வைத்துள்ளது) போன்றவை அரசின் நம்பகத் தன்மையைக் கேள்விக்குறியாக்குகின்றது.

**வலுவடையும் ஏமாற்றம்**


இவை எல்லாவற்றிற்கும் மேலாகத் தமிழ் மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அரசியலமைப்பு மாற்றத்திற்கான நடவடிக்கைகளில் பொது மக்கள் கருத்தறி குழுவின் அறிக்கை மற்றும் அரசியலமைப்புப் பேரவையின் ஆறு உபகுழுக்களின் அறிக்கைகளும் வெளிவந்த நிலையில் வழிகாட்டற் குழுவின் செயற்பாடுகள் ஓர் மந்தகதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றமை, ஜனாதிபதி, பிரதம மந்திரி, அமைச்சர்களிடமிருந்தும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்தும் அரசியலமைப்பு மாற்றம் தொடர்பான மாறுபட்ட கருத்துகளும் தமிழ் மக்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருந்த ஒற்றையாட்சி முறைமையில் மாற்றம், சகல மதங்களிற்கும் சமமான உரிமை, மாகாணங்களிற்கு வழங்கப்படும் அதிகாரங்களில் மத்திய அரசு மீளப் பெறவோ, தலையிடவோ முடியாத வகையிலான அரசியலமைப்பு மாற்றமென்பதனைக் கேள்விக்குறியாக்கும் வகையில் அமைந்திருக்கின்றமை, நல்லிணக்கப் பொறிமுறைகள் பற்றிய கலந்தாலோசனை தொடர்பான செயலணியின் இறுதி அறிக்கையினைச் செயலணி உறுப்பினர்களிடமிருந்து பெறுவது தொடர்பில் அரசு காட்டிய அசமந்தப் போக்கு மற்றும் அவ்வறிக்கை தொடர்பான விமர்சனங்கள், தமிழ் மக்களிற்கு நல்லாட்சி அரசின் செயற்பாடுகளில் ஏற்பட்ட நம்பிக்கையீனத்தை மேலும் வலுவடையச் செய்துள்ளது.

ஒரு புறத்தில் கூடிய அதிகாரங்களை மாகாணங்களிற்கு வழங்குவதற்கான ஓர் அரசியலமைப்பு மாற்றத்தைக் கொண்டுவருவதற்கான முனைப்புகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அதே வேளை மாகாணங்களிற்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை மத்திய மயப்படுத்தும் நோக்கினாலான "அபிவிருத்தி (விஷேட ஏற்பாடுகள்)" சட்டமூலம் மற்றும் "இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்தி" சட்டமூலங்களினைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முயற்சித்தமை மற்றும் மாகாணங்களிற்கான மூலதன செலவீட்டு ஒதுக்கீட்டினை 2017ஆம் ஆண்டு ஏறத்தாழ 50% ஆகக் குறைத்துள்ளமை, அரசு நிதிப் பகிர்வு உள்ளடங்கலான அதிகாரப் பகிர்வு சார்ந்த அரசியலமைப்பு மாற்றங்கள் தொடர்பான விடயங்களில் இதய சுத்தியுடன் செயற்படுகின்றதா என எண்ணத் தோன்றுகின்றது.

பொறுப்புக் கூறல் (உ-ம். வலிந்து காணமற்போனோர்) மற்றும் சர்வதேச மனிதநேய சட்ட மீறல்கள் (யுத்தக் குற்றங்கள்) தொடர்பானவற்றை விசாரிப்பதற்கான நீதிப் பொறிமுறையில் சர்வதேசப் பங்கினை முற்றாக நிராகரித்துவரும் அரசின் போக்கு. நீண்டகாலமாக எவ்வித வழக்குகளும் பதிவுசெய்யப்படாது சிறையிலிருக்கும் தமிழ் அரசியற் கைதிகள் தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை, கொஸ்கம மற்றும் மீதொட்டமுல்லை அனர்த்தங்களின் போது அரசு விரைவாகச் செயற்பட்டுப் பாதிக்கப்பட்டவர்களிற்கு நட்டஈடுகள், வீட்டு வாடகைகள் போன்றவற்றைக் கொடுப்பதற்குக் காட்டும் அக்கறை, இருபத்தைந்து வருடங்களிற்கு மேலாக யுத்த அனர்த்தங்களினாற் பாதிக்கப்பட்டு வீடுகளை, காணிகளை இழந்து நிற்கும் தமிழ் மக்களிற்குக் காட்டாமை போன்றவை அரசின் மீது தமிழ் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கைகள் வீணடிக்கப்பட்டுள்ளன என்பதனை மேலும் உறுதிப்படுத்துகின்றது.

இவை எல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாக நோக்கும் போது நல்லாட்சி அரசின் இரண்டு வருடம் மூன்று மாத கால செயற்பாடுகள் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளிற்கு ஏமாற்றத்தைக் கொடுப்பனவாகவே இருக்கின்றன. •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



www.dreamstime.com

# பின்னோக்கித் திரும்ப முடியாத அரசியலின் இடியப்பச் சிக்கல்



பேராதனைப் பல்கலைக்கழகத்தின்
தத்துவத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்
**சரித்த ஹேரத்**

மோதலின்போது அல்லது யுத்தம் நிகழும் சந்தர்ப்பங்களின்போது உருவாகும் ஒரு தீர்மானகரமான ஒரு நிலைமை தான் இருக்கும் இடத்திலிருந்து பின்னோக்கிச் செல்ல முடியாத நெருக்கடியான நிலைமையாகும். தற்போது இருக்குமிடத்தில் இருந்து பின்னோக்கிச் செல்வது என்பது எந்த வகையிலும் செய்யமுடியாத, ஆபத்தான விடயமாக மாறுவதையே இதன்மூலம் கருதப்படுகிறது. இந்த நிலைமையை Point of No Return என ஆங்கிலத்தில் கூறப்படுகிறது. "பின்நோக்கித் திரும்ப முடியாது" என்ற நிலைமைக்கு இந்த நாட்டு அரசியலில் மையக்குழுக்கள் அனைத்தும் இப்போது சிக்குண்டு இருக்கின்றன. இந்நிலைமையை எமது நாட்டு அரசியலின் மிக முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பமென நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. ஒருபுறம் அரசாங்கத்தின் ஒட்டுமொத்த செயற்பாடு என்ற ரீதியில் நோக்கினாலும் இது தெளிவாகத் தோன்றுகிறது. மறுபுறம் அந்தந்த அரசியல் கட்சிகளின் உள்ளார்ந்த அதிகாரப் போராட்டங்களின் இயல்பு நிலையில் இருந்து நோக்கினாலும், இவ்விடயம் தெளிவாகத் தோன்றுகிறது. எமது நண்பர் ஒருவரின் கூற்றுப்படி, கடந்த தேர்தல்களின் பெறுபேறாக, காணக்கூடிய எவருக்குமே 'விலாசம் இல்லாத நிலைமை' தற்போது 'பின்னோக்கித் திரும்ப முடியாத'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமை வளர்ச்சியடைந்துள்ளதையே எனது நண்பர் ஒருவர் குறிப்பிட்டார்.

எமது நாடு எதிர்நோக்கியுள்ள அரசியல் குழப்பத்திலிருந்து, கரையேறுவதாயின் அதற்காக மேற்கொள்ள வேண்டிய அத்தியாவசிய விடயம் இவ்வாறாக 'ஓரடியை பின்னோக்கி வைத்தல்' முடியாத நிலை ஏற்பட்டுள்ளது காரணம் : ஏற்பட்டுள்ள அரசியல் சிக்கலாகுமென நாம் நிலைமையைப் புரிந்துகொள்ள வேண்டும். இப்புதிய நிலைமை காரணமாக ஸ்ரீலங்கா சுதந்தரக்கட்சி மீது ஏற்படும் தாக்கங்களை விளக்குவதாக இருப்பினும், ஒட்டுமொத்தமாக நாடு எதிர்நோக்கியுள்ள சிக்கலான நிலைமையைப்பற்றி ஒரு குறிப்பையேனும் இங்கு எடுத்துக்கூறுவது முக்கியமாகும்.

**தாராண்மைவாத ஜனநாயகமும் சந்தைப் பொருளாதாரமும்**

தற்போதைய அரசாங்கத்தின் பிரதமர் உட்பட்ட குழுமம் தற்போது அறிமுகம் செய்துள்ள தாராண்மைவாத ஜனநாயகமும், சந்தைக்கு அனைத்தையும் தீர்மானிப்பதற்கு வழங்கும் முறைமையிலான பொருளாதார முகாமைத்துவமும் இன்று அரசியல் மற்றும் பொருளாதாரத்துறையில் நாடு முன்னோக்கிச் செல்ல முடியாத, பின்னோக்கித்திரும்ப முடியாத நிலைமை கட்டியெழுப்பப்படுவதை புரிந்துகொள்ளல் இங்கு மிக முக்கியமாகும். ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் பொருளாதாரம் முதலாளித்துவச் சந்தையை அடிப்படையாகக் கொண்ட, பொருளாதார தொழில் முயற்சியாகும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அபிவிருத்தியின் வழிகாட்டி சந்தை முதலாளித்துவம் என்பதை ஏற்றுக்கொண்டே, அவர்கள் செயற்படுவார்கள். அரசு என்பது வெறுமனே வசதிகளை மேற்கொள்ளுபவர் என்ற வகையில் சிறகுகளை வெட்டி சந்தைக்குத் தாம் விரும்பியவாறு செயற்படுவதற்கு இடமளித்து, நாட்டை அபிவிருத்தி செய்ய முடியுமென்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்பதில் சந்தேகமில்லை. இந்த அங்கீகாரத்திற்குப் பொருத்தமான வகையில் ஆலோசனைகளை சர்வதேச நிதி நிறுவனமும் உலக வங்கியும் இந்த அரசாங்கத்திற்கு வழங்குவதில் எதுவித சந்தேகமுமில்லை. மேற்படி பொருளாதார ஆலோசனைகள் மூலம் இந்த நாட்டின் வளங்களை இயன்றளவு விற்பனை செய்ய வேண்டும் அல்லது குத்தகைக்கு விடவேண்டும் என்றே அவர்கள் சிந்திக்கின்றனர். அம்பாந்தோட்டை துறைமுகம், ஸ்ரீலங்கன் விமானசேவை, மின்சாரசபை, திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் போன்ற அரச வளங்களை ஏலத்தில் விற்பனை செய்யும் நிலைக்கு இந்த ஆட்சியாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர். இந்த நிலைமை தற்போது வளர்ச்சியடைந்து வருவதோடு அவற்றிற்கு எதிராக எழுச்சியுறும் மக்கள் ஆர்ப்பாட்டங்களினால் கொழும்பு நகரம் குழப்பமடையாத ஒரு வாரத்தை தேடிக்கொள்ள முடியாத அளவிற்கு அரசியல் அழுத்தம் (Political Stress) உருவெடுத்து வருகிறது. பொருளாதாரக் கொள்கையில் இருந்து பின்னால் திரும்ப பிரதமர் தயாராக இல்லை. அதுமாத்திரமல்ல நிதி அமைச்சில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்குக்கூட விரும்பாத ஒரு நிலையைக் காட்டியதாகவும் தகவல்கள் கூறுகின்றன. இந்நிலைமையின் கீழ் நாட்டின் பொருளாதாரம் தொடர்பாக ஜனாதிபதிக்கும், பிரதமருக்குமிடையே கட்டியெழுப்பப்பட்டு வரும் ஒன்றுக்கொன்று முரண்பாடான மற்றும் எதிர்ப்புத்தன்மை, இவர்கள் இருவரில் ஒருவர் ஓரடி பின்னோக்கி எடுக்காத அளவிற்கு மென்மேலும் வளர்ச்சியடைய இடமுண்டு. "சைட்டம்" பிரச்சினை மூலம் இந்நிலைமை மேலும் சிக்கலடைவதையே எடுத்துக் காட்டுகிறது. சைட்டம் பிரச்சினையின் தரப்பினரான அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் வைத்திய அதிகாரிகள் சங்கமும் பின்திரும்ப முடியாததுபோல சுகாதார அமைச்சர் உட்பட அரசாங்கமும் பின்னோக்கி திரும்ப முடியாத அளவு உள்நாட்டில் அல்லது வெளிநாட்டு நிலைமைகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டு இருப்பதை இங்கு தெளிவாகக் காணக்கூடியதாக உள்ளது.

**சிவில் சமூகத்தின் மட்டுப்பாடுகள்**

மறுபுறம் ஆட்சி செய்கையில் 'பின்னோக்கித் திரும்ப முடியாது' என்ற கோட்பாட்டில் இந்த அரசாங்கம் சிக்குண்டு இருப்பதற்கு மற்றுமோர் காரணம்: கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு எதிராக கொழும்பில் இருந்து சிருஷ்டிக்கப்பட்ட சிவில் சமூகத்தின் தலைவர்களின் அரசியல் அறிவில் காணப்படும் மட்டுப்பாடாகும். இவ்வாறாக அரசியல் ரீதியாக சிந்திக்கும் மட்டுப்பாடுகள் எவ்வளவு இருப்பினும் அவர்களுக்கு அரசாங்கம் மீதுள்ள தாக்கம் பாரதூரமானது. இது எதுவிதக் குறைவுமின்றி முன்னெடுக்கப்படுகிறது. இதுவரைகாலம் இந்நாட்டின் அரசியல் சமூகத்திற்கு தாக்கத்தை ஏற்படுத்திய சிவில் சமூக அறிஞர்களின், இங்கு கூறப்படும் புதிய சிவில் சமூகத் தலைவர்கள் தீர்மானகரமான முறையில் மாற்றமடையும் பல காரணிகள் உண்டு. ஆனால் அதன்மூலம் முக்கியமான காரணி இந்த புதிய சிவில் சமூக குழுமங்களைச் சார்ந்தோர் சுட்டிக்காட்டும் தமது சமூக சிந்தனையிலுள்ள அரசியல் அல்லாத நிலைமையாகும். கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது அரசியல் அலங்கரிப்பாளர்களாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் குழுக்கள் இவர்களுக்கு அமைத்துக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கொடுத்த கோஷங்கள் ஊழல்களும், களவும் மோசடிகளுமற்ற ஒரு சமூகமென்பதாகும். சிவில் சமூகக் குழுக்கள் இவற்றை 'உண்மையிலும் உண்மை' என நம்பினர். தற்போது இவர்கள் அரசாங்கத்தில் செல்வாக்குச் செலுத்தும்போது அரசியல் அலங்கரிப்புக்களாக சொன்னவற்றை இன்று உண்மையில் மேற்கொள்ள வேண்டுமென சுட்டிக்காட்டுகின்றனர். தங்கக் குதிரைகளில் இருந்து ஆரம்பித்து "லம்பு கினி" கார்கள் ஊடாகப் பெருக்கெடுக்கும் அரசியல் அலங்கரிப்பாளர்கள் இப்பூமியில் பிடித்துக் காட்டுவதுபோல கோரிக்கை விடுத்து அரசாங்கத்தை இறுக்கிப் பிடிக்க சிவில் சமூகம் முயற்சிக்கிறது. மீள திரும்ப முடியாத வகையில் இத்தாக்கங்கள் இடம்பெறுகின்றன. கொழும்பு சிவில் சமூகம் பற்றி இந்த அரசியலுக்கு எதுவிதமான பிரதிபலிப்பையும் அரசாங்கத் தரப்பிலிருந்து கிடைப்பதில்லை. அரசியல் அலங்கரிப்பாளர்களுக்கும், அரசியல் யதார்த்தத்திற்கும் உள்ள வேறுபாட்டைப் புரிந்துகொள்வதற்கு இருக்கக் கூடிய ஆற்றலின்மையின் பாரதூரமான தன்மையையே இது சுட்டிக்காட்டுகிறது. சிவில் சமூகத் தலைவர்கள் இந்த அரசாங்கத்தின் தனி உடைமையாளர்களாக மாறியுள்ள தன்மை காரணமாக அலங்காரம் 'பிழைகளைக் கண்டுபிடிக்கும்' பாதையில் செல்வதாயின் மீண்டும் திரும்பிப் பார்க்காமல் இருப்பதற்கு அரசாங்கத்திற்கு எந்த சந்தர்ப்பமும் கிடைக்கும் வழி தெரியவில்லை. தவறு இருப்பினும் இல்லாவிட்டாலும் மகிந்த ராஜபக்ஷவுடன் தொடர்புகொண்டவர்கள் மகிந்த ஆட்கள் யாராவது ஒருவரை கூட்டில் வைத்துக் கொண்டு இருப்பதற்கு அரசாங்கம் கட்டாயமாக நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே அரசாங்கத்தின் பதவிக்காலம் நீடிக்கும் அளவிற்கு கூட்டில் இருப்போரின் பெயர்பட்டியல் நீண்டுகொண்டே போகும். தன்னைத் தவிர மற்றைய அனைவரையும் கூட்டில் வைக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஐக்கிய தேசிய கட்சியின் அமைச்சர்கள் அன்று ராஜபக்ஷ அரசாங்கத்தில் இருந்த, இன்றும் இந்த அரசாங்கத்திலும் அமைச்சர்களாக உள்ள ஒரு நாட்டில் இதிலிருந்து கழன்று விட முடியுமா?

**மைத்திரிபால சிறிசேன / மகிந்த ராஜபக்ஷ மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி**

'மீண்டும் திரும்ப முடியாது' என்ற கோட்பாட்டின் பாரதூரமான இரையாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியலும் அக்கட்சியோடு தொடர்புகொண்ட தொடர்ந்தும் இணைந்திருக்கும் அரசியல்வாதிகளின் மேற்படி கோட்பாட்டிற்கு இரையாகி உள்ளனர். மறுபுறம் மேற்படி கட்சியில் அங்கத்தவராக இருந்த மற்றும் இருக்கும் கட்சி உறுப்பினர்களை இது பாதிக்கிறது. மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி ராஜபக்ஷ ஆட்சியின்கீழ் தனக்கு ஒருபோதும் பிரதமர் பதவியாவது கிடைக்க மாட்டாது என்று கருதியதன் காரணமாகவே ஸ்ரீலங்கா சுதந்தரக்கட்சியில் இருந்து வெளியேறினார். அவ்வாறு வெளியேறி தனக்கு உரிமையில்லாத ஒரு மைதானத்தில் போராடி வெற்றிபெற்றார். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இருந்து வெளியே இருக்கும் ஒருவராக அன்றி ஸ்ரீலங்கா சுதந்தரக்கட்சியின் உத்தியோகபூர்வ தலைவர் என்ற வகையிலே அவர் ஜனாதிபதியின் கடமைகளைச் செய்து வருகிறார். தற்போதைய நிலைமையின்கீழ் அவர் மீண்டும் திரும்ப முடியாத நிலையிலேயே உள்ளார். இரண்டு விடயங்களை அவர் தலையில் சுமக்க வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. ராஜபக்ஷ தரப்பினருடன் அரசியல் செய்யும் நிலையில் அவர் இல்லை. அந்த திசையை நோக்கி திரும்ப முடியாத நிலை ஒருபுறம் இருக்கிறது. மறுபுறம் தான் நம்பும் அரசியலுக்கு எதுவித அனுகூலமும் இல்லாத ஐக்கிய தேசியக் கட்சிமீது முழுமையாகத் திரும்பவும் அவரால் முடியவில்லை. இதனை அவருடைய உரைகள் எடுத்துக் காட்டுகின்றன. இந்த இரண்டாவது விடயம் காரணமாகவே கொழும்பை மையமாகக் கொண்ட சிவில் சமூகத்தை அவர் எதிர்த்து வருகிறார். ஐக்கிய தேசிய கட்சியின் பக்கம் முழுமையாகத் திரும்புவதற்கு மைத்திரியின் மனதில் ஒரு பாரிய சங்கடம் இருக்கின்றது. இதனையே கொழும்பின் சிவில் சமூகம் நகைச்சுவையாக நோக்குகின்றது. இந்நிலைமை தற்போது மைத்திரியபால ஜனாதிபதிமீது ஓர் ஆபத்தைக் கொண்டு செல்லுகிறதேயொழிய ஒரு தீர்வை மேற்கொள்ளவில்லை. இந்த இரு தரப்பில் ஒரு தரப்பு மீதேனும் திரும்ப முடியாமை எதிர்காலத்தில் திரும்பமுடியாத ஓர் அரசியல் நெருக்கடியின் பெருநிமிதம் மாத்திரமல்லாமல் தமது தற்போதைய அரசியலில் பாரதூரமான நிலைமையை சிருஷ்டிப்பதாக மாறமுடியும் என்பதைப் புரிந்துகொள்வது மிக முக்கியமாகும்.

மறுபுறம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பெரும்பான்மை மக்கள் நம்பிக்கை வைக்கும் தலைவனாக மகிந்த ராஜபக்ஷ மாறியுள்ளார். மைத்திரியின் பக்கம் திரும்ப முடியாத ஒரு நிலைமையை அடிப்படையாகக் கொண்டே தற்போதைய அரசியல் மையப்படுத்தப்பட்டுள்ளது. 'மைத்திரியுடனும் செயற்பட முடியும்' என அவர் பகிரங்கமாகக் கூறினாலும் அரசியல் அர்த்தத்தில் அத்தகைய ஒன்றை அவரால் செய்ய முடியாது என்பதை இருதரப்பிலும் இடம்பெறும் விடயங்கள் சுட்டிக்காட்டுகின்றன. தனது அதிகாரத்திற்கு சவால்விடுத்த மைத்திரியுடன் எவ்வாறு ஒன்றிணைந்து செயற்படுவதென மகிந்த சிந்திக்கக் கூடும். அதேசமயம் ராஜபக்ஷாக்களுடன் ஒன்றிணைந்து அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வது தற்கொலைக்கு ஒப்பானதென மைத்திரி சிந்திக்கக்கூடும். இந்த பாம்பு கீரி பகைமையின் ஊடாக உருவாக்கப்படும் 'மீண்டும் திரும்பிப் போக முடியாது என்ற பிளவு இன்றைய நாளில் மாத்திரமல்லாது எதிர்வரும் தசாப்தம் பூராவும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அரசியல் வெற்றியை முடக்கிவைப்பதற்கு சந்தர்ப்பம் உண்டெனப் புரிந்துகொள்வது முக்கியமாகும். உயர்மட்டத் தலைவர்களின் இந்த நிலைமை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் இரண்டாம் மட்டத்தலைமை மீது இதனைவிட பாரதூரமான ஒரு போக்கை ஏற்படுத்தியுள்ளது. கடந்த பொதுத்தேர்தலில் மகிந்தவிற்கு பின்னால் மறைந்திருந்து வெற்றிபெற்ற தற்போதைய அரசாங்கத்தின் பதவிகளைப் பெற்றுக்கொண்ட ஒருசில ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள், அவர்கள் அதுவரை காலம் மைத்திரி பற்றி கூறிய தீங்கான வார்த்தைகளை இரவில் மாற்றுவதற்கு முயற்சியெடுத்தாலும் மீண்டும் ஒருபோதும் மகிந்தவின் பக்கத்திற்கு திரும்பமுடியாதென சபதம் செய்தே அவ்வாறு நடந்துகொள்ளுகின்றனர். இந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அமைச்சர்கள் தத்தமது மாவட்டங்களின் கட்சி சார்பான தன்மை மூலம் கிடைக்கும் தீய துலங்கல் காரணமாக 'ராஜபக்ஷவின் கேக்கையாவது சாப்பிடுவதில்லை' என்ற அளவிற்கு உள்மனதால் கோபத்துடனேயே காலத்தைக் கழிக்கின்றனர். இந்தக் கோபத்திற்கு கட்சி உறுப்பினர்களோ அல்லது ராஜபக்ஷாக்களோ குற்றவாளிகள் அல்ல. நாட்டைப்பற்றியோ கட்சியைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


www.tamilaruvi.news

பற்றியோ உள்ள பற்றுதலைவிட தத்தமது தனிப்பட்ட அரசியல் லாபத்திற்காக வேலை செய்வதன் காரணமாக அவர்கள் தாம் தோண்டிய குழிகளிலேயே விழுந்து புரள்கின்றனர். மகிந்தவும், மைத்திரியும் ஒன்றிணைய வேண்டுமென அவர்கள் தனிப்பட்ட கலந்துரையாடல்களில் ஏற்றுக்கொண்டாலும் அத்தகைய ஒன்றிணைவின் போதாயினும் தாம் தோல்வியடையக் கூடுமென அச்சத்தோடு இருப்பதனால் மீண்டும் திரும்ப முடியாத ஒரு மனோநிலையையே வெளியாருக்குக் காட்டுகின்றனர்.

ஒன்றிணைந்த எதிர்கட்சியின் நிலைமையும் இதற்கு இரண்டாம்பட்சத்தில் இல்லை. ஒன்றிணைந்த எதிர்க்கட்சியில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் (எல்லோருமல்ல) அரசியல் என்ற வகையில் அந்தந்த மாவட்டங்களில் தமக்கு இருக்கும் விருப்பு கோரிக்கைமீது வேறு எவரும் பயன்பெறாத வகையில் காத்துக்கொள்வதே அவர்களுடைய நோக்கமாகும். 'மாணிக்கத்தைக் காக்கும் ஒரு நாகராஜனைப் போல அவர்கள் அடுத்த தேர்தலில் விருப்பு வாக்குகளையே பாதுகாத்துக்கொள்ள முனைந்துள்ளனர். இதனையே மகிந்தவின் சார்பில் இருப்பதாக கூறுகின்றனர். அதன் காரணமாகவே மைத்திரி – மகிந்த இணைந்த அரசியலுக்கு மீண்டும் திரும்ப முடியாதென ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் பலர் கூறிவருகின்றனர்.

**சிக்கலான தன்மை**

நாட்டின் அரசியல் எங்கே செல்கிறது? எவராலும் அதன் கரையைக் காணமுடியவில்லை. குறிப்பிட்ட உணவு வேளையை அடையும் பொருளாதாரத்தோடு ஒரு மலை போன்ற பிரச்சினைகளை நாடு எதிர்நோக்கும் நிலையில் இப்பிரச்சினைகள் குவிந்தவண்ணம் இருப்பது தெளிவு. இந்த ஒரு பிரச்சினைக்கேனும் சரியான பதில் அறிந்த ஒருவர் அரசாங்கத்தின் தரப்பிலிருந்து கண்டுபிடிக்க முடியாத நிலைமை மிகவும் கஷ்டமான, பயங்கரமான ஒரு விடயமாக மாறியுள்ளது. அம்பாந்தோட்டை துறைமுகம் எத்தகைய நிபந்தனைகளின்கீழ் சீனாவிற்கு தாரைவார்த்துக் கொடுக்கப்படுகிறது என்பதை யாரும் அறிய மாட்டார்கள். ETC ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதா? இல்லையா ? என்பதைப்பற்றி அறிந்தோரைக் கண்டறிய முடியாது. சைட்டம் தொடர்ந்து இப்படியே இருக்குமா அல்லது அரசு பொறுப்பேற்குமா ? என்ற விடயத்தை அமைச்சரவையில் உள்ள எவரும் அறிய மாட்டார்கள். புதிய அரசியலமைப்பு கொண்டு வரப்படுமா? அல்லது தற்போதைய அரசியலமைப்புக்கு திருத்தங்கள் மாத்திரம் மேற்கொள்ளப்படுமா ? என்பதுபற்றி கடவுளுக்கும், ஜயம்பதி விக்கிரமரத்னவிற்கும் மாத்திரமே தெரியும். உள்ளூராட்சி தேர்தல் எப்போது நடக்குமென்பதை தேர்தல் ஆணையத்தைத் தவிர வேறு ஒருவரும் அறிய மாட்டார்கள்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அமைச்சரவை உறுப்பினர்கள் முதல் அனைத்து அதிகாரிகளும் இப்பிரச்சினைகளுக்கு விடையளிக்காமல் தட்டிக்கழிப்பது மாத்திரமல்லாமல், நாம் ஒரு கேள்வியைக் கேட்டால் மீண்டும் எம்மிடமே அதே கேள்வியைக் கேட்டு நேரத்தை வீணடிக்கின்றனர். 'அரசாங்கம் வினாக்களைத் தொடுக்கும் அதே வேளை மக்கள் நாட்டை ஆட்சி செய்கின்றனர்' என்ற உணர்வே தினசரி மாலையில் செய்திகளைப் பார்க்கும்போது எமக்குத் தோன்றுகிறது. அனேகமான அமைச்சர்கள் 'இவ்வாறு நடந்தால் நல்லது' அல்லது 'அப்படி நடந்தால் இப்படி நடக்கும்' என்ற வகையிலான கதைகளைக் கூறி மழுப்புகின்றனர். ஒரு நிலைப்பாடு இல்லாதபோதும் நடைபெறக்கூடும் என்பதை உணர்த்தும் வினைச்சொற்களின் ஊடாக நிலையற்ற கூற்றுக்கள் முன்வைக்கப்படுகின்றன. ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாக 'இரு தரப்பிற்கும்' பொருத்தப்பாடில்லாத சொற்களை வீசியெறிவதே பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாக செய்து வருகின்றனர். பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாக அவற்றை மூடி மறைக்கின்றனர்.

### தேசிய வாதமும் இடதுசாரி வாதமும்

இரண்டு முக்கிய விடயங்கள் காரணமாகவே தேசியவாதத்துடன், இடதுசாரிவாதம் ஒன்றிணைகிறது. தீவிரவாதத்தினால் அல்லது இனவாதத்தினால் தேசியவாதம் விழுங்கப்படும் சவாலை வெற்றிகொள்வதற்கான ஆற்றல் இடதுசாரிவாதத்தினுள் உண்டு என்பது முதலாவது விடயமாகும். முதலாளித்துவத்தின் உலகமயமாக்கல் கருத்திட்டத்தினுள் உருவாகும் சமூக நீதியை மழுங்கடிக்கும் 'சந்தையின் கடவுள்வாதத்தை' முகாமைத்துவம் செய்வதற்கு ஆற்றல்கொண்ட ஓர் அரசை உருவாக்குவதற்கு இடசாரிகளுக்குள்ள ஆற்றல் காரணமாகவே இவ்வாறு இடம்பெறுகிறது. பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமான முறையில் சந்தையை முகாமைத்துவம் செய்வதே முக்கிய விடயமென்பதை இங்கு புரிந்துகொள்ள வேண்டும். சமத்துவமற்றோர் மத்தியில் உள்ள போட்டியை நிவர்த்திப்பது போல சமூக நலனோம்பு அரசை ஏற்றுக்கொள்வதே முக்கிய விடயமென இங்கு நாம் புரிந்துகொள்ள வேண்டும். கல்வியில் அரச பங்களிப்பு பற்றி இன்று தோன்றியுள்ள சைட்டம் பிரச்சினையை திர்ப்பதாயின் அத்தகைய அரசியலாலேயே அது சாத்தியமாகும். மறுபுறம் கலாசாரங்களின் பாதுகாப்புச் சந்தையை கீழ்மைப்படுத்துவதற்கு இடமளிக்காமையும் அத்தகைய அரசை மையப்படுத்திய நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்வதும் முக்கியமாகும். வர்க்கம் பற்றிய மரபுரீதியான விளக்கத்தில் தேங்கியிராமல் முன்சென்ற இடதுசாரி வாதத்திற்கு கலாசாரத்தில் உள்ள முக்கியத்துவத்தை மதித்தல் வேண்டும்.

தோன்றுகின்ற சமூகப் பொருளாதார, அரசியல் மறைசக்தியை பயனுறுதியாக ஆக்குவதற்கு நான் முன்னர் குறிப்பிட்ட அனைத்து விடயங்கள்மீதும் அரசியல் ரீதியான தலையீடுகளின் கலையை மிக நடைமுறை சாத்தியமான சமர்ப்பணத்தை நாம் ஏற்படுத்த வேண்டும். இத்தகைய முன்னோக்கிய வேலைத்திட்டத்தை பிரேரிப்பது, இலங்கையின் ஜனநாயகத்திற்காக செயற்படும் பிரஜைகளின் மைய அரசியல் அபிலாஷையாக வேண்டும்.

### இந்தியாவின் செல்வாக்கு

இந்நிலைமை காரணமாக 80 களில் இருந்து எமது நாட்டின் அரசியலுக்கு இந்தியாவின் செல்வாக்கு தொடர்ச்சியாக இருந்து வருகிறது. நடந்து முடிந்த அனைத்தையும் திரும்பிப் பார்க்கும்போது அது ஒரு சினிமா படத்தைப் போன்றது. எமது நாட்டில் கடந்த 25 ஆண்டுகால அரசியலில் இந்திய செல்வாக்கு மிக அதிகமாகவே இருந்து வந்துள்ளது. இலங்கையின் அரசியலில் முழுமையாக இந்தியச் செல்வாக்கின் ஊடாக இடம்பெற்ற நெருக்கடி இந்தியப் பிரதமரினதும் இலங்கை ஜனாதிபதியினதும் படுகொலைகளுடனேயே முற்றுப் பெற்றது. தென்னிலங்கையில் இளைஞர் அரசியலை நெறிப்படுத்திய விஜயவீர குழுவினர், இந்திய தேச விஸ்தரிப்பு வாதத்தில் இருந்து ஆரம்பித்து இந்தியப் பண்டங்களை பகிஷ்கரித்து 1989 இல் இரண்டாவது கிளர்ச்சியை உருவாகினர். விஜயவீர உட்பட அனைத்து சிங்கள இளம் தலைவர்கள் அரசியலில் இருந்து முழுமையாக நீக்கப்பட்டனர். வடபுலத்தின் அரசியலும் அங்கு செயற்பட்ட ஜனநாயக தமிழ் அரசியல் தலைமையில் இருந்து ஆரம்பித்து அனைத்து இளம் அரசியல்வாதிகளின் உயிர்களைப் பறித்து வடபுலத்தின் அரசியல் முற்றுப்பெற்றது.


இவ்வாறாக ஒன்றில் நேரடியாக இந்திய அரசியலின் செல்வாக்கின்மூலம் அல்லது மேற்படி செல்வாக்கிற்கு துலங்கலாக மறைமுகமான பயணத்தின்மூலம் நாம் பாரதூரமான நெருக்கடி மார்க்கத்திலேயே பயணிக்க நேர்ந்தது. கடந்த வாரத்தில் எரிபொருள் ஊழியரின் வேலைநிறுத்தத்தின் மூலம் மீண்டும் இந்த மார்க்கத்திலேயே மற்றுமோர் பாதையில் சென்றமையை நோக்கக் கூடியதாக இருந்தது. அந்தப் பாதையில் பயணிப்பதில் பாரதூரமான ஆபத்து இருப்பதையும் நாம் உணரக்கூடியதாக உள்ளது.

இந்த அரசாங்கத்தின் பொருளாதார கொள்கை என்று ஒன்றை சரியாகக் கூறமுடியாது. எனினும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாதார பயண மார்க்கம் அவர்கள் 2002, 2004 காலகட்டத்தில் பழைய பாதையிலேயே சென்றனர். அதற்கமைய நாட்டில் விற்கக்கூடிய அனைத்தையும் விற்பது பொருளாதாரத்தின் வெற்றியாகுமென்ற கருத்தே நிலவுகிறது. உயரமானோருக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவியும், குட்டையானவர்களுக்கு தொழிலாளர் பதவியும் எனக் கூறுவதுபோல, தற்போது சீனாவிற்கு அம்பாந்தோட்டை, இந்தியாவிற்கு திருகோணமலை என்றே கூறவேண்டியுள்ளது. துறைமுகங்களை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார மர்ம ஸ்தானங்கள் சீனாவிற்கும், இந்தியாவிற்கும் ஒப்படைத்தல் ஒருபுறம், நாட்டில் வடபுலத்திலும் தென்புலத்திலும் பாரிய சமூக அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. அத்தகைய அழுத்தத்தின் இறுதி விளைவு மீண்டும் ஒரு சுழற்சியின்மூலம் வடக்கிலும், தெற்கிலும் மோதச் செய்வதன் பெறுபேறாகும். அத்தகையதொன்று ஏற்படாத வகையில் பொறுப்புக் கூறுவது மிக அவசியமாகும்.

ஏப்பிரல் 25, 26 ஆந் திகதிகளில் நடைபெற்ற எரிபொருள் வேலைநிறுத்தம் நிலைமைகளையும் அதனால் ஏற்படக்கூடிய சம்பவங்களையும், அச்சுறுத்தல்களையுமிட்டு கவனித்தல் வேண்டும். ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.economynext.com




Source: Central Bank of Sri Lanka

# பாரிய வெளிநாட்டுக் கடன்சுமை இலங்கையை கடன்பொறியில் சிக்கவைத்துள்ளது.

கடன் தவணையையும், வட்டித் தவணையையும் செலுத்துவது பாரதூரமான பிரச்சினையாக மாற்றியுள்ள இலங்கையின் வெளிநாட்டுக்கடனை நாம் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு அதிகரிக்கச் செய்துள்ளது. குறிப்பாக கடந்த தசாப்தத்தில் சேர்ந்து குவிந்துள்ள, இன்று சுமார் 47 பிலியன் டொலர் பாரிய வெளிநாட்டுக் கடன் சுமை தவணையையும், வட்டித் தவணையையும் மீளச் செலுத்துவதற்கு மீண்டும் கடன்பெற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. கடன் தவணையையும் மற்றும் வட்டித்தவணையையும் மீளச் செலுத்துவதற்கு மீண்டும் கடன்பெற வேண்டிய நிலைமையை கடன்பொறி என்றே அறிமுகப்படுத்த வேண்டியுள்ளது.

**கடனையும் வட்டியையும் மீளச் செலுத்துதல்**

கடன்சேவை செலவென அறிமுகப்படுத்தப்படும், வருடாந்தக் கடனையும் வட்டித் தவணைகளையும் செலுத்தவேண்டிய அளவு, 2015 இல் 1.8 பிலியனாக இருந்தது. இது கடந்த வருடத்தில் 2.4 பிலியன் டொலர் வரை அதிகரித்தது. இந்த அளவு இந்த

**நிமல் சந்தரத்ன**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டில் ஓரளவு குறைத்துக் காட்டினாலும், அண்மைக் காலத்தில் தாங்கமுடியாத சுமையாக இதன் அளவு அதிகரிப்பதற்கு வாய்ப்புண்டு. உதாரணமாக 2018, 19 ஆண்டுகள் ஆகும்போது இதன் அளவு 4 பிலியன் டொலர் வரை அதிகரிக்க இடமுண்டென தற்போது கணிப்பிடப்பட்டுள்ளது. கடன் தவணையும், வட்டித்தவணையும் இவ்வளவு பெரிய அளவில் அதிகரிப்பதற்கான காரணம் நாம் பெற்ற பாரிய கடன் மற்றும் அதிக செலவினம் மற்றும் அதன் பெறுமானம் மற்றும் பயனுறுதி குறைந்த, உற்பத்தி வளர்ச்சியில்லாத உட்கட்டமைப்பு கருத்திட்டங்களுக்காக பயன்பட்டிருந்தமையேயாகும்.

**வெளிநாட்டுக்கடன் அதிகரித்தல்**

2000 – 2009 இற்கு இடைப்பட்ட காலத்தில் வெளிநாட்டு கடன்தொகை துரிதமாக அதிகரித்தது. 2000 இல் ஒன்பது பிலியனாக இருந்த கடன் 2009 இல் 18.6 பிலியனாக அதிகரித்தது. அதன் பின்னர் கடந்த ஐந்து ஆண்டுகளுக்குள் மேற்படி கடனின் அளவு இரு மடங்கைவிட அதிகரித்தது. 2014 இல் 42.9 பிலியனாக அதிகரித்தது. இது எமது மொத்த தேசிய உற்பத்தியில் 53.6 ஆகும்.

புதிய அரசாங்கத்தின்கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் வெளிநாட்டுக் கடனின் அளவு தொடர்ந்து அதிகரித்தது. 2015 இன் முடிவில் மேற்படி அளவு 44.8 பிலியன் ரூபாய்களாக அல்லது மொத்த தேசிய உற்பத்தியின் 54.4% ஆக அதிகரித்திருந்தது. 2016 யூலை மாதத்தில் அது 47.4 பிலியன் டொலர் வரை அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், 2016 ஜனவரி மாதம் முடிவுறும்போது .அது 46.6 பிலியன் டொலர் வரை சிறு அளவில் குறைந்தது. இன்று வெளிநாட்டுக் கடனின் அளவு எமது மொத்த தேசிய உற்பத்தியின் நூற்றுவீதமாக கணக்கீடு செய்யும்போது அது நூற்றுக்கு 55% ஆகுமென கணக்கிடப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் எமது கடன் அளவு அதிகரிப்பதற்கான அடிப்படைக் காரணம் ஏற்கனவே இருந்த கடனையும், வட்டியையும் செலுத்துவதற்கு மீண்டும் கடன்பெற வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானமையாகும். இவ்வாறாக அதிக அளவில் கடன் பெறுவதற்கு மற்றுமோர் காரணம் உண்டு. தேசிய அரசாங்கம் முன்னெடுத்த பொருளாதாரக் கொள்கைகளாகும். அரசாங்கத்தின் நிதி மற்றும் பிஸ்கால் கொள்கை காரணமாக வெளிநாட்டு வர்த்தக நிலுவையின் பற்றாக்குறை காரணமாக பிரச்சினை மேலும் உக்கிரமடைந்தது.

**வெளிநாட்டுக் கடன் பெறுவதன் நன்மைகள்**

வெளிநாட்டு கடன்கள் பெறுவது தவறாகாது. உண்மையில் இவ்வாறாக வெளிநாடுகளில் இருந்து கடன்பெறுவது நாட்டின் முதலீட்டுக்கு அவசியமான உள்நாட்டு சேமிப்பு, போதாத சந்தர்ப்பங்களில் மேற்படி பற்றாக்குறையை ஈடுசெய்வது பிரயோசனமானது. அதேசமயம் நீண்டகால பொருளாதார அபிவிருத்திக்கு உதவக்கூடிய பாரிய அளவிலான உட்கட்டமைப்பு கருத்திட்டங்களை உருவாக்குவதற்கு இத்தகைய கடன்கள் பிரயோசனமாகும். ஒரு நாட்டில் அபிவிருத்திக்கு அவசியமான வெளிநாட்டு வளங்கள் குறையும்பட்சத்தில் வெளிநாட்டுக் கடன்களைப் பெறுவது பற்றாக்குறையை நிவிர்த்தி செய்வதற்கு உதவியாக அமையும். அதேசமயம் கொடுக்க வேண்டிய நிலுவை தற்காலிகமாக பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மேற்கூறிய வெளிநாட்டுக் கடன் பிரயோசனமாக அமையும். சுருக்கமாகக் கூறிவதாயின் பொருளாதாரம் உயர் மட்டத்தில் உயர்த்துவதற்கு பொருளாதார அபிவிருத்தியும், உயர் மட்டத்தை அடைய ஓர் உந்துசக்தியாக தேசிய செல்வமும் போதியதாக அமையாதபோதும் வெளிநாட்டுக் கடன் ஒரு நாட்டிற்கு பயனுள்ளதாக அமையும்.

எவ்வாறாயினும், எவ்வளவு கடன் பெறுவது என்பது, அதற்கு செலுத்த வேண்டிய வட்டியின் விகிதம் எவ்வளவு என்பது மேற்படி கடன் எந்த நிபந்தனையின்கீழ் பெறப்படுகின்றது என்பதை பொறுத்தது. இவை அனைத்தையும்விட பெற்றுக்கொள்ளும் கடன் என்னென்ன விடயங்களாகப் பயன்படுத்தப்படும் என்பதில் தங்கியுள்ளது. வெளிநாட்டுக் கடன் பெறும்போது சில வரையறைகளை நிச்சயித்துக்கொள்ள வேண்டிவரும். மேற்படி கடனையும், வட்டியையும் மீளச் செலுத்தக்கூடிய வகையில் அக்கடனைப் பெறவேண்டுமென்பதே இதன் பொருளாகும்.


அதற்கமைய பெறும் வெளிநாட்டுக்கடன், நாட்டின் நீண்டகால பொருளாதார நிரந்தர தன்மைக்கும், அபிவிருத்திக்கும் சில சமயங்களில் நன்மை பயப்பதோடு சிலசமயங்களில் அது தீமையையும் விளைவிக்கக்கூடும். எனவே ஒரு நாட்டின் பொருளாதார நிலைபேறான தன்மையையும், அபிவிருத்தியையும், கடனையும் வட்டியையும் திருப்பிச் செலுத்தும் ஆற்றலையும் மேம்படுத்துவது அத்தியாவசியமாகும். குறிப்பாக ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் ஒரு பொருளாதாரம் கடன்பொறியில் சிக்காமல் இருப்பதிலேயே தங்கியுள்ளது என்பதை கவனத்திற்கொள்ள வேண்டும். அவ்வாறு இருக்கத்தக்கதாக நாம் இன்று எதிர்நோக்கியுள்ள கடன் பிரச்சினை,: அதிகாரத்திலுள்ள அரசியல் தலைமையைப் போலவே தற்போதைய தலைமைத்துவத்தினதும், பொருளாதார முகாமைத்துவத்தின் குறைபாடுகள் காரணமாகவும் அமையலாம்.

வெளிநாட்டு நிதியைப் பயன்படுத்துதல், வெளிநாட்டுக்கடன் என்ற பிரச்சினையின் அடிநாதத்தின் இயல்பு, பெற்றுக்கொள்கின்ற வெளிநாட்டுக்கடன் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது ? என்ற இயல்பிற்கு அமையவே தீர்மானிக்கப்படுகிறது.

உதாரணமாக பெறும் கடனின் வட்டிவீதம் கடன் மீளச் செலுத்தும் காலஎல்லை என்பனமீதும் இது தங்கியுள்ளது. கடனை மீளச் செலுத்துதல் நாட்டின் பொருளாதாரத்திற்கு சுமையாகாமல் இருப்பதாயின் மேற்கூறிய விடயங்களைப்பற்றி கவனமாயிருத்தல் வேண்டும். அண்மைக் காலத்தில் நாட்டின் வெளிநாட்டுக் கடன்சுமை உயர்வதை தாங்கிக்கொள்ள முடியாத மட்டத்திற்கு சென்றுள்ளமைக்கு காரணம் பெற்றுக்கொண்ட கடனை மீளச் செலுத்துவதற்கான நிதி ஏற்பாடுகள் இல்லாத பாரியளவு உட்கட்டமைப்பு அபிவிருத்தி கருத்திட்டங்களுக்காக மேற்படி கடனை பயன்படுத்துதல் இந்நிலைமையை மேலும் உக்கிரமடையச் செய்கிறது. வெளிநாட்டு வர்த்தக நிலுவையின் பற்றாக்குறை அதிகரிக்கும் அளவில் நிதி மற்றும் பிஸ்கால் கொள்கைகளை அனுசரித்தல்.

வெளிநாட்டுக் கடனைப் பராமரிக்க முடியாதளவு ஒரு பிரச்சினையாக இலங்கை எதிர்நோக்குவதற்குக் காரணம் உலக வங்கியும், சர்வதேச நிதி நிறுவனமும் 'பராமரிக்கக் கூடிய வெளிநாட்டுக்கடன்' என்பது எதனை? உலக வங்கியும், சர்வதேச நிதி நிறுவனமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வரைவிலக்கணம் செய்வதாவது "ஒரு நாட்டில் நிகழ்கால எதிர்கால வெளிநாட்டுக் கடனின் அளவு, பிற்போடுதல் அல்லது வேறு வகையில் கைவிடாமை, தொடர்ச்சியாக சேர்வதற்கு இடமளிக்காமை நாட்டின் அபிவிருத்திக்கு தடைகளை ஏற்படுத்தாதவாறு, குறித்துரைக்கப்பட்ட கடன் தவணைகள் மற்றும் வட்டித் தவணைகள் முழுமையாக செலுத்துவதற்கான சக்தி உள்ளமை." இந்த வரைவிலக்கணத்திற்கமைய, இலங்கையின் கடன் சுமை தாங்கிக்கொள்ள முடியாததல்ல. உண்மையில் நாம் ஓர் கடன் பொறிமுறையிலேயே வாழ நேர்ந்துள்ளது.

**முடிவுகள்**

இலங்கையின் வெளிநாட்டுக் கடனின் அளவான 47 மிலியன் டொலர் அல்லது நாட்டின் உள்நாட்டு தேசிய உற்பத்தியில் 55% ஆன கடன் தொகை, வருடந்தோறும் பகுதிபகுதியாக கடனும் வட்டியும் செலுத்துவதற்கு மேலும்மேலும் கடன் வாங்க நிர்ப்பந்திக்கப்படுதல். இவ்வாறாகக் கடன் தவணைக்கும், வட்டித் தவணைக்கும் ஆண்டுதோறும் மேலும்மேலும் கடன்பெற நிர்ப்பந்திக்கப்படுதல். இவைமூலம் நாம் ஓர் கடன் பொறிமுறையில் சிக்கியுள்ளதையே காண்கின்றோம்.

மொத்த தேசிய உற்பத்திக்கு சார்பாக எமது வெளிநாட்டுக் கடனின் நூற்றுவீத அளவு வேறு நாடுகளின் இத்தகைய நூற்றுவீதங்களுடன் ஒப்புநோக்குகையில் அர்த்தமில்லை. ஏனெனில் இத்தகைய அனேக நாடுகளில் எமது நாட்டைப்போல பாரதூரமான Balance of Payment நெருக்கடிகள் கிடையாது. எமது பிரச்சினை வாங்கிய கடனை மீளச் செலுத்தமுடியாத வகையில் அவற்றைப் பயன்படுத்தியுள்ளமையாகும்.

கடன் மீளச்செலுத்தும் அளவு எந்த ஆண்டில் குறைந்துள்ளது. 2018 – 2019 ஆண்டுகளில் கடன்களை வழங்குவதற்கான சக்தியை மேம்படுத்துவதற்கு ஒரு சந்தர்ப்பமாகக் கொள்ளவேண்டும். கடனைப் பராமரிக்கும் ஆற்றலை நாம் உருவாக்கிக்கொள்ள வேண்டும். வெளிநாட்டு வருமானத்தை நெருக்கடியான மட்டத்திற்கு எடுத்துச் செல்லாமல் முகாமைத்துவம் செய்தல் வேண்டும். அதற்கு தகுதியான நிதி மற்றும் பிஸ்கால் கொள்கைகளை அனுசரித்து பொருளாதார மறுசீரமைப்புக்களை மேற்கொள்ள வேண்டும். கடன் சுமையைக் குறைப்பதற்கான ஒரு மார்க்கம் நட்டமடையும் அரச தொழில்முயற்சிகளை மறுசீரமைத்தல் மற்றும் தனியார் மயமாக்கல். அரசியல் ரீதியான ஜனரஞ்சகமற்ற தீர்மானங்களைக் மேற்கொள்ள வேண்டும்.

வெளிநாட்டுக் கடன்செலுத்தும் அளவுபற்றிய புள்ளிவிபரங்களில் மாற்றம் ஏற்படலாம். நாட்டின் உண்மையான கடனாளிகளின் நிலைமையை மேற்கூறிய ஆவணங்களில் இருந்து சுட்டிக்காட்டுவதற்குப் பதிலாக அவை பாரதூரமானவையாக அமையலாம். ஏனெனில் மேற்கூறிய புள்ளி விபரங்கள் அரசாங்கத்தின் கருத்திட்ட கடன்களின் அளவு சர்வதேச பிணைமுறிகளின் கடன் அளவு. இத்துறைகளுக்கு வெளியில் பெறக்கூடிய வேறு கடன் அளவுகளையும் சேர்த்தால் நாட்டின் உண்மையான கடன்சுமை இதைவிட அதிகமாகும். ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலையகத்தின் வீட்டுத் தொகுதி

# நல்லாட்சி நாட்கள் : இரண்டு வருட அனுபவங்களின் மீட்டல்



நாடாளுமன்ற உறுப்பினர்,
நுவரெலியா மாவட்டம்.
**ம. திலகராஜா**

நாட்டில் நல்லாட்சி உருவாக்கப்படும் என பிரச்சாரம் ஆரம்பிக்கப்பட்டபோதே இருக்கின்ற ஆட்சி நல்லாட்சியில்லை என்கின்ற முடிவுக்கு வரவேண்டியிருந்தது. எனவே நல்லாட்சி என்றால் என்ன என்று வரைவிலக்கணப்படுத்திக்கொண்டு அதனை உருவாக்குவதற்கு மாறாக இருக்கின்ற ஆட்சியை மாற்றிவிட்டால் அது நல்லாட்சி என்கின்ற புரிதலே பரவலாக ஏற்பட்டது. அதுவே இன்று நிகழ்ந்தும் இருக்கின்றது. ஆனால், இப்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டுவிட்ட நிலையில் ஆட்சி மாறினால் நல்லாட்சி என்கிற மனநிலை மாறி உண்மையில் நல்லாட்சி ஒன்றிற்கான தேவை குறித்தும் உரையாடப்படுகின்றது. எனவே, நல்லாட்சி என்பதன் புரிதல் நாட்டிற்குள் ஏற்பட்டிருக்கின்றது என்பதனையே இது காட்டுகின்றது.

முன்னைய ஆட்சியில் இருந்த குறைபாடுகள் பல விமர்சனங்களுக்கு உள்ளாகியது. குறிப்பாக ஜனநாயக மறுப்பு, சர்வாதிகாரத்தை நோக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



www.economynext.com

ஆட்சி, மனித உரிமை மீறல், போன்றன அதில் பிரதான கவனத்தைப்பெற்றன. பாராளுமன்றத்திடம் இருந்து விடுபட்ட ஆட்சி முறைமை தனியே நிறைவேற்று அதிகாரத்தை நோக்கி திரும்பியமை ஜனநாயகத் தன்மையை வலுவிழக்கச் செய்தது. அதுவே சர்வாதிகாரத்திற்கும் வழிவகுத்ததது. குடும்ப ஆட்சிக்கும் வழிவகுத்தது. இவற்றினூடாக பல்வேறு மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றன. யுத்தத்தை வென்றெடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் யுத்தத்தின் பின்னரும் தொடர்ந்தமை சிறுபான்மை தேசிய இனங்களையும் தாண்டி நாட்டில் பரவலாக பாதிப்பை அனுபவிக்கத் தொடங்கிய வேளை ஆட்சியை மாற்ற வேண்டும் எனும் தேவைப்பாட்டை உருவாக்கியது. அதேநேரம் இருக்கின்ற அந்த அதிகார மையப்படுத்தலை தன்வசமே வைத்துக்கொள்ள கொண்டுவரப்பட்ட பதினெட்டாவது அரசியலமைப்புத் திருத்தம், ஆட்சியை நீடித்துக்கொள்வதற்காக அவசராமாக ஜனாதிபதி தேர்தலையும் முன்கொண்டுவந்தது. ஆட்சியை மாற்ற வேண்டும் என எதிர்ப்பார்த்திருந்த மக்கள் தமக்கு கிடைத்த வாய்ப்பினூடாக ஜனாதிபதி தேர்தலை ஒரு 'சர்வஜன வாக்கெடுப்பாக' மாற்றி ஆட்சியை மாற்றிப்போட்டார்கள். அதனூடாக ஜனநாயக மரபு மீறி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பதினெட்டாவது அரசியலமைப்புத் திருத்தம் கேள்விக்கு உள்ளானது. எனவே, ஜனாதிபதி தேர்தலின்போதே மக்கள் நல்லாட்சிக்கான ஆரம்பத்தைக் கொடுத்தார்கள்.

அதற்கு பின்னதான நடைமுறைகள் என்று பார்த்தால் ஒரு குடும்பத்தின் அதிகார ஆட்சி ஓரளவு ஆட்டம் கண்டது. அரசியலமைப்பில் 19வது திருத்தம் கொண்டுவரப்பட்டு 18 வது திருத்தம் வலுவிழக்கச் செய்யப்பட்டது. நிறைவேற்று அதிகாரத்தின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டு பதவிக்காலமும் மட்டுப்படுத்தப்பட்டது. எனவே, மக்கள் மாற்றவேண்டும் என தமது வாக்குகளால் வழங்கிய ஆணையை அரசாங்கம் சட்டபூர்வமாக நிறைவேற்றியமை நல்லாட்சியின் அடையாளமாகக் கொள்ளமுடிந்தது. அதேபோல 17வது அரசியல் அமைப்பின் ஊடாக தீர்மானிக்கபட்டும் நடைமுறைப்படுத்தாமல் இருந்த சுயாதீன ஆணைக்குழுக்கள் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டன. இதுவும் நல்லாட்சிக்கான அரசாங்கத்தில் எதிர்பார்க்கப்பட்ட ஒன்று. அதுவும் நிறைவேறியிருப்பதன் மூலம் நல்லாட்சிக்கான ஒரு கதவு திறக்கப்பட்டுள்ளது என கொள்ளலாம். இவை இரண்டும் நாம் காணக்கூடிய பண்புசார் மாற்றம். இவற்றை பிரயோகிப்பதில் சிக்கல்கள் இருக்கலாம். இருக்கின்றது, என்றே எண்ணத்தோன்றுகின்றது.

அடுத்த எதிர்பார்ப்பு உத்தேச அரசியலமைப்பு. அத்தகைய அரசியலமைப்பை உருவாக்குவதற்காக மேற்கொண்டிருக்கும் முயற்சிகள் ஜனநாயகத்தன்மையை காட்டி நிற்பது மகிழ்ச்சி. மக்கள் கருத்தறியும் குழு, நாடாளுமன்றம் அரசியலமைப்பு சபையாகவும் செயற்படுதல் போன்றன ஆட்சியமைப்பை தீர்மானிக்கும் வாய்ப்பை மக்களுக்கு வழங்கும் ஜனநாயகத்தை காட்டிநிற்கின்றது. இந்த முன்னெடுப்பு வெற்றியடையும் வரை அது நல்லாட்சிக்கான பயணமாக மட்டுமே கொள்ள முடியும். தவிரவும் தகவல் அறியும் உரிமைச் சட்டம், காணாமல் ஆக்கப்பட்டடோர் பற்றிய தகவல் அறியும் அலுவலகம் போன்ற முயற்சிகள் கூட நல்லெண்ண வெளிப்பாடுகளே.

ஆனாலும், இந்த எல்லா முயற்சிகளும் நல்லாட்சியை உருவாக்குவதற்கான முயற்சிகளாக மாத்திரமே கொள்ளப்படவேண்டியுள்ளது. காரணம் நல்லாட்சிக்கான ஆணையை மக்கள் வழங்கியிருந்தாலும் அதனைக் கொண்டு நடாத்த வேண்டியது ஆட்சியில் பங்கேற்போரின் பொறுப்பாகிறது. அத்தகைய ஆட்சிப்பங்கேற்போர் மக்கள் ஆணையை மட்டுமின்றி மரபு சார்ந்த முறைசாரா முறைமையொன்றுக்கும் கட்டுப்பட்டு இயங்க வேண்டிய நிலைமையில் உள்ளனர். அது சுயாதீனமாக அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் மந்தமான போக்கினைக் காட்டிநிற்கின்றது. அது மக்களிடத்தில் நம்பிக்கையீனத்தையே அதிகரிக்கச் செய்கின்றது. எனவே நல்லாட்சி என்பது இருக்கின்ற ஆட்சியை மாற்றிவிடுவது மாத்திரமல்ல. மரபு ரீதியான அரசியல் முறைமைகளில் இருந்தும் விடுபட்டு சுயாதீனமாக செயற்படுதில் இருந்தே ஏற்படுத்தப்படக்கூடியது. இந்த ஆட்சியின் தவறுக்கான நியாயங்கள் கடந்த ஆட்சியில் இடம்பெற்ற தவறுகளாக இருந்துவிட முடியாது. பண்புசார் மாற்றங்களுக்கு அப்பால், மக்களின் நாளாந்த வாழ்வில் உணரக்கூடிய அபிவிருத்தியை, பொருளாதார வாய்ப்பு வசதிகளையும் மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். நல்லாட்சி என்பது மக்கள் உணர்வதாக இருக்க வேண்டும். மக்கள் ஆட்சி மாற்றத்தை உணர்கிறார்களே அன்றி நல்லாட்சி நடப்பதாக இன்னும் உணர்வு பெறவில்லை. எனவே மக்கள் அத்தகைய உணர்வுபெற்றவர்களாக வருவதற்கு நீண்ட நெடிய அரசியல் பயணத்தை முன்னெடுக்க வேண்டியுள்ளது. ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




www.google.lk

# நல்லாட்சியில் கழிந்த இரண்டு ஆண்டுகள்– அவலங்களின் வீண் விளையாட்டு



முன்னாள் அமைச்சர்
**பஷீர் சேகுதாவுத்**

உலகின் பெரும்பாலான ஜனநாயக ஆட்சியுள்ள நாடுகளின் அரசாங்கங்களைப் பெரும்பாலும் பலம் பொருந்திய வணிக நிறுவனத் துறையே நெறிப்படுத்தி வழி நடாத்துகின்றது. "நல்லாட்சி" என்பது வணிகத்துறை முன் மொழிந்த ஒரு பிரச்சார அடிப்படையிலான பெயராகும்.

கடந்த மஹிந்த அரசு உள்நாட்டு யுத்தத்தை வெற்றி கொண்டமையால் மமதை தலைக்கேறிய பின் 2009ஆம் ஆண்டில் இருந்து தனிநபர் சர்வாதிகாரப் போக்குடன் செயற்பட்டது. இவ்வடிப்படையில் அமைந்த ஆட்சி முறைமையினால் நாட்டு மக்களில் கணிசமான பெரும்பான்மை மக்கள் ஆட்சி மீது கசப்போடும், கடுகடுப்போடும் காணப்பட்டனர். இரண்டு சிறுபான்மை இன மக்களும் ஏலவே இவ்வாட்சியில் விரக்தியும், விசனமும் கொண்டிருந்தனர். இந்தச் சந்தர்ப்பத்தில் மக்களின் மனவோட்டத்தைப் புரிந்து கொண்ட எதிர்க்கட்சிகளின் அரசியல் வியூகத்துக்கு அவை இட்ட நல்லாட்சி என்ற பெயர் மிகப் பொருத்தமாய் அமைந்து. இதுவே 2015 ஜனவரி 8இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரான மைத்திரிபால சிறிசேனவை வெற்றிக் கம்பத்துக்கு அழைத்துச் சென்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரத்திற்குப் பிந்திய இலங்கையின் அரசியலில் சேனநாயக்க, பண்டாரநாயக்க என்கிற இரண்டு நிலப்பிரபுக் குடும்பங்களிடையேதான் நீண்ட காலமாக அதிகாரப் போட்டி நிலவி வந்தது. இவ்விரு குடும்பங்களும் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரு கட்சிகளும் ஆட்சியமைக்கத் தகுதியுள்ள கட்சிகளினதும் தலைமைப் பொறுப்பை தன்னகத்தே கொண்டிருந்தன.

இடையில் சேனநாயக்க என்ற பிரபுத்துவக் குடும்பத்துக்குப் பதிலாக உயர்குல கொள்ளுப்பிட்டி வளவ்வ குடும்பத்தைச் சேர்ந்த ஜயவர்த்தனா இடத்தைப் பிடித்தார். கொஞ்சக் காலம் பிரேமதாச தற்காலிகமாக மேடை ஏறினார். பின்னர் ஜயவர்த்தன குடும்பத்தின் உறவுக்காரர் விக்கிரம சிங்க என்பவரின் மேட்டுக்குடி வணிகக் குடும்பத்தைச் சேர்ந்த ரணில் விக்கிரமசிங்க 23 வருடங்களாக ஐ.தே.கட்சியின் தலைமையாகத் தொடர்ந்து கோலோச்சி வருகிறார்.

2005 இல் இருந்து ராஜபக்ஷ குடும்பமும் மற்றுமொரு மெதமுலான நிலப்பிரபுக் குடும்பமாக இப்போட்டியில் இணைந்து கொள்ளும் கள நிலவரம் தோன்றியது.

அன்றைய கால கட்டத்தில் இலங்கையின் மூன்று குடும்பங்களின் ஆளும் ஆதிக்க அதிகாரப் போட்டியில் ராஜபக்ஷ குடும்ப ஆட்சியை வீழ்த்துவதற்கு பழமையான இரண்டு மேட்டுக்குடிக் குடும்பங்களும் இணைய வேண்டிய அவசியம் உணரப்பட்டு ரணில் விக்கிரமசிங்கவும் சந்திரிக்காவும் சர்வதேச வணிக நிறுவனத் துறையின் அனுசரணையுடன் ஒன்றிணைந்தனர். இவர்கள் மைத்திரிபால சிறிசேனவை கதாநாயகனாக்கி "அடைந்தால் மகாதேவி அடையாவிட்டால் மரணதேவி" என்ற வீரப்பாவின் சினிமா வாக்கியத்திற்கு ஒப்ப தயாரிக்கப்பட்டு அரங்கேறியதே கடந்த ஜனாதிபதித் தேர்தல் நல்லாட்சி வியூகமாகும். இந்த இரண்டு குடும்பங்களின் இணைவினால் தோன்றியதே மஹிந்தவின் தோல்வியும் ரணில்–சத்திரிக்கா– மைத்திரி ஆகியோரின் கூட்டு வெற்றியுமாகும்.

மைத்திரி ஒரு பண்டாரநாயக்க குடும்ப விசுவாசியாவார். தனது தந்தையால் உருவாக்கப்பட்ட கட்சியின் தலைமைப் பொறுப்பை மைத்திரிக்குப் பின்னர் தனது பிள்ளைகளில் ஒருவருக்கு பெற்றுக் கொடுக்கும் திட்டத்தோடும், நம்பிக்கையோடும் சந்திரிக்கா இன்றைய அரசின் ஆலோசகராக இருக்கின்றார்.

மேற்கூறியவையே, எனது பார்வையில் நல்லாட்சி உருவானதன் பின்னணியாகும். எனவே பாகற்காய் விதையை நட்டால் பறங்கிக்காய் பறிக்கலாம் என்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? ஆனாலும் இந்தக் கொடியில் ஒட்டுத் தொழில் நுட்ப முறையில் வேறு ஒரு வகை காய் காய்க்கக் கூடிய தண்டும் பொருத்தப்பட்டுள்ளது. அது மேற்குலக வகையறாவைச் சேர்ந்தது, இத்தண்டில் இயற்கையாக எது காய்க்குமோ அதையே அறுவடை செய்ய முடியும்.

இந்த அரசாங்கம் வரலாற்று ரீதியாக கீரியும் பாம்பும் போல எதிரெதிரான கொள்கைகளையும், நடைமுறைகளையும் கடைப்பிடித்து வந்துள்ள இரண்டு பெரிய கட்சிகளையும் செயற்கையாக இணைத்து உருவாக்கப்பட்டுள்ள அரசாகும்.

சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் இவ்விரு கட்சிகளும் தனித்தனியே ஆட்சியமைத்திருந்த காலங்களிலும் கூட மனச்சுத்தியோடு ஆக்கபூர்வமான எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்காது உள்ளொன்று வைத்து புறமொன்று பேசியே வந்துள்ளன. இந்த விடயத்தில் மாத்திரமே இரண்டு கட்சிகளினதும் கொள்கைகளும், நடைமுறையும் ஒரேவிதமாகக் காணப்படுகின்றன. இதனையே இப்போதுள்ள கூட்டாட்சியிலும் காணக்கூடியதாக உள்ளது.

மகிந்தவுடன் கோபித்துக் கொண்டு சிறுபான்மை மக்கள் எடுத்த ஏகோபித்த முடிவினால்தான் இவ்வரசு வெல்ல முடிந்தது. இதனைக் கூட ஆட்சி செய்வோர் தங்களது கணக்கில் வரவு வைக்கவில்லை.கடந்த இரு வருடங்களில், சிறுபான்மை மக்களை நம்பாத அதே நேரம் சிறுபான்மையினர் நம்பாத அரசாக இந்தக் கூட்டரசு மாற்றம் பெற்றிருக்கிறது.இது சிறுபான்மையினரை நனைந்த சீலையால் போர்த்திவிட்டு தடியால் அடிப்பதற்கு சமமானதாகும்.

கனவு நனவாகும் வாய்ப்பைக் காணவில்லை. அடங்கிக் கிடந்த பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளும், ஏனைய குற்றச் செயல்களும் பெருகி இருப்பதால் நாட்டில் சட்டமும் ஒழுங்கும் கேள்விக்குறியாகி உள்ளது. நாடெங்கிலும் நாளாந்தம் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன.தொடர் போராட்டங்கள் மாதக் கணக்கில் நீளுகின்றன.

மனித உரிமைப் பேரவையின் தீர்மானங்கள் பற்றிய அரசின் நிலைப்பாடு தெளிவில்லாமல் வெறும் உளறல்களாக வெளிவருகின்றன. நாட்டுக்குள் போதை வஸ்துக்களின் வரவும், விற்பனையும் என்றுமில்லாதவாறு அதிகரித்துவிட்டன. சர்வதேசப் போதைப் பொருள் மா∴பியாக்களின் தலையீடு காணப்படும் மெக்சிக்கோ நாட்டின் நிலைமையைப் போல் நமக்கும் நேர்ந்து விடுமோ ? என அஞ்சும் அளவு நிலமை மோசமாகக் காணப்படுகிறது. என்றும் இல்லாத அளவு வடக்கிலும் போதைப் பொருட்களின் ஊடாட்டம் அதிகரித்துவிட்டது.

எல்லாவற்றிற்கும் மேலாக புதிய அரசியலமைப்பைக் கொணர்ந்து நாட்டின் ஜனநாயகத்தை வலுப்படுத்துவோம் என்றும், இனப்பிரச்சினைக்குத் தீர்வை வழங்குவோம் என்றும் வழங்கப்பட்ட வாக்குறுதி இரண்டு ஆண்டுகளாக நூலறுந்த பட்டமாக திக்கற்றுத் திரிகிறது. எவ்வாறாயினும் நல்லாட்சி எனும் கூட்டாட்சிக்குப் பதிலீடாக முன்னைய ஆட்சியை மீள நிர்ணயித்தல் தீர்வாகாகப் போவதில்லை என்பதனால் இன்றைய ஆட்சியின் பெரிய பங்காளிகளாகத் திகளுகின்ற இரண்டு பெரிய கட்சிகளும் தத்தமது கட்சி நலனுக்கு அப்பால் நின்று நாட்டு நலனை முன்னிறுத்தி செயற்படத் துணிய வேண்டும். கடந்த இரண்டு வருட அனுபவங்களைப் பாடமாகக் கொண்டும் அக்காலத்தில் நிகழ்ந்த தவறுகளை சுயவிமர்சன ரீதியாக ஒப்புக்கொண்டும் எதிர்காலத்தைப் பெறுமானமுடைய நடைமுறைகளால் நிரப்பினால்தான் இலங்கையினால் உய்ய முடியும். ●


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


YouTube.com

# ஜனநாயகமும் சுதந்திரமும் சத்திவாய்ந்ததாக அமையும்போது விமர்சனங்கள் அதிகரிக்கும் -

## கௌரவ ஜனாதிபதி **மைத்திரிபால சிறிசேன**

**இன்றைய நாளின் நிலைமையை நோக்கும்போது, எமது வெளிநாட்டுச் சொத்துக்கள் 5 பிலியனுக்கு மேல் உண்டு. எதிர்வரும் மாதங்களில் இந்த நிலைமையில் உயர்ந்த வளர்ச்சி ஏற்படும். எமது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது தொடர்பாக ஆலோசகர்கள் என்ற வகையில் சர்வதேச நிதி நிறுவனம் பணியாற்றி வருகிறது.**

அமைச்சர்கள், அரச மற்றும் அரச சார்பற்ற ஊடகங்களின் பிரதானிகளை புதிய ஆண்டில் முதன்முறையாக சந்தித்தபோது: கடந்துசென்ற ஆண்டுகளின் அனுபவங்களோடு நாட்டினதும், பொதுமக்களினதும், அரசினதும் சிறந்த குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு கடந்த காலத்தைவிட, சகல ஊடக நிறுவனங்களின் ஒத்துழைப்பு தேவை. அரச கொள்கைகளையும், திட்டங்களையும் அமுல்படுத்துகையில் இந்த ஒத்துழைப்பு எமக்கு வழங்கவேண்டுமென அனைத்து ஊடகப் பிரதானிகளிடமும் நான் கௌரவத்துடன் வேண்டுகிறேன். சில முக்கிய விடயங்களைக் கருத்திற்கொண்டு இச்சந்திப்பை ஒழுங்கு செய்தேன். ஓர் அரசு என்ற வகையில் செயற்படும்போது விமர்சனங்கள், குற்றச்சாட்டுக்கள், நிந்தனைகள், அபாசங்கள் ஆகிய அனைத்தையும் நாம் மதிப்பிடும்போது சுதந்திரமான ஜனநாயக நாட்டில் இருக்கும் அதி உச்சகட்ட சுதந்திரமும் ஜனநாயகத்தை அனுபவிப்பதற்கான சந்தர்ப்பமும் அதுவாகுமென நான் கருதுகின்றேன். ஜனாதிபதி பதவியின் அதிகாரங்களை குறைப்பதற்கும் மற்றுமொரு வகையில் இந்தப் பதவியை இல்லாதொழிப்பதற்கும் இந்த நாட்டு மக்கள் என்னை ஆட்சிபீடத்திற்கு தெரிவுசெய்தனர். எந்தப் பிரச்சினையுமின்றி இந்த இரண்டையும் நிறைவேற்றுவதற்கு அன்றும் நான் தயாராக இருந்தேன். இன்றும் அதற்குத் தயார்.

**பொருளாதார ரீதியாக சிறந்த பயணப்பாதையில் நாம் சென்று கொண்டிருக்கிறோம்.**

எமது நாட்டில் குறிப்பிட்டதொரு காலத்தில் தேர்தல்களை நடத்தாமல் அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தை நீடிப்பது அனுபவமாக இருந்தது. எத்தகைய சவால்களையும் பிரச்சினைகளையும் எதிர்நோக்கியபோதும் நீண்டகால அனுபவம் கொண்டவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"**

**ஓர் அரசு என்ற வகையில் செயற்படும்போது விமர்சனங்கள், குற்றச்சாட்டுக்கள், நிந்தனைகள், ஆபாசங்கள் ஆகிய அனைத்தையும் நாம் மதிப்பிடும்போது சுதந்திரமான சனநாயக நாட்டில் இருக்கும் அதி உச்சகட்ட சுதந்திரமும் ஜனநாயகத்தை அனுபவிப்பதற்கான சந்தர்ப்பமும் இதுவாகுமென நான் கருதுகின்றேன். ஜனாதிபதி பதவியின் அதிகாரங்களை குறைப்பதற்கும் மற்றுமொரு வகையில் இந்தப் பதவியை இல்லாதொழிப்பதற்கும் இந்த நாட்டு மக்கள் என்னை ஆட்சிபீடத்திற்குத் தெரிவுசெய்தனர். எந்தப் பிரச்சினையுமின்றி இந்த இரண்டையும் நிறைவேற்றுவதற்கு அன்று நான் தயாராக இருந்தேன். இன்றும் அதற்குத் தயார்.**


dailynews.lk

என்ற வகையில் அனைத்துத் துறைகளின் அரசியல் பிரிவுகளைப் போலவே கல்விமான்கள், அறிஞர்கள் என்போருடன் இணைந்து இந்த நாட்டை சிறந்த சுபீட்சமான நாடாக மாற்றியமைப்பதே எமது தூய்மையான உன்னதமான குறிக்கோளாக அமைந்தது. இந்தக் குறிக்கோளை நோக்கி நாம் பயணித்து வருகிறோம். எமது நாட்டின் பொருளாதாரத்தைப்பற்றி முன்வைக்கப்படும் விமர்சனங்கள், ஆய்வுகள் இருக்கின்றன. ஓர் அரசு என்ற வகையில் நாமும் பொருளாதார ரீதியாக மிகவும் இக்கட்டான நிலையில் இருக்கின்றோம். வெளிநாட்டு வருமானங்கள் குறைந்தமை, அத்துமீறிய வெளிநாட்டுக் கடன்கள் என்பவற்றையே இங்கு குறிப்பிடுகிறோம். எதிர்காலத்தில் இத்தகைய பாரதூரமான பொருளாதார நெருக்கடிக்கு நாம் போகமாட்டோம் என்பதையே இப்புதிய ஆண்டில் நான் மிகவும் தெளிவாகவும், அச்சமின்றியும் நாட்டின்முன் வைக்க விரும்பும் செய்தியாகும். நாம் பொருளாதார ரீதியில் சிறந்த பயணத்தை நோக்கிச் செல்கின்றோம். பிரதமரும், நானும், அமைச்சரவையும் மத்திய வங்கியின் பொருளாதார நிபுணர்களையும் உள்ளடக்கிய அனைவருடன் நாம் சிறந்த பெறுபேறுகளைப் பெறக்கூடிய திசையில் எமது பொருளாதாரப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

இன்றைய நாளின் நிலைமையை நோக்கும்போது, எமது வெளிநாட்டுச் சொத்துக்கள் 5 பிலியனுக்கு மேல் உண்டு. எதிர்வரும் மாதங்களில் இந்த நிலைமையில் உயர்ந்த வளர்ச்சி ஏற்படும். எமது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது தொடர்பாக ஆலோசகர்கள் என்ற வகையில் சர்வதேச நிதி நிறுவனம் பணியாற்றி வருகிறது. எமது நிதியமைச்சரும், பொருளாதார நிபுணர்களும் இந்த நாட்களில் வொஷிங்ரனில் இருக்கின்றனர். அங்குள்ள தகவல்கள் சாதகமாகவே இருக்கின்றன. பாரிய பொருளாதார நெருக்கடியை கற்பனை செய்துகொண்டு எதிர்மறையாகச் சிந்தித்துக்கொண்டு, அனைத்தும் வீழ்ச்சியடையுமெனக் கூறிக்கொண்டு இருக்கும் விமர்சகர்களுக்கு நாம் வழங்கக்கூடிய பதில் இதுவாகும். எமது ஏற்றுமதிகளையும், வெளிநாட்டுச் சொத்துக்களையும் நாம் அதிகரித்துக் கொண்டிருக்கின்றோம். இன்று உயர்ந்த விலை தேயிலைக்கு உண்டு. தேயிலை விலை வீழ்ச்சியடையும்போது மக்களும் அரசியல்வாதிகளும், ஊடகங்களும் அரசாங்கத்தை காரசாரமாக விமர்சிக்கின்றனர். இன்று நீண்டகாலத்திற்கு பின்பு தேயிலையின் விலை உயர்ந்துள்ளது. ஆனால் இதுபற்றி எவருமே கருத்துத் தெரிவிப்பதில்லை. இன்று றப்பருக்கும் நல்ல விலை கிடைக்கிறது. 2015இன் நடுப்பகுதியில் நான் களுத்துறை மாவட்டத்தில் ஒரு விழாவிற்குச் சென்றபோது றப்பர் விலையும், தேயிலை விலையும் வீழ்ச்சியடையும் காரணத்தினால் தாம் வாழமுடியாத ஒரு நிலை ஏற்பட்டுள்ளதென அப்பாவி மக்கள் கடுந்தொனியில் தமது கருத்துக்களை வெளியிட்டனர். இன்று தேயிலைக்கும், றப்பருக்கும் உயர்ந்த விலை கிடைக்கிறது.

இன்று காலையில் ஒரு தேசியப் பத்திரிகையில் முழுப்பக்கமும் பொருளாதார ஆய்வுக் கட்டுரையொன்று வெளியிடப்பட்டிருந்ததை நான் வாசித்தேன். அக்கட்டுரையில் விவசாயம் வீழ்ச்சியடைந்தமைபற்றி குறிப்பிடப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டு நான்கு தவணைகளிலும் விவசாயம் பாதகமான பெறுமதியை சுட்டிக்காட்டியதென அக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்தது. தேயிலை, றப்பர் என்பன விவசாயத்துறையைச் சார்ந்த பண்டங்களாகும். தேங்காயின் விலை உயர்வு பாவனையாளர்களுக்கு ஒரு பிரச்சினையாக மாறியுள்ளது. ஆனால் தென்னை உற்பத்தியாளர்களைப் பொறுத்தவரை தேங்காய்க்கு நல்ல விலை கிடைத்துள்ளது. ஒவ்வொரு நாளும் விமர்சிக்கப்படும் நெல்லுக்கு இன்று உயர்ந்த விலை கிடைக்கின்றது. ஈரமான பச்சை நெல்லை நெல் ஆலைச்சொந்தக்காரர்கள் 40 ரூபாய்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*கலந்துரையாடலில் பங்கேற்ற ஊடக நிறுவனங்களின் பிரதானிகள்*

விலைக்கு வாங்குகின்றனர். விவசாயிக்கும், உற்பத்தியாளர்களுக்கும் நெல்லுக்குச் சிறந்த விலை கிடைத்தாலும் பாவனையாளர்களுக்கு ஒரு தாக்கம் உண்டு. இப்பிரச்சினையை அறிந்துகொண்டுதான் கடந்த சில மாதங்களாக அரிசி வெளிநாடுகளில் இருந்து தருவிக்கப்பட்டது. சந்தை விலையை கட்டுப்படுத்துவதற்காகவே இவ்வாறு செய்யப்பட்டது. நாம் அரிசி சந்தையை கட்டுப்படுத்திக்கொண்டோம். 2016, 2017 ஆகிய ஆண்டுகளில் மாத போகத்தின்போது வரட்சி நிலைமை நாட்டில் ஏற்பட்டது. நெல்விதைக்கும் காலகட்டமே அது. வரட்சியின்போது நாட்டில் நெல் உற்பத்தி உட்பட விவசாயம் 40% வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்பட்டது. எதிர்பாராத வகையில் மீண்டும் மழை ஆரம்பித்தது. அதனால் சிறந்த நிலைமை ஏற்பட்டது. ஆனால், பயிர்ச்செய்கை ஆரம்பிக்கின்ற சந்தர்ப்பத்தில் மழை பெய்யாமை பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தியது.

**சுகாதார நிவாரணங்கள் வழங்கப்பட்டன**

நாம் மருந்துப் பொருட்களின் விலையை பாரியளவில் குறைத்தோம். எந்தவொரு அரசாங்கமும் ஒரு நாளும் செய்யாத பணியை நாம் செய்தோம். எவருமே இவ்விடயத்தில் முன்னர் கை வைக்கவில்லை. இதுபற்றி தலைமை வகித்து இந்த நாட்டின் ஏழை மக்களின் சார்பில் மருந்துப்பொருட்களின் விலையை பாரியளவில் குறைத்தமையையிட்டு, இலவச சுகாதார சேவையின்மூலம் பொதுமக்களுக்கு பல நிவாரணங்களை வழங்கியமை குறித்து, நான் சுகாதார அமைச்சருக்கு எனது நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன். இருதய சத்திரசிகிச்சைகளின்போது அவசியமான ஸ்ரென்த் இலவசமாக வழங்கியமையும் இந்த நிவாரணங்களில் உள்ளடக்கப்படும். கண்களில் பொருத்தப்படும் கண்ணாடி வில்லைகள் தொடர்பாக பல ஆண்டுகளாக பாரிய கள்ள வியாபாரம் இடம்பெற்றது. வைத்தியசாலைகளின் முன்னே வியாபார ஸ்தலங்களை அமைத்து ஏழைகள் அவற்றை வாங்கமுடியாத அதிக விலைக்கு அவற்றை விற்றனர். இன்று அவற்றையும் நாம் இலவசமாக வழங்கி வருகிறோம். இவை அனைத்தும் ஏழை பொதுமக்களுக்கு நாம் வழங்கிய நிவாரணங்களாகும். ஆனால், இந்த அரசாங்கம் ஒன்றுமே செய்யவில்லையென பலர் குறைகூறி வருகின்றனர்.

இலங்கை போக்குவரத்துச்சபை 12 பில்லியன் பெறுமதியான சேமலாப நிதி, நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றை அதன் ஊழியர்களுக்கு கடந்த காலத்தில் செலுத்தியிருக்கவில்லை. முடிவில்லாத வழக்குகள் எதிர்நோக்கப்பட்டன. போக்குவரத்துச் சபையின் தவிசாளர் உட்பட பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள் நீதிமன்றங்களின் முன்னே அழைக்கப்பட்டனர். இன்று அந்த அனைத்து வழக்குகளையும் முடிவுறுத்தியுள்ளோம். 12 பில்லியன் வழங்க வேண்டிய இடத்தில் இந்த 1 1/2 வருடத்தில் 6 பில்லியன் ரூபாய்களை வழங்கியுள்ளோம். பொதுத் தேர்தலின் பின்னர் நிமல் சிறிபால த சில்வா போக்குவரத்து அமைச்சராக நியமிக்கப்பட்டார். ஊழியர்களின் நலன்புரி, வினைத்திறன் வளர்ச்சி, நிறுவன முன்னேற்றம் என்பவை உருவாக்கப்பட்டன.

இ.போ.ச. மற்றும் புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகள் தொடர்பாக சகல அரசாங்கங்களும் குழப்பிக்கொண்டன. இருந்த பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளவில்லை. புகையிரத திணைக்களத்தின் காணிகள் எப்போதும் பகற்கொள்ளை அடிக்கப்பட்டன. ஆனால் எமது அரசாங்கத்தின்கீழ் அந்தக் காணிப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டன. நிதியமைச்சின் கீழ் இருந்த ஒரு நிறுவனத்திற்கு காணிகளினது உரிமைகள் ஒப்படைப்பதற்கு இந்த அரசாங்கத்திற்கு ஆற்றல் கிடைத்தது. அதேபோல கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் தொடர்பாக சிற்சில விமர்சனங்கள் இருந்தன. ஏற்புடைய நிறுவனங்களிடம் இதுபற்றி நான் விசாரித்தேன். இன்று விமான நிலையத்தின் ஓடுதளம் 380 வகையைச் சார்ந்த விமானங்களைத் தரையிறக்குவதற்கு கூடிய வகையில் சீரமைக்கப்பட்டுள்ளது. இந்த விமான ஓடுதளம் பற்றிப் பாரிய பிரச்சினை ஒன்று இருந்தது. குறுகிய காலத்தில் அப்பிரச்சினையை எம்மால் தீர்க்க முடிந்தது. அனைத்து அரசாங்கங்களும் விமான நிலையத்தில் அமைந்துள்ள தீர்வை வரியற்ற கடைத்தொகுதிகளை தமக்கு வேண்டியவர்களுக்கு ஒதுக்கிக் கொடுத்தார்கள். கடந்த காலங்களில் இவற்றில் அனேகமானவை அரசாங்கத்தின் அமைச்சர்களுக்கு சொந்தமானவையாக இருந்தன. முதன்முறையாக ஓர் அரசாங்கம் இந்த கடைத்தொகுதியை விலைமனு கோரி ஒதுக்கப்பட்டது. முன்னர் யாராவது ஒருவருக்கு கையூட்டுக்கொடுத்து இக்கடைத்தொகுதிகள் ஒதுக்கப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



www.president.gov.lk

*கலந்துரையாடலில் பங்கேற்ற ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள்*

**நாம் நாட்டைக் காட்டிக்கொடுக்கப் போவதில்லை**

மேற்படி நிறுவனங்களில் இருந்து கிடைக்கும் வருமானத்தில் 24% எமது அரசாங்கம் அமைப்பதற்கு முன்னர் அரசுக்கு வருமானமாகக் கிடைத்தது. விலைமனு கோரிய பின்னர் 40% வரை அரசாங்கத்தின் வருமானம் அதிகரிக்கப்பட்டது. நாட்டின் அபிவிருத்திபற்றி பேசும்போது நாம் துரிதமான வேலைத்திட்டத்தைத் தயாரித்து குறுகிய காலத்தில் மொறகஹகந்த கருத்திட்டத்திற்கு நீர் நிரப்பப்பட்டது. இன்று இலங்கையில் அதிக ஆற்றல் உள்ள ஒரு கருத்திட்டமாக மொறகஹகந்த கருதப்படுகிறது. இதற்கு முன்னர் பராக்கிரம சமுத்திரம்தான் இந்த இடத்தைக் கொண்டிருந்தது. நாம் மிகக் குறுகிய காலத்தில் இந்த நடவடிக்கைகளின் வெற்றியை சுட்டிக்காட்டினோம். மொறகஹகந்த தனலுக்கு நாம் குவெயிற் அரசில் இருந்து நிதி பெற்றோம். தற்போது அந்த வேலைகளும் ஆரம்பிக்கப்படும். நாம் இந்த அரசாங்கத்தைப் பொறுப்பேற்கும்போது துறைமுக நகரத்திற்கான (போட் சிற்றி) ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. இது இலங்கையில் அண்மைக்காலத்தில் ஏற்பட்ட மாபெரும் காட்டிக்கொடுப்பாகும். இதற்கு முன்னர் இந்த நாட்டில் எந்தவொரு அரசத் தலைவரும் இத்தகைய ஒப்பந்தத்திற்கு கைச்சாத்திட்டு இருக்கவில்லை. நாம் இந்த ஒப்பந்தத்தில் மாற்றங்களை ஏற்படுத்தினோம். சீனாவுடனான நல்லெண்ணத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் சீன அரசாங்கத்தோடு கலந்துரையாடி மேற்படி ஒப்பந்தத்தைத் திருத்தி அமைத்தோம். முன்னைய ஒப்பந்தத்திற்கு அமைய நேரடியாகவே 200 ஹெக்டயார் தனிச்சொத்து அடிப்படையில் சொந்தமாக சீனாவிற்கு எழுதப்பட்டிருந்தது. நாம் அதனை வரியின் அடிப்படையில் திருத்தியமைத்தோம். முன்னைய ஒப்பந்தத்தின்படி அந்தப் பிரதேசத்தில் இலங்கையின் உலங்கு வானூர்தி ஒன்று பறப்பதாக இருந்தாலும் சீனாவிடமிருந்து முன்னனுமதியைப் பெற்றிருக்க வேண்டும். அத்தகைய கண்டிப்பான நிபந்தனைகள் அந்த ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன. ஆனால் அதுபற்றி எவரும் கருத்து தெரிவிப்பதில்லை. நாம் நாட்டைக் காட்டிக் கொடுப்பதாக பொய்ப்பிரசாரம் செய்கின்றனர். மறுபுறம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான ஆணைக்குழு 2015 மார்ச் மாதத்தில் சமர்ப்பிக்கவிருந்த பிரேரணைகளை நாம் பலவீனமடையச் செய்து 2015 செப்டெம்பர் வரை பிற்போட முடிந்தது. செய்யக்கூடிய விடயங்களை மாத்திரம் நாம் நடவடிக்கை எடுத்தோம். செய்ய முடியாத விடயங்களை நாம் செய்ய முடியாதென தெளிவாகக் கூறினோம். இம்முறை முன்வைக்கப்பட்ட பிரேரணையில் உள்ள விடயங்களை இரண்டு வருடங்களுக்கு பிற்போட எம்மால் முடிந்தது. இன்னும் இரண்டு வருடங்களுக்குப் பின்னரே இப்பிரேரணையில் உள்ள விடயங்களுக்கு நாம் விடையளிக்க வேண்டும். எதுவிதமான பிரச்சினையையும் ஏற்படுத்திக்கொள்ளாமல் உள்நாட்டில் மேற்கொள்ளக்கூடிய தகுதியான மாற்றங்களை மேற்கொள்ள முடியுமென நாம் உறுதியளித்துள்ளோம்.

எமது நாட்டில் பாதுகாப்புத்துறை உட்பட அனைத்து துறைகளுக்கும் எந்தவித பிரச்சினையும் ஏற்படாத வகையில் நான் இந்தக் கொடுக்கல் வாங்கலை பூர்த்தி செய்வேன். இதனை நான் மிகத் தெளிவாகக் கூறமுடியும். இன்று எமக்கு சாதகமாக இருக்கும் சர்வதேச நல்லெண்ணத்துடன் எமது பணிகளைத் தொடர முடியும். வடக்கில் மீளக்குடியேற்றம் மற்றும் காணாமற் ஆக்கப்பட்டோர் பற்றி பல்வேறு வகையான எதிர்ப்பியக்கங்கள் இடம்பெற்று வருகின்றன. ஊடகப் பிரதானிகள் என்ற வகையில் உங்களுக்கும், பொதுமக்களுக்கும் இது நன்கு தெரியும். இதனை ஊடகப் பிரதானிகள் என்ற வகையில் நீங்களும், நாட்டு மக்களும் அறிவார்கள். மீளக் குடியேற்றத்தைப் பொறுத்தவரையில் 60% இற்கு அதிகமாக நாம் நிறைவு செய்துள்ளோம். மேலும் மிகச் சிறு எண்ணிக்கையினர் இடம்பெயர் முகாம்களில் தங்கியுள்ளனர். எதிர்வரும் ஒருசில மாதங்களில் இந்நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு நான் எதிர்பார்க்கின்றேன். அதேசமயம் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக இதற்கு முன்னர் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு அறிக்கைகளை எடுத்து அதுபற்றி கோரிக்கை விடுப்பவர்களுக்கு சரியான தகவல்களை வழங்குவதற்கு நான் விசேட நடவடிக்கைகளை தயாரிக்க எதிர்பார்க்கின்றேன். எனவே அந்தப் பிரச்சினையையும் நாம் தீர்த்துக்கொள்ள முடியும்.

மறுபுறம் எதிர்வரும் சர்வதேச வெசாக் வாரத்தை முன்னிட்டு பிரதம விருந்தினராக நாம் இந்தியப் பிரதமரை அழைத்துள்ளோம். விழா நிறைவின்போது பிரதம விருந்தினராக நேபாளத்தின் ஜனாதிபதி அழைக்கப்பட்டுள்ளார். அவர் நிறைவுசெய்யும் விழாவிற்கு வருகை தருவார். அதேசமயம் நாம் இவ்விழாவின் பொருட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் முழுவதும் பௌத்த நாடுகளின் அரச தலைவர்களையும், பௌத்த மதத்தலைவர்களையும், மக்களையும் அழைத்துள்ளோம். எனவே சர்வதேச வெசாக் விழா மிக முக்கியத்துவம் வாய்ந்தது. எனவே இவற்றிற்கு தங்கள் அனைவரது ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கின்றோம். மறுபுறம் அரசதுறையின் நடவடிக்கைகள் தொடர்பாக பல்வேறு விமர்சனங்கள் உண்டு. இந்நிலைமையை கவனத்திற்கொண்டு எதிர்வரும் இரண்டு வாரங்களில் அரச நடவடிக்கைகளுக்குப் புதிய வடிவம் கொடுக்கப்படும். அனேகமான அரச நிறுவனங்களில் பதவிகளில் மாற்றங்கள் ஏற்படலாம். அதன்போது தனிநபர்களின் மாற்றங்களைப் போலவே நிறுவன ரீதியாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை வினைத்திறனுடன் செயற்படுத்துவதற்கு புதிய வேலைத்திட்டத்தை அறிமுகம் செய்வோம். அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான முன்னேற்றத்தை மீளாய்வு செய்யும்போது எமது சில அமைச்சர்கள் அதற்கான நாட்களை ஒதுக்கித் தராமையால் தாமதங்கள் ஏற்படுவதாக எனக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது. சில பிரதேச செயலகப் பிரிவுகளில் ஒரு சில ஆண்டுகளுக்கு ஒருமுறையாவது முன்னேற்ற மீளாய்வு மேற்கொள்ளப்படவில்லை. ஏற்புடைய உத்தியோகத்தர்கள் இதற்கான நாட்களை ஒதுக்கவில்லை. அனைத்து மாவட்டங்களிலும் இணைப்புக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்படும் திகதிகளையும், பிரதேசச் செயலக முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களுக்குரிய திகதிகளை நாம் இங்கிருந்து அறிவிப்போம். இதற்கான கால அட்டவணைகளைத் தயாரிப்பதற்கு நான் ஆலோசனைகளை வழங்கியுள்ளேன். ஏற்புடைய தலைவர்களுக்கு அபிவிருத்தி நடவடிக்கைகளை உரியமுறையில் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளேன்.

அதேசமயம் ஜனாதிபதி கணக்காய்வு தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய பொறுப்புக்களை கடந்த பல வருடங்களாக பூர்த்திசெய்யவில்லையென முன்னைநாள் கணக்காய்வாளர் நாயகம் குறிப்பிட்டிருந்தார். கடந்த இரண்டு ஆண்டுகளில் நானும் கடமைகளை பூர்த்திசெய்யவில்லை. முன்பு பதவி வகித்தவர்களும் அவற்றைச் செய்யவில்லை. அரசியல் அமைப்பின்கீழ் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டாலும் ஜனாதிபதியின் அதிகாரங்களின்கீழ் கணக்காய்வு தொடர்பாக ஜனாதிபதிக்குள்ள பொறுப்புக்கள்பற்றி மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்போது குறித்துரைக்கப்பட்ட அமைச்சுக்களில் கணக்காய்வு நடவடிக்கைகளும், முன்னேற்ற மீளாய்வுகளும் ஜனாதிபதியினால் மேற்கொள்ள வேண்டுமென தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே குறித்துரைக்கப்பட்ட உத்தியோகத்தர்களுடன் நான் மே மாதத்திலிருந்து அந்த வேலைத்திட்டத்தைத் தயாரிப்பேன். ஏற்புடைய கணக்காய்வு உத்தியோகத்தர்களையும், ஏனைய நிறுவன பிரதானிகளையும் அழைத்து அந்த நடவடிக்கைகளை முறையே மேற்கொள்ள முடியும். இதற்கு மேலதிகமாக குறிப்பாக இரண்டு விடயங்கள் தொடர்பாக நான் விளக்கிக் கூற விரும்புகிறேன்.

**சைட்டம் நிறுவனம் மறுசீரமைக்கப்படும்**

நீண்டகாலமாக உண்ணாவிரதங்களும், எதிர்ப்பியக்கங்களும், சத்தியாக்கிரகங்களும் சைட்டம் பிரச்சினை தொடர்பாக தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. எனவே, இது பாரதூரமான ஒரு பிரச்சினையாக மாறியுள்ளது. சைட்டம் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக உயர்கல்வி அமைச்சரும், சுகாதார அமைச்சரும் கடந்த காலத்தில் பாரிய முயற்சியை மேற்கொண்டனர். அதன்பின்னர் நானும் அவர்களுடன் இணைந்து கொண்டேன். இத்துடன் தொடர்புகொண்ட அனைத்து நிறுவனங்களையும் அழைத்து மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தினேன். இதற்கு மேலதிகமாக ஏற்புடைய துறைகளுடன் இடையிடையே கலந்துரையாடி கடந்த நாட்களில் ஒரு நிகழ்ச்சித்திட்டத்தைத் தயாரித்தோம். இதுபற்றிய அனுபந்தங்கள் பத்திரிகைகளில் வெளிவந்தன. அங்கு முன்வைக்கப்பட்ட விடயங்களை மேலும் விபரிக்க வேண்டுமாயின் அது குறித்து அமைச்சர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். அண்மையில் வெளியிடப்பட்ட விடயங்களுக்கு மேலதிகமாக நாம் மேலும் புதிய சில யோசனைகளை சைட்டம் நிறுவனம் தொடர்பாக அரசு செயற்படுத்தத் தீர்மானித்துள்ளது. கடந்த காலத்தில் மேற்கொண்ட கலந்துரையாடல்களின் கருத்துக்களை நான் அனைத்துப் பல்கலைக்கழக மாணவ அதிகாரசபையுடனும் கலந்துரையாடினேன். இதன் அடிப்படையிலேயே மேற்படி தீர்மானங்களை மேற்கொண்டேன். அந்த மாணவர்களை ஜனாதிபதி அலுவலகத்திற்கு அழைத்து அவர்களுடன் இவ்விடயங்களை கலந்துரையாடினேன். மாணவர்களின் கருத்துக்களும் உள்வாங்கப்பட்டன. இந்த சகலவிதமான கருத்துக்களுக்கமைய வெகு அண்மையில் வெளியிடப்பட்ட விடயங்களுக்கு மேலதிகமாக இந்த விடயம் தொடர்பிலும் நாம் செயற்படுத்த நிரந்தரமான தீர்வுகளுக்கு வந்துள்ளோம். குறிப்பாக சைட்டம் நிறுவனம்பற்றி அனைத்து பல்கலைக்கழக மாணவர் அதிகார சபையுடன் நான் நடத்திய கலந்துரையாடலில் முன்வைத்த விடயங்கள் பின்வருமாறு : சைட்டம் நிறுவனம் ஒர தனிநபருக்கு சொந்தமான நிறுவனமாகும். சர்வாதிகார முறையிலேயே இந்த நிறுவனம் செயற்படுகிறது. இங்கு எதுவிதமான பொதுத்தன்மையோ, கூட்டுத்தன்மையோ கிடையாது. எனவே நாம் சைட்டம் நிறுவனத்தின் பிரதானிகளுடனும், எமது அமைச்சர்கள் கலந்துரையாடினர். இதன்போது நானும் தகவல்களைப் பரிமாறிக்கொண்டேன். முழுமையாக இது தனிநபர் என்ற உரிமையில் இருந்து பங்குச்சந்தையில் சேர்க்கத் தீர்மானிக்கப்பட்டது. தனியார் துறையைச் சார்ந்த கூட்டு நிறுவனமாகவும், சட்டபூர்வமான நிறுவனமாகவும் ஸ்தாபிக்க எண்ணினோம். மறுபுறம் இதனை சாதாரண பொதுமக்களும் பங்குரிமையை ஏற்கக்கூடிய முறையில் விரும்பின் பங்குரிமையாக 100 ருபாயை முதலீடு செய்யக்கூடிய வகையில் பங்குடமையைப் பெற முடியும். அதற்கும் வாய்ப்பளித்து தனியார் உடைமையில் இருந்து நீக்கினோம். இதனை பொதுவான கூட்டு நிறுவனமாக மாற்றவேண்டுமென அவர்களுக்கு பணிப்புரை வழங்கப்படும்.

அடுத்த விடயம் இதன் முகாமைத்துவமும் மற்றும் நிர்வாக அதிகாரமும் தனிநபரின் உரிமையாக இருப்பதாகும். நாம் முழுமையாக இது குறித்து கொள்கைத் தீர்மானமாக நிர்வாக சபையொன்றை நியமிக்க வேண்டுமென கட்டளையிடப்பட்டது. நிருவாக சபையின்கீழ் நிருவாக முகாமைத்துவம் மேற்படி அனைத்து நடவடிக்கைகளையும் செய்தல் வேண்டும். உலகில் விசேடமாக அரசசார்பற்ற கல்வி நிறுவனம் மற்றும் அரசசார்பற்ற பல்கலைக்கழகங்களில் அமைந்துள்ள திட்ட முறைமை கவனத்தில் எடுக்கப்படும்.

**இலவசக் கல்வியை வலுவூட்டுதல்**

ஒரு அரசு என்ற வகையில் இலவசக் கல்வியை நாம் பலப்படுத்துவோம். அதேசமயம் இலவசக் கல்விக் கொள்கையின் பண்புகளை மேலோங்கச் செய்தல், அதனை சீரமைத்தல், அதன் தரங்களை உயர்த்துதல், வினைத்திறனுடன் இயக்குவித்தல்,. வளங்களை வழங்குதல், கூடிய நிதி ஏற்பாடுகளை வழங்குதல் என்பன எமது முன்னுரிமைக்குட்பட்ட விடயங்களாகும். அதேசமயம் உலகில் மிக உயர்ந்த அபிவிருத்திகொண்ட வளர்ச்சியடைந்த நாடுகளில் இன்று வளர்ச்சி குன்றிய நாடுகளில்கூட அங்கீகரிக்கப்பட்ட அரச கல்வி நிறுவனங்கள் எமது நாட்டில் இயங்க வேண்டுமென்பதை நாம் கொள்கை ரீதியாக ஏற்றுக்கொள்கிறோம். வைத்தியபீடம் தவிர்ந்த ஏனைய அனைத்து தனியார் கல்வி நிறுவனங்கள் எமது நாட்டில் உள்ளன. அரசு மருத்துவ பட்டம் தொடர்பாக தீர்மானித்துள்ள முறைமையின்கிழ் மருத்துவ பட்டத்தின் ஆகக்குறைந்த தகைமையை அரசு பிரகடனப்படுத்தியுள்ளது. வருடந்தோறும் இந்த நாட்டில் 75,000 – 85,000 இற்கும் இடைப்பட்ட பிள்ளைகள் உயர்கல்வியைப் பெறும்பொருட்டு வெளிநாடுகளுக்குச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜனாதிபதி கணக்காய்வு தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய பொறுப்புக்களை கடந்த பல வருடங்களாக பூர்த்திசெய்யவில்லையென முன்னைநாள் கணக்காய்வாளர் நாயகம் குறிப்பிட்டிருந்தார். கடந்த இரண்டு ஆண்டுகளில் நானும் கடமைகளை பூர்த்திசெய்யவில்லை. முன்பு பதவி வகித்தவர்களும் அவற்றைச் செய்யவில்லை. அரசியல் அமைப்பின்கீழ் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டாலும் ஜனாதிபதியின் அதிகாரங்களின்கீழ் கணக்காய்வு தொடர்பாக ஜனாதிபதிக்குள்ள பொறுப்புக்கள்பற்றி மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்போது குறித்துரைக்கப்பட்ட அமைச்சுக்களில் கணக்காய்வு நடவடிக்கைகளும், முன்னேற்ற மீளாய்வுகளும் ஜனாதிபதியினால் மேற்கொள்ள வேண்டுமென தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே குறித்துரைக்கப்பட்ட உத்தியோகத்தர்களுடன் நான் மே மாதத்திலிருந்து அந்த வேலைத்திட்டத்தைத் தயாரிப்பேன்.**

செல்கின்றனர். வருடமொன்றிற்கு க.பொ.த.உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் பிள்ளைகளில் 125,000, 150,000 மாணவர்கள் தேவையான தகைமைகளைப் பெற்றாலும் 25,000 பேர் மாத்திரமே பல்கலைக்கழகங்களுக்குச் சென்று இலவசக் கல்வியைப் பெறமுடியும். முற்காலத்திலாயின் பணக்கார குடும்பங்களைச் சார்ந்த பிள்ளைகள் மாத்திரமே வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டனர். நிலைமை மாறியுள்ளது. இன்று பொருளாதார ரீதியில் மிகவும் ஏழைக்குடும்பங்களைச் சார்ந்த பெற்றோர்களும் தமது தங்க நகைகளையோ, தமது காணிகளையோ விற்று தம் பிள்ளைகளை உயர்கல்வியின் நிமித்தம் வெளிநாடுகளுக்கு அனுப்புகின்றனர். இந்தக் கண்ணோட்டத்தில் நாம் இப்பிரச்சினையைப்பற்றி சிந்திக்க வேண்டும். உலகத்தில் முன்னேற்றமடைந்துள்ள நாடுகளிலுள்ள கல்வித்திட்ட முறைமைகளைப் பொறுத்தவரை கல்வி என்பது வெளிப்படைத்தன்மையாக அமைய வேண்டும். கல்விக்கு வயதெல்லை கிடையாது. பிள்ளைகளின் கல்விக்குத்தான் முன்னுரிமை வழங்கப்படுகிறது. இச்சூழ்நிலையில் இலவசக் கல்வியை நாம் மிகத்தெளிவாகப் பலப்படுத்த வேண்டும். பல்கலைக்கழகத் துறையை நாம் மென்மேலும் வலுவூட்ட வேண்டும்.

பல்கலைக்கழக கல்வியைப் பெறும் பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு எதுவிதமான பாதிப்பும் ஏற்படாத வகையில் அவர்களின் அனைத்து உரிமைகளையும் வலுப்படுத்தி நாம் இத்தீர்மானத்தை மேற்கொண்டுள்ளோம். இந்த சைட்டம் நிறுவனம் தொடர்பாக அந்நிறுவனம் வழங்கும் புலமைப்பரிசில்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமென நாம் அறிவித்துள்ளோம். அதிக கட்டணம் அறவிடப்படுகின்றது என்ற மனக்குறையை அனைத்து பல்கலைக்கழக மாணவர்கள் எடுத்துக் கூறினர். இந்த வருமான மட்டத்துடன், இந்த முகாமைத்துவத்துடன், இந்த மாணவர்களுக்கு நிவாரணம் கிடைக்கக்கூடியவாறு திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமென நாம் கவனத்தைச் செலுத்தினோம்.

**தவறுவிட்ட இடங்கள் கண்டுபிடிக்கப்படும்**

மீதொட்டமுல்லை குப்பைமேடு மீது எல்லோருடைய கவனமும் திருப்பப்பட்டுள்ளது. இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சட்டரீதியாக அதிகாரமும் உரிமையும் கொண்ட அனைத்து நிறுவனங்களும் இந்த அவலம் தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டும். கடந்த 1 1/2 ஆண்டுகளை தவிர்த்தால் இது தொடர்பாக குறித்துரைக்கப்பட்ட நிறுவனங்களுடன் நான் மூன்று கூட்டங்களை நடத்தியுள்ளேன். அமைச்சரவையில் இதுபற்றி ஏன் தாமதமாகின்றன என்பதுபற்றி இவர்கள் அறிவார்கள். எமது நாட்டில் முக்கியமாக நிறுவனங்களின் அதிகாரம் தொடர்பாக நிலவும் இழுபறிகளே இந்த அவலத்திற்கு மூலகாரணமாகும். அவசியமான தீர்மானங்களையும், முடிவுகளையும் எடுத்து அவற்றை செயற்படுத்துவற்கு ஆலோசனைகளை வழங்கிய பின்னர் அவற்றை அமுல்படுத்தாமல் தமது அதிகாரத்தையும், உரிமையையும் பற்றிய இழுபறியில் ஈடுபட்டமையே இதற்கு முக்கிய காரணமாகும். மறுபுறம் இந்த குப்பைமேட்டை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லவேண்டுமென்ற தேவை ஒரு சிலருக்கு இருந்தது. இதனை நீங்கள் அறிவீர்கள். சிலர் இங்கு குப்பை சேர்வதை விரும்பினார்கள். இங்குள்ள புரோக்கர்மாருக்கு ஒரு குப்பை லொறிக்கு 1,500 ரூபாய் செலுத்த வேண்டும்.

ஒரு லொறி குப்பை மேட்டிலிருந்து வெளியேறும்போது 1000 அல்லது 1500 ரூபாய் வழங்கப்பட வேண்டும். இத்தகைய ஒரு நிலைமை இங்கு நிலவியுள்ளது. எவரையும் நோக்கி விரல் நீண்டவேண்டிய அவசியமில்லை. பிரச்சினை தீர்க்கப்பட வேண்டிய சந்தர்ப்பத்தில் தீர்வு இடம்பெறாமல் இருக்கையில் இந்தத் துன்பகரமான அவலம் ஏற்பட்டது. இப்படியான சம்பவங்கள் எமது நாட்டில் மீள இடம்பெறாத வகையில் அனைத்து நிறுவனங்களிலும் பொறுப்புக்களை வகிக்கும் அனைவரும், அனைத்து அரச உத்தியோகத்தர்களும், அரசியல்வாதிகளும் இந்தப் பொறுப்பை ஏற்பது அவசியமாகும். மரணித்த உயிர்களுக்கு நாம் நஷ்டஈடு வழங்கினாலும் அந்தப் பணத்தின்மூலம் அவர்கள் மீளப் பிறக்க மாட்டார்கள். நாம் ஒரு நாடு என்ற வகையில் சிந்திக்க வேண்டும். இப்படியான சம்பவங்கள் மீண்டும் ஏற்படாத வகையில் இத்துறைகளில் நாம் பணியாற்ற வேண்டும். தற்போது நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டங்களுக்கு மேலதிகமாக இத்த அபாய வாய்ப்புக்களை எதிர்நோக்கியிருக்கும் பிரதேச மக்களை அகற்றுவதற்கும், அவர்களுக்கு உரிய வீடுகளை வழங்குவதற்கும் அதேசமயம் குப்பை மேட்டை அந்த இடத்திலிருந்து அகற்றுவதற்கும் எதிர்வரும் வாரத்தில் நான் ஒரு குழுவை நியமிப்பேன். அமைச்சர்களும், குறித்துரைக்கப்பட்ட துறைகளும் அதுபற்றிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். மீதொட்டமுல்லை குப்பை மேட்டின் பின்னணியையும், ஏற்பட்ட துன்பியல் அவலங்களையும் கவனத்திற்கொண்டு ஓய்வுபெற்ற நீதிபதியொருவர் இச்சம்பவம் இந்த நிலைமையை எட்டியதற்கான காரணங்களைக் கண்டறிந்து அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கு ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவர் நியமிக்கப்படுவார். இதுபற்றி தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டாலும், அவை ஏன் நடைமுறைப்படுத்தப்படவில்லை? தவறு எங்கு ஏற்பட்டது என்பதையும் இந்த ஆணைக்குழு கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிக்கும். பகிரங்கமாக இது சம்பந்தமான கருத்துக்களை முன்வைப்பதற்கு வாய்ப்பளிக்கப்படும். ஒரு மாத காலத்திற்குள் இந்நடவடிக்கைகளை நிறைவு செய்யவேண்டுமென நான் எதிர்பார்க்கின்றேன். இதன்மூலம் நாம் அனைவரும் ஒரு பாடத்தை கற்றுக்கொள்ள முடியும். தவறு எங்கு ஏற்பட்டதென்பது பற்றி நாட்டுக்கு விடயங்களை பகிரங்கப்படுத்த முடியும். சரியான முறையில் சட்டரீதியாகவும், ஒழுங்காகவும் எடுத்துக்கூற முடியும். எனவே இவ்விடயங்கள் தொடர்பாக உங்கள் அனைவரது கவனத்தையும் ஈர்க்க விரும்புகிறேன்.

*2017.04.20 ஆந் திகதி ஜனாதிபதி செயலகத்தில் ஊடகப் பிரதானிகளுக்கும், பத்திரிகை ஆசிரியர்களுக்குமான ஓர் சந்திப்பின்போது கௌரவ ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆற்றிய உரையை அடிப்படையாகக் கொண்டு கட்டுரை வெளியிடப்படுகிறது.* ●


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



newsfirst.lk

# ஆரம்பத்திலிருந்து குப்பை மேட்டின் கதை:





**தரிந்து உடுவர கெதர,**
**ரேக்கா நிலுக்ஷி ஹேரத்**

மீதொட்டமுல்லை குப்பைமேடு தஹம்புரய கிராமவாசிகள்மீது பாரிய பாதிப்பை ஏற்படுத்தி ஒரு வாரம் கடந்துவிட்டது. குப்பைமேட்டின் பாதிப்பிற்கான பொறுப்பை குப்பை உளவு இயந்திரத்தின் சாரதியே பொறுப்பேற்க வேண்டுமென அனைத்தும் முடிந்தபின்னர் தோன்றுகிறது. குப்பை லொறிகளின் சாரதிகள் தான்தோன்றித்தனமாக மீதொட்டமுல்லைக்கு குப்பைகளை கொண்டுவந்து போட்டிருக்க வேண்டும். 19 ஆந் திகதி ஏற்பட்ட அழுத்தத்தின் முன்னே அரசாங்கத் தலைவர்களில் ஒரு சிலர் இதற்கான பொறுப்பை ஏற்கும்வரை குறைந்த பட்சம் இந்த அவலத்தின் பொறுப்பை ஏற்பதற்கும் எவரும் முன்வரவில்லை. இதுவரை குப்பைகளை முகாமைத்துவம் செய்வதில் தோல்வி கண்டமைக்கான தமது பொறுப்புக்களை புரிந்துகொள்ளாத எவரும் எதிர்காலத்திலேனும் குப்பைகளை முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை இந்நிலைமையை மேலும் பயங்கரமாக்கியது. நடந்த சம்பவத்திற்கு பொறுப்பானவர்கள் எவரும் இல்லாவிட்டால் எதிர்காலத்தில் பொறுப்பேற்பது யார்? நாளைக்கு வேறோர் இடத்திற்கு குப்பைகளைப் போடுவதை ஆரம்பித்து மேலும் ஒரு குப்பைமேடு சரிந்து விழமாட்டாது என்பதை எப்படிக் கூறுவது?

“மற்றுமோர் குப்பை மேட்டிற்கு இடமளித்து புளூமென்டல் குப்பை மேடு நீக்கப்பட்டது. மீதொட்டமுல்லை குப்பைமேடு இவ்வாறாகவே ஆரம்பிக்கப்பட்டது. இது எந்த நிமிடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெடிக்குமென நாம் அறியவில்லை" இதற்கு முன்னர் மீதொட்டமுல்லையைப் பற்றி எழுதும்போது 'ராவய' வாராந்தரப் பத்திரிகை இப்படி ஒரு தலையங்கத்தைத் தீட்டியிருந்தது. மீதொட்டமுல்லை குப்பைமேடு வெடித்து சிதறிய பின்னரே தற்போது மீண்டும் அதுபற்றி கலந்துரையாடுகிறோம். எமது கதை மரணங்களைப்பற்றியது அல்ல. மரணங்களைப்பற்றி ஏராளமான கதைகள் ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்டன. நாம் குப்பைகளை முகாமைத்துவம் செய்வது பற்றியே பேசுகிறோம்.

குப்பைகளை உரிய முறையில் முகாமைத்துவம் செய்யாமை காரணமாகவே மீதொட்டமுல்லை அவலத்தை நாம் அனுபவித்தோம். இந்த அவலம் ஏப்பிரல் 14 ஆந் திகதி நிகழ்ந்த 50 – 60 மரணங்கள் பற்றிய துன்பியல் கதை மாத்திரமல்ல அதற்கு முன்னரும் இக்குப்பை மேட்டின் அருகே வாழ்ந்த மக்கள் சொல்லொன்னா துன்பங்களை அனுபவித்தனர். குப்பை மேட்டின் அருகே வாழ்ந்தோரில் பலர் டெங்கு காய்ச்சல் காரணமாக தமது உயிர்களைத் துறந்தனர். சரும நோய்களால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை விசாலமானது. ஓராண்டிற்கு முன்னர் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் போது அசுத்தங்கள் கலந்த நீர் மனித உடல்களைத் தீண்டிய காரணத்தினால், உள்ளங்கால் முதல் தோள்கள் வரை குணமாகாத பெருங்காயம் ஏற்பட்ட ஒரு நபரை மீதொட்டமுல்லையில் நாம் சந்தித்தோம். இத்தகைய சரும நோய்களால் பாதிக்கப்பட்ட பலர் அங்கு வாழ்வதாக அவர்கள் குறிப்பிட்டனர். தாங்க முடியாத வேதனைகள்கொண்ட நோய்களால் பீடிக்கப்பட்ட பல மனிதர்கள் அங்கு மரணத்தின் பிடியில் வாழ்க்கையை முன்னெடுத்தனர். இவற்றை நாம் இதற்கு முன்னரும் பதிவுசெய்துள்ளோம்.

ஒரு கொடியில் துணி காயப்போட முடியாத நிலை. குப்பை மேட்டில் இருந்து காகங்கள் குப்பைகளை அள்ளிக்கொண்டு போகும்போது நிலத்தை நோக்கி விழுகின்ற குப்பைகள் வெயிலில் காயும் துணிகள்மீது விழுந்து அசுத்தப்படுத்தின. உறவினர் ஒருவரை இங்குள்ள மக்கள் தமது வீடுகளுக்கு அழைக்க முடியாத நிலை. தமது காணிகளை உரிய விலைக்கு விற்கவோ, அல்லது தாம் வாழும் வீட்டின் ஒருபகுதியை வாடகைக்கு கொடுக்கவோ முடியாத ஒரு நிலை. மீதொட்டமுல்லை என்பது கொழும்பு சுங்கப்பகுதியில் இருந்து குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பால் உள்ள ஒரு காணியாகும். ஒருபுறம் களனி கங்கை, கொழும்பில் இருந்து அவிசாவளை நோக்கிச் செல்லும் பாதையில் தீர்மானகரமான இடத்தில் வனாத்தமுல்லை அமைந்துள்ளது. இது அதிக சனத்தொகை வாழும் பிரதேசமாகும். இத்தகைய பெறுமதிவாய்ந்த இடத்தில் குப்பை மேடுகளை அமைப்பது எத்தகைய கொள்கையை அனுசரிக்கும் மனிதனும் செய்யாத வேலையாகும்.

**குப்பை பிரச்சினை**

மீதொட்டமுல்லை குப்பைமேடு உருவாவதற்கு முன்னர் அவ்விடத்தில் ஒரு வயல்வெளியே அமைந்திருந்தது. இக்குப்பை மேட்டிற்கு எதிரான மக்கள் இயக்கத்தின் திரு.நிஹால் ஜயசேகர இதனை பின்வருமாறு எமக்கு எடுத்துக் கூறினார். "குப்பைமேட்டின் அருகே வாழ்வதற்கு நாம் வரவில்லை. குப்பைமேடு நாம் வாழ்ந்த இடத்திற்கு வந்தது. முன்னர் இது ஒரு வயல்வெளி. மலர்கள் மலர்ந்து மிகவும் அழகாக இருந்தது. நான் திருமணம் செய்வதற்கு முன்னர் சிறுவயதில் தாமரை மலர்களைக் கொய்வதற்கு நாங்கள் இந்த இடத்திற்குச் செல்வோம். நாம் விளையாடுவதற்கு இந்த வயல்வெளிக்குச் செல்வோம், இங்கு குளிக்க முடியும். எவ்வளவு அழகான சுற்றாடல். இந்த இடம்தான் தற்போது துர்நாற்றமடிக்கும் ஓர் குப்பைமேடாக மாறியுள்ளது."

இந்த வயல்வெளி மீது 1989 இல் குப்பைபோட ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் கொலொன்னாவ பிரதேசத்தின் குப்பைகளே இங்கு போடப்பட்டன. பாரியளவில் குப்பைகள் போடப்படவில்லை. அதன் பின்னர் 2007இல் கலாநிதி திருமதி அஜந்தா பெரேராவின் புலமைசார் பங்களிப்புடன் 'பிலிசரு என்ற பெயரில் குப்பைகளை சுழற்சிமுறையில் இயக்கும் ஓர் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அன்று பதவியில் இருந்த அரசாங்கங்கள் இக்கருத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் அவசியம் இருக்கவில்லை. இக்கருத்திட்டத்திற்கு சுமார் 110 மில்லியன் ரூபாய் செலவு செய்யப்பட்டது. கலாநிதி அஜந்த பெரேரா குப்பை முகாமைத்துவம்பற்றி இலங்கையில் மிக உயர்ந்த அறிவும் அனுபவமும் கொண்ட ஒரு நபர். 'பிலிசரு' கருத்திட்டத்தை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்கு ஏராளமான வாய்ப்பு இருந்தது. ஆனால் உதிரி அரசியல் காரணமாக லஞ்சத்தின் மூலமும் குப்பைகளால் குப்பையை உண்ணும் ஆசை காரணமாகவும் பிலிசரு கருத்திட்டம் தோல்விகண்டது. இதற்கு முன்னர் ராவய பத்திரிகையில் பிரசுரமான கட்டுரைகள்மூலம் குப்பை பிரச்சினை தொடர்பான யதார்த்தமான தீர்வுகளும் அரசியல் எவ்வாறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை பயன்படுத்துகிறது என்பதையும் விளக்கமாக பதிவு செய்தது. பிலிசரு கருத்திட்டம் வீழ்ச்சியடையவே சுழற்சிமுறை கைவிடப்பட்டு மீதொட்டமுல்லையில் குப்பைமேடு வளர்ச்சியடைய ஆரம்பித்தது.

அதன் பின்னரே கொழும்பில் உள்ள குப்பையும், மீதொட்ட குப்பை மேட்டை அடைந்தது. புளூமெண்டல் குப்பை மேடு பயங்கரமாக மாறியது. புளூமெண்டல் குப்பைமேடு வெடித்து தீப்பற்றியது. இது உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட ஒரு வழக்கின்போது, இலங்கையின் அபகீர்த்தி வாய்ந்த பிரதம நீதியரசராகக் கடமையாற்றிய திரு.சரத் என்.சில்வா 2009 ஆம் ஆண்டில் பின்வரும் தீர்ப்பை வழங்கினார். மீதொட்டமுல்லையில் அமைந்த இரண்டு ஏக்கர் காணியில் தற்காலிகமாக புளூமெண்டல் குப்பைகளை மீதொட்டமுல்லையில் போடவேண்டும் என்பதே அக்கட்டளையாகும். கொழும்பின் குப்பைகள் மீதொட்டமுல்லையில் சேகரிக்கப்பட்ட போது இப்பிரச்சினை உக்கிரமடைந்து ஒட்டுமொத்த கொழும்பின் குப்பைகள் அனைத்தும் மீதொட்டமுல்லை குப்பைமேட்டில் போடப்பட்டன. தினசரி ஆயிரம் தொன்களைவிட கூடியளவு குப்பைகள் மீதொட்டமுல்லையில் போடப்பட்டன. சிலநாட்களில் குப்பைகளின் அளவு இரண்டாயிரம் தொன்களையும் விட அதிகமாக 2000 தொன்களைவிடக் கூடியது.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவின் கட்டளைக்கமைய தற்காலிகமாகவே கொழும்பு குப்பைகள் மீதொட்டமுல்லையில் போடப்பட வேண்டுமென விடுக்கப்பட்டிருந்தது. ஆனால் 8 வருடங்களாக கொழும்பின் குப்பைகள் மீதொட்டமுல்லை குப்பை மேட்டை வந்தடைந்து ஒரு குப்பை மலையாக உருவெடுத்தது. இரண்டு ஏக்கர், நாலு ஏக்கர் என்று ஆரம்பித்து இறுதியில் 20 ஏக்கர்வரை குப்பைமேடு விசாலித்தது. குப்பைமேட்டின் உயரம் 200 அடிக்கும் மேற்பட்டதாக அமைந்தது.

**குப்பைக்கான எதிர்ப்பியக்கம்**

கொழும்பு குப்பை மீதொட்டமுல்லையை வந்தடைந்து சிறிது காலத்திற்கு பின்பு மீதொட்டமுல்லை குப்பைமேட்டிற்கு எதிரான மக்கள் இயக்கம் உருவாக்கப்பட்டது. இந்த குப்பைமேட்டை அகற்றி மனிதர்கள் வசிக்கும் மற்றுமோர் இடத்திற்கு எடுத்துச் செல்க என்று இந்த இயக்கம் கோரவில்லை. குப்பைகளை சுழற்சிமுறையில் பயன்படுத்த வேண்டுமென்றே இந்த மக்கள் இயக்கம் கோரிக்கை விடுத்தது. குப்பையிலிருந்து பயனடையுமாறே இந்த இயக்கம் கோரியது. இந்த மக்கள் இயக்கத்தின் ஆரம்பத் தருணத்திலிருந்து புலமைசார் பங்களிப்பை வழங்கிய சுற்றாடல் மற்றும் இயற்கைபற்றிய கற்கை நிலையத்தின் அழைப்பாளரான கலாநிதி ரவீந்திர காரியவசம் எம்முடன் பின்வரும் கருத்துக்களை முன்வைத்தார். "ஆரம்ப காலத்திலிருந்தே இப்பிரதேசத்தில் நாம் பல ஆய்வுகளை மேற்கொண்டோம். இந்தப் பிரதேசத்தில் வாழ்ந்த பிள்ளைகளில் 50% ஆனோருக்கு சுவாச நோய்கள் இருந்தன. 2011 ஆம் ஆண்டிலிருந்து இப்பிரதேச மக்களுக்கு நாம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி அறிவுறுத்தினோம். 'பிலிசரு' கருத்திட்டத்தை மீண்டும் அமுலாக்குமாறு நாம் கோரினோம். அக்காலகட்டத்தில் அரசாங்கம் மீண்டும் சுழற்சி கருத்திட்டத்தை அமுல்படுத்தியிருக்கலாம். ஆனால் அது அமுலாக்கப்படவில்லை. அதன் பின்னர் மீண்டும் சீன நிறுவனமொன்று இக்குப்பைமேட்டின் குப்பைகளை சுழற்சிமுறையில் பயன்படுத்த முயற்சித்தது. அதுவும் அமுலாக்கப்படவில்லை. ஏதோ ஒரு காரணத்தினால் மேற்படி சீன நிறுவனமும் அதனைக் கைவிட்டுச் சென்றது. அக்காலகட்டத்தில் பதவியிலிருந்த அரசியல் தலைவர்களில் ஒருசிலர் மேற்படி சீன நிறுவனத்தில் கமிஷன் கேட்க முயற்சித்த காரணத்தினால் அவர்கள் கருத்திட்டத்தை கைவிட்டனர். இவ்வாறாக இடையிடையே முன்மொழியப்பட்ட தீர்வுகள் அமுலாக்கப்படவில்லை. ஆனால் குப்பைமேடு மலையாக மாறியது. இதன் பெறுபேறாகவே நாம் இன்னுயிர்களைப் பலிகொடுத்தோம்.

"களனி ஆற்றின் வெள்ளப்பெருக்கு ஏற்படும் வலயத்தில் இது ஒரு சேற்று நிலமாகவே அமைந்திருந்தது. எனவே குப்பைகளைக் கொட்டியதன் விளைவாக இங்கு மண்சரிவு ஏற்படும் அபாயம் ஆரம்பத்திலிருந்தே இருந்தது. இதற்கு முன்னர் இதுபற்றி நாம் குறிப்பிட்டிருந்தோம். இந்தக் குப்பைமேட்டிற்கு சில தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்பட்ட கழிவுப்பொருட்களும் சேர்க்கப்பட்டன. இலஞ்சம் கொடுத்து அவற்றை இந்த குப்பைமேட்டில் கொண்டுவந்து சேர்த்தனர். கப்பம் வாங்கி குப்பைகளைக் கொட்டும் ஒருமுறையும் இருந்தது. எனவே வீடுகளில் இருந்து இங்குவந்து சேரும் குப்பைகளை மீள்சுழற்சி முறையில் பயன்படுத்தத் தொடங்கினால் தொழிற்சாலைகளின் கழிவுப்பொருட்களை இங்குவந்து குவிக்க முடியாமல் போகும். இலங்கையில் குப்பைகள் குவிக்கப்படுவதே தொடர்ந்து செய்யப்பட்டு வந்தது. குப்பைகளை கொண்டு வருவதற்கான கருத்திட்டங்களை ஆரம்பிக்க முயற்சித்தாலும் மக்கள் மத்தியிலிருந்து அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதென அரசாங்கம் கூறுகிறது. அது உண்மை. மக்கள் மத்தியிலிருந்து எதிர்ப்பு ஏற்படும். அதை தவிர்க்க முடியாது. இன்னுமொரு இடத்திற்கு குப்பைகளைக் கொண்டுபோய் கொட்டுமாறு நாம் அரசாங்கத்தைக் கேட்கவில்லை. குப்பைகளை முகாமைத்துவம் செய்யும் ஒரு கருத்திட்டத்தை ஆரம்பிக்குமாறே நாம் கூறினோம்."

மீதொட்டமுல்லையின் குப்பை மேட்டிற்கு எதிரான மக்கள் இயக்கத்தில் முன்னணிப்பாத்திரம் வகித்தோர் என்.கீர்த்திரத்ன பெரேரா மற்றும் சட்டத்தரணி நுவன் போப்பகே ஆகிய பிரதேசவாசிகளாவர். கீர்த்திரத்ன பெரேராவின் குடும்பத்தைச் சார்ந்த நாலு உறுப்பினர்கள் குப்பைமேடு சரிந்தபோது அதில் சிக்கி உயிரிழந்தனர். இந்தப் பின்னணியில் மாபெரும் அழிவுக்குப் பின்னர் அவருடன் கலந்துரையாடும் வாய்ப்பு எமக்கு கிட்டவில்லை. ரணில் விக்கிரமசிங்க. மைத்திரிபால சிறிசேன, கோதாபய ராஜபக்ஷ, மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அனைத்து ஆட்சியாளர்களும் இச்சம்பவத்தின் கொலைகாரர்களென மிக உணர்ச்சிபூர்வமாக திரு.நுவன் போப்பகே ஊடக சந்திப்பின்போது குறிப்பிட்டார். இந்த ஆட்சியாளர்களுக்கு மரணதண்டனை வழங்கவேண்டுமென அவர் குறிப்பிட்டார். அவர் மிக உணர்ச்சிவசப்பட்ட நிலையிலேயே காணப்பட்டார். தன்னோடு ஒன்றாக வாழ்ந்த மனிதர்கள் அநியாயமாக உயிரிழந்த அந்த சோகத்தின் காரணமாக அவருடைய மனோநிலையை நாம் புரிந்துகொள்ள முடியும். இச்சம்பவம் இடம்பெற்று பல நாட்கள் கடந்து செல்லும்வரை அதிர்ச்சியடைந்த நுவன் கோப்பகேயையே நாம் சந்தித்தோம். மீதொட்டமுல்லை குப்பை மேட்டிற்கு எதிரான மக்கள் இயக்கம் இதற்கு முன்னர் முன்வைத்த கருத்துக்களுக்கமைய இவ்விருவரும் இக்குப்பை மேட்டை வேறோர் இடத்திற்கு எடுத்துச் செல்வதை ஒரு தீர்வாக அவர்கள் காணவில்லை என்பதே எமது புரிதலாகும். குப்பை முகாமைத்துவம் பற்றிய ஒரு கருத்திட்டத்தைப் பற்றியே மீதொட்டமுல்லை குப்பைமேட்டிற்கு எதிரான மக்கள் இயக்கம் பிரசாரம் செய்தது. குப்பை குவிக்கும் ஒரு கருத்திட்டத்தை அவர்கள் ஆரம்பத்திலிருந்தே நிராகரித்தனர்.

**உறுதிமொழிகள்**

மீதொட்டமுல்லை கதை உறுதிமொழிகள் மற்றும் எதிர்ப்புக்களின் ஊடாகவே தொடர்ந்தது. சுமார் 15 இற்கு மேற்பட்ட எதிர்ப்பியக்கங்கள் மீதொட்டமுல்லை குப்பைமேட்டிற்கு எதிராக இடம்பெற்றிருந்தன. மேற்படி எதிர்ப்பியக்கங்கள் பொலிஸாரை ஈடுபடுத்தி தாக்கப்பட்டனர். தீர்விற்கான உறுதிமொழிகள் குப்பை மேட்டைப்போலவே மேலே மேலே உயர்ந்துசென்றது. கடந்த ஜனாதிபதி தேர்தலிலும், பொதுதேர்தலிலும் பிரதமர் நேரடியாகவே குப்பைமேட்டை அகற்றுவதாக உறுதிமொழி கூறினார். 2016 ஆகஸ்ட் மாதத்தில் மீதொட்டமுல்லைக்கு வருகைதந்த பா.உ.மரிக்கார் பின்வருமாறு உறுதிமொழி கூறினார். இரண்டு மாதங்களில் இந்தக் குப்பைமேடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகற்றப்படுமென பிரதமர் உறுதிமொழி கூறியுள்ளதாகவும், அதனை தான் உறுதிப்படுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார். ஜா–எல, ஏக்கல போன்ற பிரதேசங்களுக்கு குப்பைகளை எடுத்துச் செல்வதாகவே உறுதிமொழி கூறப்பட்டது. இதற்கு மேலதிகமாக மீதொட்டமுல்லையின் குப்பை பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்படுமென பத்திரிகைகளில் அரசியல்வாதிகள் வழங்கிய உறுதிமொழிகள் இடையிடையே வெளியிடப்பட்டன. கடந்த ஆண்டின் மே மாதத்தில் மேல்மாகாண முதலமைச்சர் இசுரு தேவப்பிரிய, குப்பைமேட்டை அகற்றுவதாக உறுதிமொழி கூறி இங்கிலாந்து கம்பனி ஒன்றுடன் ஓர் ஒப்பந்தத்தையும் கையொப்பமிட்டிருந்தார். புத்தளத்தில் சீமெந்து தொழிற்சாலைக்காக வெட்டப்பட்ட வடிகால்களில் இக்குப்பைகள் போடப்படுமென முன்னர் பதவிவகித்த அரசாங்கம் உறுதிமொழி கூறியிருந்தது. மேல்மாகாணத்தின் குப்பை முகாமைத்துவ அதிகாரசபை இதனை அமுல்படுத்த தயாராக இருந்தது.

**ஊடகங்கள்**

குப்பைமேட்டிற்கு எதிராக மேற்கொண்ட ஆர்ப்பாட்டங்கள் தொடர்பாக அடிக்கடி ஊடகங்கள் அறிக்கை வெளியிட்டாலும் மீதொட்டமுல்லை பிரச்சினையை ஊடகங்கள் பாரதூரமாக எடுக்கவில்லை. மீதொட்டமுல்லை ஆர்ப்பாட்டங்களுக்கு எதிராக தாக்குதல்கள் நடத்தப்பட்டமை பற்றி வேறு அறிக்கைகள் கருத்து வெளியிட்டன. குப்பை முகாமைத்துவம் பற்றி பரந்துபட்ட முறையில் கலந்துரையாடாத அதேசமயம் குப்பைமேட்டின் பின்னணியில் இயங்கிய பாதாள உலக கறுப்பு இயக்கத்தையும், சந்தர்ப்பவாத அரசியலையும் ஊடகங்கள் அறிக்கையிடவில்லை. ஒரு சமூகம் என்ற வகையில் குப்பைகளைப்பற்றிய ஒரு கலந்துரையாடலை சமூகத்தில் உருவாக்கவுமில்லை.

இறுதியில் குப்பைமேடு சரிந்து விழுந்த பின்னர் ஊடகங்களின் கீழ்த்தரமான நடவடிக்கையை நாம் காணமுடிந்தது. எவ்வளவு நேரமெடுத்தேனும் மக்களின் கண்ணீரையும், துன்பத்தையும் உச்சமட்டத்தில் எடுத்துக்கூறுமாறு ஒரு தொலைக்காட்சி நிறுவனத்தின் ஊடகப் பிரதானி தனது ஊடக சக ஆட்களுக்கு வலியுறுத்திக் கூறியிருந்தார். பத்திரிகை பக்கங்கள், சிந்தும் கண்ணீருக்கு கூடுதலான இடத்தை வழங்கியிருந்தன. குப்பை மேட்டிற்கு அருகே சந்தித்த ஒருசில பத்திரிகையாளர்களும் தொலைக்காட்சி நிறுவனங்களின் ஊடகவியலாளர்களும் கூறியது யாதெனில் தமது பிரதானிகள் இதன்மூலம் எதிர்பார்க்கும் செய்திகள் உண்மையிலேயே குழப்பகரமானதாக இருக்கின்றதெனக் கூறினர். அனைத்து ஊடக நிறுவனங்களும் இயன்றளவு துன்பியல் கதைகளையும் படங்களையும் காட்டுவதற்கும் கூறுவதற்கும் முந்தியடித்துக்கொண்டு செயற்பட்டனர். கூறுணர்ச்சியை மிக உச்சமட்டத்தில் விற்பனை செய்யவே அவர்கள் விரும்பினார்கள். மேற்படி துன்பியல் கூறுணர்ச்சியை சந்தைப்படுத்தக்கூடிய வகையில் பத்திரிகைகளின் பக்கங்கள் வடிவமைக்கப்பட்டன. அறிவிப்பாளர்களின் குரல்கள் அழுகைக் குரலோடு எதிரொலித்தன.

தமது தொலைக்காட்சி அலைவரிசையில் எதிர்வுகூறும் சோதிட சாஸ்திரியான மஞ்சுள பீரிஸ் இந்த விபத்தை முன்கூட்டியே குறிப்பிட்டாரென தெரண தொலைக்காட்சி பெருமையாக எடுத்துக் கூறியது. இந்த சாஸ்திரி முன்னைய நிகழ்ச்சியொன்றில் எதிர்வுகூறிய பல விடயங்களின்போது அகால மரணங்கள் ஏற்படுமென எதிர்வு கூறியிருந்தார். இது உண்மையாகியதென தெரண தொலைக்காட்சி பெருமைப்பட்டது. மீதொட்டமுல்லை குப்பை குவியலைவிட அதிகப்படியான குப்பைக் குவியல் இந்த ஊடக நிறுவனங்களின் பிரதானிகளின் தலையில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

ஊடக நிறுவனங்கள் இதை ஒரு கருமவினையாகவும், அதிர்ச்சியையும் கூறுணர்ச்சியையும் ஏற்படுத்தும் சம்பவமாகவும் எமது பிரபஞ்சத்தின் நட்சத்திரங்கள் ஏற்படுத்திய பாரிய தாக்கமாகவும் வரைவிலக்கணம் செய்து ஒரு கீழ்த்தரமான முயற்சியில் ஈடுபட்டன. குப்பையை முகாமைத்துவம் செய்யத் தவறிய அரசாக நாம் பொறுப்பேற்க வேண்டியதை மறந்து வேறு முயற்சிகளில் ஈடுபட நேர்ந்தது. இந்தக் குப்பைமேடு சரிந்து விழுவதற்கு முன்னரும் பெரும்பான்மையான ஊடகங்கள் குப்பை பிரச்சினையை நேர்மையாக தமது கலந்துரையாடலில் எடுத்துக்கொள்ளவில்லை. ஓர் பாரிய அவலத்தின் பின்னர் தொலைநோக்கற்ற வகையில் ஊடகங்கள் செயற்பட்டன.

**குப்பைமேடு சரிந்து விழுந்த பின்னர்:**

குப்பைமேடு சரிந்து விழுவதற்கு முன்னர் ஓர் அபாயம் இருப்பதாக அரசாங்கம் எச்சரிகை விடுத்திருந்ததெனக் கூற முற்பட்டனர். இதற்கு முன்னரே இம்மக்கள் வசித்த வீடுகளிலிருந்து நீங்கிச் செல்லுமாறு அவர்களுக்கு உரிமை வழங்கப்பட்டதென அரசாங்கம் கூறியிருந்தது. ஆனால் குப்பைமேடு சரிந்துவிழுந்து பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளுக்கு எந்தவித அபாய எச்சரிக்கையும் செய்யப்படவில்லை. குப்பைமேடு அமைந்திருந்த இடத்திலிருந்து ராகுல வித்தியாலயத்தின் பக்கத்தில் அமைந்திருந்த வீடுகளுக்கு அபாய எச்சரிக்கை சின்னங்களை ஒட்டுவதற்கு குப்பைமேடு சரிந்து விழுவதற்கு ஒருசில தினங்களுக்கு முன்னர் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

குப்பைமேடு சரிந்து விழுவதற்கு முந்தியநாள் இந்த மண்சரிவுக்கான அடையாளங்கள் சில வீடுகள் அறிந்திருந்தன எனவும் கூறப்படுகிறது. ஆனால் அனேகமானோருக்கு அது சம்பந்தமான புரிதல் இருக்கவில்லை. சில வீடுகளுக்கு எதுவிதமான அடையாளமும் தோன்றவில்லை.

**குப்பைமேடு சரிந்தமை பற்றி திரு.நிஹால் பெரேரா பின்வருமாறு குறிப்பிட்டார்.**

"எமது வீடுகளை அகற்றிக்கொள்ளுமாறு எமக்கு அறிவிக்கப்படவில்லை. அத்துமீறிய வீடுகளில் வசிப்போருக்கு மாத்திரமே அவற்றிலிருந்து வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. இப்பிரச்சினையையிட்டு நாம் முன்கூட்டியே கருத்து தெரிவித்தோம். சிங்கள புத்தாண்டிற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் பா.உ.மரிக்காருடனும், கொழும்பு மாநகரசபை ஆணையாளருடனும் ஓர் சந்திப்பு இடம்பெற்றது. என்ன செய்யவேண்டுமென எம்மிடம் இச்சந்திப்பின்போது கேட்டனர். குப்பைமேடு சரிந்து விழுமென நான் கூறினேன். குப்பைமேட்டில் வேலை செய்பவர்களும் ஐசே, இப்படியான பிரச்சினை இருக்கிறது வெளியேறுங்கள் என்று கூறுகின்றனர். எமக்கு போதிய நஷ்டஈடு தாருங்கள் நாம் இவ்விடத்திலிருந்து விலகிச் செல்கிறோம் என கூறினோம். புதிய வருடத்திற்கு எல்லோரும் லீவில் போய்விட்டார்கள் எனவே லீவு முடிந்தவுடன் நடவடிக்கை எடுப்போமென அச்சந்தர்ப்பத்தில் அவர்கள் கூறினார்கள். ஆனால் குப்பைமேடு சரிந்து விழுந்த பின்னரே புது வருடம் முடிந்தது. நாம் மறியற் போராட்டம் செய்து நன்றாக அடிவாங்கினோம். ஆனால் இன்று செத்த வீடுகளுக்கு வரும் எண்ணிக்கை மனிதர்கள் எம்மோடு எதிர்ப்பியக்கங்களில் இணைந்து கொள்ளவில்லை. இந்தப் போராட்டங்கள் எல்லாம் பொய்வேலை என்று பலர் கூறினார்கள். நாம் எல்லோரும் இணைந்து குப்பைமேட்டை எதிர்த்திருந்தால் இவ்வாறு குப்பைமேடு சரிந்து விழுந்திருக்க முடியாது. நாம் எதிர்ப்புத் தெரிவித்திருந்தபோது தடிகளாலும், பொல்லுகளாலும் தாக்கப்பட்டு விரட்டியடிக்கப்பட்டோம்.

எம்மோடு கலந்துரையாடிய திரு.ரொய் சில்வாவின் வீடு மிகவும் சிறந்த மட்டத்தில் அமைக்கப்பட்டிருந்தது. அவர் ஆங்கிலத்திலேயே எம்மோடு கலந்துரையாடினார்.

"சேரிகளில் வாழும் மக்களே இந்த குப்பைமேடு மண்சரிவில் சிக்கிக்கொண்டார்கள் என பிரசாரம் செய்ய முற்படுகின்றார்கள்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




www.youtube.com

நாங்கள் சேரிவாழ் மக்களல்ல. நான் ஓர் உயர்ந்த தொழில் செய்பவன். எனது வீட்டைப் பாருங்கள் இது அனுமதியில்லாத சேரிபோல் தோன்றுகிறதா? நாம் கடந்த 50 ஆண்டுகளாக இங்கு வசித்து வருகிறோம். இந்த வசிப்பிடத்தைக் கைவிட்டு சின்னஞ்சிறு வீடுகளுக்கு நாம் போவதா? எனது வீட்டின் பரப்பளவு 14 பேர்ச்சஸ் ஆகும். இதைக் கைவிட்டு கோழிக்கூடுகளில் போய் நாம் வசிப்பதா?

எங்களை இந்த இடத்திலிருந்து அகற்றுவதற்கு அரசாங்கம் முயற்சித்தது. மேலும் குப்பைகளை இங்கு குவிப்பதே அரசாங்கத்தின் நோக்கமாக இருந்தது. அரசாங்கத்தின் தேவை இப்போது நிறைவேறி விட்டது. நாம் எவ்வளவு போராடினாலும் அரசாங்கம் போராடவில்லை. தற்போது இங்கிருந்து எம்மை விரட்டுவதற்கு அரசாங்கத்திற்கு வாய்ப்புக் கிட்டியுள்ளது. 30, 40 பேர் இறந்து அரசாங்கத்தின் தவறுகளுக்கு நாம் நஷ்டஈடு கட்டினோம். நாங்கள் இங்கு வந்து குப்பைகளைக் கொட்டவில்லை. அரசியல்வாதிகளே கொலொன்னாவை பிரதேசத்தை அழித்தொழித்தார்கள். தோல் வியாபாரத்தை இங்கு கொண்டுவர குண்டர்களின் அரசியலை நாம் இங்கு கொண்டுவரவில்லை. 50 ஆண்டுகாலம் இங்குவாழும் நாம் கொலைகளைச் செய்யவில்லை. அழகான வயல்வெளிக்குப் பக்கத்திலேயே நாம் வீடுகளைக் கட்டினோம். இவ்வளவு பெரிய சனத்தொகை வாழும் இடத்திற்கு நடுவே குப்பைகளைக் குவிப்பதற்கு பின்னணியாக இருந்த கொள்கை யாது? அழகான கொழும்பு எங்கே? இங்கிருந்து அந்த அழகான கொழும்பை எனக்குக் காட்டுங்கள் பார்ப்போம். இந்தக் குப்பை மேடு சரிவதற்கு சில நாட்களுக்கு முன்னர் எமக்கு எதிரே உள்ள வீட்டில் வாழ்ந்த பிள்ளை டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டு இறந்தது. இங்கு டெங்கு நோயினால் தாக்கப்பட்டு பிள்ளைகள் இறக்கின்றார்கள். எவ்வளவு சுகாதாரப் பிரச்சினைகள்? இரவு இந்த குப்பைமேடு சரிந்தது மாத்திரமல்ல அதற்கு முன்பிருந்தே பல அவலங்கள் இங்கு இடம்பெற்றன.

**இரட்சிப்பு செயற்பணி**

"குறைந்தபட்சம் இவ்வளவு பாரிய அழிவு ஏற்பட்ட பின்னர் எப்போது வாழும் உயிர்களை காக்க வந்தார்கள். இந்தப் பிரதேசத்தைச் சுற்றி எத்தனை படைமுகாம்கள் இருக்கின்றன. இறுதியாக எமது வீடுகளுக்கு வந்து டோர்ச் லைட் இருக்கா என்று கேட்கின்றார்கள்." ரொயி சில்வா தனது மனவேதனைகளை வெளிப்படுத்துகிறார்.

"இரவு சுமார் ஒன்றரை மணியிருக்கும், குப்பைமேடு சரிந்துவிழுந்தது. பொலிஸார் வருகைதந்த போதிலும் இரவு இரண்டு மணியளவிலேயே மீட்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இரவு 10 மணிமுதல் மனிதர்களின் அவல ஓலம் கேட்டது."

நுவன் போப்பகே மீட்பு நடவடிக்கைகளைப்பற்றி அவ்வாறே கூறினார். மீட்பு பணியாளர்கள் வந்தாலும் இரவு இரண்டு மணிக்கே மீட்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஓர் இளைஞனின் உடலின் அரைப்பகுதி குப்பைமேட்டில் சிக்கியிருந்தது. பகல் பொழுது முதலே தம்மை மீட்குமாறு அலறிக்கொண்டே இருந்தான். இராணுவம் மாலையில் வருகைதந்த தருணத்திலும் இந்த இளைஞனுக்கு சுயநினைவு இருந்தது. இரவு உடலின் கீழ்ப்பகுதியை விடுவித்து இளைஞனை வெளியே எடுக்கும்போது அவனது உயிர் பிரிந்திருந்தது.

சுமார் இரவு 10 மணிக்கு மீதொட்டமுல்லையில் பொலிஸ் மாஅதிபர் திரு.பூஜித்த ஜயசுந்தர கொலொன்னாவை நகரசபை ஆணையாளரிடம் எக்ஸ்கவேட்டர் இயந்திரம் ஒன்றையும், பக்கோ இயந்திரமொன்றையும் கேட்டபோது, மறுநாள் காலையில் தரமுடியுமென நகரசபை ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். இறுதியில் பொலிஸ் மற்றும் இராணுவ சாரதிகள் அந்த இயந்திரங்களை பிரதேச மக்களின் கோரிக்கைகளுக்கு மத்தியில் நகரசபையிலிருந்து வெளியே எடுத்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரசியல்வாதிகளுக்கு எதிர்ப்பு**

மீதொட்டமுல்லை மக்கள் ஒன்றிணைந்து எந்தவொரு அரசியல்வாதியும் தமது பிரதேசத்தில் பிரவேசிக்கவிடாமல் எதிர்ப்புத் தெரிவித்தனர். இது நாம் கண்ட விசேட நிலைமையாகும். எல்லாம் நடந்து முடிந்தபின்னர் இங்கு வந்து நல்ல பெயர் எடுக்க எந்தவொரு அரசியல்வாதிக்கும் இடமளிப்பதில்லையென ஏகோபித்த குரலில் மக்கள் கருத்து தெரிவித்தனர். எமது பிரதேசத்தில் நுழைவதற்கு முயற்சித்த பா.உ.எஸ்.எம்.மரிகாருக்கு எதிராக பாரிய எதிர்ப்பும், கூக்காட்டலும் இடம்பெற்றது. எமது கிராமத்தின் ஒரு தொங்கலில் அமைந்திருந்த ராகுல வித்தியாலயத்திற்கு கடுமையான பொலிஸ் பாதுகாப்புடன் வருகை தந்த பிரதமருக்கும், சாகர ரத்நாயக்க அமைச்சருக்கும் தொடர்ச்சியாக கூக்காட்டல் இடம்பெற்றது.

"இதனைப் பார்த்த எத்தனைபேர் வந்தார்கள்? அரசியல்வாதிகள் வரும்போது இராணுவத்தின் பாதுகாப்புடன் வந்தனர். வரமுடியாத அளவிற்கு அவர்கள் அச்சமடைந்துள்ளனர். ஏன் அவர்கள் இவ்வாறாக ஒளிந்துகொண்டு வரவேண்டும்? இவர்கள் ஏன் இப்போது படையெடுத்து வருகிறார்கள்? எமது பிள்ளைகள் இன்னும் பிரேத அறைகளில் இருக்கிறார்கள்! 15 இலட்சத்தில் எப்படி வீடு கட்டமுடியும்? நான் இதனை முன்னரும் கூறினேன். எமது வீட்டில் மூன்று பிரேதங்கள் இருக்கின்றன. அந்த மூன்று பிரேதங்களும் இன்னும் சொற்ப நேரத்தில் இங்கு கொண்டுவரப்படும். இன்னும் பல பிரேதங்கள் இந்த குப்பைமேட்டு மண்சரிவில் புதைந்துள்ளன. இவர்கள் ஏன் இல்லையென்று கூறுகிறார்கள்? மூக்குகளைப் பொத்திக்கொண்டு அப்படிக் கூறுகிறார்கள். என்ன துர்நாற்றம்? பிரேதங்களின் துர்நாற்றம். இந்தக் குப்பைகளோடு பிரேதங்களையும் இவர்களுக்கு சாப்பிடக் கொடுக்க வேண்டும். சாதாரண மக்கள் உண்மையில் இன்னும் சரியான நிலைமையை அறியமாட்டார்கள். அறிந்தால் இவர்களை அடித்து விரட்டுவார்கள்."

எந்தப் பேப்பர்க்காரனையும் கூப்பிட்டு பயனில்லை. இப்போது சொல்லி என்ன பிரயோசனம்? எனது குடும்பத்தவர்களின் மூன்று பிரேதங்கள் இன்னும் சொற்ப நேரத்தில் கொண்டுவரப்படும். எனது வீடு மண்சரிவில் புதையுண்டு விட்டது. அதற்குமேல் இரண்டு வீடுகள் புதையுண்டுள்ளன. உடைந்த வீடுகளுக்கு தற்போது வந்து ஆபத்தானதென்று அறிவித்தல்களை தற்போது ஒட்டுகிறார்கள். முழுமையாகப் பாதிக்கப்பட்ட வீடுகள் பகுதி பாதிக்கப்பட்டவையென இழப்பீடு வழங்கப் போகின்றார்களாம். இப்போது என்ன பகுதி இழப்பீடு? எங்களுடைய வீடுகளின் சுவர்கள் எல்லாம் உடைந்துவிட்டன. எந்த நேரத்திலும் இடிந்து விழலாம். இது பகுதி இழப்பீடல்ல? எங்களுடைய வாழ்க்கை முழுதும் அழிந்துவிட்டது.

குப்பை மேட்டிற்கு எதிரான அமைப்பின் செயல்வாதிகளில் ஒருவரான திரு.நிஹால் ஜெயசேகர பிரதமர் வருகைதந்த போது அவரைச் சந்திக்க முயற்சித்தார். ஆனால் பொலிஸார் அதற்கு இடமளிக்கவில்லை. அவர் அமைதியாக ஒரு சிறு சந்திப்பை ஏற்பாடு செய்யுமாறு வேண்டினார். ஆனால் அதற்கும் வாய்ப்பு கிட்டவில்லை. அதுமாத்திரமல்லாமல் அவரைப் போகவிடாமல் மிகவும் கடுமையான பாதுகாப்பு போடப்பட்டது அத்தருணத்தில் அவர் மிக வேதனையுடன் பின்வருமாறு கூறினார். "ஏன் எங்களோடு கதைப்பதில்லை? ராகுல வித்தியாலயத்தில் உள்ள அதிகாரிகள் பின்புதான் வந்தார்கள். எங்களுடைய கிராமத்தின் பிரச்சினைகளை நாங்கள்தான் அறிவோம். இப்போது ஏன் எம்மைப் போகவிடுவதில்லை? ஊடகங்களில் இந்த விடயங்களைப் பிரசுரியுங்கள். எம்மை ஏற்கனவே இவ்விடத்தைவிட்டு அகன்று செல்லும்படி அறிவித்தார்களென இப்போது அரசாங்கம் கூறுகிறது. வீடுகளுக்கான நஷ்டஈடு வழங்கியிருந்தால் நாம் போயிருப்போம். ஏலவிற்பனையின் மதிப்பீட்டின்படி எமக்கு உரிய பணத்தை வழங்குங்கள். நாம் போகிறோம் என்று கூறினோம். அப்போது எதுவிதமான கருத்தும் தெரிவிக்கப்படவில்லை. பல இடங்களில் வெடித்துள்ளமையை இறுதியாக எடுத்துச் சொன்னோம். ஆனால் அவர்கள் நாம் கூறியவற்றை பொருட்படுத்தவில்லை. வீடுகளுக்கு மாத வாடகையாக 15,000 ரூபாய் எடுத்துக்கொண்டு போகுமாறு நாம் அறிவுறுத்தப்பட்டோம். நாங்கள் 15,000 ரூபாய் மாத வாடகைகொண்ட வீடுகளுக்குப் போகமாட்டோம். எங்களுக்கு நிரந்தரமான காணி உறுதிகள் உண்டு. நாம் 15,000 ரூபாய் பெறுமதியான பலகை வீடுகளில் வாழ்வதாகவே அதிகாரிகள் நினைத்துக்கொண்டு இருக்கிறார்கள். எங்களை ஒளித்துவைத்து விட்டு இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முன்வரவேண்டாம்."

பிரதமர் விஜயம் செய்தபோது மக்கள் அவருடன் பேசுவதற்குக்கூட வாய்ப்பு வழங்கப்படவில்லை.

**பிரேதப் பெட்டிகளும் ஒரு இலட்சம் ரூபாயும்**

விபத்து ஏற்பட்டதற்கு பின்னர் ஒரு இழப்பிற்கு ஒரு இலட்சம் ரூபாயும், வீடு மற்றும் சொத்து இழப்பிற்கு 25 இலட்சம் ரூபாய்வரை நட்டஈடு வழங்குவதாக, அனர்த்த முகாமைத்துவ அமைச்சு கூறியுள்ளது. எவ்வாறாயினும், இந்தச் சம்பவத்தின் பின்பு அன்றைய நிதி அமைச்சர் திரு.ரவி கருணாநாயக்க அவர்கள் இயற்கை விபத்துக்களின்போது வழங்கப்படும் காப்புறுதி இதற்கு ஏற்புடையதாக வழங்கப்படுமெனக் கூறியிருந்தார்கள்.

எவ்வாறாயினும், மீதொட்டமுல்லை மக்களுக்கு கிடைத்த பிரேதப் பெட்டியாவது தரநிர்ணயத்துடன் அமைக்கப்படவில்லை. சந்திரா பனாகொட கம்பனியின்மூலம் கிடைத்த பல பிரேதப்பெட்டிகளில் இருந்து பலகைத் துண்டுகள் கீழே விழத்தொடங்கின. எனவே இடையிடையே பிரேதப்பெட்டிகள் நிலத்தில் வைக்கப்பட்டு துணிப் பட்டிகளால் பிரேதப்பெட்டி கட்டப்பட்டது. காரணம் அந்தப் பிரேதப்பெட்டிகளின் பலகைத் துண்டுகள் கீழே விழுந்தமையாகும்.

ஒரு உயிருக்கு ஒரு இலட்சம் ரூபாய் கட்டணம் செலுத்தியதையிட்டு சமூகத்தில் பாரிய எதிர்ப்பு உண்டாகியது. விவசாய அமைச்சிற்கு 200 மில்லியனுக்கு அதிகமாக ஒரு மாதத்திற்கு செலுத்தும் அரசாங்கம் ஒரு உயிருக்குக் கொடுக்கும் கட்டணம் ஒரு இலட்சம் ரூபாயா? எவ்வாறாயினும் இந்த எதிர்ப்பின் விளைவு ஜனாதிபதி ஒரு இலட்சம் மற்றும் 25 இலட்சம் பற்றிய கதைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இத்தகைய சிறிய நஷ்டஈடு வழங்க வேண்டாமென்று கூறினார்.

"இந்த குப்பைமேட்டில் புதையுண்டு இறப்பது இதைவிட நல்லதென்று பட்டது. இப்போது எம்மை எப்படிக் கவனிக்கின்றார்கள். முழு ஒட்டுமொத்த கொழும்பில் உள்ள குப்பைகளை நாமே சாப்பிட நேர்ந்தது. குப்பைமேடு சரிந்தபோது எமது உயிர்களைக் காப்பதற்காகவே நாம் ஓடினோம். தற்போது இடம்பெறும் அநீதிகளைப் பார்க்கும்போது உயிரோடு இருந்துதான் என்ன பயனெனத் தோன்றுகிறது."

**எஸ்.எம்.மரிக்கார்**

கொலொன்னாவை பாராளுமன்ற உறுப்பினர்

ஜனாதிபதி தேர்தலின்போது குப்பைமேடு அகற்றப்படுமென்று பிரதமர் உறுதிமொழி கூறினார். இந்த இடத்திற்கு இரண்டு ஏக்கருக்கான அனுமதியைப் பெற்றுக்கொண்டு வந்து எதுவிதமான விஞ்ஞான ரீதியான ஆய்வும் நடத்தாமல் குப்பைமேடு உயரமாகப் பெருகுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. நான் 2015 மே மாதம் 21 ஆந் திகதி சந்தித்து பிரதமருடன் உரையாடினேன். குப்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள்சுழற்சிக்கான ஒரு கருத்திட்டத்திற்கு விலைமனுக் கோருமாறு பிரதமர் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு உத்தரவு பிறப்பித்தார். அது உரிய முறையில் அமுல்படுத்தப்படாமல் இழுபட்டது. இது தொடர்ச்சியாக இழுபட்டு இருந்தபோது இப்போதாவது மேலும் குப்பைகளை சேர்ப்பதை நிறுத்துமாறு நாம் கோரிக்கை விடுத்தோம். பிரதமருடன் நான் மீண்டும் உரையாடினேன். இந்தக் குப்பைமேடு சரிந்துவிடும் அபாயத்தையும் எடுத்துரைத்தேன். எனவே இந்தக் குப்பைமேட்டிற்கான மாற்றிடத்திற்கு ஒப்புதல் பெறவும் முடிந்தது. இதற்கு நூறு நாட்களும் அவசியமில்லையென அப்போது கூறப்பட்டது. மாற்றிடத்திற்கு குப்பைமேட்டை எடுத்துச்செல்ல முடியுமெனக் கூறப்பட்டது. அப்போதுதான் குப்பைமேட்டை அகற்றுவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதென நான் மக்கள் முன்னிலையில் போய் சொன்னேன். ஆனால் சுற்றாடல் அதிகாரசபையின் ஒப்புதல் அதற்கு கிடைக்கவில்லை. பின்னர் நாம் சத்தமிட்டு சுற்றாடல் அதிகாரசபையின் ஒப்புதலைப் பெற்றுக்கொள்ள முடிந்தது.

இவையெல்லாம் நடந்தபின்னரும், மீதொட்டமுல்லை குப்பைமேட்டிற்கு குப்பைகள் கொண்டுபோய் போடப்பட்டன. இவ்வாறு செய்ய வேண்டாமென கொழும்பு மாநகரசபை ஆணையாளருக்கு நான் எழுத்துமூலமும் கூறினேன், வாய்மொழிமூலமும் கூறினேன். ஆனால் அவை ஒன்றும் செயற்படவில்லை. வேறு நபர்களின் எதிர்ப்பிற்கு அடிபணிந்து மீதொட்டமுல்லையிலேயே குப்பைகள் குவிக்கப்பட்டன. அதன் பின்புதான் நான் மீண்டும் ஒருமுறை எதிர்ப்பைத் தெரிவித்தேன். நாம் ஆரம்பத்தில் கூறிய சந்தர்ப்பத்திலேயே குப்பை இங்கு குவிப்பதை நிறுத்தியிருந்தால் இப்பிரச்சினை இவ்வாறாக ஏற்படமாட்டாது. ஆனால் எவருக்கும் நாம் கூறிய விடயம் தொடர்பாக செவிசாய்க்கும் தேவை இருக்கவில்லை.

**கலாநிதி ஜகத் முனசிங்க**
நகர அபிவிருத்தி அதிகாரசபை

கொழும்பு மாநகரசபை மீதொட்டமுல்லையில் குப்பை குவிப்பதை தற்காலிக நடவடிக்கையாகவே ஆரம்பித்தது. இவ்வாறாக குப்பைகளை மீதொட்டமுல்லையில் குவிக்க வேண்டாமென தொடர்ச்சியாக நாம் கொழும்பு நகரசபைக்கு அறிவுறுத்தினோம். 17 ஏக்கர்வரை குப்பைகள் மீதொட்டமுல்லையில் குவிக்கப்பட்டன. ஏனைய நகரசபைகள் குப்பைகளை வகையீடு செய்து வழங்குவதால் குப்பைகளை முகாமைத்துவம் செய்வது இலகுவாக அமைந்தது. ஆனால் கொழும்பு நகரசபையில் அப்படியான ஒரு நிலைமை இருக்கவில்லை. 2015 இன் ஒரு பிரேரணைக்கமைய குப்பைகளை எரித்து மின்சாரத்தை உற்பத்தி செய்யும் ஒரு கருத்திட்டத்திற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியிருந்தது. தற்போது அந்தக் கருத்திட்டம் திட்டமிடப்பட்டு வருகிறது. கறதியான மற்றும் முத்துராஜவெல ஆகிய பிரதேசங்களில் இக்கருத்திட்டங்கள் செயற்படுத்தப்படும். 2019இல் இருந்து இக்கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். இக்கருத்திட்டத்திற்கு நாளொன்றிற்கு 60 தொன் குப்பைகள் அவசியமாகும். அதற்கு மேலதிகமாக மேலும் பல கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

**அற்புதமான கதை**

உள்நாட்டு அமைச்சர் இவற்றின் இறுதியில் ஊடகங்கள் ஊடாக அற்புதமான ஒரு கதையை கூறியிருந்தது. மீதொட்டமுல்லையில் உள்ள வீடுகளுக்கு ஓர் ஆபத்து உண்டென உத்தியோகபூர்வமாக ஏப்பிரல் 04 ஆந் திகதி அறிவிக்கப்பட்டுள்ளதென இந்த அமைச்சு கூறியிருந்தது. கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலாளர் உட்பட அரச நிறுவனங்களினால் எழுத்துமூலம் ஆபத்து அறிவிக்கப்பட்டதென உள்நாட்டு அமைச்சு கூறியது. இந்த அபாய எச்சரிக்கைகளை அறிவித்தும்கூட அவற்றைப் பொருட்படுத்தாமை இந்த விபத்திற்கு காரணமாகுமென அவர்கள் ஓர் அறிவித்தலை வெளியிட்டனர்..

உள்நாட்டு அமைச்சு முன்வைக்கும் இந்த அற்புதமான தர்க்கத்திற்கமைய ஆபத்து அறிவிக்கப்பட்ட பின்னர் மக்கள் வீடுகளில் இருந்து வெளியேறி பாதையில் நித்திரை செய்திருக்க வேண்டும் என்பதே உள்நாட்டு அமைச்சின் அற்புதமான தர்க்கம் எடுத்துக் கூறுகிறது. அபாய வாய்ப்பு எச்சரிக்கைகளை உணர்த்துவதற்கு அரசாங்கங்கள் எதற்கு? நாளைக்கு வீடுகள் உடைந்துவிழும் என்று கூறினாலும் மக்கள் சென்று தஞ்சமடைவதற்கு ஓர் இடம் இல்லாவிட்டால் அவர்கள் எங்கு போவது? இந்தக் குப்பை மேட்டை தமது தலைக்குமேல் குவிப்பது பொதுமக்களா என்பதை உள்நாட்டு அமைச்சு ஆராய்ந்து பார்த்ததா? பாதிப்புக்குள்ளாகி பல்வேறு வேதனைகளை அனுபவித்துவரும் மக்களுக்கு மேலும் வேதனைகளை சுமத்துவதும் இப்படியான கேலிக்கூத்தான தர்க்கங்களை அமைச்சர் வஜிர அபேவர்த்தன முன்வைப்பதன்மூலம் எதனை எதிர்பார்க்கின்றாரென எமக்குப் புரியவில்லை. மீதொட்டமுல்லையில் ஒரு தாயார் எமக்குப் பின்வருமாறு கூறினார்.

"குப்பைமேடு சரிந்து விழுவதற்கு முன்னர் வீடுகள் அபாயமானவையென்று குறிப்பிடப்பட்டன. அப்போது வசிப்பதற்கு ஓர் நிரந்தர இடம் தாருங்களென நாம் கூறினோம். அதற்குப் பதிலாக அவர்கள் உத்தியோகத்தர்கள் என்றும், அதைத் தீர்மானிக்க அவர்களால் முடியாதென்றும் அவர்கள் பதிலுரைத்தனர். அவர்கள்மீது விடுக்கப்படும் கட்டளைகளையே அவர்கள் மேற்கொள்ள முடியுமென்றும் கூறினர். ஆனால் மேற்படி உத்தியோகத்தர்கள் என்னைச் சந்திக்க வரவில்லை."

**திரு.கீர்த்திரத்னவின் கதை**

பலரை அதிர்ச்சிக்குள்ளாக்கிய கதைகளில் ஒன்று திரு.கீர்த்திரத்னவின் கதையாகும். அவர் பங்குபற்றிய எதிர்ப்பியக்கங்களும், ஊடக சந்திப்புக்களும் எமக்கு நன்கு ஞாபகமிருக்கிறது. குப்பைமேடு பற்றி கட்டுரைகள் வரையும் ஊடகவியலாளர்களின் நண்பர் அவர். குப்பை மேட்டிற்கு எதிராகக் கருத்துத் தெரிவித்தவரின் நண்பர் அவர். அவர் குப்பைமேட்டிற்கு எதிராகக் குரலெழுப்பினார். அடிவாங்கினார். சிறைக்கூண்டில் அடைக்கப்பட்டார். நுஹன் கோப்பகே, கீர்த்திரத்ன உட்பட்ட பலர் குப்பைமேட்டிற்கு எதிராக மனிதர்களை அணிதிரட்டும் மிகக் கஷ்டமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் போராடினார்கள். குப்பைமேடு தமது தலைகளில் சரிந்துவிழுந்தே எல்லாம் முடிவடைந்தது. அவருடைய பேரனைத் தவிர குடும்ப உறுப்பினர் அனைவரும் இறந்துவிட்டனர். வெறுமனே குப்பைமேடு சரிந்திருந்தால் இது மரணங்கள்பற்றிய வெறும் கதையாகவே இருந்திருக்கும். கீர்த்திரத்ன மேற்கொண்ட போராட்டம் காரணமாக, இது முன்கூட்டியே சொல்லப்பட்டிருந்தும் அதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளாமையால் அது ஒரு குற்றச்செயல் என்பது இப்போது புரிகிறது. குப்பைகளை ஒழுங்காக முகாமைத்துவம் செய்யாததன் காரணமாக அரசு பொறுப்பேற்க வேண்டிய குற்றவியல் குற்றமாக இது மாறியது. அவர் இப்போராட்டத்தில் தோல்வியடைந்ததாகவே திரு.கீர்த்திரத்ன கூறியிருந்தார். ஆனால் அநீதியின்முன் பேசாமடந்தையாக இருக்காமல் போராடிய கீர்த்திரத்ன ஓர் உண்மை வீரனாவார். அநீதியின் முன்னே பேசாமல் இருக்காமல் அநீதிக்கெதிராக குரலெழுப்புபவர்களுக்கு எமது பாராட்டுதல்களும், மரியாதையும் உரித்தாகட்டும். ●

**ஏப்பிரல் 23 ராவய பத்திரிகைக்கு நன்றி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



www.youtube.com

# இந்த அரசாங்கம் உலகத்தைச் சுற்றி பிச்சை கேட்டுத் திரிவதோடு பிரச்சினைகளுக்கு ஒட்டுவேலை செய்கிறது

**மீதொட்டமுல்லை குப்பைமேடு சரிந்து விழுந்ததை அடிப்படையாகக்கொண்டு அரசாங்கத்தின் நடவடிக்கைகள்பற்றி அனேகமான அரசியல்கட்சிகள் பல்வேறு கருத்துக்களை முன்வைத்தன. இவற்றினிடையே மக்கள் விடுதலை முன்னணியின் (ஜேவீபி) அரசியல் குழு உறுப்பினர் திரு.கே.டி.லால்காந்த மீதொட்டமுல்லை மக்களுக்கு நியாயம் கிடைத்ததா? அரசாங்கத்தின் நடவடிக்கைகள் எவ்வாறு அமைந்தன? என்ற விடயம்பற்றி கருத்துத் தெரிவித்தார்.**

**திரு.கே.டி.லால்காந்த**
(ஜேவீபி) அரசியல் குழு உறுப்பினர்

கடந்த காலத்தில் ஏற்பட்ட பொருள்கோடல் தவறானதென சுனாமி போன்ற இயல்பான அனர்த்தங்களின்போது இல்லாது போகின்றது. இயற்கை எப்போதும் ஒரே மாதிரியாக அமைவதில்லை. நாமே உருவாக்கிக்கொள்ளும் விபத்துக்களை நாம் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும். குப்பைகளை அகற்றுவது தொடர்பாக குறிப்பிடத்தக்க வேலைத்திட்டத்தை எந்தவொரு அரசாங்கமும் செயற்படுத்தவில்லை. அரசாங்கம் சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் குப்பைகளை மீதொட்டமுல்லையில் குவிப்பதையே செய்து வந்தது. அதன் விளைவுகள் தற்போது கிடைத்தவண்ணம் உள்ளன. எந்தவோர் இடத்திலேனும் குப்பைகளை குவிப்பது விடையாக அமைய மாட்டாதென்பது இந்த கவலைக்கிடமான அனுபவம் எமக்கு எடுத்துக் கூறுகிறது. குப்பைகளை அகற்றும் விஞ்ஞானத்தையும், தொழிநுட்பத்தையும் தொடர்புபடுத்தி மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை நாம் புரிந்துகொள்ள வேண்டும். பல்வேறு இடங்களுக்கு குப்பைகளை அகற்றும்போது மக்கள் அதனை எதிர்ப்பதாயின் அதற்கு சட்டங்களை இயற்றமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யார் பொறுப்புக்கூற வேண்டும்?**

மீதொட்டமுல்லையில் இடம்பெற்ற அனர்த்தங்களுக்கு தற்போதைய அரசாங்கமும், கடந்த அரசாங்கங்களும் பொறுப்புக்கூற வேண்டும். மீதொட்டமுல்லையில் குப்பைகளை குவிப்பதற்கு முன்னர், கொலொன்னாவை நகரசபையில் அதுபற்றிய ஒரு விவாதம் இடம்பெற்றது. அந்தக் கூட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சியையும், ஸ்ரீலங்கா சுதந்தரக்கட்சியையும் சார்ந்த அனைவரும் மீதொட்டமுல்லையில் குப்பைகளைக் குவிப்பதற்கு உடன்பட்டனர். அதனை எதிர்த்த ஒரேயொரு உறுப்பினர் ஜேவீபி. இன் தோழர் மாத்திரமேயாவார். இரு தரப்பினரும் அவரை காரசாரமாகக் கண்டித்தனர். இந்த அனர்த்தம் ஏற்படுமென ஜேவீபி எதிர்வு கூறியது. இதனை ஒரு நெருக்கடியாகவும், பிரச்சினையாகவும் மாற்றியது மகிந்தவின் அரசாங்கமாகும். அவர்கள் அதனை மறுக்கவில்லை. மக்களின் ஆர்ப்பாட்டங்களின் முன்னே குப்பைமேட்டை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தாலும் அது அகற்றப்படவில்லை.

தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்து ஈராண்டு கடந்த நிலையில் மீதொட்டமுல்லையில் குப்பைகளை குவித்தனரேயொழிய அவற்றை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. மீதொட்டமுல்லையில் ராஜபக்ஷ அரசாங்கம் செய்த அசிங்கத்தைவிட, இந்த அரசாங்கம் பல இடங்களில் அசிங்கத்தை மேற்கொண்டது. ஒரு வேலைத்திட்டமின்றி தமது பிரதேசத்திற்கு குப்பைகளை அகற்றுவதற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஒரு திட்டத்துடன் குப்பைகள் போடப்படுமேயாயின் மக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க மாட்டார்கள். இந்த அரசாங்கமும் எதனையும் செவ்வனே செய்யமாட்டாது என்பதை நிரூபித்துள்ளது.

ஏற்பட்டுள்ள கிளர்ச்சிகள் குப்பைப் பிரச்சினைக்கு விசேட கசெற் அறிவித்தல் வெளியிடுவதன்மூலம் தீர்க்கப்பட முடியாது. அடிப்படையில் இந்த கசெற் அறித்தலை ஜேவீபி எதிர்க்கிறது. நோய் எங்கோ இருக்கத்தக்கதாக வேறு எங்கோ மருந்து செய்வது இதற்கு ஒப்பாகும். ஏற்கனவே குறிப்பிட்டதுபோல இப்பிரச்சினை இன்றுநேற்று ஏற்பட்டதல்ல. இந்த ஆபத்துபற்றி பிரதேசவாசிகளே தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். மக்கள் இருந்த இடத்தில் குப்பைமேட்டை உருவாக்கினரே தவிர மக்கள் குப்பைமேட்டின் அருகே செல்லவில்லை. ஆனால் குப்பைமேடு அரசியல்வாதிகளுக்கு ஒரு வருமான மார்க்கமாக இருந்தது. எனவே மக்களின் குரலுக்கு செவிசாய்ப்பதற்கு நிருவாகிகளுக்கு அவசியமிருக்கவில்லை. இறுதியில் மிக துரதிர்ஷ்டமான முறையில் மீதொட்டமுல்லையின் மக்கள் இரண்டு அம்சங்களில் அடிபட்டு இறுதியில் மரணத்திற்கு இரையாகினர்.

மக்கள் தமது தவறினாலேயே இத்தகைய கஷ்டங்களுக்கு ஆளாகியுள்ளனரென அரசாங்கம் தற்போது கூறிவருகிறது. இது வெறுக்கத்தக்க விடயமாகும். கோதாபய ராஜபக்ஷவில் இருந்து இன்றைய அரசாங்கத்தின் பொறுப்புவரை ஒருவருக்கொருவர் குற்றம்சாட்டிக் கொண்டிருந்தாலும் அனர்த்தத்திற்கு உண்மையான தீர்வைக் கண்டறியவில்லை. தொடர்ந்தும் நடவடிக்கை மேற்கொள்ளவும் இல்லை. ஜேவீபி இந்த அசிங்கத்தைக்கண்டு வெறுத்து ஒதுக்கியது. குப்பைகளை உரியமுறையில் அகற்றுவதற்கு, மக்களுக்கு ஆபத்து ஏற்படாதவகையில் விஞ்ஞான முறையொன்றை உடனடியாகத் தயாரித்து தருமாறு அரசாங்கத்திடம் கூறியது.

**மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்காமை**

நாட்டின் சாதாரண மக்களின் எந்தப் பிரச்சினையைத் தீர்த்தார்கள் என்பது ஒரு கேள்வியாகும். யானைகளுக்கும், மனிதர்களுக்கும் இடையிலான மோதல் பிரச்சினையை அரசாங்கம் தீர்த்ததா? விவசாயிகளின் மிக உக்கிரமான பிரச்சினைகளை அரசாங்கம் தீர்த்ததா? நகரங்களில் கட்டாங்காலியாகத் திரியும் மாடுகளின் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு காணப்பட்டதா? கட்டாங்காலியாகத் திரியும் நாய்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டதா? மக்களின் எந்தப் பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வு கண்டுள்ளது? வீதிகளைக் கடக்கும் மஞ்சள் கோடுகளுக்குப் பதிலாக வெள்ளைக்கோடுகளை அமைத்தாலும் அவற்றினூடாக தெருக்களைக் கடப்பதற்கு மக்கள் பயிற்றுவிக்கப்படவில்லை. இலங்கையில் ஒழுங்குவிதிகளை மீறும் அனேகமானோர் வெளிநாடுகளில் ஒழுங்குவிதிகளை அனுசரிக்கின்றனர். ஆனால் இலங்கைக்கு மீண்டும் வந்தபின்னர் பழைய மனிதனாகவே அவன் செயற்படுகிறான். இவ்வாறு இடம்பெறுவதற்குக் காரணம் ஒழுங்குவிதிகளோ, ஒரு வழிமுறையோ இங்கு அனுசரிக்கப்படுவதில்லை. மே தினம் முடிவடைந்ததும், நாம் ஒருசில மணித்தியாலங்களுக்குள் அனைத்துக் குப்பைகளை அகற்றி நாம் மே தினத்திற்கப் பயன்படுத்திய விளையாட்டு மைதானங்களை தூய்மைப்படுத்தினோம். ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகியவற்றின் மே தினங்கள் முடிவுற்று இரண்டு, மூன்று வாரங்கள்வரை போட்ட குப்பைகளை அகற்றுவதற்கு காலம் தேவை. முதலில் கட்சிகளே நாட்டிற்கு முன்னுதாரணமாக திகழவேண்டும். தனிப்பட்ட முறையில் தனக்காக உழைப்பதை மாத்திரம் குறிக்கோளாகக் கொண்ட அரசாங்கங்கள் பதவிக்கு வருவதன் காரணமாகவே இந்த நாடு இப்படியான நிலைமையை எதிர்நோக்குகிறது. ஒரு நாட்டை உருவாக்குவதும் அரசியல்வாதிகளேயாவர். இதுவரை அரசியற்கட்சிகள் நாட்டை அழிப்பதையே செய்துள்ளன.

**வாக்குகள் அரசாங்கத்திற்கு, பிரச்சினைகள் எமக்கு**

குறிப்பாக குப்பைமேட்டுப் பிரச்சினை உட்பட அனேகமான பிரச்சினைகளுக்கு ஜேவீபி பொறுப்புக்கூற வேண்டிய அவசியமில்லை. நாம் ஆட்சியமைப்பதற்கு எமக்கு மக்கள் வாக்களிக்கவில்லை. ஆட்சிசெய்வதற்கு வாக்குகளை வேறு நபர்களுக்குக் கொடுத்து, பிரச்சினைகள் ஏற்படுகிறபோது எம்மீது குற்றம் காணுதல் நியாயமாகாது. இப்போது வாக்குகளை அவர்களுக்கு அள்ளிக் கொடுக்கவும், பிரச்சினைகளை எம்மிடம் ஒப்படைக்கவும் மக்கள் பழக்கப்பட்டுள்ளனர். அதிகாரத்தை எமக்கு வழங்கும்வரை பிரச்சினைகளை எமக்குக் கொடுக்கவேண்டாமென நாம் மக்களுக்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறோம். எதிர்க்கட்சி என்ற முறையில் நாம் எப்போதும் பிரச்சினைகளுக்காக தோற்றுவோம். சுற்றாடலும், நீரும் அழித்தொழிக்கப்படும்போது நாம் அமைதியாக இருக்கமுடியாது. சுற்றாடல் பிரச்சினைக்கு மாற்றீடாக அரசாங்கம் கொழும்புக் குப்பைகளை பல்வேறு இடங்களில் போட்டு வருகிறது. அது ஒரு தீர்வாகுமா? இதன்மூலம் பிரச்சினைகளை எல்லா இடங்களிலும் பரப்புவதையே அரசாங்கங்கள் செய்து வருகின்றன.

கொழும்பு நகரசபை குப்பை தொடர்பாக தேசியக் கடமையைச் செய்கின்றது என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். கொழும்பில் அதிகமாக இருக்கும் குப்பைகள் வெளியில் இருந்து கொண்டுவந்து போடும் குப்பைகளாகவே மாறியுள்ளன. கொழும்பில் உள்ள குப்பைகளைப்போன்று ஐந்து மடங்கு குப்பைகள் வெளியே இருந்து வந்து குவிகின்றன. இதனைத் தடுப்பதற்கு கொழும்பு மாநகரசபை முன்வைத்த வேலைத்திட்டம் எது? ஒரு தொன் குப்பையையாவது சுழற்ச்சிமுறையில் மாற்றியமைக்க அவர்களால் முடிந்ததா? அனைத்து நகரசபைகளும், பிரதேச சபைகளும் தமது குப்பைகளை ஒவ்வொரு இடத்திலும் போடாமல், மக்களின் வாழ்க்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தாதவகையில் விஞ்ஞான முறையில் தொழிநுட்ப ரீதியாகப் பயன்படுத்தும் ஒரு நடைமுறையைப் பின்பற்ற வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒரு அமைச்சருக்கு பயணிப்பதற்கான ஒரு வாகனத்தை இறக்குமதி செய்வதற்கு இந்த அரசாங்கம் முப்பது, நாற்பது கோடி ரூபாய் ஒதுக்குகிறது. மீதொட்டமுல்லை அனர்த்தத்தின்போது முப்பது பேர் மரணித்த சமயம் அவர்களுக்கென முப்பது இலட்சம் ரூபாய் போன்ற ஒரு சிறு தொகையே ஒதுக்கப்படுகிறது.**

திஸ்ச மஹாராம பிரதேச சபையில் நாம் அதிகாரத்தில் இருந்தபோது இத்தகைய ஒரு முன்னுதாரணத்தை வழங்கினோம். ஆனால் பணம் சம்பாதிப்பதை மாத்திரம் தமது குறிக்கோளாகக் கொண்ட இரண்டு கட்சிகளுக்கே மக்கள் வாக்களித்து வருகின்றனர். இவை மக்களின் தவறாகும். அரசாங்கத்தின் தவறுகளை மாத்திரமல்லாமல் மக்களின் தவறுகளையும் நாம் காண்கின்றோம். பிசாசுக்கேற்ற வாகனம் எனும் கூற்றுக்கமைய மக்களுக்கேற்ற ஆட்சியாளர்களே தோன்றுகின்றனர். அரசியல் அதிகாரம் இரு கட்சிகளுக்கிடையிலே கைமாறும் வரை இதனை மாற்றியமைக்க முடியாது. நான்கு ஆண்டுகள் நகரசபைகளின் அதிகாரம் எமக்கு வழங்கப்படுமேயாயின் நாம் அர்ப்பணிப்புடன் பணியாற்ற முடியும்.

மக்கள் பொறுப்புடன் செயற்படாத காரணத்தினாலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளதென்பதை மக்களுக்கு தலையில்குட்டி சுட்டிக்காட்ட வேண்டும். அரசியல்வாதிகள் கள்வர்கள், பகற்கொள்ளையர்கள், ஏமாற்றுக்காரர்கள் என்று நன்கு அறிந்தும் பழக்கத் தோஷத்திற்காவது அல்லது தற்காலிக நன்மைக்காகவேனும் பிரதான எதிர்க்கட்சிகளுக்கு பிரஜைகள் வாக்களித்து வருகின்றனர். சிலர் குற்றவியல் குற்றவாளிகளையும், ஊழல் பேர்வழிகளையும் பிடிப்பதாக உறுதிமொழி கூறினர். ஆனால் அவ்வாறு இடம்பெறவில்லை. இலங்கையில் போலித் தம்பட்டம் அடிக்கும், ஒன்றையுமே செய்யாத அமைச்சர்கள் கூறும் விடயங்களை மாத்திரம் மக்கள் நம்ப வேண்டியதில்லை.

ஒரு அமைச்சருக்கு பயணிப்பதற்கான ஒரு வாகனத்தை இறக்குமதி செய்வதற்கு இந்த அரசாங்கம் முப்பது, நாற்பது கோடி ரூபாய் ஒதுக்குகிறது. மீதொட்டமுல்லை அனர்த்தத்தின்போது முப்பது பேர் மரணித்த சமயம் அவர்களுக்கென முப்பது இலட்சம் ரூபாய் போன்ற ஒரு சிறு தொகையே ஒதுக்கப்படுகிறது. அமைச்சர்களின் பாவனைக்கு எத்தனையோ வாகனங்கள் இருக்கின்றன. அரசாங்கத்தின் தவறு காரணமாக மக்கள் உயிரைகளையும், சொத்துக்களையும் இழந்தபோது அத்தியாவசியமான நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்வதற்கு இந்த அரசாங்கம் கருமித்தனத்தோடு செயற்படுகிறது. சாலாவையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் இதுவரை இழப்பீடு வழங்கி விஷயத்தை முடிக்கவில்லை. அந்த நகரத்தை சீரமைத்து முடிக்கவில்லை. வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட கொழும்புவாழ் மக்களுக்கு இன்னும் இழப்பீடு வழங்கப்படவில்லை.

பிரச்சினைகளை மறக்கும்வரை பிற்போடுதல் என்ற விடயத்தையே அரசாங்கம் செய்துவருகிறது. மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைக் கண்டறிவதற்கு அரசாங்கத்தின் இயலாத்தன்மையையே இவைமூலம் சுட்டிக்காட்டப்படுகிறது. அரசாங்கம் உலகம்சுற்றி பிச்சை கேட்கும் அதேவேளை அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஒட்டுவேலை செய்து வருகிறது. கடன் தவணையை மீளக்கட்ட முடியாமல் தவிர்த்துக் கொண்டிருக்கிறது. அரசாங்கத்தின் பயணப்பாதை தவறானதென அது ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த நாட்டை இத்தகைய அழிவுப்பாதைக்கு இட்டுச் சென்றவர்கள் அரசியல்வாதிகளேயொழிய மக்கள் அல்ல.

**தொழிற்சங்கங்கள் தற்போது பலமுடன் இருக்கின்றன**

ஜேவீபிக்கு இருக்கும் சக்தி முன்னரைவிட அதிகரித்துள்ளன. நாட்டின் சொத்துக்களை விற்று உண்ணும் கொள்கையை தோல்வியுறச் செய்ய எம்மால் முடிந்துள்ளது. கொழும்புத்துறைமுகத்தை இந்தியாவிற்கு ஒப்படைக்க அரசாங்கத்தினால் முடியாது போய்விட்டது. அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவிற்கு ஒப்படைத்தல், இந்தியாவுடன் எற்கா ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடுதல், அம்பாந்தோட்டையில் உள்ள காணிகளை வெளிநாட்டு அரசாங்கங்களுக்கு விலைபேசுதல் என்பவற்றை அரசாங்கத்தால் இதுவரை நிறைவேற்ற முடியவில்லை. எரிபொருள் தாங்கிகளை விற்பதற்கு அரசாங்கம் முயற்சித்தபோதிலும் அதற்கு நாம் இடமளிக்க மாட்டோம். எமது போராட்டத்தின் விளைவாக மின்சார சபையைச் சேர்ந்த 7,000 ஊழியர்கள் நிரந்தர சேவையில் உள்வாங்குவதற்கான தொழிற்சங்க இயக்கம் போராடுகின்ற அனைத்து இடங்களிலும் பொறுப்புடன் பணியாற்றி வருகிறோம். வேறு எப்போதையும்விட தொழிற்சங்கங்கள் உறுதியாகச் செயற்படுகின்றன.

**அரசியல் மறுசீரமைப்புக்கள்**

அமுலில் உள்ள அரசியலமைப்பு பொதுமக்களின் விருப்பத்திற்கமைய சிருஷ்டிக்கப்பட்ட அரசியலமைப்பல்ல. மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பது எவ்வாறு இருப்பினும் ஜே.ஆர். இன் அதிகாரத்திற்கான தேவையின் நிமித்தம் இது தயாரிக்கப்பட்டது. அதன் பின்னர் எவ்வளவு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டாலும் அரசியலமைப்பு மக்களின் அரசியலமைப்பாக உருவாக்கப்படவில்லை. நிறைவேற்று ஜனாதிபதி முறைமை இல்லாத, மக்களுக்குப் பொறுப்புக் கூறும் வாக்களிக்கும்முறை கொண்ட, சமூக அநீதியைப் புறக்கணிக்கும் புதிய அரசியலமைப்பொன்று அவசியமாகும். புதிய அரசாங்கம் பதவிக்கு வருவதற்கு முன்னர், புதிய அரசியலமைப்பொன்றை அறிமுகப்படுத்துவதாக உறுதிமொழி கூறியபடியால் அதனை செயற்படுத்த வேண்டும். புதிய அரசாங்கம் பதவிக்கு வந்து இரண்டு ஆண்டுகள் கடந்துள்ளபோதிலும் மக்களுக்கு உறுதியளித்தபடி உறுதிமொழிகளை அமுல்படுத்தும் தேவை அரசுக்கு இல்லை. இந்த உறுதிமொழிகளை நிறைவேற்றுவதற்கான அழுத்தத்தைக் கொடுப்பதற்கே நாம் கலந்துரையாடல்களை ஆரம்பிக்கத் தீர்மானித்தோம். இந்த நாட்டின் பல அரசியற்கட்சிகளோடு நாம் கலந்துரையாடினோம். ஜனாதிபதியுடனும், பிரதமருடனும் அதன் நீட்சியாகக் கலந்துரையாடத் தீர்மானித்துள்ளோம். தேசிய நல்லிணக்கம் ஏற்படும் வகையிலான புதிய அரசியலமைப்பொன்றின் அவசியமே எமக்கு உள்ளது. இதற்கு சர்வஜன வாக்கெடுப்பிற்கும் செல்லவேண்டிய அதேநேரம் பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மை வாக்குகள்மூலம் ஒப்புதல் பெறவும் வேண்டும். இதற்கு நாம் அரசாங்கத்திற்கு அழுத்தங்களைக் கொடுப்போம்

(நன்றி – ஒரு பத்திரிகை கலந்துரையாடலில் இருந்து) ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



www.thefamouspeople.com

# ஜனநாயகத்திற்கும், பொருளாதாரத்திற்கும் வலுவூட்ட வேண்டும்

பிரதமர்
ரணில் விக்கிரமசிங்க

பாராளுமன்றத்தை வலுப்படுத்தும் ஓர் படிமுறையாக கோப் குழு, அரச கணக்குக்குழு போன்ற அரச நிதி நடவடிக்கைகள் தொடர்பான நிறுவனங்களின் அதிகாரங்களை மேம்படுத்துவதாகவும், எதுவிதமான திட்டமுமின்றி ராஜபக்ஷ ஆட்சி, பாரிய நிதியைக் கடன்வாங்கி தான்தோன்றித்தனமாகச் செலவுசெய்தது. பொருளாதாரம் ஆட்டம் காண்பதற்குக் காரணம் பாராளுமன்றத்திற்குரிய அரச நிதி அதிகாரங்கள் போதுமானதாக அமையாததே எனப் பிரதமர் திரு. ரணில் விக்கிரமசிங்க கொழும்பில் கூறினார்.

**அரசியலமைப்பும் இடைக்கால அறிக்கையும்**

“அரசியலமைப்பு நெறிப்படுத்தும் குழுவின் இடைக்கால அறிக்கை வெகு அண்மையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். பாராளுமன்றத்தில் இதுபற்றிய விவாதம் நடத்தப்பட இடமுண்டு. இடைக்கால அறிக்கை, அதிகாரப் பகிர்வு, நிறைவேற்றுத்துறை, சட்டவாக்கத் துறைக்கிடையிலான உறவுகள், நீதிமன்றத்தொகுதி, மனித உரிமைகள் ஆகிய துறைகளோடு தொடர்பானவை. பாராளுமன்றத்தை வலுப்படுத்துதல் எமது குறிக்கோளாகும். பாராளுமன்றத்தையும் வலுவூட்டும் ஓர் நடவடிக்கையாக துறைசார் குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டன. இந்த வழிமுறை பொதுவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சரவை அரசாங்க முறைமை செயற்படுத்தும் நாடுகளில் கிடையாது. சாதாரணமாக அமைச்சர்கள் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தமது கருத்துக்களை மாத்திரமே தெரிவிக்க முடியும்.

துறைசார் குழுக்கள் காரணமாக எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் அரசியலமைப்பில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பும் கிடைக்கிறது. தீர்மானங்களை மேற்கொள்ளும்போது அனைத்து தரப்பினரையும் இணைத்துக்கொள்வதற்கான வாய்ப்பு கிடைக்கிறது. இது மிகவும் சிறந்தமுறையாகும். இந்த முறைமையை சிலர் கேள்விக்குட்படுத்துகின்றனர். ஆனால் அது நன்கு செயற்படுத்தப்படுகிறது. துறைசார் குழுக்களின்மூலம் பல நன்மைகள் கிடைக்கின்றன. அமைச்சர்களின் கண்காணிப்புக்குட்படாத துறைகள்மீது இதன்போது கவனம்செலுத்தப்பட முடியும்.

நாம் ஆரம்பித்த வழிமுறை மாற்றமடைய மாட்டாது. இதுபற்றி மீண்டும் தேடிப்பார்க்க வேண்டும். பாராளுமன்றத்தை வலுவூட்டும் செயற்பாடுகளின்போது அரச கணக்குக்குழு பொதுத் தொழில்முயற்சிகள்பற்றிய / குழு அல்லது கோப் போன்ற அரசநிதி மற்றும் அதனோடு தொடர்புடைய குழுக்களின் அதிகாரங்களை வலுப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக நாம் அரச நிதிக்குழு என்ற பெயரில் மூன்றாவது செயற்குழுவையும் அறிமுகம் செய்தோம். அத்தோடு பாராளுமன்றத்தின் வரவுசெலவு அலுவலகத்தையும் ஸ்தாபிப்பதற்கு தற்போது சட்டவரைவை மேற்கொண்டு வருகிறோம்.

அரச நிதிபற்றிய பாராளுமன்றத்திற்குரிய அதிகாரங்கள் போதாதென எமக்குத் தெரியும். கடந்த ஐந்து ஆண்டுகளுக்குள் கடன்வாங்கிய மாபெரும் கடன்தொகையை மீளச்செலுத்தும் பொறுப்பு, எமது தேசிய அரசாங்கத்தின் தோள்களில் இதன் விளைவாகவே சுமத்தப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தை வலுவூட்டினால் அரசாங்கக் கட்சியிலும், எதிர்க்கட்சியிலும் உள்ள உறுப்பினர்களின் தவறுகளையும், குறைபாடுகளையும் சுட்டிக்காட்டி அவற்றை நிர்வகிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கிறது. இளம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஓர் பங்களிப்பைச் செய்யக்கூடிய நிலைமையை உருவாக்குவது எமது குறிக்கோளாகும்.

### மக்களுக்கு வலுவூட்டப்பட்ட பொருளாதாரம்

"நாம் எதிர்நோக்க வேண்டிய பாரிய பிரச்சினை எமது செல்மதி நிலுவையும், வெளிநாட்டுக் கடன்களுமாகும். எமது செல்மதி நிலுவையை நோக்கும்போது எமது நாட்டில் வாழ்வதற்குத் தேவையான அந்நியச் செலாவணியை நாம் முழுமையாக ஈட்டமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே நாம் மேலும் கடன் வாங்கவேண்டியுள்ளது. இந்த நாட்டின் தேவைகளுக்கவசியமான ஒட்டுமொத்த அந்நியச் செலாவணியை எமது வியாபாரத்தின்மூலம் நாம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பது எமது அடிப்படைக் குறிக்கோளாகும். சேவைகளாக இருக்கலாம். உற்பத்திப் பண்டங்களாக இருக்கலாம். உல்லாசப் பயணத்துறையாக இருக்கலாம். அவற்றின்மூலம் கிடைக்கும் முழுமையான வருமானத்தையும் நாம் அதிகரித்தல் வேண்டும். இந்த நாட்டு மக்களுக்கு சக்திவாய்ந்த ஒரு பொருளாதாரம் இருக்க வேண்டும். மத்திம மட்ட கடன்களுக்கு மேலதிகமாக மேலும் நாம் 300 கோடி டொலர் கடனைச் செலுத்தவேண்டி உள்ளது. அதற்கு மேலதிகமாக மேலும் 3,600 கோடி டொலர் கடனை செலுத்தவேண்டி உள்ளது. உச்சமட்ட கடனை தற்போதிருந்து 2026 ஆம் ஆண்டுவரை செலுத்த வேண்டி உள்ளது. இறுதிக்கடனை 2036இல் திருப்பிச் செலுத்த வேண்டும். இக்கடன்களை அதற்கு முன்னர் நாம் செலுத்தி முடிக்க வேண்டும். அவற்றை செலுத்தி முடிக்கமுடியும். எனவே இன்று ஒட்டுமொத்த பொருளாதாரத்தையும் போட்டி அடிப்படையிலான பொருளாதாரமாக மாற்றி ஏற்றுமதி பொருளாதாரமாக எம்மை மாற்றிக்கொள்ள வேண்டும். இத்தகைய பொருளாதாரத்தை கட்டியெழுப்பினால் மாத்திரமே இன்றைய இளைஞர், யுவதிகளுக்கு பத்து இலட்சம் தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்த முடியும். இன்று நாம் எமது நாட்டின் தேசியதுறை என்பது ஏற்றுமதி துறையாகும். இந்த இரண்டையும் நாம் ஒன்றிணைக்க வேண்டும். ஒன்றிணைத்து முன்னெடுக்கும் ஒரு நிகழ்ச்சித்திட்டத்தையே இந்த அரசாங்கத்தைச் சார்ந்த நாம் முன்னெடுத்து வருகிறோம். எனவேதான் தேசிய ஏற்றுமதி உபாய மார்க்கங்களை ஏற்படுத்த நாம் முயற்சிக்கின்றோம்."

### ஏற்றுமதியை வலுப்படுத்துவோம்

இந்த நிகழ்ச்சித்திட்டத்தை மேலும் வலுவூட்டுவதாயின் மென்மேலும் அதனை விரிவுபடுத்த வேண்டும். இந்த தொழிற்முயற்சிகளுக்கிடையே இதனைவிட அதிகளவில் போட்டியை ஏற்படுத்தி சர்வதேச சந்தையில் பிரவேசிப்பதற்கு கூடிய முறையில் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை உருவாக்க வேண்டும். இதற்கு தொழில் முயற்சியாளர்களுக்கு அவசியமான உதவிகளையும், நிதி உதவிகளையும், கடன்வசதிகளையும் வழங்குவதற்கு நாம் கலந்துரையாடிக் கொண்டிருக்கிறோம். இவர்கள் ஏற்கனவே தொழில் முயற்சிகளை ஆரம்பித்துள்ளமையால் வங்கிக் கடன்களை வழங்கும்போது மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகளில் வங்கிகளுக்கு பிரச்சினை ஏற்பட மாட்டாது.

ஏற்கனவே நாம் சேவா சக்தி நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். இதனூடாக சிறு தொழில்முயற்சியாளர்களுக்கு உதவிகளை வழங்குதல் எமது எதிர்பார்ப்பாகும். ஏற்றுமதி அபிவிருத்திச் சபையும் சர்வதேச வர்த்தக அமைச்சும், ஏனைய குழுமங்களையும் ஒன்றிணைத்து நாட்டின் ஏற்றுமதியின் அளவை இருமடங்காக அதிகரிப்பதற்கு பாரிய வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

தற்போது எமது நாட்டின் செலுத்த வேண்டிய நிலுவை நாட்டிற்கு பாதகமான மட்டத்திலேயே உள்ளது. இந்த அனைத்து நடவடிக்கைகளுக்கும் நாம் அந்நியச் செலாவணியை கடனாகப் பெறுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். ஆனால் தொடர்ந்தும் கடன்சுமையால் பாதிக்கப்பட்ட ஒரு தேசமாக நாம் வாழமுடியாது. எனவே எமது தொழில்முயற்சியாளர்களை நாம் அபிவிருத்தி செய்யவேண்டும். GSP+ வரிச்சலுகை கிடைத்தபின்னர் மேற்படி உற்பத்திகளை ஐரோப்பிய சந்தைக்கு எடுத்துச்செல்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எமது அரசாங்கம் தயார் என்பதை இச்சந்தர்ப்பத்தில் கூறிவைக்க விரும்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிலைபேறான அபிவிருத்தி உபாயமார்க்கங்கள்**


எமது நாடு தற்போது நிலைபேறான அபிவிருத்தியின்பொருட்டு அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகிறது. இது இன்றைய உலகில் அனேகமானோர் ஏற்றுக்கொண்ட ஓர் எண்ணக்கருவாகும். ஆனால் இந்த நிலைபேறான அபிவிருத்தியைப்பற்றி அனைவரையும் அறிவூட்டுவதற்கான ஓர் நிகழ்ச்சித்திட்டம் எமக்கு அவசியமாகிறது. இதற்கு ஏற்புடைய கொள்கைகளைத் தயாரிப்பதாயின் மேற்படி விழிப்புணர்வூட்டல்களின் பின்னரே அதனைச் சாத்தியப்படுத்த முடியும். இக்கொள்கைகளைத் தயாரிப்பதற்கு நிலைபேறான அபிவிருத்தி சபைகள் என்ற சட்டவரைவு கொண்டுவரப்பட்டது. இதற்கு பாராளுமன்றத்தின் அனைத்துக் கட்சிகளின் கருத்துக்களும், திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டன. இதற்கமைய மே மாதத்தில் இச்சட்டமூலம் மீண்டும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். அதன்பின்னர் தேசியக்கொள்கை மற்றும் திட்டமிடல் அமைச்சு உட்பட அனைவரையும் ஒன்றிணைத்து அதனைச் செயற்படுத்த எதிர்பார்க்கின்றோம். இதற்கமைய எமது உள்நாட்டு வியாபார முயற்சியாளர்களை ஏற்றுமதி வர்த்தகர்களாக மாற்றியமைக்க வேண்டும். உலகத்தின் பாரிய சந்தையில் பிரவேசிக்கக் கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்கு நாம் செயற்படுவோம் எனக் கூறிவைக்க விரும்புகிறேன்.

ஜப்பானுடனும். இந்தியாவுடனும் கலந்துரையாடி எவருக்கும் அநீதி ஏற்படாத முறையில் இலங்கையின் அபிவிருத்தி மார்க்கத்தை உருவாக்க நாம் எதிர்பார்க்கிறோம். இதற்கான பாராளுமன்றம், மற்றும் அமைச்சரவை என்பன பொதுமக்களோடும் இணக்கப்பாடு கண்டும் செயற்பட வேண்டுமெனவே நாம் எதிர்பார்க்கின்றோம். ●

**குறிப்பு:** பல்வேறு பத்திரிகைகளின் உதவியுடன் இக்கட்டுரை தயாரிக்கப்பட்டது.

---

# இந்த அரசு மக்கள் அபிலாஷைகளை நிறைவேற்ற மாட்டாது




**முத்து சிவலிங்கம்**
தலைவர்
இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்

பொதுமக்களின் அபிலாஷைகளை வென்றெடுத்து மக்களுக்கு சேவைசெய்யும் ஒரே நோக்கத்துடனேயே நல்லாட்சிக்கு வாக்களிக்கப்பட்டது. தற்போதைய அரசு மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றவில்லை. மலையக மக்களினதும், வடக்கு கிழக்கு மக்களினதும் அபிலாஷைகள் நிறைவேற்றப்படவில்லை. இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகிய நிலையிலும் மலையகத்திலும் ஏனைய பிரதேசங்களிலும் சக்திவாய்ந்த ஒரு தன்மையைக் காணமுடியவில்லை. மலையக மக்களின் சார்பில் தற்காலிக தீர்வுகளை செய்து பிரச்சினைகளை சமாளிக்கப் பார்க்கிறார்கள். நிலைபெறான நீண்டகால தீர்வுகளை நோக்கிப் பயணிப்பதற்கு அரசாங்கத்திற்கு ஒரு வேலைத்திட்டம் இருத்தல் வேண்டும்.

ஒருசில வீடுகளைக் கட்டிக்கொடுத்து மலையகத்திற்காகப் பணியாற்றுகின்றோம் என்று இந்த அரசாங்கம் கூறிவருகிறது. 200 குடும்பங்கள் வாழும் இடத்தில் 20 வீடுகளை வழங்குகிறார்கள். கட்சிசார்பான முறையிலேயே இந்த 20 வீடுகளும் வழங்கப்படுகின்றன. சந்திரிக்காவின் காலகட்டத்தில் இருந்து நாம் ஒரு திட்டத்திற்கமையவே செயற்பட்டோம். கல்வித்துறையில் ஆசிரியர்களை நியமிப்பதற்கான வேலைத்திட்டங்களை பணியாற்றினோம். தபால் உத்தியோகத்தர்களை நியமித்தல்மூலம் மலையக மக்களை அரச இயந்திரத்தில் இணைத்துக்கொண்டோம். தற்போது கல்வித்துறையில் ஒரு முன்னேற்றம் உண்டு. ஆனால் கல்விகற்று வெளியேறும் இளைஞர், யுவதிகளுக்கு தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்தும் ஒரு வேலைத்திட்டம் கிடையாது. மலையக பிள்ளைகள் எவ்வளவு கல்வி கற்றாலும் தொடர்ந்து தோட்டத் தொழிலாளர்களுக்குரிய சம்பளமே கிடைக்கிறது. இத்தகைய நிலைமைகளில் மாற்றங்களைக் கொண்டுவருவதற்கு இந்த அரசாங்கத்திடம் பரந்துபட்ட திட்டங்கள் கிடையாது. மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு இந்த அரசாங்கம் முன்னுரிமை வழங்கவில்லை. எனவே இந்த அரசாங்கம் மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு தற்காலிக தீர்வுகளை நாடாமல் நிரந்தரமான தீர்வுகளைக் காணவேண்டும். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


colombogazette.com

# நாட்டு மக்கள் அனைவரும் புதிய அரசியலமைப்பையே எதிர்பார்க்கின்றனர்

**ஆர். சம்பந்தன்**
எதிர்கட்சித் தலைவர்
தமிழர் தேசிய கூட்டமைப்பு

தேசிய அரசாங்கம் அமைத்து இரண்டு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், தேசிய இனப்பிரச்சினை பற்றி ஒழுங்கான ஒரு தீர்வு இதுவரை வழங்கப்படவில்லை. தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுக்கும் நோக்கிலேயே 2015 ஆம் ஆண்டில் இந்த ஆட்சியை அமைப்பதற்கு தமிழ் மக்கள் ஒத்துழைப்பு வழங்கினர். 1947 இன் பின்னர் 70 ஆண்டுகள் கடந்த நிலையில் தேசிய இனப்பிரச்சினை பற்றி சரியான நிலைப்பாட்டை எடுக்க முடியாமை கவலைக்குரிய விடயமாகும். இத்தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் அரசியல் தீர்வு பற்றி ஆய்வு ரீதியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தமிழர் தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்களின் அபிலாஷைகளையும், அவர்களின் பிரச்சினைகளையும் நிறைவேற்றுவதற்காகவே செயற்பட்டு வருகிறது. தமிழ் மக்களைப் பொறுத்தவரை இக்காலகட்டம் மிகவும் முக்கியமானது. அரசியல் ரீதியில் தீர்மானகரமான காலகட்டம். இந்த ஆண்டிலும் எதிர்வரும் ஆண்டிலும் எமது எதிர்பார்ப்புக்கள் நிறைவேறுமென நம்புகிறோம். இதன்போது குறிப்பாக புதிய அரசியலமைப்பு நாட்டின் அனைத்து மக்களும் எதிர்பார்க்கும் ஒரு விடயமாகும். பிளவுபடாத ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வை வழங்கக்கூடிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென்பதே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் தேசிய கூட்டமைப்பின் எதிர்பார்ப்பாகும். இந்தக் கோரிக்கையை இந்த நாட்டின் ஆட்சியாளர்களாக இருந்த, ரணசிங்க பிரேமதாச, சந்திரிக்கா பண்டாரநாயக்க, ரணில் விக்கிரமசிங்க மற்றும் குறிப்பாக மகிந்த ராஜபக்ஷ ஆகிய தலைவர்கள் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் செயற்பட்டமையை நாம் நினைவுகூர வேண்டும். முன்னைநாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது ஆட்சிக்காலத்தில் சர்வ கட்சி மாநாட்டை கூட்டியபோது, அதியுயர் அதிகாரப் பகிர்வு பற்றியும் குறிப்பிடப்பட்டது. எனவே இந்த நாட்டின் அதிகாரப் பகிர்வு பற்றிய விடயத்தை அனைத்து தலைவர்களும் ஏற்றுக்கொண்ட ஒரு விடயமாகும். இந்த அடிப்படையில் நோக்கும்போது புதிய அரசியலமைப்பை உருவாக்கும்போது இந்த அனைத்துத் தலைவர்களும் ஏற்றுக்கொள்ளும் அரசியலமைப்பாக இது அமைய வேண்டும். இத்தகைய அரசியலமைப்பு தயாரிக்கப்படுமேயாயின் அதனை எவரும் எதிர்க்கமாட்டார்கள்.

சுதந்திரத்தின் பின்னர் ஒன்றிற்கு ஒன்று எதிராக நடவடிக்கை மேற்கொண்ட முக்கிய இரண்டு கட்சிகள் தற்போது ஒன்றிணைந்து ஒரே அரசாங்கத்தை உருவாக்கியுள்ளதோடு 2020 வரை இணக்கப்பாட்டு அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்ல உறுதிபூண்டுள்ளனர். புதிய அரசியலமைப்பொன்று வரையப்படாத ஒரு சூழ்நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினதும், ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினதும் சுமார் 50 பேர் ஒன்றிணைந்து புதிய அரசியலமைப்புக்கு எதிரான ஒரு சூழலை உருவாக்கி வருகின்றனர். கடந்த ஜனவரி 09 ஆந் திகதி பாராளுமன்றம் அரசியலமைப்புச் சபையாகத் தீர்மானித்தவாறு, இரண்டு மாதங்களின் பின்னர் பாராளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றிய தீர்மானத்திற்கமைய வழிகாட்டும் குழுவொன்று நியமிக்கப்பட்டது. இதன் அறிக்கையும், இடைக்கால அறிக்கையும், இறுதி அறிக்கையும், அரசியலமைப்பு பற்றிய வரைவும், பாராளுமன்றத்தின் அரசியலமைப்புச் சபையில் முன்வைத்து 2/3 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டு அமைச்சரவையின் ஒப்புதலைப்பெற்று வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும். அதன் பின்னர் அது பொதுமக்களின் ஒப்புதலைப் பெறுவதற்கு அபிப்பிராய வாக்கெடுப்பொன்றிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேற்படி தீர்மானங்களை மேற்கொள்ளும்போது ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் அனைவரும் ஏகமனதாக ஒத்துழைப்பு வழங்கினர். தற்போது அச்செயற்பாடு செயலிழந்துள்ளது. இது தமிழ் மக்களுக்கு பாரிய நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியுள்ளது.

யுத்தத்தின் பின்னர் ஏற்பட்டுள்ள காணிப்பிரச்சினைகள், காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினைகள், அரசியல் கைதிகளின் பிரச்சினைகள், தீர்க்கப்படக்கூடிய படையினரின் பிரச்சினைகள் என்பவற்றிற்கு தீர்வு வழங்குவதற்கு இணக்க அரசாங்கத்திற்கு இயலாமல் போயுள்ளது. காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய தேசிய அலுவலகத்தை அமைக்கும் சட்டம் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டாலும், அதனை இன்றுவரை இந்த அரசாங்கம் அமுல்படுத்தவில்லை. ஓர் சட்டமாக அங்கீகரிக்கப்பட்ட பின்னர் அதனை நடைமுறைப்படுத்துவது அரசாங்கத்தின் கடமையாகும். அதேசமயம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழு அங்கீகரித்த பிரேரணையை முழுமையாக அரசாங்கம் செயற்படுத்த வேண்டியுள்ளது என்பது எமது நிலைப்பாடாகும். இதில் இரண்டு வகையான பேச்சுக்கே இடமில்லை. இதன்போது இந்தப் பிரேரணைகளை முழுமையாகச் செயற்படுத்துவதற்கு சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பு அவசியமாகும். வகைப்பொறுப்பும், பொறுப்பும் பற்றி அரசாங்கம் கண்டிப்பாகவும் ஆர்வத்துடனும் செயற்படுத்தப்பட வேண்டியுள்ளது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"நூறு மலர்கள் மலரட்டும். நூறு கருத்துக்கள் முட்டி மோதட்டும்
என்பது கலை வளர்ச்சியையும் விஞ்ஞான முன்னேற்றத்தையும்
நமது நாட்டின் சோசலிச கலாசாரத்தின் சுபீட்சத்தையும்
துரிதப்படுத்துவதற்குரிய கொள்கையாகும்."
-மாஓ சே-துங்-

ISSN 955-1800-0061

க்ளோப் ப்ரின்டிங் வேர்க்ஸ், இல.05, ஸ்டோர்க் வீதி, கொழும்பு 10, தொலைபேசி : 0777-315971

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org